தமிழ்நாடு அரசு

# மேல்நிலை
## இரண்டாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

XII Std Tamil Introduction Pages.indd 1 2/22/2019 12:00:01 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



XII Std Tamil Introduction Pages.indd 2 2/22/2019 12:00:01 PM

## முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம்; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கம். அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் ஒரு வலிமை என்பதையும் உணர்ந்துள்ளோம்.

பெற்றோர், ஆசிரியர், மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்துவிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி அச்சத்தையும் மன அழுத்தத்தையும் உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணங்களாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள், குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



XII Std Tamil Introduction Pages.indd 3 2/22/2019 12:00:01 PM

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!





XII Std Tamil Introduction Pages.indd 4 2/22/2019 12:00:02 PM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



XII Std Tamil Introduction Pages.indd 5 2/22/2019 12:00:02 PM



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



XII Std Tamil Introduction Pages.indd 6 2/22/2019 12:00:03 PM

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவி இப்பாடநூல்.

இயலுள் அமைந்த
**பாடப்பகுதிகள்**

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
**கற்றல் நோக்கங்கள்**

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்துகொள்ளத்
**தெரிந்து தெளிவோம், யார் இவர், தெரியுமா? ....**

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
**இணையவழி உரலிகள் ...**

ஆளுமை மிக்க
**ஆசிரியர்களுக்கும்**
ஆற்றல் நிறை
**மாணவர்களுக்கும்...**

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
**கற்பவை கற்றபின் ....**

படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
**அறிவை விரிவு செய் ...**

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
**நிற்க அதற்குத் தக...**

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
**மொழியோடு விளையாடு ....**

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
**மொழியை ஆள்வோம் ....**

மாணவர்தம்
அடைவை அளவிட
**நம்மை அளப்போம் ....**

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore/ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

# பணிவாய்ப்புத் தமிழ்



## வேலைவாய்ப்பு

- தமிழக அரசுப்பணிகளில் தமிழ்வழிக் கற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. (Persons Studied in Tamil Medium Act -2010)
- இந்திய ஆட்சிப் பணி (IAS) முதன்மைத் தேர்வில் கட்டாய இந்திய மொழித்தாள் வரிசையில் தமிழ் மொழித்தாள் இடம்பெற்றுள்ளது. கட்டாய மொழித்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே ஐஏஎஸ் தேர்வரின் பிற தாள்கள் மதிப்பிடப்படும்.
- தமிழ்ப் பட்டதாரிகளும் பிற பட்டதாரிகளும் இந்திய ஆட்சிப்பணிக்கான முதன்மைத் தேர்வில் அனைத்துத் தாள்களையும் (கட்டாய ஆங்கில மொழித்தாள் நீங்கலாக) தமிழிலேயே எழுதி வெற்றி பெற முடியும். ஆளுமைத் தேர்விலும் தமிழிலேயே பதிலளிக்கலாம்.
- துணை ஆட்சியர் பதவிக்கான தொகுதி -1 தேர்வில் 300 மதிப்பெண் கொண்ட இரண்டாம் தாளில் 90 மதிப்பெண் வினாக்கள் 'தமிழ் மொழி மற்றும் பண்பாடு' என்ற பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன.
- ஆசிரியர் பணிக்கான TET, CTET, TRB தேர்வுகளில் தமிழுக்கும் தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV (கிராம நிர்வாக அலுவலர் - விஏஓ, இளநிலை உதவியாளர் போன்ற பணிகள்) தொகுதி II A மற்றும் II (தலைமைச் செயலக உதவிப்பிரிவு அலுவலர், சார் பதிவாளர், வருவாய் உதவியாளர் உள்ளிட்ட பல சார்நிலைப் பணிகள்) எழுத்துத் தேர்வுக்கான 300 மதிப்பெண்ணில் செம்பாதி (50%) மதிப்பெண்ணுக்கான கேள்விகள் (150 மதிப்பெண்) பொதுத்தமிழ்ப் பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன. இந்தப் பாடத்திற்கு 6 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்களே அடிப்படை.
- மொழிபெயர்ப்புத்துறையிலும் படைப்புத் துறையிலும் ஆர்வத்துடன் தமிழ் பயின்ற தகுதி மிக்கவர்களுக்குப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- மொழிநடை திருத்துநர் (Copy Editor), கலைச்சொல் வல்லுநர், திரைத்துறையில் துணைத்தலைப்புகள் (Sub Title), வசனங்கள் எழுதுபவர் முதலிய பணிவாய்ப்புகளைத் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிப்புலமை பெற்றவர்கள் பெறமுடியும்.
- நல்ல உச்சரிப்புத் திறன் கொண்டவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகலாம்.
- புத்தக வடிவமைப்பும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சும் கற்றவர்களுக்குப் பதிப்புத்துறையில் அதிகப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- தமிழ்க் கணினியம் (Tamil Computing) - கலைச்சொல் உருவாக்கம், இணையத்திலும் இணையக் கலைக்களஞ்சியங்களிலும் கட்டுரை எழுதுதல், பிழைதிருத்துதல், பிழைதிருத்த மென்பொருள் உருவாக்கம் போன்ற பணி வாய்ப்புகள் உள்ளன.
- அரசுத்துறை நிறுவனங்கள், நீதிமன்றங்கள், பாடநூல் கழகம் முதலியவற்றில் மொழிபெயர்ப்பாளர், பிழைதிருத்துநர் முதலிய பணிவாய்ப்புகள்.
- விளம்பரவாசகம் எழுதுதல், வணிகப் பொருள் பயன்பாடு குறித்த விவரக்குறிப்பு மொழி பெயர்ப்பு போன்ற பணிவாய்ப்புகளும் தமிழ் கற்றவர்களுக்குக் கிடைக்கும்.
- தமிழர்கள் வாழும் பிஜி, மாலத்தீவு போன்ற வெளிநாடுகளில் தமிழாசிரியர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளது.



XII Std Tamil Introduction Pages.indd 8 2/22/2019 12:00:04 PM



## கற்றது தமிழ்! பெற்றது புகழ்!

- தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்ற உ.வே.சா.வுக்கும் பண்டிதமணி கதிரேசனாருக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே 'பெரும் பேராசிரியர்' (மகாமகோ உபாத்யாயா) பட்டம் வழங்கப்பட்டது.
- தமிழறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், கவிஞர் வைரமுத்து முதலான தமிழறிஞர்கள் இந்திய அரசு வழங்கும் பத்ம பூஷண் விருது பெற்றுள்ளனர்.
- சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களில் பலர் தமிழில் முதுகலை / முனைவர் பட்டம் பெற்றவர்கள்.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC அமைப்பு), திரைத்துறையில் சத்யஜித்ரே, இசைத் துறையில் எம். எஸ். சுப்புலட்சுமி ஆகியோருக்கு வழங்கிய தேசியப் பேராசிரியர் (National Professor) என்னும் தகுதியைத் தமிழ்த்துறையில் முனைவர் தமிழண்ணலுக்கு வழங்கியது.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்பேராசிரியர்களாகப் பணியாற்றவும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றவும் வாய்ப்புகள் உள்ளன.
- 1984-இல் இ.ஆ.ப. தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முதல் தமிழ் இலக்கிய மாணவர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. தற்போது (2018) ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் பதவியில் உள்ளார்.
- பொறியியல் / வேளாண்மைப் பட்டதாரியாக இருந்து இ.ஆ.ப. தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற இ.ஆ.ப. அதிகாரிகள் பலர் தற்போது தமிழகத்தில் பணியில் இருக்கிறார்கள்.
- இ.ஆ.ப. தேர்வில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்து, பட்டதாரிகள் பலர் ஆண்டுதோறும் வெற்றிபெறுகின்றனர்.
- திரைத்துறையில் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநரும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஏழு முறை பெற்ற ஒரே இந்தியத் திரைப்படப் பாடலாசிரியர் என்ற சிறப்பைப் பெற்ற தமிழ்க்கவிஞரும் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டதாரிகளே.
- தமிழ் மொழியில் சரளமான பேச்சுத் திறனும் நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள் தொலைக்காட்சித் தொகுப்பாளர்களாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துநர்களாகவும் புகழ் பெற முடியும். அதன் வழியே திரைத்துறையில் நுழைந்து வெற்றி பெற்றவர்கள் பலருளர்.



XII Std Tamil Introduction Pages.indd 9 2/22/2019 12:00:04 PM

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 1 | மொழி | செய்யுள் | இளந்தமிழே ! | 2 |
| | உயிரினும் ஓம்பப் படும் | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் – தி.சு. நடராசன் | 4 |
| | | செய்யுள் | தண்டியலங்காரம்* | 8 |
| | | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் | 10 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 14 |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | உரைநடை | பெருமழைக்காலம் | 24 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 29 |
| | | | நெடுநல்வாடை* | 30 |
| | பெய்யெனப் பெய்யும் மழை | துணைப்பாடம் | முதல்கல் | 32 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 38 |
| 3 | பண்பாடு | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 48 |
| | சுற்றத்தார் கண்ணே உள | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 52 |
| | | | கம்பராமாயணம்* | 53 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 57 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 63 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 73 |
| 4. | கல்வி | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 80 |
| | செல்வத்துள் எல்லாம் தலை | செய்யுள் | இதில் வெற்றி பெற* | 86 |
| | | | இடையீடு | 88 |
| | | | புறநானூறு* | 89 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 91 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 96 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் | உரைநடை | மதராசப்பட்டினம் | 106 |
| | நாடென்ப நாட்டின் தலை | செய்யுள் | தெய்வமணிமாலை* | 111 |
| | | | தேவாரம் | 113 |
| | | | அகநானூறு | 115 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | 118 |
| | | இலக்கணம் | படிமம் | 122 |




XII Std Tamil Introduction Pages.indd 10 2/22/2019 12:00:04 PM

| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் | உரைநடை | திரைமொழி | 130 |
| | சிறுகை அளாவிய கூழ் | செய்யுள் | கவிதைகள் | 136 |
| | | | சிலப்பதிகாரம்* | 137 |
| | | | மெய்ப்பாட்டியல் | 141 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 144 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 149 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 157 |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 164 |
| | | செய்யுள் | அதிசயமலர் | 169 |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | 170 |
| | அருமை உடைய செயல் | | புறநானூறு* | 172 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 174 |
| | | இலக்கணம் | தொன்மம் | 179 |
| 8. | மனிதம், ஆளுமை | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 190 |
| | எல்லா உயிரும் தொழும் | செய்யுள் | முகம் | 195 |
| | | | இரட்சணிய யாத்ரிகம்* | 196 |
| | | | சிறுபாணாற்றுப்படை* | 200 |
| | | துணைப்பாடம் | கோடை மழை | 205 |
| | | இலக்கணம் | குறியீடு | 209 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | 217 |


( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

2J5S5H — மின் நூல்

2YNM6T — மதிப்பீடு

B223_12_TAMIL_LANG — இணைய வளங்கள்



XII Std Tamil Introduction Pages.indd 11 2/22/2019 12:00:04 PM

# மேல்நிலை

## இரண்டாம் ஆண்டு

# பொதுத் தமிழ்



XII Std Tamil Introduction Pages.indd 12 2/22/2019 12:00:04 PM

இயல் 1

# உயிரினும் ஓம்பப் படும்

*மொழி*



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராம்மி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை, மாங்குளம், மதுரை.

## கற்றல் நோக்கங்கள்

- கவிஞரின் மொழிப்பற்றைத் தாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துதல்.
- மொழி வெளிப்படுத்தும் நடையியல் கூறுகளைப் படித்துணர்ந்து தமிழ்மொழியின் நுட்பம் அறிதல்.
- மரபுக் கவிதையினைப் பொருளுணர்ந்தும் சீர்பிரித்தும் படிக்கும் ஆற்றல் பெறுதல்.
- கடித இலக்கியத்தின் வாயிலாகச் சமூக உணர்வை வெளிப்படுத்தும் திறன் வளர்த்தல்.
- மொழியின் அடிப்படை இலக்கணத்தை அறிந்து பிழையின்றி எழுதும் திறன் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- **இளந்தமிழே!** – சிற்பி பாலசுப்பிரமணியம்
- **தமிழ்மொழியின் நடை அழகியல்** – தி. சு. நடராசன்
- **தன்னேர் இலாத தமிழ்**
- **தம்பி நெல்லையப்பருக்கு** – பாரதியார்
- **தமிழாய் எழுதுவோம்**



XII Std Tamil Chap_01.indd 1 2/22/2019 1:46:39 PM

கவிதைப்பேழை

மொழி க

# இளந்தமிழே!

– சிற்பி பாலசுப்பிரமணியம்

3E7H85



**நுழையும்முன்**

தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் இலங்குகிறது. அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக்கவிஞர்கள் இலர் எனலாம். தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பது கவிஞர்களின் அவா.

*செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்*
*செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!*
*தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்*
*தாழுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்*
*விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்*
*வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட*
*எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்*
*ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!*

*மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்*
*முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்*
*பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!*
*பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!*
*மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு*
*மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா,வா!*
*கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்*
*குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!*





XII Std Tamil Chap_01.indd 2 2/22/2019 1:46:40 PM

### இலக்கணக் குறிப்பு

செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம் – பண்புத்தொகைகள்
முத்துமுத்தாய் – அடுக்குத்தொடர்
சிவந்து – வினையெச்சம்
வியர்வைவெள்ளம் – உருவகம்

### உறுப்பிலக்கணம்

**சாய்ப்பான்** = சாய் + ப் + ப் + ஆன்
சாய் – பகுதி, ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை, ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

**விம்முகின்ற** = விம்மு + கின்று + அ
விம்மு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி

**வியந்து** = விய + த் (ந்) + த் + உ
விய–பகுதி,த்–சந்தி(ந்ஆனதுவிகாரம்), த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி

**இருந்தாய்** = இரு + த் (ந்) + த் + ஆய்
இரு – பகுதி, த் – சந்தி (ந் ஆனது விகாரம்), த் – இறந்தகால இடைநிலை, ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**செம்பரிதி** = செம்மை + பரிதி
விதி : ஈறு போதல் – செம் + பரிதி – செம்பரிதி

**வானமெல்லாம்** = வானம் + எல்லாம்
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வானமெல்லாம்

**உன்னையல்லால்** = உன்னை + அல்லால்
விதி : இஈஐ வழி யவ்வும் – உன்னை + ய் + அல்லால்
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உன்னையல்லால்

**செந்தமிழே** = செம்மை + தமிழே
விதி : ஈறு போதல் – செம் + தமிழே
விதி : முன்னின்ற மெய் திரிதல் – செந்தமிழே

#### நூல்வெளி

இக்கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்; பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்; மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச்சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்; மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

#### கற்பவை கற்றபின்...

தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.



XII Std Tamil Chap_01.indd 3 2/22/2019 1:46:40 PM

உரைநடை உலகம்

மொழி

## க தமிழ்மொழியின் நடை அழகியல்

4NI6AG

– தி.சு. நடராசன்




உயர்தனிச் செம்மொழியாம் தமிழில் இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில், உணர்ச்சியைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச்செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.

அழகு, இந்தப் பேரண்டத்தின் செய்தி. உண்மையுமாய் ஒளியுமாய் உணர்வையும் அறிவையும் கவர்ந்து உயிரில் கலக்கும் அதன் ஆற்றல் உணர்வுநிலையினையும் அறிவுப்புலனையும் இலக்கியமாக ஆக்குகிறது; அவ்விலக்கியத்தை முன்கொண்டு செல்கிறது. தமிழில் இதனுடைய வழித்தடங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன. அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருகிற சங்க இலக்கியம், குறிப்பிட்ட சில அழகியல் பரிமாணங்களை வரித்துக்கொண்டுள்ளது.

### மொழிசார் கலை

அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும். எழுத்துகள் பற்றிப் பேசுகிறபோதே, செய்யுளின் வழக்கு பேசப்பட்டுவிடுகிறது. எழுத்தையும் சொல்லையும்போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது. ஏனைய கலைகளிலிருந்து கவிதைக்கலையை வேறுபடுத்துகின்ற அதன் முதன்மையான, தனிச்சிறப்பான பண்பு இது. கிரேக்கம், வடமொழி முதலிய பிற மொழிகளைவிட, தமிழ் இதனைத் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.

பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள், பேசும்போதும் கேட்கும்போதுமான தனிச்சூழல்கள் ஆகியன மட்டுமல்லாது வரலாறு முழுக்க மொழி, மனித நாக்குகளின் ஈரம் பட்டுக்கிடக்கிறது. அதனையே இலக்கியம், தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றவேண்டியிருக்கிறது. உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை. இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது. இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது. இத்தகைய தன்மைதான், கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் (poeticalness/ literariness) என்று பேசப்படுகிறது. இதனால், மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.

### கலை முழுமை

இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு. அறம், பொருள், இன்பமாகவோ அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ, இந்தப் பயன் இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும். பின்னால் வந்தவர்கள் இதனை இயந்திரப் போக்காகத் தனியாக – ஒட்டாமல் – கூறியுள்ளனர். ஆனால் தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம்



XII Std Tamil Chap_01.indd 4 2/22/2019 1:46:40 PM

அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை (artistic whole) எனப்படுகிறது.

சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது. அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகின்றது. அதுபோல், இன்னோரிடத்தில், பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு நான்கு எனச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து,

*அந்நில மருங்கின் அறமுதலாகிய*
*மும்முதற் பொருட்கும் உரிய என்ப (தொல். செய். 105)*

என்று பாவகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைத்துச் சொல்லிவிடுகிறது.

செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் இது. சமூக – பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலைப்படைப்பை – அழகியல் நெறியை – பண்பாட்டின் இலச்சினையாகச் (symbol of culture) சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன்மொழிந்திருக்கிறது. தமிழ் அழகியலின் நெடும் பரப்பு, இது.

### நடையியல் : விளக்கம்

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.

'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய். 135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது. மேலும்,

ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி (செய். 107)

என்றும் சொல்லுகிறது; நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு இங்கு இடம்பெறுகின்றது.

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. கவிதையின் இயங்காற்றல்தான் நடை. தொல்காப்பியமும் பிற இலக்கணங்களும் அவ்வாறே கருதுகின்றன.



### ஒலிக்கோலங்கள்

எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

இதனையே அந்தப் பனுவலின் – பாடலின் – ஒலிப்பின்னல் (sound texture) என்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு பாடல்:

*கடந்தடு தானை மூவிருங்கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;*
*முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;*
*முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;*
*யாமும் பாரியும் உளமே;*
*குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே (புறம். 110)*

என்னும் இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருதலை அறிந்துகொள்ளலாம். இன்னும் சில பாடல் அடிகளை இங்கே இதனடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்துகொள்ளலாம். சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

*படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக (புறம். 145)*

*புணரின் புணராது பொருளே; பொருள்வயின்*
*பிரியின் புணராது புணர்வே (நற். 16)*

*நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை (புறம். 290)*

இப்படிப் பல. உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு.

### சொற்புலம்

சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. சொல்வளம் என்பது, ஒரு பொருள் குறித்துவரும் பல சொல்லாய்ப் பல பொருள் குறித்துவரும் ஒரு சொல்லாய் வருதலும் பல துறைகளுக்கும் பல சூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும் உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் என்று செழிப்பான தளத்தில் சொல், விளைச்சல் கண்டிருப்பதைக் குறிப்பது ஆகும். சங்க இலக்கியத்தில் இது மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது.

முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன. இன்றைய இலக்கியத்தில், இப்படித்தான் கி. ராஜநாராயணன், 'கிடை' எனும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார். சொல்வளம், ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.

சொல்வளம் என்பது, தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்; ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.

**தமிழில் சில தொகைமொழிகள்**

வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு, மாண்கவின் காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலிவெள்ளருவி, பறைக்குரல் எழிலி, பொய்படு சொல், நகைக்கூட்டம், ஓவச் செய்தி… இப்படி ஓராயிரம்.

சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது. இதனைத் தொகைநிலை (Compound words) என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது. 'நீர் படுகின்ற – அல்லது நீர்பட்ட – பசுமையான கலம்' என்பது, எதுவும் தொகாமல் வருகிற தொடர் மொழி. அதுவே, 'நீர்படு பசுங்கலம்' (நற். 308) என்று ஆகும்போது, தொகைமொழி. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட (Precision) ஒரு வடிவமைப்பு. அது வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறும்.

### தொடரியல் போக்குகள்

ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது. சொல்லுவோருடைய மொழித்திறன், கேட்போர் – வாசிப்போருடைய உளப்பாடாக (purport) மறித்தாக்கம் (transform) பெற வேண்டும். பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர்



XII Std Tamil Chap_01.indd 6 2/22/2019 1:46:41 PM

நடந்தும் ஏறியிறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.

உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப் பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்துவருகிறது. கவிதை மறுதலைத் தொடர் (poetic inversion) இது.

முத்தாய்ப்பாக முடியும் பாடலின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது. சான்றாகப் பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடிய பாடல்.

*இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;*
*படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே*

(புறம். 239)

இந்த இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது. ஏனைய 20 அடிகளில், தொடர்கள் வரிசையாகவும் திட்டமிட்டு நேர்படவும் செல்லுகின்றன. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கி, ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவோடு முடிகின்றன. இப்படி ஒரு 18 பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்வது போல 'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதலின்' எனக் கூறிவிட்டுப் போடா போ – புதைத்தால் புதை; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறது. பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத் துணை நிற்கிறது.

நடையியல், வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம். அந்தப் பனுவலின் நீண்ட நெடும் இழைகளும் அதற்குள் குறுக்கும் நெடுக்குமாக ஊடுபரவி ஓடும் இழைகளும் கருத்தியல் நிலையிலும் வடிவமைப்பு நிலையிலும் கவன ஈர்ப்பைத் தருகின்றன. மேலும், சங்க இலக்கியம் அதனுடைய தனித்துவம் மிக்க சமூக-பண்பாட்டுத் தளத்தில் குறிப்பிட்ட சில பண்புகளையும் போக்குகளையும் சொந்த மரபுகளாக நிறுவிக்கொண்டுவிட்டது என்பதையும் நம்மால் அறியமுடிகிறது.

### நூல்வெளி

**தி.சு.நடராசன்** எழுதிய **'தமிழ் அழகியல்'** என்ற நூலிலிருந்து சில பகுதிகள் தொகுக்கப்பட்டுப் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு.நடராசன் குறிப்பிடத்தக்கவர். திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படும் இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். **கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள்** உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு – குன்றம் – ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.
2. தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.



XII Std Tamil Chap_01.indd 7 2/22/2019 1:46:41 PM

# தன்னேர் இலாத தமிழ்

## தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

**நுழையும்முன்**

வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ். நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தன்று, கடலினும் ஆழமானது என்றெல்லாம் தமிழின் பரப்பையும் விரிவையும் ஆழத்தையும் புலவர் போற்றுவர். நிகரற்ற ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பவும் அதற்கு மேலாகவும் தமிழைப் போற்றும் புலவரின் பாடல் ஒன்று பாடமாக...

*ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது*
*தன்னேர் இலாத தமிழ்!* *



**பா வகை : நேரிசை வெண்பா**

**பாடலின் பொருள்:**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**அணி :** பொருள் வேற்றுமை அணி

**விளக்கம் :** இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

**இலக்கணக் குறிப்பு**

**வெங்கதிர்** – பண்புத்தொகை

**உயர்ந்தோர்** – வினையாலணையும் பெயர்

**இலாத** – இடைக்குறை

**உறுப்பிலக்கணம்**

**உயர்ந்தோர்** = **உயர் + த் (ந்) + த் + ஓர்**

உயர் – பகுதி, த் – சந்தி ; த் ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான "ஆ" "ஓ" ஆகத் திரியும் (நன் 353)

**விளங்கி** = **விளங்கு + இ,**

விளங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி

**வந்து** = **வா(வ) + த் (ந்) + த் + உ**

வா – பகுதி ; வ எனக் குறுகியது விகாரம்

த் – சந்தி ; த் ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி**

**ஆங்கவற்றுள்** = **ஆங்கு + அவற்றுள்**

விதி : உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
– ஆங்க் + அவற்றுள்

விதி : உடல்மேல்உயிர்வந்துஒன்றுவதுஇயல்பே
- ஆங்கவற்றுள்

**தனியாழி** = **தனி + ஆழி**

விதி : இ ஈ ஐ வழி யவ்வும் – தனி + ய் + ஆழி

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - தனியாழி

**வெங்கதிர்** = **வெம்மை + கதிர்**

விதி : ஈறு போதல் – வெம் + கதிர்

விதி : முன்னின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

**தெரியுமா?**

**அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள்**

தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்

**அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள்**

தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்

**நூல்வெளி**

தண்டியலங்காரம், அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று. பாடப்பகுதி பொருளணியியல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. **காவியதர்சம்** என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் **தண்டி** ஆவார். இவர் கி.பி. (பொ.ஆ.) 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது; இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்றது.

**கற்பவை கற்றபின்...**

1. வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.
2. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.

விரிவானம்

மொழி

க

# தம்பி நெல்லையப்பருக்கு

– பாரதியார்

5XTUCS




உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில் சொல்ல வேண்டியவற்றை வெளியிடும் முறை உண்டு. கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். தனிப்பட எழுதும் கடிதங்களிலும் ஈர்க்கும் மொழியில் அழுத்தமான எண்ணங்களைத் தந்து அவற்றைப் பொதுவெளிக்கு உரியதாக்குபவர்களும் இருக்கிறார்கள். காலத்தின் குரல்களான அக்கடிதங்களில் மொழி, வீறுபெறுகிறது.

*புதுச்சேரி,*

*19, ஜுலை 1915*

*எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்பரைப் பராசக்தி நன்கு காத்திடுக.*

*தம்பி – மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள் – ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.*

**

*நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை.*

**

*ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள முடியுமானால் – தமிழ்நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்! தமிழ், தமிழ், தமிழ் – என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க! ஆனால் புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் – தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.*

**



XII Std Tamil Chap_01.indd 10 2/22/2019 1:46:42 PM

தம்பி, – நான் ஏது செய்வேனடா!

தம்பி – உள்ளமே உலகம்!

ஏறு ! ஏறு! ஏறு ! மேலே! மேலே! மேலே!

நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.

பற! பற! – மேலே மேலே! மேலே!



**

தம்பி – தமிழ்நாடு வாழ்க என்றெழுது.

தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.

தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது.

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றெழுது.

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது.

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக.

முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திர நூல், பூமிநூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி! சக்தி! சக்தி! என்று பாடு.

தம்பி – நீ வாழ்க!

உனதன்புள்ள,

பாரதி





XII Std Tamil Chap_01.indd 12 2/22/2019 1:46:45 PM

### தெரிந்து தெளிவோம்

எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் **வம்சமணி தீபிகை** என்னும் நூலை 1879இல் வெளியிட்டார். அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சிசெய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6.8.1919இல் கடிதம் எழுதினார். பலவிதமான குற்றங்களையுடைய அந்நூலை நல்ல இனிய தமிழ்நடையில் அமைத்துத் தருவேன் என்று குறிப்பிட்டார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக **இளசை மணி** என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.

### எட்டயபுர ஜமீனுக்குப் பாரதி எழுதிய கவிதைக் கடிதம்

*ஐயநின் அருளே அருங்கதி யென்ன*

*உய்ய இவண்வந் துற்று என் தந்தையார்*

*என்னையும் புறமொழிகற்க வென்றி யம்புவர்*

*என்னை யான் செய்குவ தின்றமிழ் கற்பினோ*

*பின்னை ஒருவரும் பேணார் ஆதலின்*

*கன்ன யான் அம்மொழி கற்கத் துணிந்தனன்; எனினும்*

*கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை?*

### தெரியுமா?

பரலி **சு. நெல்லையப்பர்** விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர். பாரதி நடத்திய **சூரியோதயம், கர்மயோகி** ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் **லோகோபகாரி, தேசபக்தன்** ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

### நூல்வெளி

**மகாகவி பாரதி** நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா. அ. பத்மநாபன் பதிப்பித்த **'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில்** இடம்பெற்றிருக்கிறது. பாரதி, பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல் அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம்வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு. நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றன.

### கற்பவை கற்றபின்...

1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.
2. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதுக.



XII Std Tamil Chap_01.indd 13 2/22/2019 1:46:46 PM

# தமிழாய் எழுதுவோம்

6DCPE4

மொழியை மிகச் சிறந்த கருவி என்பர். அதைத் திறம்படக் கையாண்டால் கலையாக மிளிரும். பிழை மலிய எழுதினால் வெறும் களையாகவே கொள்ளப்படும்.

நம்மில் பலர் பிழைபடப் பேசுவதால்தான் எழுதும்போது பிழைகள் பெருகுகின்றன. தமிழைத் தமில் என்று ஒலிப்பதைவிடக் கொடிய செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. மழையை மலை என்று உச்சரிப்பது பிழைதானே? இன்னும் சிலர் வாழைப்பழத்தை வாலப்பலம் என்றும் வாளப்பலம் என்றும் தமிழை வாழவிடாமல் செய்வர். வாயைப்பயம் என்றுகூடத் தமிழையும் சேர்த்து நசுக்குவர். எதைப்பற்றியும் கவலைப்படாமல் நாற்பத்திமூன்று என்றோ முப்பத்திநான்கு என்றோ 'பத்தி பத்தி'யாய் எழுதித் தள்ளுவர்.

இப்படித் தவறாய் உச்சரித்து மொழியைச் சிதைப்போரிடையே, எழுத்துகளின் வேறுபாடுகள் தெரியாமல் பிழை செய்வோர் பலருண்டு. பசியோடு வந்த விருந்தினருக்குச் சேறுகொடுத்து மகிழ்வித்தான் என்று எழுதினால் மகிழவா முடியும்? அவன் சோற்றைத் தின்றான் என்பதற்கு, அவன் சேற்றைத் தின்றான் என்று எழுதினால் நகைக்கத்தானே செய்வர்? சொத்துத் தகராறு செய்தார் என்பதை, செத்துத் தகராறு செய்தார் என்று வியப்பு ஏற்படுத்துவோரும் உண்டு. ஜயசந்திரனை 'ஐய'சந்திரன் என்று ஜ – ஐ வேறுபாடு தெரியாமல் ஐயப்படுவோரும் இருக்கத்தானே செய்கின்றனர். அன்புள்ள ஐயா என்பது அன்புள்ள ஜயா ஆவதும், ஜப்பான் – ஐப்பான் ஆவதும் தமிழ் தெரியாமல் எழுதுவோரின் 'சிரி'த்திரவதை எனலாம். பாண்டியப் பேரரசன் மீன் பொரித்தான் என்று அவரைச் சமையற் கலைஞராய் ஆக்குவோரும் உள்ளனர். போய்ப் பார்த்துத் திரும்பினான் என்பதற்குப் பேய் பார்த்துத் திரும்பினான் என்று எழுதி அச்சம் ஊட்டுபவர்களும் இருக்கின்றனர். கலையரசன் காலையரசன் ஆகும்போது மாலையில் அரசன் யார் என்று கேள்வி கேட்டால்தான் திருத்திக்கொள்வர் போலும்! கலையில் சிறந்தவனைக் காலையில் சிறந்தவன் என்றெழுதிப் படிப்போரிடையே ஐயக்குண்டு வீசுவோரும் உண்டு. அவன் மலைக்காற்று வாங்கினான் என்பதற்கும் மாலைக் காற்றுக்கும் வேறுபாடு உண்டல்லவா? கோடீஸ்வரனைக் கேடீஸ்வரன் என்றெழுதினால் அவர் கோபம் கொள்வாரா மாட்டாரா? விடை பெற்றார் என்பதை வடை பெற்றார் என்றெழுதினால் தமிழ் மணக்குமா? அவர் நல்ல மணம் படைத்தவரா? நல்ல மனம் படைத்தவரா? புலி(ளி)க்கறி சாப்பிட்டேன் என்றால் சட்டம் பாயும்தானே?

தமிழில் பிழை இல்லாமல் எழுத முடியுமா என்று ஐயம் கொள்ளத் தேவையில்லை. மொழியின் இயல்பை உணர்ந்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும். சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் தவறில்லாமல் எழுதத் துணைபுரியும்.

சிலர் ந, ண, ன / ற, ர / ல, ள, ழ ஆகிய எழுத்துகள் பற்றித் தெளிவில்லாமல் இருக்கின்றனர். உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு, கீழ்விலங்கு, கொம்புகள், துணைக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறையிலும் கவனம் தேவை. சொல்லில் எழுத்துப் பிழை இல்லாதிருக்கலாம். ஆனால், பொருட்பிழை ஏற்பட வாய்ப்புண்டு. முடிந்தால் தரலாம் / முடித்தால் தரலாம்; கறி தின்றான் / கரி தின்றான் – இங்கே எழுத்துப்பிழையில்லை. ஆனால், பொருள் வேறுபாடு உண்டு. இடமறிந்து எழுதவேண்டும்.



XII Std Tamil Chap_01.indd 14 2/22/2019 1:46:46 PM

எழுதும்போதுஏற்படும் பிழைகளைக் கீழ்க்காணும் வகைப்பாட்டில் பிரிக்கலாம்.

1. எழுத்துப் பிழை
2. சொற்பொருட்பிழை
3. சொற்றொடர்ப்பிழை
4. பொதுவான பிழைகள் சில

இப்பகுதியில் எழுத்துப்பிழைகள்பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

பிழைகளைக் களைவதற்கான வழிமுறைகளை அறிந்தால் நல்ல தமிழில் எழுதமுடியும். எழுத்துகள் குறித்த அடிப்படையான செய்திகள் சிலவற்றை மீண்டும் நினைவுகூர்தல் இங்கு உதவும்.

### அடிப்படைச் செய்திகள்

(அ) உயிரெழுத்துகள் 12. குறில், நெடில் என்று இரண்டு வகைப்படும்.

(ஆ) மெய்யெழுத்துகள் 18. மூன்று வகைப்படும்.

வல்லின மெய்கள் – க், ச், ட், த், ப், ற்

மெல்லின மெய்கள் – ங், ஞ், ண், ந், ம், ன்

இடையின மெய்கள் – ய், ர், ல், வ், ழ், ள்

(இ) உயிர்மெய் எழுத்துகள் 216. (உயிர்மெய்க் குறில் 90, உயிர்மெய் நெடில் 126)

(ஈ) ஆய்தம் 1

### எழுத்துப்பிழை தவிர்க்க

எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுதமுடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப்பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம். குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும் எழுத்துகள் வரும்முறையில் தெளிவற்றிருப்பதும் பிழைகள் மலியக் காரணமாய் அமைகின்றன.

எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக்கொள்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும். ந, ண, ன / ற, ர / ல, ள, ழ இவற்றின் வேறுபாடு அறிந்து வாய்விட்டு ஒலித்துப் பழகுவது சாலச் சிறந்தது. இவ்வெழுத்துகளுக்கான சில அடிப்படை இலக்கணத்தையும் கசடறக் கற்றல் இன்றியமையாத கற்றல் பணியாகும்.

மேலுள்ள எட்டு எழுத்துகளில் நகரம் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். நகர மெய் சொல்லின் இறுதியில் வராது. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

| ந, ண, ன, ற, ர, ல, ள, ழ | | |
|---|---|---|
| முதல் | இடை | கடை |
| நண்டு, நாடகம் | கண்டு, கன்று, கற்று, பார்த்து, கால்கள், பந்து, கொள்வது, புகழ்வது | கண், அவன், பார், கால், கொள், புகழ் |

- தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை. வரின் தமிழில்லை. க்ரீடம், ப்ரியா – வடமொழி; க்ளிஷே – ஆங்கிலம்
- வல்லின மெய்யோடு சொல் முடியாது. அப்படி முடிந்தால் தமிழ்ச் சொல்லன்று என்றுணர்க. பார்க் (Park), பன்ச் (Punch), பட் (But), போத் (Both), டப் (Tub) போன்றவை தமிழில்லை.
- வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை. காட்ச்சி, முயற்ச்சி என்றெழுதுவது பிழை.
- க், ச், த், ப் ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா. காக்கை, பச்சை, பத்து, உப்பு.
- ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும். பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை, கற்பவை



XII Std Tamil Chap_01.indd 15 2/22/2019 1:46:46 PM

- ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. டமாரம், றப்பர் – தமிழ் இல்லை.

- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).

- மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா.

- தனிச்சொல்லின் இடையில் வல்லினத்துக்குமுன் அவ்வல்லின மெய்யோ அவற்றின் இன மெல்லினமெய்யோ வரும். பிற மெய்கள் வருவதில்லை (தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பண்டு, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று).

- ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப்பின் வியங்கோள்வினைமுற்று / கள் விகுதி / வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும் (தேய்க, நாய்கள், தாய்சேய், ஊர்க, ஊர்கள், ஊர்சூழ், செல்க, கால்கள், செல்கணம், வாழ்க, வாழ்தல், தோள்கள்).

- ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை. (கண்டு என்று வரும், கன்டு என்று வருவதில்லை. மன்றம் என்று வரும் மண்றம் என்று வருவதில்லை.)

- ஞ், ந், வ் என்னும் எழுத்துகளில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன (உரிஞ், வெரிந், பொருந், தெவ்).

- ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும் (பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை).

- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.

- தனிக்குறிலையடுத்து ரகர ஒற்று வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுதவேண்டும். (நிர்வாகம் – நிருவாகம்; கர்மம் – கருமம், கன்மம்)

- ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துகளும் வாரா.

- உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என்று மாறும்.

- உயிர் வரின் அது, இது, எது முறையே அஃது, இஃது, எஃது என்பதாக மாறும்.

**லகர ளகர விதிகள் சில**

- வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு. கல் + சிலை = கற்சிலை, கடல் + கரை = கடற்கரை

- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. பல் + முகம் = பன்முகம்,

- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. மக்கள் + பேறு = மக்கட்பேறு

- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. நாள் + மீன் = நாண்மீன்

- வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும். சொல் + துணை = சொற்றுணை

- வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும். பல் + நூல் = பன்னூல்

- அல்வழியில், தனிக்குறிலடுத்த லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும். அல் + திணை = அஃறிணை; பல் + துளி = பஃறுளி.

இயக்குநர் என்பதே சரி. இயக்குனர் என்று எழுதுவது தவறு. இயக்கு, ஓட்டு, அனுப்பு, பெறு முதலான வினைகள்

பெயரிடைநிலையான ந் என்பதைப் பெற்று (ந்+அர்=நர்), ஓட்டுநர், அனுப்புநர், பெறுநர் என்று பெயர்ச்சொற்களாகின்றன.உறுப்பினர், குழுவினர், ஊரினர் முதலானவை(உறுப்பு, குழு, ஊர்)பெயர்ச்சொற்கள். அதனால், அவை இன்என்னும்சாரியையைப் பெற்று முடிந்துள்ளன.

**சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது பிழைகளைத் தவிர்க்கமுடியும்.**

அறம்–அரம்; குறை–குரை; வளம்–வலம்; களம்–கலம்; கிளி–கிலி; என்றாள்–என்றால்; போனாள்–போனால்; ஆணை–ஆனை; மழை–மலை முதலிய சொற்களின் பொருள் வேறுபாட்டினைக் கற்றுணர்தல் மாணவர்களின் இன்றியமையாத பணியாகும்.

### பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்துகொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுதவேண்டும்.



கற்பவை கற்றபின்...

மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1. பிழையான தொடரைக் கண்டறிக.

   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

   இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

# நம்மை அளப்போம்

7MNDGF

### பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

தன்னேர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

5. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் – 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ – 2) தி.சு. நடராசன்

இ) கிடை – 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி – 4) கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

### குறுவினா

1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக"– இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

4. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

**சிறுவினா**

1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் –விளக்குக.
2. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா,வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம் |

**நெடுவினா**

1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.
3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
4. 'சொல்லோவியங்கள்(கவிதை)' என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர் உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.



XII Std Tamil Chap_01.indd 19 2/22/2019 1:46:46 PM

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.


ஆறுமுக நாவலர் (1822–1879)

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**தமிழாக்கம் தருக.**

1. *Learning is a treasure that will follow its owner everywhere.*
2. *A new language is a new life.*
3. *If you want people to understand you, speak their language.*
4. *Knowledge of languages is the doorway to wisdom.*
5. *The limits of my language are the limits of my world.*

**இலக்கிய நயம் பாராட்டுக.**

*முச்சங்கங் கூட்டி*
*முதுபுலவர் தமைக் கூட்டி*
*அச்சங்கத் துள்ளே*
*அளப்பரிய பொருள்கூட்டி*
*சொற்சங்க மாகச்*
*சுவைமிகுந்த கவிகூட்டி*
*அற்புதங்க ளெல்லாம்*
*அமைத்த பெருமாட்டி!*

*–கண்ணதாசன்*

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

– மொழி வரலாறு (மு.வரதராசனார்)

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

**ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

*தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.*

*எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.*

*தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றையநிலை*

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

*குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்*
*தாயின் குரலில் உயிரின் ஒலி*

______________________________

______________________________

**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

*எ.கா.* *கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி*

1. *தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்.*
2. *தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்.*
3. *சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம்.*
4. *முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம்.*

*(தமிழ்ஒளி, அம்பை, கோதை , அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)*

**செய்து கற்போம்**

*தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் ஏதேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.*

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| எ.கா. பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | |



XII Std Tamil Chap_01.indd 21 2/22/2019 1:46:47 PM

**படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *Subscription* | – | உறுப்பினர் கட்டணம் | *Archive* | – | ஆவணம் |
| *Fiction* | – | புனைவு | *Manuscript* | – | கையெழுத்துப் பிரதி |
| *Biography* | – | வாழ்க்கை வரலாறு | *Bibliography* | – | நூல் நிரல் |

**அறிவை விரிவு செய்**

- பாரதியின் கடிதங்கள் – ரா.அ. பத்மநாபன்
- இலக்கண உலகில் புதிய பார்வை – டாக்டர் பொற்கோ
- தமிழ் அழகியல் – தி. சு. நடராசன்
- பாரதி கட்டுரைகள்
- பாரதி கதைகள்
- காட்டுவாத்து – ந.பிச்சமூர்த்தி
- நெல்லூர் அரிசி – அகிலன்
- சுவரொட்டிகள் – ந.முத்துசாமி

**இணையத்தில் காண்க**

http://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1032-html-p1032004-25763 (சிற்பி கவிதைகள் ஆய்வு)
http://www.ulakaththamizh.org/Repository/RepoBook.aspx?id=7 ( தண்டியலங்காரம் )
http://www.mahakavibharathiyar.info/kadithangal/kadithangal.htm ( பாரதியின் கடிதங்கள்)
https://www.bbc.com/tamil/india-43501454 ( மொழியின் சிறப்புகள்)
http://www.teachersofindia.org/ta/article/மொழியின்-முக்கியத்துவம்-ஆக்கம்-ரோஹிட்-டன்கர்

## இணையச் செயல்பாடு

### தண்டியலங்காரம்



இணையத்தில் நூலைச் சுட்டியால்
தொட்டுத் திருப்பிப் படிப்போமா!

**படிகள்:**

- *கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.*
- *திரையில் தண்டியலங்காரம் நூலின் முகப்புப் பக்கம் தோன்றும். அதன் மேல் சில குறியீடுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.*
- *அவற்றில் முன் மற்றும் பின் செல்லும் குறியீடுகளைப் பயன்படுத்திப் புத்தகத்தின் பக்கங்களைத் திருப்ப முடியும். மேலும் நூலின் பக்கத்தைப் பெரிதாக்கி, சிறிதாக்கி நூலில் உள்ள நூற்பாக்களைத் தெளிவாகப் படிக்க முடியும்.*

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**






B223_12_TAMIL_LANG

**செயல்பாட்டிற்கான உரலி**

http://tamildigitallibrary.in/book-detail.php?id=jZY9lup2kZl6TuXGlZQdjZU3luty&tag=%E0%AE%A4%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B/E%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D#book1

*கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



XII Std Tamil Chap_01.indd 22 2/22/2019 1:46:48 PM

இயல் 2

# பெய்யெனப் பெய்யும் மழை

*இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்*



## கற்றல் நோக்கங்கள்

- பருவ மாற்றத்திற்கான காரணங்களை அறிந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு பெறுதல்.
- இயற்கை நிகழ்வினால் மனிதர்பெறும் உள்ள நெகிழ்ச்சியை உணர்ந்து இயற்கையை விரும்புதல்.
- பழந்தமிழர் திணை வாழ்வைச் சங்கப்புலவர்கள் கவிதையாக்கிய நயத்தை உணர்தல்.
- நீர்வழிப் பாதைகளைப் பராமரிப்பதன் தேவையை உணர்ந்துகொள்ளும் திறன் பெறுதல்.
- திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் இலக்கணமறிந்து பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- பெருமழைக்காலம்
- பிறகொரு நாள் கோடை – அய்யப்ப மாதவன்
- நெடுநல்வாடை – நக்கீரர்
- முதல்கல் – உத்தமசோழன்
- நால்வகைப் பொருத்தங்கள்

உரைநடை உலகம்

இயற்கை உ

# பெருமழைக்காலம்

8HG7HF

## நுழையும்முன்

உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையான மழை, உழவுக்கும் இன்றியமையாதது. பருவம் தவறாது பொழிந்த மழை, பருவம் தப்பியும் சில நேரங்களில் பொய்த்தும் போகிறது. இயற்கைச் சமநிலையை நாம் சீர்குலைத்ததன் விளைவே பருவநிலை மாற்றம். சரியான திட்டமிடலின்றி உருவாக்கப்படும் பெருநகர அமைப்பு, நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தாமை இவற்றால் மழைக்காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இத்தகு சிந்தனைகளை முன்வைக்கின்றது இக்கலந்துரையாடல்....

### கலந்துரையாடல்

உலகப் புவி நாளை (ஏப்ரல் 22.) முன்னிட்டுச்
சூழலியலாளர்கள் பங்குபெறும் கலந்துரையாடல்

நெறியாளர் : அகத்தியன்

பங்கேற்பாளர்கள் : ஆல்வின், முத்துக்குமரன், ஆயிசா, கவின்மலர்

**நெறியாளர்:** அனைவருக்கும் வணக்கம். இயற்கையைப் போற்றுகிற சமூகமாகத் தமிழ்ச்சமூகம் என்றைக்கும் இருந்து வருகிறது. 'மாமழை போற்றுதும்' என்றும் 'நீரின்றி அமையாது உலகு' என்றும் மழையைக் கொண்டாடிய நாம் இன்று புயல், மழையைப் பற்றிய அறிவிப்புகளைக் கேட்டாலே ஒருவித அச்ச நிலைக்கு ஆட்படுகிறோம். 'மாரியல்லது காரியமில்லை' என்பது முன்னோர் மொழி. இன்றைக்கோ பெருமழை பொழிந்தால் காரியமே இல்லை என்று கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஏன் இந்த நிலையை அடைந்தோம்? புயல், மழை, வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை நிகழ்வுகளைப் பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாத தேவை என்னும் சூழலில் இதுகுறித்து, விரிவான கலந்துரையாடலை நிகழ்த்த நம்மிடையே சூழலியல் ஆய்வாளர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் தொடர்ந்து பேசுவோம்.

அண்மைக் காலங்களில் தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், உத்தரகாண்ட், கேரளா, பீகார் முதலான மாநிலங்களில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நிஷா, தானே, வர்தா, ஒக்கி, கஜா முதலான பெரும்புயல்கள் நம் நிலத்தையும் வாழ்வின் அடிப்படைகளையும் பாதித்திருக்கின்றன. நம்நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஐந்துமுறை வறட்சியும் ஏற்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு மும்பையில் ஒரே நாளில் 994 மி.மீ மழை பெய்தது. 2010ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலம் 'லே' பகுதியில், 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ வரை மழையளவு பதிவானது. இத்தகைய மாறுபட்ட இயற்கை நிகழ்வுகள் நேர்வதற்கான காரணமென்ன?

**ஆல்வின் :** இயற்கையானது சமநிலையோடு இருந்தால்தான், அந்தந்தப் பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் நடக்கும். மாறாக அது சமநிலையை இழக்கும்போது இயல்பான பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் காரணமாகப் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவி வெப்பமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன.



XII Std Tamil Chap_2.indd 24 2/22/2019 1:38:20 PM

மழை பெய்வதால் எல்லாவற்றிலும் நீர் ததும்புகிறது. செடி கொடிகள் வளர்கின்றன. காய்கனிகள் காய்க்கிறது. நெல், தானியங்கள் விளைகின்றன. மனிதன் காய்கறிகளையும் விலங்குகளையும் உண்கிறான். ஆடு, மாடு போன்றவை செடிகொடிகளைச் சாப்பிடுகின்றன. புலி, சிங்கம் போன்றவை ஆடு, மாடு, மான்களைச் சாப்பிடுகின்றன. தாவரங்களை உண்ணும் பிராணிகள், தாவரங்களை உண்டு வாழ்கின்றன. விலங்குகளை உண்ணும் "ஊன் உண்ணிகள்", தாவரங்களை உண்ணும் விலங்குகளை பிடித்துச் சாப்பிடுகின்றன. இந்த இயற்கையின் சுழற்சியே இயற்கைச் சமநிலை.

நெறியாளர்: புவி வெப்பமடைவது இயற்கையாகவே நேர்கிறதா? மனிதர்களது செயல்பாடுகளால் நேர்கிறதா? என்ற விவாதம் அறிவியலாளர்களிடையே நடைபெற்று வருகிறதே!

முத்துக்குமரன்: மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே" என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார். ஆர்டிக் பகுதி, கடந்த முப்பது ஆண்டுகளில் நான்கு இலட்சம் சதுர மைல்கள் உருகியுள்ளது. இதற்குப் புவி வெப்பமாதலே காரணமாகும்.

நெறியாளர் : புவி வெப்பமயமாதலுக்கும் தட்ப வெப்பநிலை மாற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?

கவின்மலர்: கார்பன் டைஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றைத்தான் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள். இதன் அளவு அதிகமாக அதிகமாகப் புவி வெப்பமடையத் தொடங்குகிறது. இதனால், காலநிலை மாறுதல்கள் ஏற்பட்டுப் புவியின் இயக்கம் குறைந்து வருகிறது; எனவே மாற்று ஆற்றல்களாக விளங்கக்கூடிய சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்ற கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாட்டை நோக்கி உலக நாடுகள் சென்றால் மட்டுமே நிலைமையை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும்.

நெறியாளர்: உலக நாடுகள் என்று கூறினீர்களே. உலக நாடுகள் ஒன்றிணைந்து புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன?

ஆயிசா: ஐக்கிய நாடுகள் அவை 1992ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை





XII Std Tamil Chap_2.indd 25 2/22/2019 1:38:21 PM



தெரியுமா?

**புயலுக்குப் பெயர்**

சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. அதன்படி வங்கக்கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்க இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டுப் பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கின்றன. அந்தப் பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

*(UNFCCC – United Nations Framework Convention on Climate Changes) உருவாக்கியது. இந்த அமைப்பில் தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன. பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது. ஒவ்வோர் ஆண்டும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்த உரையாடல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கணக்கெடுத்தால் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இந்தப் பட்டியலில் இந்தியாவும் உள்ளது.*

*நெறியாளர்:* *புவி வெப்பமாதலால் ஏற்படும் கேடுகள் நம் எதிர்கால வாழ்வையும் வரும் தலைமுறையையும் அச்சுறுத்துவதாக இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்படுகிறதா?*

*ஆயிசா:* *ஆம். இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர். 2001ஆம் ஆண்டிற்குப் பிறகு புவியின் வெப்பம் ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்துகொண்டே போகிறது; இவ்வாறு உயர்ந்துகொண்டே போனால் அடுத்த 50 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் உயர்ந்து உலகத்தில் 200 கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புவி வெப்பமயமாதல் காரணமாக உலகின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது.*

*முத்துக்குமரன்:* *உலகம் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருந்தாலும் நாற்பது விழுக்காடு மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையோடு வாழ்ந்து வருகிறார்கள். நாளுக்கு நாள் பெருகி வரும் தேவைகளுக்காக இயற்கை வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி வருகிறோம். அதனாலேயே இயற்கைச் சமநிலை குலைந்து பேரிடர் ஏற்படுகிறது. இவற்றைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு மனித சமூகத்திற்கு உண்டு.*

*நெறியாளர்:* *சின்னச்சின்ன மழைத்துளிகள் மனித வாழ்வின் பேரின்பம்; அண்மைக்கால வெள்ளப்பெருக்குகள் அதைப் பெருந்துயராக மாற்றி அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இவை பருவநிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைத்தானே உணர்த்துகின்றன?*

*முத்துக்குமரன்:* *இயல்பாகவே பெருமழையைத் தாங்கக்கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்ற ஏற்பாடுகளை இயற்கை அமைத்திருக்கிறது. நாம் இந்த அமைப்பில் இடையீடு செய்து நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்கிக் கொள்கிறோம். நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி நீர்வழிப்பாதைகளைக் குறுக்கி வெள்ளச் சமவெளிகளை இல்லாமல் செய்துவிடுகிறோம். இதன் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுகின்றன. பெருமழைக் காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.*

*நெறியாளர் :* *வெள்ளச் சமவெளிகள் இன்றும் இருக்கின்றனவா? உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளச் சமவெளிகளும் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையனவா?*

*ஆல்வின்:* *தமிழ்நாட்டில் மழைக்காலங்களில்*

பெறும் நீரைச் சேமித்து வைக்கும் நீர் மேலாண்மை அமைப்புகள் இருந்தன. வெள்ளச் சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண். ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இது ஆற்றங்கரைப்படிவு எனப்படும். இதில் படிகின்ற பொருள்களால் ஆற்றுச் சமவெளியில் அடர்த்தியானமணலாலும்மற்றும்சேற்றினாலும் அடுக்குப் படிவம் உருவாகும். அப்படிவம் வெள்ளப் பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்; நீர் மாசடைவதைத் தடுக்கும்; மண் அரிப்பைத் தடுக்கும்; வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும். உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளக்காலங்களில் உதவியாக இருக்கும்.

நெறியாளர்: அப்படியானால் இன்று ஆற்றில் பாறைகள் தெரியும் அளவிற்கு மணல் அள்ளியதன் விளைவாகத்தான் வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறதா?

முத்துக்குமரன்: ஆம். கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85% வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டவையே. இதற்கு மணல் அள்ளுவதும் ஒரு காரணம்.

கவின்மலர்: தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு, ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர்நிலைகள் இருந்தன. இன்றைக்கு அது, வெறும் இருபதாயிரமாகக் குறைந்துபோயிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றி மட்டுமே ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன. இருக்கின்ற நீர்நிலைகளில் பெரும்பாலானவை தூர்ந்து கிடக்கின்றன. இதனால் இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் மட்டமும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மணலின் பங்கு இன்றியமையாதது. இன்று குறிப்பிட்ட அளவையும் கடந்து மணலை எடுத்துப் பயன்படுத்தியதன் விளைவாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து நீரோட்டத்தில் தடை ஏற்பட்டு ஏராளமான எதிர்மறைவிளைவுகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலை தொடர்ந்தால் வேளாண்மைத் தொழில் கற்பனை செய்ய முடியாத அளவு இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

ஆல்வின்: வளர்ந்த நாடுகளில் திட்டமிடப்பட்ட கட்டமைப்புகள், வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் விழிப்புணர்வுப் பரப்புரை, நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தல் ஆகிய செயல்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் பெரிய அளவிற்குப் பொருளிழப்பு ஏற்பட்டாலும் உயிரிழப்பு ஏற்படுவதில்லை. நம் நாட்டில் வெள்ளப்பெருக்குக் காலங்களில் மட்டும் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம். நாம், வெள்ளம் வடிந்த பிறகு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கவும் வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இனி வரும் காலங்களில் இவற்றைக் கருத்தில்கொண்டு செயல்படவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

நெறியாளர்: பேரிடர்க் காலங்களில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஏதும் உருவாக்கப்பட்டுள்ளனவா?

ஆயிசா: நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது. புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது. இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நெறியாளர்: இக்குழுக்கள் அனைத்து நிலைகளிலும் அமைக்கப்பட்டுள்ளனவா?

ஆயிசா: மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும்



XII Std Tamil Chap_2.indd 27 2/22/2019 1:38:21 PM

குழுக்கள் அமைத்துப் பேரிடர்க் காலங்களில் செயலாற்ற, பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

நெறியாளர்: பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

முத்துக்குமரன்: பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும். நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும். சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும். கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

கவின்மலர்: பேரிடர் வந்துவிட்டால் மேற்கொள்ள வேண்டியவை பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். பதற்றமடைதலைத் தவிர்த்து, வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை தொடர்பான தகவல்களின் அடிப்படையில் மக்கள் செயல்பட வேண்டும்; வதந்திகளை நம்பவோ, பரப்பவோ கூடாது; அரசு, தீயணைப்புத்துறை, காவல்துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீட்பு, பாதுகாப்பு முதலான பணிகளில் ஈடுபடுவதுடன் பாதுகாப்பு மையங்களையும் மருத்துவக் குழுக்களையும் அணியமாக வைத்திருக்க வேண்டும்.

ஆயிசா: அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது அரசு, தொண்டு நிறுவனங்கள், தன்னார்வக்குழுக்கள், தனிமனிதர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட்டனர். வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டெடுத்தல், முகாம்கள் அமைத்தல், அடிப்படை வசதிகளை உண்டாக்குதல், உணவு வழங்குதல், மருத்துவ உதவிகளைச் செய்தல் ஆகியவற்றில் மனிதம் உச்சமடைந்ததைக் கவனிக்க முடிந்தது. இக்கூட்டுமுயற்சி, இயற்கைச் சமநிலையைப் பாதுகாப்பதிலும் தொடர்ந்தால் பேரிடர் நிகழ்வுகளைத் தவிர்க்க முடியும்.

நெறியாளர்: புயல், மழை, பெருவெள்ளம், இயற்கைச் சமநிலை, புவி வெப்பமயமாதல், இயற்கை வளங்களைக் காத்தல், நீர்நிலைகளைப் பெருகச் செய்தல், பேரிடர்க் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன குறித்துத் தொடர்ந்து உரையாட வேண்டிய இன்றியமையாமையும் தேவையும் நமக்கு இருக்கிறது. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு உளமார்ந்த நன்றி.



தெரியுமா?

### மழையைக் கணிக்கும் அறிகுறிகள்

குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குறிப்பிடும், மழையைக் கணிக்கும் அறிகுறிகள்:

கார்மேகங்கள், சூரிய உதயத்திற்கு 15, 20 நிமிடங்களுக்கு முன்னதாகக் கிழக்கு வானத்தில் தோன்றுதல், செம்மை நிற மேகங்கள், திடீர்ப் புயல், காற்றின் திசை, இடி, மின்னல், பலமான காற்று, வானவில், முட்டைகளைச் சுமந்திருக்கும் எறும்புகள், பறக்கும் பருந்து, சூரியனைச் சுற்றி ஒளிவட்டம், வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை, தூசுப் பனிமூட்டம்.



கற்பவை கற்றபின்...

1. வெள்ளப் பேரழிவு குறித்த நாளிதழ்ச் செய்திகளைத் தொகுக்க.
2. ஜூன் 5, உலகச் சுற்றுச் சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழியை உருவாக்குக.

# பிறகொரு நாள் கோடை

8WZ2IR

*–அய்யப்ப மாதவன்*

**நுழையும்முன்**

மாறுபட்ட இரண்டு இணைகிறபோது புது அழகு புலப்படுகிறது. பகலும் இரவும் சந்திக்கும் அந்தி அழகு. கரையும் கடலும் சேரும் ஓரம் அழகு. மழையினூடே வெயில் வரும் வேளை காட்டுகிற அழகுகள் பார்க்கத் திகட்டாதவை. நீரில் நனைந்து வெயிலில் காயும் நகரத்தில் பளபளக்கும் மரக்கிளைகள் சொட்டும் நீர்த்துளிகளும் வெயில் கண்டு மகிழ்ந்த பறவைகளின் இசைப்பும் நெஞ்சில் தடமாய் வழிகின்றன. வெயில் கண்டு மகிழ்ந்தாலும் மீண்டும் மழைக்காக நெஞ்சம் ஏங்கத்தான் செய்கிறது.

*மழைக்காலத்தில் சூரியனின் திடீர்ப் பயணம்*
*காய்கிறது நனைந்திருந்த வெளிச்சம்*
*நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது*
*நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து*
*உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்*
*சுவரெங்குமிருந்த நீர்ச்சுவடுகள்*
*அழிந்த மாயத்தில் வருத்தம் தோய்கிறது*
*தலையசைத்து உதறுகிறது*
*மீதமான சொட்டுக்களை ஈரமான மரங்கள்*
*வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் பீறிட*
*சங்கீதம் இசைக்கின்றன*
*மழைக்கனவிலிருந்து விடுபடுகிறது இவ்வூர்*
*இன்னும் நான் வீட்டுச்சுவரில்*
*செங்குத்தாய் இறங்கிய மழையை இதயத்தினுள்*
*வழியவிட்டுக் கொண்டிருக்கிறேன்*
*கை ஏந்தி வாங்கிய துளிகள்*
*நரம்புகளுக்குள் வீணை*
*மீட்டிக் கொண்டிருக்கிறது*
*போன மழை திரும்பவும் வருமென்று*
*மேகங்களை வெறித்துக் கொண்டு அலைகிறேன்*
*பிறகொரு நாள் கோடை வந்துவிட்டது.*



**நூல்வெளி**

இக்கவிதை 'அய்யப்ப மாதவன் கவிதைகள்' என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவர் கவிஞர் அய்யப்ப மாதவன்; இதழியல் துறை, திரைத்துறை சார்ந்து இயங்கி வருபவர்; 'இன்று' என்ற கவிதைக் குறும்படத்தையும் மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி முதலான கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

**கற்பவை கற்றபின்...**

'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் ஒன்று உருவாக்குக.

கவிதைப்பேழை

இயற்கை உ

# நெடுநல்வாடை

9CHWK3

*–நக்கீரர்*

நுழையும்முன்

'ஐப்பசி அடை மழை! கார்த்திகை கனமழை!' என்பது சொலவடை, ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர். பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை, மாற்றம் பெறுகிறது. முல்லை நில மக்கள், பறவைகள்,விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

*'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்*
*பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென*
*ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்*
*ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்*
*புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்*
*நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ*
*மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்*
*கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க**
*மாமேயல் மறப்ப மந்தி கூரப்*
*பறவை படிவன வீழ கறவை*
*கன்றுகோள் ஒழியக் கடிய வீசி*
*குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள். [1–12]*

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

**சொல்லும் பொருளும்**

**புதுப்பெயல்** – புதுமழை; **ஆர்கலி** – வெள்ளம்; **கொடுங்கோல்** – வளைந்த கோல்; **புலம்பு** – தனிமை; **கண்ணி** – தலையில் சூடும் மாலை; **கவுள்** – கன்னம்; **மா** – விலங்கு.

திணை : வாகை

**வாகைத் திணை** – வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை.

துறை : கூதிர்ப்பாசறை

**கூதிர்ப்பாசறை** – போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு.

**பாடலின் பொருள்**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கை–களுக்குச் சூடேற்றியபோதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின.



XII Std Tamil Chap_2.indd 30 2/22/2019 1:38:22 PM



மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**இலக்கணக் குறிப்பு**

**வளைஇ** – சொல்லிசை அளபெடை; **பொய்யா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; **புதுப்பெயல், கொடுங்கோல்** – பண்புத்தொகைகள்.

**உறுப்பிலக்கணம்**

*கலங்கி* = **கலங்கு + இ**

கலங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

*இனநிரை* = **இனம் + நிரை**

விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் – இனநிரை

*புதுப்பெயல்* = **புதுமை + பெயல்**

விதி :ஈறுபோதல் – புது + பெயல்

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – புதுப்பெயல்

**நூல்வெளி**

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ; 188 அடிகளைக் கொண்டது; ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இப்பாடலின் பெயர் இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாகவும் போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

**கற்பவை கற்றபின்...**

தற்கால வாழ்க்கைமுறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.



XII Std Tamil Chap_2.indd 31 2/22/2019 1:38:23 PM

விரிவானம்

இயற்கை ௨

# முதல்கல்

– உத்தமசோழன்




பயிர்களை வாழவைப்பது மழை. அது பெருமழையாகி வெள்ளமாய்த் திரண்டு தேங்குகையில், தான் உயிர்ப்பித்த பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது. அது மழையின் குற்றமல்ல. வெள்ளம் தேங்காமல் வடிய வழிவகை செய்யாத மனிதனின் குற்றம். பெருவெள்ளத்தை வடியச் செய்யத் தனிமனிதனால் முடியுமா? ஊர் கூடிச் செய்யவேண்டிய பணியல்லவா?

ஐப்பசி மாத அந்திப் பொழுது, வர்ண ஜாலங்கள் காட்ட வேண்டிய அந்திச் சூரியன் மழைமேகங்களின் சிறையில்; அதனால் நிழல் வெளிச்சம் மட்டுமே மிச்சம், பூமிக்கு.

வளவனாற்றின் வடகரையில் நின்று வடக்கே பார்த்த மருதனுக்குத் திக்கென்றது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று விரிந்து கிடந்த வயல் வெளிகள். அடர்பச்சையில் தீவுபோல ஊர்க்குடியிருப்பு. மரங்களுக்கிடையில், வயல்வெளியெங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான 'பச்சை' பிடிக்கத் தொடங்கியிருந்த இளம்பயிர், வெளிர்பச்சையில். இப்பொழுதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில். நான்கு நாள் அடைமழையில் எல்லா வாய்க்கால்களும் பொங்கி வழிந்து வரப்பு எது, வயல் எது என்று அடையாளம் தெரியாமல் 'கெத்... கெத்' என்று அலையடித்துக் கொண்டிருந்து, ஓட வழிதெரியாமல்.

போதும் பத்தாததற்கு வானொலி வேறு அதிகாலையிலேயே அபாய அறிவிப்பு ஒன்றை வழங்கிவிட்டது.

'வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று, நாகப்பட்டினத்திற்குத் தென்கிழக்கே ஐந்நூறு கிலோமீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது. இது மேலும் வலுப்பெற்று மேற்கு வடமேற்காக நகரக் கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் பலத்த அல்லது மிகப் பலத்த மழை பெய்யக்கூடும்'.

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தஞ்சை, நாகை மாவட்டக்கார்களுக்கு இது வாடிக்கையான செய்திதான். ஆனால்...

காவிரியின் கடைமடைக்காரர்கள் 'குறுவை'யை மறந்துவிட்டு, 'சம்பா'விற்காவது தண்ணீர் வராமலா போய்விடும் என்று நாற்றை விட்டு, அது முற்றுகின்ற வரை 'மேட்டூர்' நிலவரத்தை அன்றாடம் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டபோது, மனம் பொறுக்காத மேகங்கள் காட்டிய கருணைப் பொழிவினால், முற்றிய நாற்றைப் பிடுங்கி, அதன் பருவம் தப்பியதற்குத் தாங்கும் வகையில் அதிக உரம் போட்டு நட்டு ஒரு வாரமே ஆன 'குழந்தைப் பயிர்கள்தான்' இப்போது வயல் முழுவதும்.

எந்த மழையின் உதவியில் நட்டார்களோ அதே மழையின் 'அபரிமித அன்பினால்' இப்போது பயிர் தெப்பலாடுகிறது.

ஒருநாள் மூழ்கினால் போதும். முழுவதும் அழுகிவிடும். மறுபடி புதிதாக நாற்றுவிட்டு... புதிய சாகுபடிதான்.

அதற்கு யாரால் முடியும்...? இதற்கே அங்கே வாங்கி, இங்கே பிடுங்கி என்று ஏகப்பட்ட அல்லாடல்கள்.

மறுபடியும் என்றால்... தரிசுதான். சோற்றுக்கு லாட்டரிதான். வேறு என்ன செய்ய?

என்ன செய்யலாம் என்று மருதனுக்கும் ஆயிரம் யோசனைகள்.



XII Std Tamil Chap_2.indd 32 2/22/2019 1:38:23 PM



கரைவழியே நடந்தான். உபரித் தண்ணீர் வடிய வேண்டிய வடிகால் மதகை எட்டிப் பார்த்தான். மதகின் 'கீழ்க்குமிழி' மட்டுமல்ல, ஊரைச்சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்றுமைல் நீள வடிவாய்க்கால் முழுவதுமே சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடந்த நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அசுரத்தனமான ஆக்கிரமிப்பு.

பயிர்கள் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக்கொள்ள வழி கண்டுபிடித்து விட்ட சந்தோஷம் மருதனுக்கு.

இந்தப் பேய்ச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் உபரி நீர் முழுவதும் வடிந்துவிடும்.

"சரி இவ்வளவு நீளம் மண்டிக்கிடக்கும் செடிகளை அரித்து எறிவது லேசான காரியமா?"

இந்த மலைப்பிற்கும் ஒரு சில நிமிட யோசனைக்குப் பிறகு வழி தெரிந்தது. உற்சாகமாக நடக்கத் தொடங்கினான் .

நடந்தவனின் பார்வை, வடிவாய்க்கால் வளைவில் வலைபோட்டபடி நின்று கொண்டிருந்த மாரிமுத்துவின் மீது பதிந்தது. நின்றான்.

"இந்தச் சனியன்பிடிச்ச காட்டாமணக்குச் செடியாலதாண்டா தண்ணி வடிய மாட்டேங்குது..."

மாரி இவனைத் திரும்பிப் பார்த்தான்.

"யாரு இல்லேன்னா..."

"அதிலும் நம்மூரு வடிமதகு இருக்கே... அது வெள்ளைக்காரன் காலத்துலே நம்மூருக்குன்னே ரொம்ப டெக்னிக்கா கட்டுனது. கடலே திரண்டு வந்து உள்ளே நுழைஞ்சாலும் அப்படியே முழுங்கிட்டுக் 'கம்'முன்னு இருக்கும்,

"யாரு இல்லேன்னா..."

"ஊர்க்காரங்க எல்லோரும் ஒண்ணு சேந்தோம்னு வச்சுக்க. ஆளுக்கொரு செடின்னாகூட ஒரே நாள்லே வாய்க்காலும் சுத்தமாயிடும். தண்ணியும் கடகடன்னு வடிஞ்சிடும்."

இப்படிச் சொன்ன மருதனை ஏற இறங்கப் பார்த்தான். பார்த்ததோடு சரி. பிறகு வலையை வாய்க்காலுக்குள் இறக்குவதும் தடம் பார்த்து மேலே தூக்கி, துள்ளும் கெண்டை மீன்களை அள்ளிப் பக்கத்திலிருந்த மீன் கூடைக்குள் போடுவதுமாகக் காரியத்திலேயே கண்ணாயிருந்தான் மாரி.

பொறுமையிழந்து போனான் மருதன்.

"ஏண்டா மாரி. நான் சொன்னது



XII Std Tamil Chap_2.indd 33 2/22/2019 1:38:24 PM

உங்கிட்டதான். நீ சாஞ்சுகிட்டிருந்த பனைமரத்துக்கிட்டேயில்லை."

"தெரியுது... ஏதாவது நடக்கிற காரியமா இருந்தா பதில் சொல்லலாம். நீயோ போகாத ஊருக்கு வழி கேக்கிற, ...நானென்ன சொல்ல முடியும்?"

" எதுடா நடக்காத காரியம்?"

"சரிசரி. எதுக்கு இப்படிக் கோபப்படுறே? முதல்லே ஊரை ஒண்ணுகூட்டிக் காரியத்தை ஆரம்பி. மத்ததை நீயே தெரிஞ்சுக்குவே..."

"ச்சே... நீயெல்லாம் ஒரு மனுஷன்... முதமுத உங்கிட்ட வந்து கேட்டேன் பாரு... என்னைச் சொல்லணும்..."

கோபம் மாறாமல் கீழே இறங்கினான் மருதன்.

கணுக்கால் அளவு தண்ணீர் நிற்கும் நடைபாதை வரப்பு, இருபுறமும் மூழ்க இருக்கும் பயிர்கள். ஒரு வார மழையால் இடையிடையே பசுமை பூரித்துப்போய் நிற்கும் கருவை மரங்கள். மடித்துக் கட்டியிருந்த பழைய கைலி, பனியன் மீதெல்லாம் சேறடிக்க, 'சளக் புளக்' கென்று நடந்துகொண்டிருந்தான்.

வழியில் வீரன்கோவில்குளம். கரை நெடுகத் தண்ணீர்க் குளியலில் மினுக்கியபடி நிற்கும் தென்னைகள். இரவு வந்துவிட்டதாய் நினைத்து அவசரமாய்ப் பூத்துச் சிரித்தபடி குளம் முழுக்கப் பூத்திருக்கும் செவ்வல்லிகள்... இவை எதுவும் மருதனின் மனதைத் தொடவில்லை.

குளக்கரை மேட்டில் புல்லறுத்துக்கொண்டிருந்த முல்லையம்மா கிழவிதான் கண்ணில்பட்டாள்.

"ஏ... ஆத்தா... இந்த அடிச்சி ஊத்துற மழையிலேகூட புல்லறுக்க வந்துட்டியாக்கும். நீ ஆடு, மாடு வளத்தாதான் உன் வயத்துக்குச் சோறு கிடைக்குமாக்கும்..."

கிழவி மருதனைப் பார்த்து நொடித்தாள்.

"போடா.... போக்கத்தவனே....! சோத்துக்கு வக்கில்லாம இல்லேடா... கையை, காலை மடக்கிட்டு வீட்லே முடங்கிக்கிடந்தா சோறு எப்படிடா வயத்துக்குள்ளே இறங்கும்...?"

"அடேங்கப்பா... கோபத்தைப் பாரேன்... சரி...சரி.. உங்க வீட்டுக்காரரு எங்கேயாம்...?"

" எதுக்கு... அதோ அந்த பூவரச மரத்தை அண்ணாந்து பாரு... ஆட்டுக்குத் தழை ஒடைச்சிக்கிட்டிருக்காரு..."

கிழவிக்கு எழுபது வயதிருக்கும். அதைவிட ஐந்து வயதாவது கூடுதலாக இருக்கும் கிழவனுக்கு. அவரோ நடுக்கும் சாரலில் பூவரச மரத்தின் உச்சாணிக் கொம்பில்.

மருதனின் மனத்திற்குள் ஆச்சரியம் பூத்தது.

கிழவன் காளியப்பன்தான் ஊரிலேயே பெரிய மிராசு. ஏராள நிலம் நீச்சு.. வீடு வாசல் ஆள் மாகானம் என்ற அமோக வாழ்க்கை. இதுவே இன்னொருவனாயிருந்தால் இந்நேரம் ஈசிச் சேரில் சாய்ந்தபடி வெற்றிலை குதப்பிக்கொண்டு ஊர் அக்கப்போர் பேசிக்கொண்டிருப்பான். கிழவனால் அப்படி முடியாது.

" பெரியப்பா....! "

குரல் கேட்டு, கோவணக்கட்டும், தலையில் முண்டாசுமாய் இருந்த கிழவர் முகத்தை மறைத்த பூவரசக் கிளைகளை ஒதுக்கிக் குனிந்து பார்த்தார்.

" யாரது..."

" நான்தான்.. மருதன்"

" என்னடா..."

" வடக்கேயிருக்கும் எட்டூரு தண்ணியும் நம்மூரு வழியாத்தானே வடிஞ்சாகனும். மேற்கொண்டு மழை பேயணும்கூட அவசியமில்லை..... ராத்திரிக்குள்ளெ எல்லாத் தண்ணியும் இங்கே வந்திறங்கிடுச்சின்னா. .. அவ்வளவுதான்.. இப்பவே எல்லாப் பயிரும் தோகையாடுது. எல்லாமே அப்புறம் தண்ணிக்குள்ளதான்."

" வாஸ்தவம்தான்... அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? என்ன பாவம் செஞ்சோமோ இந்த ஊர்ல வந்து பொறந்து தொலைச்சிட்டோம். அனுபவிக்க வேண்டியதுதான்..."

"பாவ புண்ணியமெல்லாம் அப்புறமா



XII Std Tamil Chap_2.indd 34 2/22/2019 1:38:25 PM

பேசிக்கலாம் பெரியப்பா... முதல் காரியமா இன்னைக்கு ராத்திரி நம்ம ஊர்க்காரர்களை ஒண்ணு கூட்டி ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா போதும்.."

கிழவரின் புருவம் ஏறி இறங்கியது.

" என்னன்னு...?"

" விடிஞ்சதும் வீட்டுக்கொரு ஆள் அரிவாள், மம்பட்டியோட வடிவாய்க்காக்கரைக்கு வந்துடணும். ஒரு செடி பூண்டு இல்லாம அரிச்சு எறிஞ்சுட்டா பொட்டுத் தண்ணியில்லாம வடிஞ்சிடும்னு சொல்லனும்.."

கிழவர் மெதுவாய் மரத்திலிருந்து கீழே இறங்கினார்.

"ஏன்டா மருதா ... உனக்கு விவரம் தெரிஞ்சு நம்ப ஊரு பயலுவ எந்த நல்ல காரியத்துக்காகவாவது ஒண்ணு கூடியிருக்கானுவளா? மூலைக்கு ஒருத்தனா முறுக்கிக்கிட்டுல்லே போவானுங்க."

"சொல்ற விதத்திலே சொன்னா எல்லாருமே கேப்பாங்க... அதிலும் உங்க சொல்லுக்கு மதிப்பு ஜாஸ்தி. யோசிக்காதீங்க பெரியப்பா.. ஒருநாள் தாமதிச்சாலும் ஊரே பாழாப் போயிடும்..."

மருதனின் கவலையும், பதைப்பும் கிழவரை என்னவோ செய்தது. இருந்தாலும் கண்மூடி யோசித்தார்.

"இவன் சொல்றபடி ஊரானைக் கூப்பிட்டுச் சொன்னாக் கேப்பானுங்கதான். ஆனா நாம முன்னுக்கு நின்னு செய்றப்ப அது இதுன்னு ஆயிரம் ரெண்டாயிரம்னு செலவு வைப்பானுங்க....அப்படிச் செய்யணும்னு என்ன முடை நமக்கு. எல்லோருக்கும் ஆவறது நமக்கும் ஆயிட்டுப் போவட்டுமே. இவன் வெறும்பயல்.. எது வேணும்னாலும் சொல்லுவான்... நாம ஏமாந்துவிடக்கூடாது. ...."

மனதின் எண்ண ஓட்டத்தை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் தழைந்த குரலில் நெற்றியைத் தேய்த்தபடியே சொன்னார்.

"ஏன்டா .. மருதா.. ஊர்லே எத்தன பயலுவ இருக்கானுவ..ஆனா உனக்கு வந்த அக்கறை எவனுக்காவது வந்துச்சா .. நீ சொல்றபடி செஞ்சாதான் பயிர் பொழைக்கும். சந்தேகமேயில்லை. ஆனா எனக்கொரு சங்கடம்.. நாளைக்குக் காலையிலேயே பலபலன்னு விடியறப்ப வானமா தேவியிலே கட்டிக் கொடுத்திருக்கிற எம்மக வீட்லே இருந்தாகணும். குடும்பத்தோட வில் வண்டியிலே போறோம். அங்கே பேத்திக்குத் 'தலை சுத்துறாங்க' திரும்ப வர மூணு நாளாகும். அதாம் பாக்குறேன்..."

கிழவரின் சாதுரியம் மருதனுக்குப் புரிந்துவிட்டது. மனது கசந்து வந்தது.

"பரவாயில்லே பெரியப்பா.... நீங்க போயிட்டு வாங்க."

திரும்பிப் பார்க்காமல் நடக்கத் தொடங்கினான்.

ஊர் எல்லையை மிதித்தபோது எதிரில் வந்து கொண்டிருந்த பிரேம்குமாரைப் பார்த்ததும் சரேலன்று உற்சாகம் கொப்பளித்தது மருதனுக்கு.

பிரேம்குமார் கிராமத்தின் முதல் பட்டதாரி. "நாகூர்பிச்சை" என்று அப்பா, அம்மா வைத்த பெயரை "பிரேம்குமார்" என்று மாற்றி வைத்துக்கொண்டு "மன்றம்" அது இது வென்று என்னவென்னவோ சதா சர்வகாலமும் செய்து கொண்டிருப்பவன்.

'நாம நினைக்கிற காரியத்துக்கு இவன்தான் பொருத்தமானவன்.' முகம் மலர பிரேம்குமாரை வழி மறித்தான்.

"என்னண்ணே.." சிரித்தபடி பிரேம்குமார்.

கடகடவென்று எல்லாவற்றையும் சொல்லி முடித்தான் மருதன். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி , பிரேமிடமிருந்து சட்டென்று எந்தப் பதிலும் வரவில்லை. சிறிது நேர யோசிப்புக்குப் பிறகு மருதனை ஏறிட்டான்.

"மருதண்ணே ... நீங்க சொல்ற வேலையைச் செய்றதுக்குன்னே பி டபிள்யூ டின்னு கவர்மெண்ட்லே ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கு. நாளைக் காலையிலே அவங்களைப் பார்த்து ஒரு 'பெட்டிஷன்' கொடுத்தீங்கன்னா செஞ்சுட்டுப் போறாங்க."

மருதனின் முகம் சிறுத்துப் போய்விட்டது.

" நானே கூட நாளைக்கு என்ஜினியரைப்

பார்க்கலாம். ஆனா எனக்கு ஒரு ரெண்டு மூணு நாளைக்கு மூச்சுவிட முடியாத வேலை. எங்க தலைவருக்குப் பிறந்தநாளு. அதுக்கு அன்னதானம்.. ரத்ததானம்னு நிறைய வேலை. உங்களுக்கே தெரியும் அவரோட ரசிகர் மன்றத்துக்கு நான்தான் தலைவருன்னு. பிறந்தநாள் விழா முடிஞ்சதும் நீங்க சொல்ற மாதிரி ஏதாவது செய்வோம். வரட்டுமாண்ணே.. எனக்காக எல்லாரும் காத்துக்கிட்டிருப்பாங்க."

மருதனின் பதிலை எதிர்பார்க்காமல் அவன் போய்க்கொண்டே இருந்தான்.

இதற்குப் பிறகும் மருதனால் சும்மா இருக்க முடியவில்லை. ஒருத்தர் பாக்கி இல்லாமல் ஊர்க்காரர்களிடம் சொல்லிச் சொல்லிப் புலம்பினான்.

அத்தனை பேரும் அவன் சொன்னதை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அதென்ன அதிசயமோ தெரியவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை இருந்தது. அதுவும் தள்ளிப்போட முடியாத அவசர வேலை.

மனமும் உடம்பும் சோர்ந்துபோய் வீடு திரும்பிய மருதனை அல்லி பதட்டமாய் எதிர்கொண்டாள்.

" என்னது. ஏன் என்னமோ மாதிரி இருக்கே மாமா. உடம்பு கிடம்பு சரியில்லையா?"

அவனது கழுத்து, முகமெல்லாம் தொட்டுப்பார்த்தாள்.

"ம்ஹூம்.... உடம்புக்கு ஒன்றுமில்லே.. மனசிலேதான் ஏதோ"

நொடிப்பொழுதில் புரிந்துகொண்ட அல்லி உள்ளே ஓடினாள். அப்போதுதான் வடித்த சுடுகஞ்சியில் இரண்டுகல் உப்பைப் போட்டுக் கலக்கி எடுத்து வந்தாள்.

" இதைக்குடி... சூடா இருக்கு."

குடித்தான். இதமாக இருந்தது.

பிறகு அவள் கேட்காமலேயே எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கன்னத்தில் கைவைத்தபடி உட்கார்ந்துவிட்டான்.

அவனைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை.

" ஏன் மாமா.. தெரியாமத்தான் கேக்குறேன்... நீ நட்டுப் போட்டுருக்கிற எந்த நிலம் பாழாப் போயிடப் போவுதுன்னு இப்படிக் கன்னத்திலே கை வச்சுக்கிட்டு உக்காந்துகிட்டே... இந்த ஊர்ல இருக்கிற மொத்தம் அறுபது வேலி நிலத்திலே நமக்குன்னு ஒரு " சக்கரைக்குழி" நிலம் கூட இல்லே. எந்த நிலம் எப்படிப்போனா நமக்கென்ன... நமக்குன்னு சொந்தம் கொண்டாட இருக்கிறது நம்ம கையும் காலும்தான். இந்த ஊரு இல்லேன்னா .. இன்னொரு ஊரு.. வேலையைப் பாப்பியா..." ஆவேசமாய்க் கொட்டி முழக்கிவிட்டு உள்ளே போனாள்.

விக்கித்துப்போய் உட்கார்ந்திருந்த மருதனின் முன்னே சோற்றுத்தட்டையும், தண்ணீரையும் வைத்தாள்.

தட்டிலிருந்து கிளம்பிய சுடுசோற்றின் வாசம், காரமான மொச்சைக் கொட்டைக் குழம்பின் நெடி, அவித்த முட்டையின் மணம் எதையும் அவன் உணரவில்லை.

யந்திரமாய்ச் சாப்பிட்டான்; ஊமையாய்ப் படுத்துவிட்டான்.

இரவு முழுக்க அவனால் தூங்க முடியவில்லை. நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த நெல் பயிர் அத்தனையும் "என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து" என்று அவனைப் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தன.

பொழுது புலரும் தருணம்.

புருஷனைத் தொடக் கை நீட்டியவள் அவன் இல்லாமல் திடுக்கிட்டு எழுந்தாள்.

'எங்கே போனாரு...?'

யோசித்தவளுக்கு, 'ஒரு வேளை அங்கே போயிருப்பாரோ'. என்று பொறிதட்டியது.

முடியை அள்ளிச் சொருகிக் கொண்டு வடிவாய்க்காலை நோக்கி வேகுவேகென்று நடக்கத் தொடங்கினாள்.

அல்லியின் கணக்குத் தப்பவில்லை.

தளும்புகின்ற வடி வாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி மண்டிக்கிடந்த காட்டாமணக்குச் செடிகளை 'சரக்



XII Std Tamil Chap_2.indd 36 2/22/2019 1:38:25 PM

சரக்' கென்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன். அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டாள் அல்லி.

அவளையறியாமலேயே புடவையை வரிந்து கட்டிக்கொண்டு வாய்க்காலுக்குள் இறங்கிவிட்டாள்.

" நீ சொல்றது நிஜம்தான் மாமா. ஊரு நல்லா இருந்தாதான் நாமளும் நல்லாயிருக்கலாம். அதுக்காக இவ்ளோ நீளமான வாய்க்காலை நீயும் நானும் மட்டுமே சுத்தம் பண்ணிட முடியுமா?"

ஆற்றாமையுடன் கேட்டவளைத் திரும்பிப் பார்க்காமலே பதில் தந்தான்.

"முதல்லே நம்மாலே முடிஞ்சதை நாம செய்வோம்...!"

அதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியாமல் அவன் அறுத்துப்போட்ட செடிகளை அள்ளிக் கரையில் கொண்டுபோய்ப் போடத் தொடங்கினாள்.

அவர்களைப் பார்த்தபடியே சற்றுத்தள்ளி எப்போதும் போல் வலைபோட்டுக் கொண்டிருந்த மாரிமுத்துவுக்கு என்ன தோன்றியதோ என்னவோ... வலையை மடக்கிக் கரையில் போட்டான்.

"நாசமாப்போற செடிங்க, தரைகளிலேயும் மண்டுது, தண்ணியிலேயும் மண்டுது. .. எங்கிருந்து வந்துச்சோ எங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்க. .." என்று முணுமுணுத்தபடி வேட்டியை அவிழ்த்து முண்டாசு கட்டியபடி வாய்க்காலுக்குள் இறங்கிவிட்டான், மருதனுக்கு ஜோடியாக.

நேற்று மருதனிடம் சொல்லிவிட்டதாலோ என்னவோ வடிவாய்க்கால் ரோட்டில் வில் வண்டியின் பின்புறம் உட்கார்ந்தபடி மகள் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்த கிழவர் காளியப்பனின் பார்வை யதேச்சையாக வாய்க்காலுக்குள் சென்றபோது திடுக்கிட்டுப் போனார்.

மருதன்.... அல்லி.... மாரி... மூவரும் மும்முரமாய்ச் செடிகளை அறுத்தபடியிருந்தனர்.

அனிச்சையாய் வண்டியிலிருந்து குதித்துவிட்டார் பெரியவர். நொடி நேர யோசனைக்குப் பிறகு " வண்டியை வீட்டுக்குத் திருப்பிப் போடா.. எனக்கு இங்கே கொஞ்சம் வேலையிருக்கு.." என்றபடி வேட்டி சட்டையைக் கரையில் அவிழ்த்துப் போட்டுவிட்டு, துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு அவரும் வாய்க்காலுக்குள் இறங்கிவிட்டார்.

இந்தச் செய்தி வண்டிக்காரன் மூலம் ஊருக்குள் பரவியது.

டீக்கடை, மாரியம்மன் கோவிலடி என்று வெட்டிக்கதை பேசுபவர்கள் காதில் விழுந்தது. உறுத்தல் தாங்காமல் ஊர்க்காரர்கள் ஒவ்வொருத்தராய்த் தயங்கித் தயங்கி முன்னும் பின்னுமாய் வடிவாய்க்கால் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

### நூல்வெளி

உத்தம சோழன் (செல்வராஜ்) எழுதிய "முதல்கல்" கதை பாடமாக உள்ளது. தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இது இடம் பெற்றுள்ளது. உத்தம சோழன் திருத்துறைப்பூண்டி அருகே தீவாம்மாள் புரத்தைச் சேர்ந்தவர்; மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல்பூக்கள் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்; "கிழக்கு வாசல் உதயம்" என்ற திங்களிதழைக் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

### கற்பவை கற்றபின்...

உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணவிழாவுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வழங்கும் நோக்கங்களையும் அதனைப் பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.

## நால்வகைப் பொருத்தங்கள்

785IF4

ஒரு மொழியின் எழுத்துகளிலோ சொல்லமைப்பிலோ தொடரமைப்பிலோ சொற்பொருள் அமைப்பிலோ காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். தற்காலத் தமிழிலும் இவ்வகையான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்மாற்றங்களை எல்லாம் தழுவிக் கொள்கிற வகையில் காலத்திற்கேற்ற இலக்கணம் நமக்குத் தேவை. மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை.

### திணை பால் எண் இடம்

**திணை, பால், எண், இடம்** ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகள்; இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவும். தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைகிறது. பெரும்பாலான தொடர்களில் எழுவாயை வைத்துக்கொண்டே வினைமுற்றின் திணை, பால், எண் ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.

**முருகன் நூலகம் சென்றான்**

இத்தொடரில், முருகன் என்னும் எழுவாய் அதன் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்திவிடுகிறது. மேலும் இந்த எழுவாய் தான் பெற வேண்டிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு வேண்டி நிற்கிறது. இதன்மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை அறியலாம்

### திணைப்பாகுபாடு

உலக மொழிகள் அனைத்திலும் பெயர்ச்சொற்களே மிகுதி என்பர். பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என்று இருவகையாகப் பிரிப்பர். இவ்வாறு பாகுபடுத்தும் முறை எல்லா மொழிகளிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு இருதிணைப் பாகுபாடு அமைந்துள்ளதை இலக்கண நூல்களால் அறியலாம்.

**" உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே "**
**(தொல். சொல் 1)**

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை; அவரல்லாத பிற அஃறிணை என்று கூறுகிறது. இவ்வகைப் பாகுபாடு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இல்லை.

இன்றைய தமிழில் யார்? எது? போன்ற வினாச்சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.

**அங்கே நடப்பது யார்?**

**அங்கே நடப்பது எது?**

என்னும் தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார் என்ற பயனிலை



XII Std Tamil Chap_2.indd 38 2/22/2019 1:38:25 PM

உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.

குழந்தை, கதிரவன் போன்றவை இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிபு இருதிணை பெற்றும் வருகின்றது.

**குழந்தை சிரித்தான் – குழந்தை சிரித்தது**

**கதிரவன் உதித்தான் – கதிரவன் உதித்தது**

பேச்சு வழக்கில் அஃறிணை முடிபைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

## பால் பாகுபாடு

தமிழில் பால்பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். பயனிலை விகுதிகளான ஆன், ஆள், ஆர், அது, அன் முதலியவை பால்பகுப்பைக் காட்டுகின்றன.

பழந்தமிழில் ஐம்பால்களுள் பலர்பால்சொல் பன்மையிலும் உயர்வு கருதிச் சிலவேளைகளில் ஒருமையிலும் வந்துள்ளன.

**மாணவர் வந்தனர்(பன்மை) – ஆசிரியர் வந்தார் (ஒருமை)**

இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்குக் கள் என்னும் விகுதி உதவுகிறது

**அவர் வந்தார் ( ஒருமை )**

**அவர்கள் வந்தார்கள் ( பன்மை )**

தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில் அமையும்போது வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.

**தங்கமணி பாடினான் –**
**தங்கமணி பாடினாள்**

பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன.

| | |
|---|---|
| **ஆண் – பெண்;** | **அப்பா–அம்மா;** |
| **தம்பி–தங்கை;** | **தந்தை–தாய்** |

அஃறிணை எழுவாயில் ஆண் பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எனவே ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால் பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.

**காளை உழுதது பசு பால் தந்தது**

ஆகிய தொடர்களில் காளை ஆண்பாலாகவும் பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால் வினைமுற்று, பால்பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.

தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்க பசுமாடு எனவும் ஆண்பாலைக் குறிக்க காளைமாடு (எருது) எனவும் சொற்கள் வழங்கப்படுகின்றன. பிற விலங்குகளைக் குறிக்கையில் ஆண்குரங்கு, பெண்குரங்கு எனவும் எழுவாய்ப் பொதுப்பெயருடன் ஆண் பெண் என்னும் பால்பாகுபாட்டுப் பெயர்கள் முன்சேர்த்து வழங்கப்படுகின்றன.

## எண் பாகுபாடு

இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருகின்றன.



XII Std Tamil Chap_2.indd 39 2/22/2019 1:38:25 PM

**இரண்டு மனிதர்கள்**

அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.

**பத்துத் தேங்காய்**

இவற்றைப் பத்துத் தேங்காய்கள் என்று எழுதுவதில்லை.

இக்காலத் தமிழில் அஃறிணைப் பன்மைக்கெனத் தனி வினைமுற்றுகள் இல்லை. ஆனால், ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயிலேயே வெளிப்படுகிறது.

**ஒரு மரம் வீழ்ந்தது –**
**பத்து மரம் வீழ்ந்தது**

தற்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படுகிற ஒருமை – பன்மை பற்றிய குழப்பங்களுள் ஒன்று 'ஒவ்வொரு' என்னும் சொல்லைப் பற்றியதாகும்.

ஒவ்வொரு **வீடுகளிலும்** நூலகம் உள்ளது

போன்ற தொடர்களைப் பேசவும் எழுதவும் காண்கிறோம்.

ஒவ்வொரு **வீட்டிலும்** நூலகம் உள்ளது

ஒவ்வொரு **பள்ளியும்** சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

என்றே பேசவும் எழுதவும் வேண்டும். ( ஒவ்வொரு – ஒருமை )

### இடப்பாகுபாடு

இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும். பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.

தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை. சான்றாக, நான் புத்தகம் கொடுத்தேன் என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய ஆணா பெண்ணா என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால்பாகுபாட்டை அறிய முடியாது

தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இருவகை உண்டு

பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.

**நாம் முயற்சி செய்வோம்**( உளப்பாட்டுத் தன்மைப் பன்மை)

இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.

**நாங்கள் முயற்சி செய்வோம்**(உளப்படுத்தாத் தன்மைப்பன்மை)

நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலையில் பல்வேறு நோக்கில் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைத் தவிர்ப்பதற்கும் புதியனவற்றை ஏற்பதற்கும் நாம் தயங்கியதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.



XII Std Tamil Chap_2.indd 40 2/22/2019 1:38:25 PM

ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம்

– தமிழ் நடைக் கையேடு

கற்பவை கற்றபின்...

இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1) தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

2) "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

3) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே _____

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

4) பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் – 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் – 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் – 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் – 4) பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

5) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

6) உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

## நம்மை அளப்போம்

A7AQL3

### பலவுள் தெரிக

1. பொருத்துக.

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. **பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

### குறுவினா

1. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
2. இனநிரை – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் – இரு தொடர்களாக்குக.
4. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

### சிறுவினா

1. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி,
'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.
2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

3. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

4. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக

## நெடுவினா

1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக .

2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க .

4. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். அவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய அவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805 முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். அவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். அவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:



மாயூரம் வேதநாயகம் (1826–1889)

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்



XII Std Tamil Chap_2.indd 43 2/22/2019 1:38:26 PM

கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்வி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?" என்றார்.

**மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes. | 1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி வங்காரி மத்தாய் பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து முப்பது ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல்முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்றுகோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |

எ.கா. Green Belt Movement – பசுமை வளாக இயக்கம்

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. தலை, தளை, தழை
2. கலை, களை, கழை
3. அலை, அளை, அழை

எ.கா. விலை, விளை, விழை

கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

**இலக்கிய நயம் பாராட்டுக.**

*வெட்டியடிக்குது மின்னல் – கடல்*
*வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;*
*கொட்டி யிடிக்குது மேகம் – கூ*
*கூவென்று விண்ணைக் குடையுது காற்று*
*சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று*
*தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்*
*எட்டுத்திசையும் இடிய – மழை*
*எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!*

– பாரதியார்



XII Std Tamil Chap_2.indd 44 2/22/2019 1:38:26 PM

**கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.**

*பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்*

*நாள் : அக்டோபர் 2* *நேரம் : காலை 10 மணி*

*இடம் : தலைவாணர் அரங்கம், சென்னை.*

**நிகழ்ச்சி நிரல்**

***தமிழ்த்தாய் வாழ்த்து***

**வரவேற்புரை :** திருமதி அரசி,
செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை :** திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

**தலைமையுரை :** திரு. இமயவரம்பன்,
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

- இயற்கைச் சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும் – முனைவர் செங்குட்டுவன்
- பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் – திரு. முகிலன்
- நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி பாத்திமா
- பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் – திரு. வின்சென்ட்

**நன்றியுரை :** பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

**நாட்டுப்பண்**

## மொழியோடு விளையாடு

**புதிர்க்கேற்ற விடையை அறிக.**

அ) அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் – என்ன?

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
பயிர் பச்சையாய் இருக்கிறது
பாக்கு வெற்றிலை போடாமல்
வாய் சிவப்பாய் இருக்கிறது? – என்ன?

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



*மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள்,குளம்,குட்டை,ஏரி,ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.*



XII Std Tamil Chap_2.indd 45 2/22/2019 1:38:26 PM

### செய்து கற்போம்

உங்கள் பகுதியில் புழங்கும் இருபது சொற்களைக்கொண்டு வட்டார வழக்குச் சொல் தொகுப்பு ஒன்றை உருவாக்குக.



### நிற்க அதற்குத் தக

**அது ஒரு மழைக்காலம், அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்...**

| அ) எச்சரிக்கை நடவடிக்கைகள் | ஆ) சுகாதார நடவடிக்கைகள் |
| --- | --- |
| • வெள்ள நீருக்கு அருகே வரவோ, வெள்ளநீரில் விளையாடவோ கூடாது<br>• ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்.<br>• சாக்கடை நீர் ஓட அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவுநீர்த்தொட்டிகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.<br>• வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன் (தடி) இருங்கள்.<br>• உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளை மீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள்.<br>• அறுந்த மின்கம்பிகள் மீது காலை வைக்காதீர்கள். மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது. | • கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள்.<br>• மூடிவைக்கப்பட்டுள்ள, சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள்.<br>• சமைத்த உணவு, சமைக்கத் தேவையில்லாத உணவுகளையே உட்கொள்ளுங்கள்.<br>• வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம்.<br>• அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி உப்பு, சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம்.<br>• சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க பிளீச்சிங்பவுடர், சுண்ணாம்புத்தூளைப் பயன்படுத்தவும். |

குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?

### படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர்வண்டி நிலையம்)

*Platform* – நடைமேடை

*Train Track* – இருப்புப்பாதை

*Railway Signal* – தொடர்வண்டி வழிக்குறி

*Ticket Inspector* – பயணச்சீட்டு ஆய்வர்

*Level Crossing* – இருப்புப்பாதையைக் கடக்குமிடம்

*Metro Train* – மாநகரத் தொடர்வண்டி

### அறிவை விரிவு செய்

- பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்
- தமிழ் நடைக் கையேடு
- இயற்கைக்கு திரும்பும் பாதை – மசானா ஃபுகோகா
- சுற்றுச்சூழல் கல்வி – ப.ரவி
- கருப்பு மலர்கள் – நா.காமராசன்
- வானம் வசப்படும் – பிரபஞ்சன்

### இணையத்தில் காண்க

http://www.imdchennai.gov.in/fx_term.pdf( வானிலை கலைச்சொற்கள்)

https://learnsangamtamil.com/nedunalvadai/ (நெடுநல்வாடை)

http://agritech.tnau.ac.in/ta/Agriculture/agri_majorareas_disastermgt_anintroduction_ta.html (இயற்கைச் சீற்றங்கள்)



XII Std Tamil Chap_2.indd 46 2/22/2019 1:38:27 PM

இயல் 3

# சுற்றத்தார் கண்ணே உள

பண்பாடு



பழங்குடியினரின் சமூக வாழ்க்கை ஓவியம், நீலகிரி.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழர் குடும்ப உறவுமுறைகளை அறிந்து, அவற்றைப் போற்றும் பண்பினைப் பெறுதல்.
- வாழ்வின் இன்ப துன்பங்களைப் பாடமாக ஏற்கும் பக்குவங்களைக் கவிதையாகப் படைக்கும் திறன் பெறுதல்.
- தமிழர்க்கே உரிய பண்பாட்டுக்கூறுகளைக் காப்பியம்வழிப் படித்துணர்ந்து பின்பற்றுதல்.
- நிலத்தோடு ஒன்றிய எளிய மக்களின் உணர்வுகளைக் கதைகளில் படித்துக் கருத்துரைத்தல்.
- சூழலுக்கேற்பச் சொல்லையும் பொருளையும் தொடரையும் பொருத்தமாகப் பயன்படுத்தும் திறன் அடைதல்.

## பாடப்பகுதிகள்

- தமிழர் குடும்ப முறை – பக்தவத்சல பாரதி
- விருந்தினர் இல்லம் – ஜலாலுத்தீன் ரூமி
- கம்பராமாயணம் – கம்பர்
- உரிமைத்தாகம் – பூமணி
- சொல்லும் பொருளும்
- திருக்குறள் – திருவள்ளுவர்



XII Std Tamil Chap_03.indd 47 2/22/2019 12:57:26 PM

பண்பாடு ௩

# தமிழர் குடும்ப முறை

ALTKME

– பக்தவத்சல பாரதி

**நுழையும்முன்**

குடும்பம் என்ற அமைப்பு ஏற்படப் பன்னெடுங்காலம் ஆகியிருக்கலாம். இந்த உயரமைப்பின் மூலமே உலகச்சமூகம் இயங்குகிறது. சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது. அதன் தொடர்ச்சி இன்றுவரை இருக்கிறது. தொன்மைக் காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கியிருந்த தமிழ்ப் பண்பாட்டின் செழுமை, சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது.

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது; குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்ததில்லை.

## குடும்பம்

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன – நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் (1029) பயின்று வருகிறது.

சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடம்பை' என்ற சொல், இருபது இடங்களில் பயின்று வருகிறது. 'குடும்பு' எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

குடும்பு எனும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக (Semantic extension) 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது. பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

*"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்*
*மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே*
*மனையகம் புகாஅக் காலை யான"*
*(பொருளியல்–129)*

எனும் தொல்காப்பிய நூற்பா, 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

## வாழிடம்

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' (அகம். 346: 16–17) என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' (புறம் 221–6) எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும்



XII Std Tamil Chap_03.indd 48 2/22/2019 12:57:26 PM

மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' (neolocal) எனவும் வழங்கப்பெற்றுள்ளன.

'மனை' எனும் சொல் 'நம்மனை', 'தம்மனை', 'எம்மனை', 'இம்மனை', 'உம்மனை', 'நின்மனை', 'நுந்தைமனை', 'நன்மனை', 'வறுமனை', 'வளமனை', 'கடிமனை', 'தாய்மனை' எனச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வருகின்றது. 'மனையோள்' எனும் சொல்லும் சங்கப்பாடல்களில் பயின்றுவரும் சொல்லாகும். இதன்மூலம் மனை என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை அறியலாம்.

### மணந்தகம்

உயிரிகளைப்போன்றே குடும்பமும் தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது. அதன் வாழ்க்கைச்சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' (Family of procreation) எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் தொல்காப்பிய அடிகள்மூலம்



(தொல். பொருள். 151) மணந்தகம் எனும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

### தாய்வழிக் குடும்பம்

சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம். 270)*

*செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம். 276)*

*வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம். 277)*

*முளரிமருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278)*

*என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்*
*(கலி. பாலை. 8)*

முதலான தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. இவை அனைத்தும் சங்ககாலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை (Matrilocal) இருந்துள்ளது. திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது (அகம் 24:10, 274:14, 284:13).

தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண்குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. **தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.** தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் (குறுந். 295) தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.



XII Std Tamil Chap_03.indd 49 2/22/2019 12:57:29 PM



### தந்தைவழிக் குடும்பம்

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகிவிட்டதையும் காணமுடிகிறது.

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் (patrilocal) வாழ வேண்டும். மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள்.

***நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்***
***எம்மனை வதுவை நல்மணம் கழிக***
*(ஐங்குறு. 399: 1–2)*

இதன்வழி மணமக்களின் வாழ்விடம் கணவன் அகம் என்பதை உறுதிப்படுத்தலாம். மேலும், "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" (குறுந். 135) என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது. சங்ககாலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண இயலும்.

### தனிக்குடும்பம்

தனிக்குடும்பம் (nuclear family) தோன்றுவதற்கான தொடக்கநிலைக் குடும்பங்கள்பற்றிச் சங்க இலக்கியங்கள் மிகுதியாகப் பேசியிருக்கின்றன. இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளை ஐங்குறுநூறு தெளிவுபடுத்துகிறது (408). "மறியிடைப் படுத்த மான்பிணை போல்" மகனை நடுவணாகக்கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் (ஐங்குறுநூறு 401).

தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை / எளிய / நெருக்கமான குடும்பம் (Elementary / Simple / Immediate family) எனப்படும்.

தனிக்குடும்ப வகை, சமூகப் படிமலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட ஒன்று. இது இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது என்பது ஒரு வாதம். ஆனால் பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருப்பதையும் இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இது ஒரு தொல்வடிவமாகவே இருந்து வருகிறது என்பது இன்னொரு வாதமாகும்.



XII Std Tamil Chap_03.indd 50 2/22/2019 12:57:29 PM

## விரிந்த குடும்பம்

சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்று இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் "விரிந்த குடும்ப" (extended family) முறையையும் காண முடிகிறது. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப (lineally extended family) முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் (279) கூறுகிறது.

சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர்களை மட்டும் ஓரளவு இனம் காண முடிகிறது. நற்றாய் (பெற்ற தாய்) ஒருபுறம் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர். சமூகத் தாயாக விளங்கிய செவிலித்தாய் முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சியாகச் சங்ககாலத்தில் வருவதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.

இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் எண்ணினார்கள். விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினைத் தொல்காப்பியமும் பதிவு செய்கிறது.

சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும் தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் இருக்கிறது. தொன்மைமிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமாகும்.

### தெரிந்து தெளிவோம்




### நூல்வெளி

இப்பாடப்பகுதி, பனுவல் (தொகுதி II, 2010) காலாண்டிதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம். இதை எழுதியவர் பக்தவத்சல பாரதி. தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை இவர் முன்னெடுத்து வருகிறார். பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. கூட்டுக்குடும்பம் – தனிக்குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.
2. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.

கவிதைப்பேழை

பண்பாடு ௩

# விருந்தினர் இல்லம்

–ஜலாலுத்தீன் ரூமி

BGLENE

**நுழையும்முன்**

இன்பம் துன்பம், வேண்டியது வேண்டாதது எல்லாமே நாம் விரும்பியும் விரும்பாமலும் நம்மை வந்தடைகின்றன. அவற்றை வேறுபடுத்தாமல் ஏற்றுக்கொண்டு அவற்றிலிருந்து வேண்டியதைக் கற்றுக்கொள்வதே நன்று. எல்லாவற்றிலிருந்தும் நல்லவற்றைக் கற்றுக்கொள்ளும் பண்பாடு வளர வேண்டும். எந்த மொழியில் இருந்தாலும் நல்ல இலக்கியங்கள் இப்பண்பாட்டை வலியுறுத்துகின்றன.

*இந்த மனித இருப்பு*
*ஒரு விருந்தினர் இல்லம்.*
*ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு.*

*ஓர் ஆனந்தம்*
*சற்று மனச்சோர்வு*
*சிறிது அற்பத்தனம்*
*நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு–*
*எதிர்பாராத விருந்தாளிகளாக*
*அவ்வப்போது வந்துசெல்லும்.*

*எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்பு!*
*துக்கங்களின் கூட்டமாக அவை*
*இருந்து உனது வீட்டைத் துப்புரவாக*
*வெறுமைப்படுத்தும் போதும்,*
*ஒவ்வொரு விருந்தினரையும்*
*கௌரவமாக நடத்து.*
*புதியதோர் உவகைக்காக*
*அவை உன்னை*
*தூசிதட்டித் தயார்படுத்தக்கூடும்.*

*வக்கிரம்*
*அவமானம்*
*வஞ்சனை*
*இவற்றை வாயிலுக்கே சென்று*
*இன்முகத்துடன்*
*வரவேற்பாயாக.*

*வருபவர் எவராயினும்*
*நன்றி செலுத்து.*
*ஏனெனில் ஒவ்வொருவரும்*
*ஒரு வழிகாட்டியாக*
*அனுப்பப்படுகிறார்கள்.*
*தொலைதூரத்திற்கு*
*அப்பாலிருந்து.*



நூல்வெளி

ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் அழகாக மொழியாக்கம் செய்தவர் கோல்மன் பார்க்ஸ். அதனைத் தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் என். சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ளார். அத்தொகுப்பிலுள்ள கவிதையொன்று பாடப்பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜலாலுத்தீன் ரூமி (இன்றைய) ஆப்கானிஸ்தான் நாட்டில், கி.பி. (பொ.ஆ.) 1207ஆம் ஆண்டில் பிறந்தார். பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர். இவரது சூஃபி தத்துவப் படைப்பான 'மஸ்னவி' (Masnavi) 25,600 பாடல்களைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மஸ்னவி என்பது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு. இவரின் புகழ்பெற்ற மற்றொரு நூல், 'திவான்–ஈ–ஷம்ஸ்–ஈ–தப்ரீஸி' (Collective Poems of Shams of Tabriz) என்பதாகும்.

கற்பவை கற்றபின்...

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளில் உங்கள் மனம் கவர்ந்த சிலவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.



XII Std Tamil Chap_03.indd 52 2/22/2019 12:57:32 PM

கவிதைப்பேழை

பண்பாடு ந

# கம்பராமாயணம்

BW59PQ

## நுழையும்முன்

'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி; 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி; காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது அத்தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி. கம்பனின் காவியம் இராமனை இப்பண்பின் படிமமாகப் படைத்திருப்பது உயர்ச்சி. தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம் ஆகியவற்றை, எல்லைகள் அனைத்தையும் கடந்து இராமன் விரிவுபடுத்துகிறான். வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் அவன் அன்பிற்கு இல்லை.



### அயோத்தியா காண்டம் – குகப் படலம்

### குகன்

வேடுவர் தலைவன் குகன். பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் அவன். காட்டிற்குச் செல்லும் இராமன், கங்கையைக் கடக்க அவன் உதவுகிறான். அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் குகன் நட்பு முகிழ்க்கிறது. இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். பின்னாளில் அவனைச் சந்திக்கும் பரதன் கூட "எனக்கும் மூத்தோன்" எனக் குகனை ஏற்கிறான்.

1. *அன்னவன் உரை கேளா*
*அமலனும் உரை நேர்வான்*
*என்உயிர் அனையாய் நீ*
*இளவல் உன் இளையான்; இந்*
*நன்னுதலவள் நின் கேள்;*
*நளிர் கடல் நிலம் எல்லாம்*
*உன்னுடையது; நான் உன் தொழில்*
*உரிமையின் உள்ளேன். (1994)*



XII Std Tamil Chap_03.indd 53 2/22/2019 12:57:32 PM

### சொல்லும் பொருளும்

**அமலன்** – இராமன்; **இளவல்** – தம்பி; **நளிர்கடல்** – குளிர்ந்தகடல்

### பொருள்

குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் "என் உயிர் போன்றவனே! நீ என் தம்பி; இலக்குவன் உன் தம்பி; அழகிய நெற்றியைக் கொண்ட சீதை, உன் அண்ணி; குளிர் கடலும் இந்நிலமும் எல்லாம் உனதேயாகும். நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்" என்று இராமன் கூறினான்.

2. *'துன்பு உளதுஎனின் அன்றோ*
*சுகம் உளது? அது அன்றிப்*
*பின்பு உளது; இடை மன்னும்*
*பிரிவு உளது என உன்னேல்;*
*முன்பு உளெம் ஒரு நால்வேம்*
*முடிவு உளது என உன்னா*
*அன்பு உள, இனி, நாம் ஓர்*
*ஐவர்கள் உளர் ஆனோம்* (1995)*

### சொல்லும் பொருளும்

**துன்பு** – துன்பம்; **உன்னேல்** – எண்ணாதே

### பா வகை : கலி விருத்தம்

### பொருள்

இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான். அதை உணர்ந்த இராமன் கூறுகிறான். குகனே! துன்பம் என்று ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும். துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே. இதுவரை நாங்கள் நால்வரே உடன்பிறந்தவர் என்றிருந்தோம். உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிடவில்லை. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம்.

### ஆரண்யகாண்டம் – சடாயு உயிர் நீத்த படலம்

### சடாயு

இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான். இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

3. *இந்தனம் எனைய என்ன கார்*
*அகில் ஈட்டத்தோடும்*
*சந்தனம் குவித்து வேண்டும்*
*தருப்பையும் திருத்தி, பூவும்*
*சிந்தினன் மணலின் வேதி*
*தீது அற இயற்றி, தெண் நீர்*
*தந்தனன் தாதை தன்னைத் தடக்*
*கையான் எடுத்துச் சார்வான். ( 3356)*

### பொருள்

"எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை" என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான். இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

### ஆரணிய காண்டம் – சவரி பிறப்பு நீங்கு படலம்

### சவரி

இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும்கொண்டவள்சவரி.சீதையைத்தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள் இவள். அவ்வகையில் காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள் சவரி. இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

4. *அன்னது ஆம் இருக்கை நண்ணி,*
*ஆண்டுநின்று, அளவு இல் காலம்*
*தன்னையே நினைந்து நோற்கும் சவரியைத்*
*தலைப்பட்டு, அன்னாட்கு*
*இன்னுரை அருளி, தீது இன்று*
*இருந்தனை போலும் என்றான்*
*முன் இவற்கு இது என்று எண்ணல் ஆவது*
*ஓர் மூலம் இல்லான். ( 3700)*



XII Std Tamil Chap_03.indd 54 2/22/2019 12:57:32 PM

### பொருள்

இவனுக்கு முன்னே இப்படியொருவர் இருந்தார் என்று பிறிதொருவரைக் காட்ட இயலாத நிலையிலுள்ள முதற்பொருளாகிய இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா? என்று பரிவுடன் கேட்டான்.

*5. ஆண்டு, அவள் அன்பின் ஏத்தி,*
*அழுது இழி அருவிக் கண்ணள்,*
*மாண்டது என் மாயப் பாசம்;*
*வந்தது, வரம்பு இல் காலம்*
*பூண்ட மா தவத்தின் செல்வம்;*
*போயது, பிறவி, என்பாள்*
*வேண்டிய கொணர்ந்து நல்க.*
*விருந்து செய்து இருந்த வேலை (3701)*

### பொருள்

அப்போது சவரி, இராமனைப் புகழ்ந்து அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள். (இராமனைக் கண்டதால்) " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினாள். வேண்டிய எல்லாம் கொண்டுவந்து அவள் இராம இலக்குவருக்கு விருந்து செய்விக்க, அவர்களும் விருந்தை ஏற்றனர்.

## கிட்கிந்தா காண்டம் – நட்பு கோட்படலம்

### சுக்ரீவன்

சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

*6. தவா வலி அரக்கர் என்னும்*
*தகா இருள் பகையைத் தள்ளி,*
*குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற*
*காலத்தின் கூட்டம் ஒத்தார்*
*அவா முதல் அறுத்த சிந்தை*
*அனகனும், அரியும் வேந்தும்*
*உவா உற வந்து கூடும்*
*உடுபதி, இரவி ஒத்தார். ( 3806)*

### சொல்லும் பொருளும்

**அனகன்** – இராமன்; **உவா** – அமாவாசை; **உடுபதி** – சந்திரன்

### பொருள்

குறையாத வலிமை உடையவர்களும் வேண்டாத இருள்போன்றவர்களுமாகிய பகைவர்களை அழித்து அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற உரிய காலம்போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள். ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும் வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள்.

*7. மற்று இனி உரைப்பது என்னே?*
*வானிடை மண்ணில், நின்னைச்*
*செற்றவர் என்னைச் செற்றார்;*
*தீயரே எனினும் உன்னோடு*
*உற்றவர் எனக்கும் உற்றார்; உன்*
*கிளை எனது; என் காதல்*
*சுற்றம் உன் சுற்றம்; நீ என்*
*இன் உயிர்த் துணைவன் என்றான். (3812)*

### சொல்லும் பொருளும்

**செற்றார்** – பகைவர், **கிளை** – உறவினர்

### பொருள்

இராமன் சுக்ரீவனிடம், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ, என் இனிய உயிர் நண்பன்!" என்றான்.

## யுத்த காண்டம் – வீடணன் அடைக்கலப் படலம்

### வீடணன்

சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான். இலங்கையை விட்டுவந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

8. *ஆழியான் அவனை நோக்கி,*
*அருள்சுரந்து, உவகை கூர*
*ஏழினோடு ஏழாய் நின்ற*
*உலகும் என் பெயரும் எந் நாள்*
*வாழும் நாள், அன்றுகாறும்,*
*வாள் எயிற்று அரக்கர் வைகும்*
*தாழ்கடல் இலங்கைச் செல்வம்*
*நின்னதே, தந்தேன் என்றான். (6503)*

### பொருள்

ஆணைச்சக்கரத்தையுடைய இராமன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனிடம், "ஒளிபொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழ்வதும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சி, ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்" என்று கூறினான்.

9. *குகனோடும் ஐவர் ஆனேம்*
*முன்பு; பின் குன்று சூழ்வான்*
*மக னொடும் அறுவர் ஆனேம்;*
*எம்முழை அன்பின் வந்த*
*அகன் அமர் காதல் ஐய!*
*நின்னொடும் எழுவர் ஆனேம்;*
*புகல் அருங் கானம் தந்து,*
*புதல்வரால் பொலிந்தான் நுந்தை.* (6507)*

**பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

### பொருள்

(நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்). குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம். புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி என்னை அனுப்பிய உன் தந்தையாகிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்.

### இலக்கணக் குறிப்பு

**உளது** – இடைக்குறை; **மாதவம்** – உரிச்சொற்றொடர்; **தாழ்கடல்** – வினைத்தொகை; **செற்றவர்** – வினையாலணையும் பெயர்; **நுந்தை** – நும் தந்தை என்பதன் மரூஉ

### உறுப்பிலக்கணம்

தந்தனன் = **தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

தா – பகுதி (த எனக் குறுகியது விகாரம்); த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

பொலிந்தான் = **பொலி + த் (ந்) + த் + ஆன்**

பொலி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

அருங்கானம் = **அருமை + கானம்**;
விதி : ஈறு போதல் – அரு + கானம்;
விதி : இனமிகல் – அருங்கானம்

**நூல்வெளி**

கம்பராமாயணம் பல்வேறுவிதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பகுதிகள் பாடமாக இடம்பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோரைப் பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடன்பிறப்பியப் பண்பையும் அன்பையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இவை. இந்நூலை இயற்றியவர் கம்பர். இதற்குக் கம்பர் இராமாவதாரம் என்னும் பெயர் சூட்டினார். கம்பனது கவிநலத்தின் காரணமாக இது "கம்பராமாயணம்" என்றே அழைக்கப்படுகிறது. கம்பரது காலம் 12ஆம் நூற்றாண்டு. எழுதப்பட்ட காலம்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

**கற்பவை கற்றபின்...**

உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.



XII Std Tamil Chap_03.indd 56 2/22/2019 12:57:33 PM

விரிவானம்

பண்பாடு ௩

## உரிமைத் தாகம்

– பூமணி

CBN4R2




நிலம் சடப்பொருள் அல்ல. நிலத்தோடு பேசக்கூடிய மனிதர்கள் இன்றைக்கும் கிராமங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். வருவாய் பெரிதாக வரவில்லையென்றாலும் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடாகவே கொண்டிருக்கிற மனிதர்கள் இருக்கிறார்கள். நிலத்தோடு உயிர்த்தொடர்பு கொண்டிருக்கிற பண்பாடு, 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்னும் பழம்பண்பாட்டு மரபை நினைவூட்டுகிறது. நிலத்துடனான உறவு குடும்ப உறவையும் வலுப்படுத்துகிறது.

அந்தச் சங்கதி இதுவரைக்கும் முத்தையனுக்குத் தெரியாது. அவன் பெண்டாட்டி சொல்லித்தான் தெரியும்.

"மேலக்காட்ல கீழத்தாருமேல நம்பிக்கக்கெரையம் எழுதியிருக்குதாமில்ல ஒங்க தம்பி."

முற்றத்தில் எருமைச்சாணியுடன் பருத்திவிதையை ரோசி விதைப்பெட்டியில் நிரப்பிக்கொண்டிருந்தாள் மூக்கம்மா. பெட்டியை வாங்கிக் கடகத்தில் எண்ணிக் கொட்டிய முத்தையன் அவளை ஒருமாதிரியாகப் பார்த்தான். அவன் கண்ணில் கோவமும் ஆச்சரியமும் கலந்திருந்தது.

"என்ன இப்படிச் சொல்ற."

அவனுக்கு மனசு துருதுருத்து, சாட்டைக் கம்பை எடுத்துக் கயிறின் பிரிந்த பாகத்தைத் தொடையில் வைத்துத் திரிக்க ஆரம்பித்தான்.

"நேத்து கோழிகூப்புட எந்திரிச்சு கஞ்சி காய்ச்சீட்ருந்தென். அப்ப புருசனும் பொண்டாட்டியும் கடுகடுன்னு பேசிக்கிட்டாக. மனக்கசப்பு போலருக்கு. மேலூரு பங்காருசாமிகிட்ட எரநூறு ரூவா வாங்கித் திருப்பிக் குடுக்கமுடியாம கடசிக்கு அந்த ஒரு குறுக்கத்தவும் நம்பிக்கக்கெரையம் எழுதிக் குடுத்துச்சாம் ஒங்கதம்பி. ஆறு மாசத்துக்குமேல ஆச்சாம் இது நடந்து. பொண்டாட்டிக்காரி சண்டையத் தொடக்கியிருக்கா."

தொடைமயிரில் சாட்டைக்கயிறு பின்னிச் சுளீரிடவும் அவன் முகஞ்சுளித்தான்.

ரெண்டு வீடுகளுக்கும் நடுவிலிருந்த குறுக்குச்சுவரை வெறித்திருந்தான் அவன்.

மேலக்கரிசலில் ஏர்பூட்டிக் கலப்பை முக்கச் சாலடிக்கும்போது பிச்சிப் பூவாக மண்விரிந்து விழும் அழகில் அவன் மனசு லயித்தது. கம்பு விளைந்தால் தட்டையொண்ணு விரல்தண்டி வாய்க்கும். மூக்கைஅறுக்கிறமாதிரி ஒரு முழுத்துக்குக் கருது வாங்கும். கருதுகளைப் பிணையல்விட்டால் அயிரைக் குஞ்சுகளாகக் களம் நிறையத் தவசம் பெருகும்.

மூக்கம்மா அந்த வீட்டில் காலெடுத்து வைத்துப் பதினஞ்சு வருசமாகிறது. இன்றைக்கு மூணு பிள்ளைகளுக்குத் தாய். வீட்டுக்கு வந்த நாளில் முத்தையனுக்கு மட்டும் அவள் காய்ச்சிப் போடவில்லை. அவன் தம்பி வெள்ளைச்சாமிக்கும் மாமியாருக்கும் சேர்த்தே பொங்கினாள்.

வெள்ளைச்சாமிக்கு அப்போது சின்ன வயசு. என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் வந்து "மதனி கஞ்சி வேணும்" என்று சிணுங்குவான். அவள் அலுத்துக்கொள்ள மாட்டாள்.

வெள்ளைச்சாமி எளவட்டமாகி கலியாணம் முடிக்கும் வரை மூக்கம்மாளின் கைக்குள் மகனைப் போல் வளர்ந்தான். எந்த



XII Std Tamil Chap_03.indd 57 2/22/2019 12:57:33 PM

நேரமும் மதினியின் வாயிலிருந்து "இந்தாடா வெள்ள" தான்.

எல்லாம் கலியாணம் ஆனதுடன் சரி. அத்தனை பாசமும் அடிமனசுக்குள் அமுங்கிவிட்டது. கலியாணமாகி ஒருமாசம் வாந்தக்கமாக இருந்தான். பிறகு பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு அண்ணனுடன் தகராறு பங்கு பாகம் சொத்துச்சொகம்... அப்பப்பா அதெல்லாம் நடக்கக் கூடாத கதை.

வெள்ளைச்சாமி தனியாக உலைவைத்த அன்றைக்குக்கூட அவள் சந்தோசமாகத் தன் கைப்பட தானியம் அளந்து கொடுத்தாள்.

முத்தையனுக்குத் தம்பிமேல் அப்படியொண்ணும் பெரிய கோவமில்லை. பங்குபாகம் பிரிக்கும்போது அவன் பேசிய வார்த்தைகளைத்தான் தாங்க முடியவில்லை.

"நீ எனக்கு அண்ணனாக்கும்."

தகப்பன் செத்த நாளிலிருந்து தோளில் சுமந்து வளர்த்த கதையெல்லாம் சொல்லிச்சொல்லித் தம்பியின் கன்னத்தில் அடித்தால்தான் மனசாறும் போலிருந்தது. அவனைஎப்போதாவது கடிந்து பேசியதுண்டுமா. வேலைக்குப் போகாமல் படுத்துக் கிடந்தால்கூட பேச்சுவாக்கில் சொல்லிவிட்டு மாட்டுப்பக்கம் போவான்.

"அடே நெலத்தக் கௌறணும்டா. அப்பத்தான் வகுறு நெறையும்."

அப்படி வளர்த்த பயல் நெஞ்சைக் கீறிவிட்டானே என்ற ஆத்திரத்தில அழுகை வந்துவிட்டது.

"ஏலே ஒனக்கு தகப்பன் மொகம் சரியாத் தெரியுமாடா. இண்ணைக்குப் பேசவந்துட்டயாக்கும். நானா அண்ணனில்ல."

அவன் படபடத்தான். கண்ணீரை அடக்கமுடியாமல் நகர்ந்துவிட்டான்.

அன்றைக்கிலிருந்து இதுவரை தம்பியுடன் முகங்கொடுத்துப் பேசியது கிடையாது. தம்பியும் ஒருசோடி மாடு காடுகரை வீடுவாசல் என்று குறைவில்லாமல்தான் பிழைத்தான்.

திருகைமேல் உட்கார்ந்திருந்த முத்தையன் படக்கென்று வாசல்பக்கம் வந்து எட்டிப்பார்த்தான். தம்பியின் வீடு பூட்டியிருந்தது.

"வெள்ளப்பெய எங்கயோ போயிட்டான் போலருக்கு. வீடு பூட்டிக் கெடக்குதே."

அவள் உஸ்ஸென்று இரைந்தாள்.

"மேலூருக்குத்தான் போயிருக்கும். வெதப்பு நேரமில்லையா. அவர எப்படியாச்சும் சரிக்கெட்டி வெதைக்கவேணாமா. பின்ன அவரு வந்து நின்னுக்கிட்டாக் கேவலந்தான. முந்தாநாளு சொல்லிவுட்டாராம். பணத்த எல்லாம் கெட்டச் சொல்லி. அப்படியில்லன்னா அவரு வீட்டு வெதப்பொட்டி பிஞ்சைக்கு வந்துரும்னு சொன்னாராம்.

குத்துக்குத்தாக விதையை அள்ளிக் கரிசலுக்குள் சாலுக்குச் சால் எட்டுப்போட்டு விதைப்பெட்டியில் சலோரென வீசி விதைக்கும் தனக்குப் பதிலாக இன்னொரு உருவத்தை நினைத்துப் பார்த்தாலே அவனுக்குப் புளிப்பெடுத்தது.

"கையில துட்டுல்லாமப் போயி என்ன செய்யப்போறான். அதுலவேற அவருட்ட வசமா புடியும் குடுத்தாச்சு. வெறும் வாயிட்டுச் சரிக்கெட்ட முடியுமா. அவருக்கென்ன இது பத்தோட ஒண்ணு. நமக்குச் சொல்லு. கூறுகெட்ட பெய இப்படிச் செய்வானாக்கும். இப்ப என்ன செய்றது. நம்ம கையிலயும் காத்துட்டுக் கெடையாது. பருத்தி வெத புண்ணாக்குன்னு வாங்கிப்போட்டு..."

தனது கவலையைப் பகிர்ந்துகொள்ள ஆள் தேடும் பாவனையில் மூக்கம்மாளைப் பார்த்தான். அவள் ஈரக்கையைச் சீலையில் துடைத்துவிட்டுக் காதில் கிடந்த நகைகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள்.

"இந்தாங்க இதக் கொண்டுபோயி வச்சு வாங்கி அவருக்குப் பணத்த அடச்சிட்டு மறுசோலி பாருங்க. அது என்னமோ சின்னப்புள்ள தெல்லு தெறிச்சமாதிரி இப்படிக் காரியம் பண்ணீருச்சு. நம்ம அதப் பாத்துட்டுச் சும்மாருக்க முடியுமா."

அவன் தலை குனிந்துகொண்டான்.

வெள்ளைச்சாமி வீடு வந்து சேர மதியமாகிவிட்டது. வந்ததும் ஒரு செம்பு தண்ணீர் குடித்துவிட்டு நடுவீட்டில் துண்டு விரித்து மல்லாக்கப் படுத்துக் கூரைமுகட்டைப் பார்த்தபடி கிடந்தான். வாசலில் உட்கார்ந்திருந்த



XII Std Tamil Chap_03.indd 58 2/22/2019 12:57:33 PM



அவன் பெண்டாட்டி குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

முத்தையனுக்குத் தம்பி வீட்டுக்குள் காலெடுத்து வைக்க மனசில்லைதான். இருந்தாலும் ஒரு வைராக்கியத்தில் புறப்பட்டான்.

"வெள்ள இருக்கானா..."

யாரிடமோ பேசுவது போல் கேட்டுக்கொண்டு வாசலுக்குள் நுழைந்தான். வெள்ளைச்சாமியின் பெண்டாட்டி எழுந்துபோய் எதிர்வீட்டுத் திண்டில் உட்கார்ந்து கொண்டாள். வாசலைத் தாண்டிப் போய் உள்ளே உட்கார்ந்தான் முத்தையன். வெள்ளைச்சாமி துண்டைச் சுருட்டி எழுந்து மூலையில் சாய்ந்தான். அண்ணனுடைய முகத்தில் முழிக்கவில்லை.

நடுச்சுவர்மேல் பின்னியிருந்த பத்துக்கால் பூச்சி வலையைப் பார்த்தபடி முத்தையன் கேட்டான்.

"என்னடா வெள்ளங்காட்டியிலிருந்து ஆளு தட்டுப்படல. ஊரு முழுக்க வெதப்பு மும்முரத்துல அலையிது. நீ பாட்டுக்கு மாட்டக் கெட்டிப் போட்டுட்டு உக்காந்துட்ருந்தா எப்படி. எங்க போயிருந்த இன்னேரவரைக்கு."

விசயத்தைத் தம்பியின் வாயிலிருந்தே வரவழைக்கணுமென்று அவனுக்கு எண்ணம். வெள்ளைச்சாமி செருமிக் கொண்டான்.

"மேலூரு பங்காருசாமிகிட்டப் போயிருந்தேன்."

"அவருட்ட என்ன சோலி."

"ஒரு எரநூறு தரணும். வாங்கி ரெண்டு வருசமாச்சு. ஆறு மாசத்துக்கு முன்னால மேலக்காட்டக் கெரையம் எழுதி வச்சேன். இப்ப அதுமேல திரும்புவாரு போலருக்கு."

வெள்ளைச்சாமியின் முகத்தில் வருத்தம் கலந்த வெட்கம் நிழலாடியது.

"அப்படியென்னடா வந்துருச்சு பாடுபடுற நெலத்த எழுதிக் குடுக்கணும்னு. நான் ஒருத்தன் கெடக்கன்ல அடுத்த வாசல்ல. சொல்றதுக்கென்ன. சரி என்ன வுடு. ஒன் மதினிகிட்டயாச்சும் சொல்லியிருக்கலாமில்ல. இண்ணைக்குக்கூட அவ சொல்லித்தான் தெரியும்.வீட்லபொண்டாட்டிக்காரி ஒருத்திதான் பெழப்புன்னு நெனைக்காத. அண்ணன் தம்பி அக்கா தங்கச்சின்னு சுத்துலயும் நாலு இருக்கணும். அத ஒணந்துக்கோ மொதல்ல."

முத்தையனுக்குக் குரல் தழுதழுத்தது. அவன் மனசில் இப்போது கோவமில்லை. தம்பியைக் கனிவுடன் பார்த்தான்.

வெள்ளைச்சாமியின் பெண்டாட்டிக்கு இது கேட்டிருக்கணும். அவள் குழந்தையின் சிரிப்பில் கரைந்திருந்தாள்.

வெள்ளைச்சாமிக்கு வாயெழும்பவில்லை. முத்தையன் கேட்டான்.



XII Std Tamil Chap_03.indd 59 2/22/2019 12:57:35 PM

"சரிசரி அது போகட்டும். நெலத்த அறுதியா எழுதிக்குடுத்துட்டயா இல்ல நம்பிக்கையாவா. பத்தரம் முடிச்சாரா."

"நம்பிக்கையாத்தான். வட்டிக்கீடா எழுதி வாங்குனாரு.வட்டியக்கெட்டியாச்சு.முழுப்பணமும் இப்பயே வேணுமாம். மேலூருலவச்சு எழுதுனாக. தலைய ஒட்டிக் கையெழுத்துப் போட்டேன். கொராமுனுசுதான் எழுதுனாரு."

"அம்புட்டுத்தானா. நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டுருந்தேன். அவரு இனியென்ன செய்வாருன்னு பாப்பொம். பெரியமனுசனாம் பெரியமனுசன். எங்கிட்ட ஒருவார்த்த சொல்லியிருக்கலாமில்ல. சே பெரிய மனுசங்கெல்லாம் ஊரான் சொத்துக்கு வாயப்பொளந்துக்கிட்டுத்தான் அலையுறான். ஒழச்சுத் தேடுனவுகளுக்கில்ல வலிக்குது. நம்ம ஒண்ணுக்கொண்ணு வேண்டாற புழுக்கத்த மனசில வச்சுக்கிட்டு கொத்திக் கொதறிக்கிறதுனாலதான் அவனுக்கும் தொக்காப் போகுது. நேரங்காலத்தோட மாட்டப் பத்தீட்டுப்போயி செவக்காட்ட ஒரு ஒழவு எழுப்பிப் போடு. மேலக்காட்டுக்கு வெதவித்து இருக்குதுல்ல. நாளைக்கு ரெண்டு தாரவும் வெதச்சிறலாம். நான் மேலூருவரைக்கும் போயித் திரும்புறென்."

முத்தையன் புறப்பட்டான். அவன் காதில் வெள்ளைச்சாமியின் தோரணையான குரல் கேட்டது.

"இந்தா வெருசனா கஞ்சி ஊத்து. ரெண்டு மடக்கு ஒழவடிச்சிட்டுத்தான் திரும்பணும்"

**

திருணையில் உத்திரத்தை அணைந்து பூசணிப்பழமாக உட்கார்ந்திருந்தார் மேலூர் பங்காருசாமி. சப்பிய பனங்கொட்டையாக நரைத்திருந்த முடியை வசக்கி முடிந்த குடுமி.

"கும்புடுறென் சாமி."

தலைக்குமேல் கைகூப்பினான். சத்தம் கேட்டதும் பங்காருசாமி செனாய்த்துக்கொண்டார்.

"வாப்பா."

பெரிய ஏப்பம் போட்டார். அவன் திருணைக்குக் கீழே ஒடுங்கி உட்கார்ந்திருந்தான்.

"என்ன முத்தையன் ஆளு இந்தப்பக்கம் தட்டுப்பட மாட்டயே. புதுசா வந்தாப்புலருக்கு. என்ன சங்கதி."

பங்காருசாமி ஆச்சரியத்துடன் விசாரித்தார்.

அடிக்கடி அவரைத் தேடி ஆள் வருவார்கள். பணம் வாங்குவார்கள். கொடுப்பார்கள். எழுதிக்கொடுத்த நோட்டைத் திருப்புவார்கள். அவருக்குக் கொடவாங்கல்தான் தொழிலென்று சொல்லணும். வசமான பிடியில்லாமல் கடன் கொடுக்க மாட்டார். ஈடாக நகை கொடுத்தாலும் நிலம் கொடுத்தாலும் வட்டியை மட்டும் குறைப்பதில்லை,

"எந்தம்பி என்னமோ பாக்கி குடுக்க வேண்டியதா கேள்விப்பட்டென். அவன் ஒரு சின்னப்பெய. எனக்குத் தெரியாம நடந்து போச்சு. அதக் கணக்குப் பாத்துத் தீர்த்துக்கிறலாம்னுதான்,,,"

அவர் இதை எதிர்பார்க்கவில்லை. முகத்தில் வினயம் பரவியது.

"என்னப்பா இது ஒனக்கும் ஒந்தம்பிக்கும் மனக்கசப்பாச்சே. அவனுக்காக நீ வந்து நிக்கயே."

"அண்ணன் தம்பிக்குள்ள ஆயிரம் இருக்கும் சாமி. இண்ணைக்கு அடிச்சுக்கிறதுதான் நாளைக்குக் கூடிக்கிறதுதான். சிறிசுக முண்டிக்கிருச்சுன்னா நம்மதான பொறுத்துப் போக வேண்டியிருக்கு."

"அது சரிதான்.. ஆமா கையேந்தி ரூவா வாங்குனவன் வெள்ளையனாச்சே. நானூறுக்கு கெரையம் வேற இருக்குது."

நானூறு என்ற வார்த்தை மட்டும் அவன் காதைக் குடைந்தது.

"எரநூறுன்னுதான் சொன்னான். நம்பிக்கக் கெரையத்துல பிஞ்சைய எழுதியிருக்கான்போலத் தெரியிது. வட்டிவேற குடுத்துட்டானாம். அசலக் கொண்டுவந்துருக்கென். கணக்கு முடிச்சுவுடுங்க. அண்ணன் தம்பிக்குள்ள ஆரு வந்தென்ன."

அவருக்குச் சூடு கிளம்பியது.

"இந்தாப்பாஒம்பாட்டுக்குபேசீட்டேபோனா



XII Std Tamil Chap_03.indd 60 2/22/2019 12:57:35 PM

### தெரிந்து தெளிவோம்

| | |
|---|---|
| அனயம் | – நிறைவானது |
| எச்சௌந்தவன் | – ஏழை எளியவன். |
| கீழத்தார் | – புன்செய்யின் ஒரு பகுதி |
| கொராமுனுசு | – கிராம நிர்வாக அலுவலர் |
| கொடவாங்கல் | – கொடுக்கல் வாங்கல் |
| திருணை | – திண்ணை |
| தெகஞ்சத | – முடிந்ததை |
| பிஞ்சை | – புன்செய் |
| ரோசி | – உரசுதல் |
| வாந்தக்கமாக | – இணக்கமாக |
| வெதப்பெட்டி | – விதைப்பெட்டி |
| வெள்ளங்காட்டி | – விடியற்காலை |
| வேண்டாற | – வேண்டாத |
| திருகை | – மாவு அரைக்கும் கல் |
| குறுக்கம் | – சிறிய நிலப்பரப்பு |
| கடகம் | – ஓலைப்பெட்டி |

எப்படி. ஒன்ன நான் பாத்துக்கிட்டனா வச்சனா. கடன் வாங்குனது அவன். நம்பிக்கக்கெரையம்னு ஒனக்கு அனயம் தெரியுமோ. நானூறுக்கு அறுதிக் கெரையம் எழுதியாச்சு. பிஞ்சையில வெதைக்க எறங்காதன்னு அவங்கிட்டச் சொல்லியனுப்பிட்டனே. இதுல ஒனக்கென்ன வந்துபோச்சு. அவன் நெலம் அவன் பாடு."

அவனுக்கு உடம்பு கொதித்தது. பொறுமையிழந்தான்.

"நீங்க பாத்து அப்படிச் சொல்லலாமா. ஒங்க பணத்த ஆரும் இல்லன்னு சொல்லீட்டாகளா. வாங்குன கடனத் திருப்பிக் குடுத்தா நோட்டக் கிழிச்செறியிறதுதான் மரியாத."

"அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான. இப்பமட்டும் என்ன புதுசா அக்கற வந்துருச்சு."

"இந்தப் பேச்செல்லாம் வேணாம். நல்லபடியா காரியத்த முடிச்சுட்டுப் போகலாம்னு வந்தென். முடியாது போலருக்கு. அவன் நெலம் வேற, என் நெலம் வேற இல்ல. எரநூறு வச்சிருக்கேன். கணக்க முடிச்சு நோட்டக் குடுக்கணும்னா குடுங்க. அதுக்குமேல அவரவருக்குத் தெகஞ்சதப் பாத்துக்கிற வேண்டியதுதான். எதுக்கும் ஒரு அளவு வேணாமா. நாளைக்குப் பிஞ்ச வெதப்பு நடக்கும். ஒரெட்டு வந்து பாத்துட்டுப் போங்க."

அவன் அவரைத் தைரியமாக ஏறிட்டுப் பார்த்தான். உதடு துடித்தது. அவனது பார்வையைத் தாங்க முடியாதவர் போல் அவர் முகஞ்சுளித்தார்.

வெள்ளைச்சாமியின் நிலத்தைச் சட்டப்படி சொந்தமாக்கிக் கொள்ள முடியாதென்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் பயமுறுத்தி இருநூறுக்கு நானூறு கழட்டிவிடலாமென்ற எண்ணம். முத்தையனின் பேச்சுவேறு கடுப்பேற்றியிருந்தது.

"அந்தளவுக்கு வந்துட்டயா. நான் தெரிஞ்சமட்டுக்கும் பாத்துக்கிறென். அதுக்குமேல வார்த்தைய வளத்துக்கிறாத. சங்கடம் வந்து சேரும்."

அவர் விருட்டென்று உள்ளே போய்விட்டார். அவரைப் பதட்டத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது வீட்டுக்கார அம்மா.

விறைப்பாகத் திரும்பிய முத்தையன் முணுமுணுத்தான்.

"ஆருக்குத்தான் சங்கடம் வரப்போகுதுன்னு தெரியல."

**

புரட்டாசி பிறந்துவிட்டால் போதும். ஊர்முழுக்கச் சுறுசுறுப்புத் தட்ட ஆரம்பித்துவிடும். சம்சாரிகளுக்கும் சரி கூலிக்காரர்களுக்கும் சரி, இந்த மாசம் அப்பேர்ப்பட்டது. ஏற்கெனவே எழுப்புழவு அடித்துப் போட்டிருந்த மானம்பாரிக் கரிசல்களுக்குப் புரட்டாசி மழையால் நல்ல காலம் பிறக்கும்.

மறுநாள் வெள்ளங்காட்டி, மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடந்த ரெட்டைக் கலப்பைகள் கொட்டாரங்களில் ஏராளமாகத் தட்டுப்பட்டன.

கஞ்சிக்கலயம் கூடையுடன் பனைமரத்துப் பாதையில் மூக்கம்மா வந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் கையில் தூக்குவாளியுடன் சின்னவள்.

ஏர் பூட்டியாகிவிட்டது. முத்தையன் நிலத்தைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுக் கயிற்றைப் பிடித்தான்.



XII Std Tamil Chap_03.indd 61 2/22/2019 12:57:35 PM

பொம்பளைகள் எலந்தமுள் வெட்டுவதிலும் கல் பொறுக்கிப் போடுவதிலும் மும்முரமாக இருந்தார்கள்.

முதலில் மேலிட்டாற் போல எழுப்புழவு. அதற்குப் பிறகு பருத்தி விதைக்கணும். ரெண்டாம் உழவுக்குக் கட்டை போடாமல் கலப்பையை அமுக்கிப் பிடிக்கணும்.

வெயிலேறியது. விதைப்பு முடிந்து மாடுகள் கீழத்தாரில் சாலடித்துக் கொடுக்க பொம்பளைகள் பயத்தாம்பட்டம் போட்டார்கள்.

மேலூரர் பங்காருசாமிக்கென்னமோ அன்றைக்குக் கோயில்பட்டி போய் வக்கீலிடம் வெள்ளைச்சாமியின் நோட்டைக் கொடுத்து நோட்டீஸ் விட்டுப் பயமுறுத்தணுமென்று ஆத்திரம். பசியாறியதும் நோட்டை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு வேகமாகக் கிளம்பினார்.போகிறவழியில்புஞ்சையில்நின்று ஒரு அரட்டு அரட்டிவிட்டுப் போனாலாவது காரியம் பலித்துவிடாதா என்ற நினைப்பு வேறு.

பாதையில் நின்று கிழக்காமல் பார்த்தார். புஞ்சையில் உழவு நடந்தது. வேகமாகப் புஞ்சைக்கு நடந்தார்.

"ஏ... முத்தையா ஒன்னத்தாம்ப்பா.. ரெண்டு பேருக்கும் போங்காலம் வந்துருச்சா. பேசாம உண்டான ரூவாயக் கெட்டீட்டுப் பிஞ்சைய உழுங்க.கோர்ட்டுக்குப் போனாத்தான் பின்னால வலியெடுக்கும்."

மேலக்கடைசி வரப்பில் பங்காருசாமி கடுகடுப்பாக நின்று கொண்டிருந்தார்.

எல்லாரும் திடீரென்று திரும்பிப் பார்த்தார்கள். வெள்ளைச்சாமிக்குக் கோவம். மட்டியைக் கடித்துச் சாட்டைக் கம்பை மாறிப்பிடித்தான்.

"அடே நீ சும்மாருடா. அவன நான் கவனிச்சுக்கிறேன். எச்செளத்தவன்னா தலமேல ஏறுறானே. இவனால என்ன வந்தாலுஞ் சரி."

முத்தையனுக்குத் தொடையிரண்டும் துடித்தது.

"யோவ். என்ன சொன்ன. எங்க தகப்பனுக்கு ரெண்டு புள்ளதான். இப்ப ஆருக்கு வலிக்கப்போகுதுன்னு பாக்கயா?"

அவன் ஆவேசமாகக் கத்திக்கொண்டு ஓடினான். சாட்டைக் கம்பை ஓங்கியபடி வெள்ளைச்சாமி அவனுக்குப் பின்னால் பாய்ந்தான்.

பங்காருசாமி பதறிப்போனார். சே.. காரியம் கெட்டுப் போச்சே. விவகாரம் இந்தளவுக்கு முற்றிவிட்டதே. பயல்கள் வருகிற வருத்தைப் பார்த்தால் சரியாகத் தெரியவில்லை. இனியும் நின்றால் மோசம் போய்விடும்.

மேலவரப்பைத் தாண்டிக் கரிசல்கட்டிகளுக்கிடையில் அவுந்த வேட்டியைக் கையிலேந்தியபடி தொபுக்தொபுக்கென்று மேலூரரை நோக்கி ஓட ஆரம்பித்தார் அவர்.

### நூல்வெளி

'உரிமைத்தாகம்' என்னும் இச்சிறுகதை 'பூமணி சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் உள்ளது. பூமணி, கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர். பூ. மாணிக்கவாசகர் என்ற தனது பெயரைச் சுருக்கிப் பூமணி என்ற பெயரில் எழுதி வருகிறார். தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறையில் துணைப்பதிவாளராகப் பணியாற்றியவர். அறுப்பு, வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுப்புகள். வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை உள்ளிட்ட புதினங்களை எழுதியுள்ளார். கருவேலம்பூக்கள் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காக 2014இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. 'நமது நிலமே நமது அடையாளம்' – இக்கூற்றை விவாதிக்க.
2. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறவினர்களின் பங்கு முக்கியமானது என்பதைக் குறித்துப் பேசுக.

பண்பாடு ௩

# பொருள் மயக்கம்

D6FXS2

தமிழ்மொழியை எழுதும்போதும் படிக்கும்போதும் பேசும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் சில உள்ளன. அவற்றைப் பின்பற்றினால் மாணவர்கள் பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெறுவர்.

எழுதும்போதோ பேசும்போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும் தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவது படிப்போர்க்கும் கேட்போருக்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

## இடைவெளியும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப் பாவின் நலங் காண்க | அப்பாவின் நலங்காண்க |
| ஐந்து மாடிவீடு | ஐந்துமாடி வீடு |
| அன்றுமுதல் பாடம் கற்றோம் | அன்று முதல்பாடம் கற்றோம் |

இவ்வாறு சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

## வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| பிட்டுத் தின்றான் | பிட்டு தின்றான் |
| உள்ளக் கருத்து | உள்ள கருத்து |
| ஈட்டிக் கொண்டு வந்தான் | ஈட்டி கொண்டு வந்தான் |

போன்ற தொடர்களில் வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

## காற்புள்ளியும் பொருள் மயக்கமும்

இயல்பாக உரையாடும்போது பொருள்நிலையில் பெரும்பாலும் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை. குரலில் ஏற்றம் – இறக்கம், சொற்களில் அழுத்தம் – குழைவு, இறுதிச் சொல் மூலம் வினாவா உணர்ச்சியா என்பதையெல்லாம் உணர்ந்து பொருளை நாம் சரியாக விளங்கிக் கொள்கிறோம். ஆனால் எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறுபொருளைத் தந்துவிடும்.

**அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்**

இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது,

**அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்**

இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்வேறுபடுவதை அறியலாம்.

எனவே, நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டும் இடாமலும் எழுதிப் பொருள்மயக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## இடைச்சொற்களும் விகுதிகளும் சொல்லுருபுகளும்

தமிழில் உள்ள சில இடைச்சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியவற்றைத் தொடர்களில், சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு தோன்றுகிறது.



XII Std Tamil Chap_03.indd 63 2/22/2019 12:57:35 PM

**விடும்**

தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று

தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று

**தன்**

பாண்டியனதன் கவிதையைப் படித்தான்

பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்

**தான்**

கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்

கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான்.

**பற்றி**

குகன் இராமனைப்பற்றிக் கூறினான்

குகன் இராமனைப் பற்றிக் கூறினான்

**முன்**

சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்

சில குறைகளை மக்கள்முன் வைத்தனர்

**முதல்**

அன்றுமுதல் அமைச்சர் வந்தார்

அன்று முதல்அமைச்சர் வந்தார்

**பால்**

அவன்பால் கொண்டு சென்றான்

அவன் பால்கொண்டு சென்றான்

**கண்**

அவன்கண் பெற்று மகிழ்ந்தான்

அவன் கண்பெற்று மகிழ்ந்தான்

**படி**

அளக்கும்படி வேண்டினான்

அளக்கும் படி வேண்டினான்

**மூலம்**

அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

**கூட**

அவன்கூடக் கொடுத்தான்

அவன் கூடக் கொடுத்தான்

## சொல்லுருபுகள்

**வீட்டிலிருந்து சென்றான் – வீட்டில் இருந்து சென்றான்**

இத்தொடரில் அமைந்துள்ள **வீட்டிலிருந்து** என்ற சொல்லைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும்போது இருவேறு பொருள் உணர்த்துவதைக் காணலாம்.

## சொற்களை மாற்றி எழுதும்போது ஏற்படும் பொருட்குழப்பம்

தொடர்கள் அமைக்கும்போது தேர்ந்தெடுத்த சொற்களையும் சொற்களுக்குரிய தெளிவான பொருளையும் தொடரமைப்பு மாறாமல் அமைத்தல் வேண்டும்.

**"ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்"**

இத்தொடரில் உள்ள பொருட்பிழையை அறிய முடிகிறதா? தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி வந்துள்ளது.

**"மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்"**

என்றே அமைந்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை அமைந்திருக்கும். சில தொடர்களில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. கீழ்க்காணும் இத்தொடர்களைப் புரிந்துகொள்ள முடிகிறதா?

**இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.**

**பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

**காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.**

**இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்**

இத்தொடர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றன. நான்காம் தொடர் தவிர்த்துப் பிற தொடர்கள் உணர்த்தும் பொருள் முழுமையாக வெளிப்படவில்லை.

முதல் தொடர் 'காட்டிற்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும்



XII Std Tamil Chap_03.indd 64 2/22/2019 12:57:35 PM

சென்றான்' என்னும் பொருளையும் இரண்டாம் தொடர் 'யாரோ ஒருவருக்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளையும் மூன்றாம் தொடர் 'காட்டில் உள்ள இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்' என்னும் பொருளையும் தருகின்றன.

## நினைவில் கொள்ள வேண்டியவை

1. பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒருசொல் என்னும் தன்மை கொண்டவை. எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது.

   செங்கடல் (சரி) – செங் கடல் ( தவறு )

   கத்துகடல் (சரி) – கத்து கடல் ( தவறு )

2. பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் **இடைச்சொற்களைச் சேர்த்து எழுத**வேண்டும்.

   அணங்கு**கொல்** (சரி) அணங்கு கொல் (தவறு)

3. **இடைச்சொல்லுடன்** சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

   பேசிய**படி** பணம் கொடுத்தான் ( பேசியவாறு )

   பேசிய படி பணம் கொடுத்தான் ( படியளவு )

4. உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் **உடம்படுமெய்**களைச் சேர்த்துத்தான் எழுதல் வேண்டும்.

   மணி**ய**டித்துச் சென்றான் (ஒலி எழுப்புதல் )

   மணி அடித்துச் சென்றான் (மணி என்பவன் யாரையோ அறைதல்)

5. பன்மையை உணர்த்தும் '**கள்**' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுதவேண்டும்.

   ஈ**க்கள்** மொய்த்தன – ஈக் கள் மொய்த்தன

   குரங்கு**கள்** உண்டன – குரங்கு கள் உண்டன

6. இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுதவேண்டும்

   படபடவெனச் சிறகை அடித்தது (சரி)

   பட பட எனச் சிறகை அடித்தது (தவறு)

7. சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றைச் சேர்த்தே எழுதவேண்டும்.

   சுடராழி – சுடர் + ஆழி

8. உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுதவேண்டும்.

   கடிமணம் – கடி மணம்

9. உம்மைத்தொகைச் சொற்களையும் நேரிணைச் சொற்களையும் எதிரிணைச் சொற்களையும் சேர்த்தே எழுதுதல் வேண்டும்.

   உற்றாருறவினர் ( சரி ) – உம்மைத்தொகை

   உற்றார் உறவினர் ( தவறு )

   சீரும்சிறப்பும் ( சரி ) – நேரிணைச்சொற்கள்

   சீரும் சிறப்பும் ( தவறு )

   மேடுபள்ளம் ( சரி ) – எதிரிணைச்சொற்கள்

   மேடு பள்ளம் ( தவறு )

## சொற்றொடர்ப்பிழை

திணை, பால், எண், இடம், காலம் முதலிய பிழைகள் ஏற்படாவண்ணம் தொடர் எழுதப் பழகுதல் சாலச்சிறந்தது. கீழுள்ள தொடர்கள் பிழையானவை அல்லவா? சிந்தியுங்கள்.

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
- அவன் வெண்மதியிடம் பேசினாய்.
- சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றைத் திணை, பால் எண், இடம் அறிந்து ஆளுதல் வேண்டும். (அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், நாய் அன்று, நாய்கள் அல்ல)



XII Std Tamil Chap_03.indd 65 2/22/2019 12:57:35 PM

அது என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது. வரும் சொல் உயர்திணையாயின் அது என்னும் உருபினைப் பயன்படுத்துதல் கூடாது. எனது வீடு, அரசரது மாளிகை என்று எழுதலாம். ஆனால், எனது மனைவி, அரசரது மகன் என்றெழுதுதல் பிழை (மனைவி, மகன் – உயர்திணை).

தொடர் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அமைக்கப்படவேண்டும். இரண்டாவது குழந்தையிடம் கேள்வி கேட்டான் / குழந்தையிடம் இரண்டாவது கேள்வி கேட்டான். முதலிரண்டு சொற்கள் இடம் மாறியதால் தொடருக்கான பொருள் மாறுகிறது. அவன் அருகில் இருந்தான் / அவன் அருகாமையில் இருந்தான். அருகில் என்பதற்கு எதிர்ச்சொல் அருகாமை. இவ்வேறுபாடு தெரியாவிடின் தொடரின் பொருள் மாறிவிடும்.

பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம் என்னும் தொடரும் பிழையானது. பேருந்து மோதியா மிதிவண்டியில் சென்றார்? மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம் என்று எழுதவேண்டும்.

### பொதுவான பிழைகள்

சுடுதண்ணீர்என்று எழுதுவதும் பிழையே. தண்ணீர் – குளிர்ந்த நீர். சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்கமுடியும்? நடுசென்டரில் நின்றான் – நடு என்பது தமிழ். சென்டர் என்பது ஆங்கிலம். இரண்டிற்கும் ஒரே பொருள். நடுவில் நின்றான் என்று எழுதினாலே போதும்.

ஒரு வரியின் இறுதியிலுள்ள சொல்லைப் பிரித்து எழுதுவதாக இருந்தால் பொருள் கெடாதபடி பிரிக்கவேண்டும். நம்பியார் கூடச் சென்றார் என்பதற்கும், நம்பி யார் கூடச் சென்றார் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

| சரி | தவறு |
|---|---|
| திருவளர்செல்வன் / செல்வி | திருவளர்ச்செல்வன் / செல்வி |
| திருநிறைசெல்வன் / செல்வி | திருநிறைச்செல்வன் / செல்வி |

### பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும். (யானை – கன்று; குதிரை – கனைக்கும்)
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்துதலும் கடமையாகும்.

**கற்பவை கற்றபின்...**

தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.



XII Std Tamil Chap_03.indd 66 2/22/2019 12:57:35 PM

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பாலை பாடினான் | – | 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான். |
| ஆ) பாலைப் பாடினான் | – | 2) தேரினைப் பார்த்தான் |
| இ) தேரை பார்த்தான் | – | 3) பாலினைப் பாடினான் |
| ஈ) தேரைப் பார்த்தான் | – | 4) பாலைத் திணை பாடினான் |

(அ) 4, 1, 3, 2 (ஆ) 2, 3, 1, 4 (இ) 4, 3, 1, 2 (ஈ) 2, 4, 1, 3

3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.
மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

(எ.கா)

அவன் முன்வந்து கூறினான்

முன்

அவன்முன் வந்து கூறினான்

தானே

கொண்டு

விட்டான்

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

6. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?



XII Std Tamil Chap_03.indd 67 2/22/2019 12:57:35 PM

## நம்மை அளப்போம்

DKYSTD

**பலவுள் தெரிக.**

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை .................

   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர் ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி

   இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பகதவச்சல பாரதி ஈ) தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி

   அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. "உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?

   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
   சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

   அ. தனிக்குடும்ப முறை ஆ. விரிந்த குடும்ப முறை

   இ. தாய்வழிச் சமூகமுறை ஈ. தந்தைவழிச் சமூகமுறை

**குறுவினா**

1. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
2. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
4. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

   அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
5. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

**சிறுவினா**

1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.
2. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
3. "வருபவர் எவராயினும்
   நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
5. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.



XII Std Tamil Chap_03.indd 68 2/22/2019 12:57:36 PM

### நெடுவினா

1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.
2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.
3. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்…… கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்


பரிதிமாற் கலைஞர்
(1870 – 1903)

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்து உன்னால் செயப்படுபொருள் இல்லை, ஆதலால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர்தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்ட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப்.ஏ (F.A – First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும்.

*உயர்தனிச் செம்மொழி' என்னும் கட்டுரையிலிருந்து*

"பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி. ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழியாம். "



XII Std Tamil Chap_03.indd 69 2/22/2019 12:57:36 PM

**தமிழாக்கம் தருக.**

*In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.*

*In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.*

**இலக்கிய நயம் பாராட்டல்**

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று*
*கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஒர் ஆசான் திண்ணம்.*

*– நாமக்கல் கவிஞர்*

**கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.**

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந்திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு.

*– இளங்கோ கிருஷ்ணன்*

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.
3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே – 5, 2019**

**திருச்சிராப்பள்ளி**

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் – பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே–5 ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் – பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

## மொழியோடு விளையாடு

**பட்டிமன்றம்**

**தலைப்பு : தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**

**சுழி குளம்**

நவமதி மேவிடவே
வசிகுற ளுடனட
மகுடன ருளடவி
திறனறி வருளுமே!




**விளக்கம்:**

புதிய ஒளிமிக்க அறிவினைப் பெற வேண்டுமென்றால், அறிவுச்சுரங்கமாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும், சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன்மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

நவ மதி – புதுமையான ஒளிமயமான அறிவு

வசி – உயர்ந்த; மகுடன் – தலைவன்

அடவி – பெருகுதல்

பொதுமதி பலமேவு
துணிதரம் தரமே
மததவிர முதல
திரவிய நிரம்ப




**விளக்கம்:**

பல துறைகளிலும் பொது அறிவை வளர்த்துக்கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப் படுத்தப்படுவாய். செல்வமும் நிரம்பும்.

மத(ம்) தவிர – முனைப்பு நீங்க

திரவியம் – செல்வம்

#### எண்ணங்களை எழுத்தாக்குக



#### பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக

**எ. கா.** குமரன் வீடு பார்த்தேன் – குமரனை வீட்டில் பார்த்தேன்

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்
2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

#### செய்து கற்போம்

உங்கள் குடும்ப உறவு வழிமுறைகளைக் கொண்டு குடும்ப மரம் (Family tree) வரைக



#### நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக | பொறுப்புள்ள மகனாக/ மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள்? |
|---|---|---|
| உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம் குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும் தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | | |

#### படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

*Lobby* – ஒய்வறை
*Tips* – சிற்றீகை
*Checkout* – வெளியேறுதல்
*Mini meals* – சிற்றுணவு

#### அறிவை விரிவு செய்

- கம்பர் யார்? – வ. சுப. மாணிக்கம்
- சக்கரவர்த்தி திருமகன் – இராஜாஜி
- ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகள்
- வயிறுகள் – பூமணி (சிறுகதைத் தொகுப்பு)
- சிறை – அனுராதா ரமணன்
- புளிய மரத்தின் கதை – சுந்தர ராமசாமி

#### இணையத்தில் காண்க

https://www.tamiluniv/tamil/வெளியீடுகள்-2/நூல்கள்-2/சமூகவியல்/சமகாலத்-தமிழர்களின்-உறவு/
http://kambaramayanam-thanjavooraan.blogspot.com/2010/05/3_17.html
https://ilakkiyam.com/thirukural (திருக்குறள்)



XII Std Tamil Chap_03.indd 72 2/22/2019 12:57:37 PM

வாழ்வியல்

இயல் 3

# திருக்குறள்

EFRLUD



## 05 இல்வாழ்க்கை

1. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது.**

அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். (நிரல்நிறை அணி)

2. *இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை.*

அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவர், முயற்சிச் சிறப்புடையோரை விடமேம்பட்டவர் ஆவார்.

3. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.**

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார்.



XII Std Tamil Chap_03.indd 73 2/22/2019 12:57:37 PM

## 11. செய்ந்நன்றி அறிதல்

4. *செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்ற லரிது.**

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

5. *காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது.*

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும்.

6. *பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது.*

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

7. *தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்.*

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

8. *நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.

9. *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவர்க்கு உய்வே இல்லை.

## 18. வெஃகாமை

10. *படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்*
*நடுவன்மை நாணு பவர்.*

நடுவுநிலைமையை விட்டுவிட நாணம் கொள்ளும் பண்பாளர்கள் பெரும்பயன் கிடைப்பினும், பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

11. *இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மைஇல் காட்சி யவர்.*

ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையோர், தாம் வறியர் என்ற காரணத்தைக் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்ய மாட்டார்.

12. *அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்.**

ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

## *26. புலால் மறுத்தல்*

*13. தினல்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.*

உலகத்தார் புலால் தின்னும்பொருட்டு உயிர்களைக் கொல்பவர்கள் இல்லையாயின், வருவாயின் பொருட்டு ஊன் விற்பவர் யாரும் இருக்க மாட்டார்.

## *31. வெகுளாமை*

*14. செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்*
*காக்கின்என் காவாக்கால் என்?*

தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்; செல்லுபடியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

*15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய*
*பிறத்தல் அதனான் வரும்.**

தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்.

*16. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
*பகையும் உளவோ பிற?*

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

*17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

*18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும். **(ஏகதேச உருவக அணி)**

## *38. ஊழ்*

*19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்.**

ஒருவர் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவருக்கு இயல்பாக உள்ளதாகும் அறிவே மேலோங்கித் தோன்றும்.

*20. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு*
*தெள்ளியர் ஆதலும் வேறு.*

உலக இயல்பு இரு வேறு வகைப்படும்; செல்வம் உடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை; தெளிந்த அறிவுடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை.

திரு + குறள் = திருக்குறள். சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் ஆதலால் இப்பெயர் பெற்றது. இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. குறள் – இரண்டடி வெண்பா, திரு – சிறப்பு அடைமொழி. திருக்குறள் என்பது அடையடுத்த கருவி ஆகுபெயர் ஆகும். குறள், உலகப்பொது மறை; அறவிலக்கியம்; தமிழர் திருமறை; மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே மனித வாழ்வின் மேன்மைகளையும் வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக் காட்டிய நூல். ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என்னும் பழமொழிகள் இந்நூலின் பெருமையை விளக்குகின்றன. இவற்றுள் 'நால்' என்பது நாலடியாரையும் 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

*தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்*
*பரிதி பரிமேலழகர் திருமலையார்*
*மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு*
*எல்லையுரை செய்தார் இவர்.*

என்று ஒரு பழம்பாடல் திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் பட்டியலொன்றைத் தருகிறது. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாரதியாரும்,*
*"வள்ளுவனைப் பெற்றதால்*
*பெற்றதே புகழ் வையகமே"* - எனப் பாரதிதாசனும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

தமிழ்நாடு அரசு 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையினை, கன்னியாகுமரியில் நிறுவியுள்ளது. திருவள்ளுவரின் நினைவைப் போற்றும் வகையில் வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

| பால் | அதிகாரம் – எண்ணிக்கை | இயல் – எண்ணிக்கை | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் (04)<br>இல்லறவியல் (20)<br>துறவறவியல் (13)<br>ஊழியல் (01) |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் (25)<br>அமைச்சு இயல் (32)<br>ஒழிபியல் (13) |
| இன்பம் | 25 | 2 | களவியல் (07)<br>கற்பியல் (18) |
| | 133 | 09 | |

கற்பவை கற்றபின்...

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

2. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ) தினையளவு செய்த உதவி

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

*உயர் அலுவலரின் வருகை*
*அலுவலகமே அல்லாடும்*
*அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே*
*கோப்புகளை விரைந்து முடிக்க*
*ஒழுங்கு செய்ய*
*நேரத்தில் இருக்க வேண்டும்*
*விரைகிறது மனம்*
*பரபரப்பும் மனவழுத்தமுமாய்*
*வண்டியை எடுக்கிறேன்*
*காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை*
*'போ அந்தப் பக்கம்'*
*உதறிச் செல்கிறேன் குழந்தையை.*

5. இலக்கணக்குறிப்புத் தருக.

அன்பும் அறமும், நன்கலம், மறத்தல், உலகு



XII Std Tamil Chap_03.indd 77 2/22/2019 12:57:37 PM

6. பொருள் கூறுக.

வெகுளி, புணை, ஏமம், திரு

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி    ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி    ஈ) செய்ந்நன்றி

8. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக

9. செல்லிடத்து – புணர்ச்சி விதி கூறுக.

10. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| அ) | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | – | 1) சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) | பயன்தூக்கார் செய்த உதவி | – | 2) ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) | சினம் | – | 3) தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) | காலத்தினாற் செய்த நன்றி | – | 4) நன்மை கடலின் பெரிது |

அ) 4,3,2,1    ஆ) 3, 4, 1, 2    இ) 1, 2, 3, 4    ஈ) 2, 3, 4, 1

## குறுவினா

1. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
2. ஞாலத்தின் பெரியது எது?
3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
5. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

## சிறுவினா

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.
3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.
4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

   சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.

## நெடுவினா

1. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.
2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.



XII Std Tamil Chap_03.indd 78    2/22/2019 12:57:37 PM

இயல் 4

# செல்வத்துள் எல்லாம் தலை

*கல்வி*




## கற்றல் நோக்கங்கள்

- கற்றல், கற்பித்தலின் தொடர்ச்சிகளை உணர்வதன் மூலம் கல்வியின் போக்குகளை அறிதல்.
- கவித்துவக் கூறுகளை அறிந்து எழுதும் ஆர்வம் கொள்ளுதல்.
- எண்ணங்களை எழுத்தில் வெளிப்படுத்தும் நுட்பத்தை உணர்ந்து எழுதுதல்.
- கல்வியின் மேன்மை அறிந்து தன்னம்பிக்கை பெறுதல்.
- சாலைப் போக்குவரத்து விதிகளைக் கற்றுப் பின்பற்றுதல்.
- செய்யுள் இலக்கணம் பயின்று மரபுக்கவிதைகள் எழுதும் படைப்பாற்றல் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் – உ. வே. சா.
- இதில் வெற்றி பெற – சுரதா
- இடையீடு – சி. மணி
- புறநானூறு – ஔவையார்
- பாதுகாப்பாய் ஒரு பயணம்
- பா இயற்றப் பழகலாம்



XII Std Tamil Chap_4.indd 79 2/22/2019 1:11:37 PM

உரைநடை உலகம்

கல்வி

# ச பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

– உ. வே. சாமிநாதர்

EVAGVP

## நுழையும்முன்

கல்வியும் அதன் நோக்கமும் கல்விக்கூட அமைப்பும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் இலக்கியங்களில் தடங்களாகப் பதிவு பெற்றிருக்கின்றன. அவ்வகையில் அக்கால அறிஞர்கள் 19ஆம் நூற்றாண்டின் திண்ணைப் பள்ளிக்கூட விளைச்சல்கள். அந்நாளைய கற்பித்தல் முறைகளைப் பழையன என்று புறந்தள்ளிவிடாமல், தேவையானவற்றைத் தேர்ந்து பயன்படுத்தினால் அவை இன்றைய கல்விக்கு ஏற்ற உரமாக ஆகத்தக்கவை.

*(சென்னை புரசைவாக்கம் சர். எம். சி.டி. முத்தையா உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதற் சொற்பொழிவாக 20.07.1936இல் நிகழ்த்தப்பட்டு 16.08.1936 சுதேசமித்திரன் வார இதழில் வெளியான கட்டுரை.)*

காலநிலை மாறுபாடு அடைய அடைய ஜனங்களுடைய பழக்கங்களும் மாறுதலடைகின்றன. இக்காலத்துப் பள்ளிக்கூடங்களில் இக்கால வாழ்க்கைக்கேற்ற முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய காலத்துப் பாடசாலைகளில் வழங்கிவந்த முறைகளோ வேறுவகை. நம்முடைய நாட்டில் மிகப் பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள். கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர். கணக்கு என்பது நூலின் பெயர்.

### திண்ணைப் பள்ளிக்கூடங்களும் அண்ணாவிகளும்

மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவரும் உயிரின மருத்துவருமான வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் திருநெல்வேலி தெற்குத் தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 4 வருடங்கள் படித்திருக்கிறார். வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான டாக்டர் மா. இராசமாணிக்கனார் மௌனகுருவிடம் படித்திருக்கிறார். நற்றிணை நூலின் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி, பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தார். சுப்பிரமணிய பாரதியின் நண்பரும் வழக்குரைஞரும் தமிழறிஞருமான நாவலர் சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும், சிலப்பதிகார உரையாசிரியர் வேங்கடசாமி வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளியிலும் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் வ. சுப. மாணிக்கம் மகிபாலன் பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் படித்தனர்.

பேராசிரியர் அ.கா.பெருமாள்
(இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை)



XII Std Tamil Chap_4.indd 80 2/22/2019 1:11:37 PM



### மன்றங்கள்

ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியே மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதனை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர். மன்றமென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே; அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியதென்று தோன்றுகிறது.

இயற்கையாக உள்ள மரத்தடியிலும், வனங்களிலும் சென்று பழைய காலத்து மாணாக்கர்கள் கல்வி கற்றனர். இப்பொழுது பள்ளிக்கூடம் இருக்குமிடத்தில் செடி கொடிகளை வருவித்து வனம் உண்டாக்குகிறோம். நாடகத்தில் வனங்களைத் திரையில் எழுதித் தொங்கவிடுவது போலப் பள்ளிக்கூடங்களில் சட்டியிலும் வாயில்களிலும் செடி கொடிகளை வளர்க்கிறோம்.

### பள்ளிகள்

மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களிற் பாடசாலைகள் உண்டாயின. பள்ளியெனும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர். பாடசாலைகள் வேறு, மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டமையின்,

#### தெரிந்து தெளிவோம்

| | |
|---|---|
| வித்தியாரம்பம் | – கல்வித் தொடக்கம் |
| வித்தியாப்பியாசம் | – கல்விப் பயிற்சி |
| உபாத்தியாயர் | – ஆசிரியர் |
| அக்ஷராப்பியாசம் | – எழுத்துப் பயிற்சி |
| கீழ்வாயிலக்கம் | – பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| மேல்வாயிலக்கம் | – பின்ன எண்ணின் மேல்தொகை |
| குழிமாற்று | – பெருக்கல் வாய்பாடு |
| சீதாள பத்திரம் | – தாழை மடல் |
| நவத்வீபம் | – வங்காளத்தில் உள்ள ஓர் ஊர் |



XII Std Tamil Chap_4.indd 81 2/22/2019 1:11:37 PM

பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கியதென்று தோற்றுகின்றது.

### வித்தியாரம்பம்

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். ஏட்டின் மீது மஞ்சட் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்ப'தென்று கூறுவார்கள். உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் சட்டாம்பிள்ளை முறை வைப்பதுண்டு.

### மையாடல்

சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி யிலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அந்த மை எழுத்துக்களை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும். இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று சொல்வார்கள்.

'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது **சிந்தாமணி**.

> மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
>
> மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் – தமிழ்விடு தூது

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துக்கள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.

### கையெழுத்து

"கொம்புசுழி கோணாமல் கொண்டபந்தி சாயாமல்

அம்புபோல் கால்கள் அசையாமல் – தம்பி

எழுதினால் நன்மை யுண்டு"

என்று வரும் பழைய வெண்பா ஒன்று உண்டு. எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். பழைய ஏட்டுச்சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும்.

### எழுத்தின் வடிவம்

எழுத்துக்களின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்துவந்தன. புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புக்கள். பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.

### மனனப் பயிற்சி

அக்காலத்துப் பாடமுறைக்கும் இக்காலத்துப்பாட முறைக்கும் பெரிய வேறுபாடு உண்டு. அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள் பாடமாக வேண்டும். 'தலைகீழ்ப் பாடம்' என்று சொல்வதை அம்முறைகளில் காணலாம்.

சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களுடைய

### கற்பிக்கப்பட்ட நூல்கள்

கதைப்பாடல்கள், மாணவர்களுக்குக் கற்பித்த நூற்களைப் பட்டியலிடுகின்றன. இவை பெரும்பாலும் நீதி நூல்கள் (ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி). நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் மாணவனுக்கு மதிப்பிருந்தது. வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறமைத்த கணிதமுறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதைக் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்யவேண்டும். இதற்காக பிரபவாதி சுவடி என்ற புத்தகம் கூட இருந்தது.

பேராசிரியர் அ.கா.பெருமாள்
(இரட்டை அர்த்தங்கள் மாண்டு போகவில்லை)

ஞாபகத்தில் அவை பதிவதன் பொருட்டேயாகும். இப்படியே அந்தாதி முறையைக் கொண்டும் எதுகை மோனைகளைக் கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத்தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்குகூடிக் கேள்விகள் கேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள். இதனால் அவர்களுடைய கல்வி எந்த வேளையிலும் தடையின்றிப் பயன்பட்டது.

### சுவடிகள்

இளம் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார். ஒரு துளையிடுவதும் இரண்டு துளையிடுவதும் உண்டு. மற்றப் பிள்ளைகள் தாங்களே செய்து கொள்ளுவார்கள். பனையேடு, சீதாள பத்திரம் முதலியவற்றில் எழுதுவது வழக்கம். மேலே சட்டமாகப் பனைமட்டையின் காம்பை நறுக்கிக் கோர்ப்பார்கள்; மரச் சட்டங்களையும் அமைப்பார்கள்; செப்புத் தகட்டாலும் சட்டஞ் செய்து கோர்ப்பார்கள். அந்தச் சட்டங்களின் மேல் வர்ண மையினாற் பல வகையான சித்திரங்கள் எழுதுவதுண்டு. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு 'நாராசம்' என்று பெயர்.

சுவடியைக் கோக்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்து அமைப்பார்கள். அதற்குக் கிளிமூக்கென்று பெயர்.

இப்போது அச்சுப் புத்தகங்களின் அளவில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு பனையோலைச் சுவடிகளிலும் உண்டு.

### எழுத்தாணிகள்

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனாக்கத்தி என்ற பெயர் வந்ததென்று தோற்றுகின்றது. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒரு பக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன.

### ஏடெழுதும் வழக்கம்

ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன. நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடே ஏட்டில் எழுதுவதுண்டு. மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாகவேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத்

தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்குச் சட்டமென்று பெயர்.

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். அதனை அசை என்றும் சொல்வதுண்டு.

### அன்பினால் அடக்குதல்

முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. ஆசிரியர்கள் மாணாக்கர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தார்கள். அவர்கள்பால் இருந்த மரியாதை மாணாக்கர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது. பிழைகளை மறந்தும் புரியாத நிலையில் அவர்கள் இருந்தனர்.

### வாதம் புரிதல்

கல்வியில் வாதம் செய்தல் நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இருந்தது. மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை நிலைநாட்டுவர். அதன் பொருட்டு அவர்கள் கொடிகட்டியிருப்பரென்று மதுரைக்காஞ்சி முதலிய நூல்களால் அறிகிறோம். இந்த வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது. பள்ளிக்கூடத்தில் மாணாக்கன் நூல்பயிலும் இயல்பை விளக்க வந்த பழைய சூத்திரமொன்று பலவற்றைச் சொல்லிவிட்டு,

> ***"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை***
>
> ***கடனாக் கொளினே மடநனி இகக்கும்"***
>
> *–நன்னூல் 41*

என்று முடிக்கின்றது. ஆட்சேப சமாதானங்கள் சொல்லிப் பழகிய பழக்கங்களே முதிர்ந்த நிலையில் வாதங்களாக வளர்ச்சியுறுகின்றன.

### சாந்துணையும் கற்றல்

பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுதும் நம் நாட்டார் படித்து வந்தார்கள். 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு!' என்ற குறளினால் திருவள்ளுவர், ஒருவன் இறக்குமளவும் படிக்கவேண்டுமென்பதை விதிக்கின்றார். பள்ளிக்கூடத்திலிருந்து கற்கும் காலம் கடந்த பின்னர், பழைய காலத்தவர்கள் பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே சென்று அவர்களிடம் தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.



**தெரியுமா?**

மாணாக்கர்களுள் பழையவர்கள் புதியவர்களுக்குக் கற்பிப்பது பள்ளிக்கூட வழக்கங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு நாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும்போது அவர்களது ஞாபகசக்தியை விருத்தி செய்விப்பதற்காக ஒவ்வொருவருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொல்ல வேண்டும்.

பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால், பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவதே வழக்கம். முதலில் வருபவனை வேத்தான் என்று சொல்வார்கள். மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்பது அதன் பொருள்.

பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. பனையேடுதான் புத்தகம். எழுத்தாணியே பேனா.

உ.வே.சா.

### ஓதற்பிரிவு

இல்லறம் நடத்துங் காலத்திற்கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளாருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம்புரிந்து வென்றும்



XII Std Tamil Chap_4.indd 84 2/22/2019 1:11:38 PM

தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தார்கள். தொல்காப்பியமென்னும் பழைய இலக்கண நூலிலும் பிறவற்றிலும் இங்ஙனம் பிரியுங் காலம் ஓதற் பிரிவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு மூன்று வருஷம் கால எல்லையென்று அந்நூல்கள் விதிக்கின்றன.

இவ்வாறே தமிழ்நாட்டிற்கும் நவத்வீபம் முதலிய இடங்களிலிருந்து வந்து படித்துச் சென்ற பண்டிதர்கள் பலர். தஞ்சாவூரில் இருந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரென்பவரிடத்தில் பல அன்னிய தேசத்து மாணாக்கர்கள் வந்து கற்றுச் சென்றார்களென்னும் செய்தியொன்று, முதல் இராஜராஜ சோழன் காலத்தில், தஞ்சையிற் பொறிக்கப்பட்ட சாஸனம் ஒன்றால் தெரிகின்றது. திருவாவடுதுறை மடம், தருமபுரம் மடம் முதலியன பல வருஷகாலம் தமிழ்க் கல்லூரியாகவும், வடமொழிக் கல்லூரியாகவும் விளங்கி வந்தன.

இப்படியே பாலர்களுக்குரிய பள்ளிக் கூடங்கள் முதல் பழுத்த கிழவர்கள் இருந்து கற்கும் பள்ளிக்கூடங்கள் வரையிற் பல பாடசாலைகள் தமிழ்நாட்டில் இருந்து வந்தன. தமிழ்ச் சங்கமென்று சொல்லப்படுவனவும் ஒருவகை ஆராய்ச்சிப் பள்ளிக்கூடங்களே அல்லவா?

## பின்னுரை

காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைத்து விட்டாலும், அவற்றால் உண்டான நற்பயன்களையும் அவற்றிற் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற்செல்வத்தையும் நினைக்கும்போது, நம்மையறியாமல் நமக்கு ஒரு பெருமிதம் உண்டாகின்றது. அக்காலத்து முறைகளே மீளாவிடினும், அப்பள்ளிக்கூடங்களின் அடிப்படையான உண்மைகளையேனும் நாம் அறிந்துகொண்டு வாழ முயலுவோமாக!

### நூல்வெளி

இப்பாடப்பகுதி உயிர்மீட்சி என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்ட உ.வே.சா.வின் இலக்கியக் கட்டுரைகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. 'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பெற்ற உ.வே.சா. இணையற்ற ஆசிரியர்; புலமைப் பெருங்கடல்; சிறந்த எழுத்தாளர்; பதிப்பாசிரியர்; பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர். 'மகாமகோபாத்தியாய,' 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றுள்ளவர்; கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1932இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். அவரது திருவுருவச் சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது. சென்னையில் திருவான்மியூரில் இவர் பெயரால் உ. வே. சா. நூலகம் அமைந்துள்ளது.

### கற்பவை கற்றபின்...

1. பண்டைக்காலப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகளில், தற்காலத்தில் மேற்கொள்ளத்தக்கவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
2. 'மனனம் செய்தல்' – இன்றைய கல்விநிலையிலும் குறிப்பிடத்தக்க ஒரு கூறு. இது பற்றிப் பத்துக் கருத்துகளை முன்வைக்க.



XII Std Tamil Chap_4.indd 85 2/22/2019 1:11:38 PM

கவிதைப்பேழை

கல்வி ச

# இதில் வெற்றிபெற

–சுரதா




உரைநடை எழுதும் முறையும் கவிதை எழுதும் முறையும் வேறு வேறு. உரைநடை என்பது மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவது. கவிதை என்பது அச்சொற்கள் எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம் முதலிய யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு அமைவது. சிறந்த படைப்புகள் உருவாகக் கல்வி பெரும் துணையாக நிற்கிறது.

*விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற*
*வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;*
*மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்*
*மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;*
*புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;*
*புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்*
*கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்*
*கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.* *

*ஆக்கும்வரை நாமதனை அரிசி என்றும்,*
*ஆக்கியபின் சோறென்றும் சொல்லு கின்றோம்*
*பூக்கும்வரை அரும்பென்றும் பூத்த பின்பே*
*பூவென்றும் சொல்லுகின்றோம் அதுபோல் சொல்லைச்*
*சேர்க்கின்ற நேரத்தில், எதுகை மோனை*
*சேர்க்காமல், அடியளவை அறிந்தி டாமல்*
*வார்க்கின்ற வடிவந்தான் வசனம்; யாப்பில்*
*வந்தடங்கும் வார்த்தைகளே கவிதை யாகும்*

*பழுத்திருந்தால் சாறுவரும்; வயலில் தண்ணீர்*
*பாய்ந்திருந்தால் ஏர்கள்வரும்; அதுபோல் இங்கே*
*எழுத்திருந்தால் அசைகள்வரும்; இரண்டு சீரின்*
*இடைவெளியில் தளைகள்வரும்; தளைகள் சென்றே*
*அழைத்திருந்தால் அடிகள்வரும்; அடியின் கீழே*
*அடியிருந்தால் தொடைகள்வரும்; தொடைகள் நன்கு*
*செழித்திருந்தால் பாக்கள்வரும்; இவற்றை யெல்லாம்*
*தெரிந்துகொண்டு கவியெழுதத் தொடங்க வேண்டும்.*



XII Std Tamil Chap_4.indd 86 2/22/2019 1:11:38 PM



*தேமாவும் புளிமாவும் மரத்தில் காய்க்கும்;*
*சீர்களிலும் அக்காய்கள் நன்கு காய்க்கும்.*
*ஏமாந்தால் தளைதட்டும்; வெள்ளைப் பாட்டின்*
*இறுதிச்சீர் காசுதரும்; செடியில் பூத்த*
*பூமீது வண்டுவந்து தங்கும்; நல்ல*
*புலவர்களின் பாடல்களில் கீர்த்தி தங்கும்.*
*சாமான்ய மக்களுக்கும் விளங்கும் வண்ணம்*
*தமிழ்க்கவிதை தரவேண்டும் இந்த நாளில்.*

*எருவினிலே பயிர்விளையும்; சிறந்த கேள்வி*
*எழுப்புவதால் ஆராய்ச்சிவிளையும்; அந்தி*
*இரவினிலே குளிர்விளையும்; நுணுக்கத் தோடே*
*எழுத்தெண்ணி முன்னோர்போல் கற்று வந்தால்,*
*அறம்பொருள்கள் உள்ளத்தில் விளையும்; மிஞ்சும்*
*அறிவினிலே புகழ்விளையும்; இவற்றை யெல்லாம்*
*பெரும்பாலும் அறியாமல் எழுது வோர்க்குப்*
*புகழெங்கே சிறப்பெங்கே விளையக் கூடும்?*

**பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

### நூல்வெளி

இப்பாடப்பகுதி, கவிஞர் சுரதாவின் 'துறைமுகம்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் 'சுரதா'வின் இயற்பெயர் இராசகோபாலன். அப்பெயரைப் பாரதிதாசன்மீது கொண்ட பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என்று மாற்றி, அதன் சுருக்கமான சுரதா என்னும் பெயரில் மரபுக் கவிதைகள் எழுதினார்; முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்ட காவியம் என்ற இதழை நடத்தியதோடு இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியுள்ளார்; தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும் உள்ளிட்ட பல நூல்களைப் படைத்துள்ளார். இவர் தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

### கற்பவை கற்றபின்...

1. பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற உவமைச் சொற்களைத் தொகுக்க. இவை கருத்தை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பது குறித்துக் குழுவாக உரையாடுக.



XII Std Tamil Chap_4.indd 87 2/22/2019 1:11:41 PM

கவிதைப்பேழை

கல்வி

ச

# இடையீடு

G5L5Y1

– சி. மணி

நுழையும்முன்

தேடலை விரிவாக்குவது கல்வி. சாதிக்கும் திறனையும் சறுக்கல்களில் நம்பிக்கையாய் நமக்குத் துணை நின்று காக்கும் அறிவையும் வழங்க வல்லது கல்வி. கற்பிப்பதும் கற்பதும் ஒருங்கிணைதல் கற்றலில் வெற்றியைத் தரும். கொடுக்கின்ற மனதின் செய்திகளை வாங்குகின்ற மனம் அப்படியே ஏற்பதில்லை. கற்பித்தல், கற்றல் இரண்டிற்குமிடையே இடையீடுகள் நேர்வதும் உண்டு. எதிர்பாராத நல்ல விளைவுகளும் கிடைப்பதுண்டு.

*சொல்ல விரும்பிய தெல்லாம்*
*சொல்லில் வருவதில்லை*

*எத்தனையோ மாற்றங்கள்*
*குறிதவறிய ஏமாற்றங்கள்*
*மனம்புழுங்கப் பலவுண்டு*

*குதிரை வரையக் குதிரையே*
*வராது; கழுதையும் வரலாம்.*
*இரண்டும் கலக்கலாம்.*

*எலிக்குப் பொறிவைத்தால்*
*விரலும் விழுவதுண்டு.*
*நீர்தேடி அலையும்போது*
*இளநீரும் கிடைக்கும்.*

*என்றோ ஒருமுறை*
*வானுக்கு விளக்கடிக்கும்*
*வால் மீனாக*
*சொல்ல வந்தது சொல்லில்*
*வந்தாலும், கேட்பதில் சிக்கல்*

*கனியின் இனிமை*
*கனியில் மட்டுமில்லை,*
*சுவைப்போன் பசியை,*
*சுவைமுடிச்சைச் சார்ந்தது.*

*எண்ணம்*
*வெளியீடு*
*கேட்டல்*
*இம்மூன்றும் எப்போதும்*
*ஒன்றல்ல ஒன்றென்றால்*
*மூன்றான காலம்போல் ஒன்று*



நூல்வெளி

இடையீடு கவிதை, சி. மணியின் (சி. பழனிச்சாமி) 'இதுவரை' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இக்கவிதை குறியீடுகளைக்கொண்டு அமைந்தது. அதனால் பன்முகப் பொருள் கொண்டது. இக்கவிதை, கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை போன்றவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது. 1959ஆம் ஆண்டு முதல் 'எழுத்து' இதழில் இவரது கவிதைகள் தொடர்ந்து வெளிவந்தன. இவர் 'நடை' என்னும் சிற்றிதழையும் நடத்தியவர். இவர் படைத்த இலக்கணம் பற்றிய 'யாப்பும் கவிதையும்' என்னும் நூலும், 'வரும் போகும்', 'ஒளிச்சேர்க்கை' ஆகிய கவிதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை. ஆங்கிலப்பேராசிரியரான இவர் 'தாவோ தே ஜிங்' எனும் சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் புதுக் கவிதையில் அங்கதத்தை மிகுதியாகப் பயன்படுத்தியவர்; இருத்தலின் வெறுமையைச் சிரிப்பும் கசப்புமாகச் சொன்னவர்; விளக்கு இலக்கிய விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது, ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்; வே. மாலி, செல்வம் என்ற புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

இதழ்களில் வெளிவந்துள்ள கவிதைகளில் இரண்டினைத் திரட்டி, வகுப்பறையில் படித்துக் காட்டி, அவை கவிஞனின் மனநிலையை எவ்விதம் வெளிப்படுத்துகின்றன என்பதை விளக்கவும்.



XII Std Tamil Chap_4.indd 88 2/22/2019 1:11:41 PM

கவிதைப்பேழை

கல்வி ௪

# புறநானூறு

– ஔவையார்

நுழையும்முன்

வாழ்வின் அணியாக விளங்குவது கல்வி. கற்றோர் எந்நிலையிலும் சிறந்தே இருப்பர்; தாழும் நிலை வரினும் கலங்காது, அறிவால் உலகையே சொந்தமாக்கிக்கொள்வர்; எங்குச் சென்றாலும் மற்றவர் மதிப்பைப் பெறுவர். எல்லாப் புகழும் உடைய கற்றோரது செம்மாப்பு இங்குக் கவிதையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

*வாயி லோயே! வாயி லோயே!*
*வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்*
*உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து*
*வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்*
*பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!*
*கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி*
*தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?*
**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,*
*வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்*
*காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;*
*மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்*
*மழுவுடைக் காட்டகத்து அற்றே*
*எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. (206)*



**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

திணை: **பாடாண்.**

**பாடாண் திணை** – ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

துறை: பரிசில் துறை

**பரிசில் துறை** – பரிசு வேண்டி வாயிலில் நிற்பது.

## சொல்லும் பொருளும்

**வாயிலோயே** – வாயில் காப்போனே; **வள்ளியோர்** – வள்ளல்கள்; **வயங்குமொழி** – விளங்கும் சொற்கள்; **வித்தி** – விதைத்து; **உள்ளியது** – நினைத்தது; **உரன்** – வலிமை; **வறுந்தலை** – வெறுமையான இடம்; **காவினெம்** – கட்டிக்கொள்ளுதல்; **கலன்** – யாழ்; **கலப்பை** – கருவிகளை வைக்கும் பை; **மழு** – கோடரி.



XII Std Tamil Chap_4.indd 89 2/22/2019 1:11:42 PM

### பாடலின் பொருள்

வாயில் காவலனே! வாயில் காவலனே! புலவர்களாகிய எங்களைப் போன்றவர்களின் வாழ்நிலை, வள்ளல்களை அணுகி அவர்தம் செவிகளிலே அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் விதைத்துத் தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையது; அதே வேளையில் அவ்வள்ளல்கள் பற்றித் தாம் எழுதிய கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டது. பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ? (அவனை நம்பித்தான் இவ்வுலகில் வறுமை நிலையில் உள்ளோர் வாழ்கின்றனர் என்னும் நினைப்புப் போலும்.) இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகிவிடவில்லை. (எங்களை அறிந்து பரிசில் தரப் பல பேர் உள்ளனர்.) ஆகவே, எம் யாழினை எடுத்துக்கொண்டோம்; கருவிப்பையையும் சுருக்கிட்டுக் கட்டிக்கொண்டோம். மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள், கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு ஏதாவது ஒரு மரம் கிடைக்காமலா போகும்? அதுபோல, கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.

(பரிசிலர்க்குச் சிறுவரும், கல்விக்குக் கோடரியும், போகும் திசைக்குக் காடும், உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களும் உவமைகள்)

### இலக்கணக் குறிப்பு

வயங்குமொழி – வினைத்தொகை

அடையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அறிவும் புகழும் – எண்ணும்மை

சிறாஅர் – இசைநிறை அளபெடை.

### புணர்ச்சி விதி

எத்திசை = **எ + திசை**

விதி : இயல்பினும் விதியினும் நின்ற
உயிர்முன் கசதப மிகும் – எத்திசை

#### நூல்வெளி

சிற்றரசனான அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் தராமல் காலம் நீட்டித்தபோது ஔவையார் பாடிய பாடல் நமக்குப் பாடப்பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் இடம்பெற்றுள்ள புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது புறப்பொருள் பற்றியது; புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைக்கிறது.

அதியமானிடம் நட்புப் பாராட்டிய ஔவை அவருக்காகத் தூது சென்றவர்; அரசவைப் புலவராக இருந்து அரும்பணியாற்றியவர்; இவர் பாடியதாக அகநானூற்றில் 4, குறுந்தொகையில் 15, நற்றிணையில் 7, புறநானூற்றில் 33 என 59 பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

#### கற்பவை கற்றபின்...

கல்வியின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள், நாலடியார் பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் உரையாடுக.



XII Std Tamil Chap_4.indd 90 2/22/2019 1:11:42 PM

விரிவானம்

கல்வி ச

# பாதுகாப்பாய் ஒரு பயணம்

HEWU1C




வாழ்வை முழுமையாக்கும் கூறுகளுள் முதன்மையானது பயணம். அதிலும் சாலைவழிப் பயணம் மனதிற்கு இன்பத்தை அளிக்கக் கூடியது. அத்தகைய பயணத்தை அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும். சாலை விதிகளைத் தெரிந்துகொள்வதும் பிறருக்குச் சொல்வதும் விழிப்புணர்வு கொள்வதும் ஒருவகைக் கல்விதான். இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட்டால் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும்.

## காட்சி – 1

**(வாரத்தின் முதல் வேலைநாள் திங்கட்கிழமை, காலை. பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் எட்டு மணிக்கு வரும் பேருந்தினைப் பிடித்துவிடும் முனைப்பில் அவ்வூரின் பேருந்து நிறுத்தத்திற்குப் பத்து நிமிடம் முன்பாகவே வந்து சேர்ந்தனர். பேருந்து வந்தவுடன் அனைவரும் பேருந்தில் ஏறினர். அவர்களில் மாணவர்கள் சிலர் பேருந்தின் படிக்கட்டில் நின்றவாறு பயணம் செய்தனர். அப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சி.)**

ஓட்டுநர்: யாருப்பா அது? படிக்கட்டுல நிக்கிறது? உள்ளே ஏறி வாங்க. உள்ளே ஏறி வரலன்னா பேருந்தை நிறுத்திடுவேன். (பேருந்தை மெதுவாக ஓட்டுகிறார்)

பயணி-1: ஏம்பா! உள்ளே ஏறி வாங்கப்பா. 'படியில் பயணம் நொடியில் மரணம்' எனப் படிக்கட்டின் மேல் எழுதிப் போட்டிருப்பது உங்களுக்குத்தான்.

பயணி-2: உங்கள் நல்லதுக்குத்தான் சொல்றாங்க! இப்படிப் படிக்கட்டுல நின்றுகொண்டு அபாயகரமா பயணம் செய்யுறதுல அப்படி என்னதான் கிடைக்குதோ? தெரியலையே.....

**(படிக்கட்டில் பயணித்த மாணவர்கள் பேருந்தின் உள்ளே வந்தனர். ஒவ்வொரு பேருந்து நிறுத்தத்திலும் இப்பேச்சு, தொடர்கதையாய் நீள்கிறது. பதினைந்து நிமிடப் பயணத்திற்குப் பிறகு பேருந்து ஓரிடத்தில் நிற்கிறது. போக்குவரத்து முடங்கி நிறைய வாகனங்கள் நின்றன. எதிர்த்திசையிலிருந்து சிலர் பதற்றத்துடன் வந்தனர்)**

பயணி-1: (அவர்களில் ஒருவரிடம்) என்னாச்சு? ஏன் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது?

எதிரில் வருபவர்: பள்ளிக்கூடப் பசங்க மூன்றுபேர், ஒரே இருசக்கர ஊர்தியில் வேகமாய்ப் போய், எதிரே வந்த லாரியுடன் மோதி விபத்துக்குள்ளாகிட்டாங்க. அவங்க கடுமையாகக் காயம்பட்டு, நிலைமை மோசமா இருக்கு.

நடத்துநர்: எப்போ பார்த்தாலும் இதேதாங்க நடக்குது. மனசெல்லாம் வலிக்குது.

பயணி-1: பள்ளிக்கூடத்துப் பசங்க எதுக்கு வண்டி ஓட்டணும்? அதுவும் ஒரு வண்டியில மூன்றுபேரா பயணிப்பது?

பயணி-2: 18 வயதிற்கு உட்பட்டோர் வண்டியை ஓட்ட அனுமதிக்கக் கூடாதுன்னு

சட்டம் இருப்பது இந்தப் பெற்றோர்க்குத் தெரியாதா?

பயணி-3: அப்படிப் போறவங்க சாதாரண வேகத்திலியா போறாங்க? இளம் வயசுல அடுத்தவங்க கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று நினைத்து அதிக வேகமா போறாங்க.

**(பயணிகள் பேருந்தினுள் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தனர். அதற்குள் நோயாளர் ஊர்தியினர், காவல்துறையினர் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தனர். போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட்டுப் பேருந்துகள் பயணிக்கத் தொடங்கின.)**

### காட்சி – 2

**(ஒரு மணி நேர கால தாமதத்திற்குப் பிறகு பதினைந்து மாணவர்கள் பள்ளிக்குள் நுழைந்து தலைமை ஆசிரியர் அறைக்கு முன்பாக நிற்கின்றனர்)**

தலைமையாசிரியர்: ஏன் காலம் தாழ்த்தி வருகிறீர்கள்? என்ன காரணம்?

பகலவன்: அம்மா, நாங்கள் தினமும் பேருந்தில் பயணம் செய்து பள்ளிக்கு வருகிறோம். அவ்வாறு இன்று வரும்போது சாலையில் விபத்து ஏற்பட்டுவிட்டது. அருகிலுள்ள பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்று பேர், இரு சக்கர ஊர்தியில் அதிவேகத்தில் பயணம் செய்து சாலையில் எதிரே வந்த லாரியுடன் மோதி விபத்தில் சிக்கிவிட்டனர். படுகாயம் அடைந்த அவர்களைப் பார்ப்பதற்கே அச்சமாகவும் வேதனையாகவும் இருந்தது. இவ்விபத்தினால் போக்குவரத்தில் முடக்கம் ஏற்பட்டுவிட்டது. எனவே பள்ளிக்குக் குறித்த நேரத்தில் வர முடியவில்லை அம்மா.

தலைமையாசிரியர்: அடடா ! நாள்தோறும் இத்தகைய விபத்துகள் நடப்பது பெருகிக்கொண்டே இருக்கின்றது. இன்றைக்கு வேறுபள்ளி மாணவர்கள். நாளை நம் பள்ளி மாணவர்களுக்குக் கூட நேரலாம். எனவே நம் மாணவர்களுக்குச் சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் எதிர்காலத்தில் இத்தகைய விபத்துகளைத் தவிர்க்க முடியும்.

பகலவன்: சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை நமது பள்ளி மாணவர்களுக்கு அளிக்க முடியுமா அம்மா?

தலைமையாசிரியர்: ஏன் முடியாது? அதற்கான விழிப்புணர்வுக் கூட்டத்தினை விரைவில் நம் பள்ளியில் நடத்தலாம். இப்போது நீங்கள் வகுப்புகளுக்குச் செல்லுங்கள்.

### காட்சி – 3

**சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம்**

**இடம் : கலையரங்கம்**

**(வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பள்ளிக்கு வருகிறார். தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அவரை வரவேற்கின்றனர். சாலைப் பாதுகாப்புக் கண்காட்சி மாணவர் பார்வைக்குத் திறந்து வைக்கப்படுகிறது.)**

**தமிழ்த்தாய் வாழ்த்து:**

தலைமையாசிரியர் உரை: மனித வாழ்வு பயணங்களால் நிறைந்தது. அன்றாட வாழ்வில் சாலைகளில்தான் நாம் அதிகமாகப் பயணம் செய்கிறோம். சாலையில் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கு விதிமுறைகள் உள்ளன. சாலைப் பாதுகாப்பு என்றால் சாலையை நன்றாகப் பாதுகாப்பது என்பது பொருளல்ல. சாலையில் நாம் பாதுகாப்புடன் பயணம் செய்வது என்பது பொருள். நம்முடைய பள்ளிக்கு வருகை தந்திருக்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்கள், சாலைப் பயணத்தைப் பாதுகாப்பாக மேற்கொள்ளும் வழிமுறைகள் பற்றி உங்களிடையே பேசுவார்.

**(மாணவர்கள் கரவொலி எழுப்புகின்றனர்)**

சாலைப்போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் 103ஐ தொடர்பு கொள்ளலாம்.



XII Std Tamil Chap_4.indd 92 2/22/2019 1:11:42 PM

வ.போ.அலுவலர்: பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்க்கு இனிய வணக்கம்.

நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு. ஏறக்குறைய 55 இலட்சம் கி.மீ. சாலைகள் நம் நாட்டில் உள்ளன. நம் நாட்டில் 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன. அதனால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன. ஓர் ஆண்டிற்கு ஏறக்குறைய ஐந்து இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. அதில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். சுமார் 2 இலட்சம் பேர் தங்கள் உடலுறுப்புகளை இழந்து துன்பத்தில் வாடுகின்றனர். சரியாகக் கணக்கிட்டால் நாளொன்றுக்கு நேரும் விபத்துகளில் மூன்றில் ஒரு பங்கினர் உயிரிழக்கின்றனர். குறிப்பாகத் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது. இந்தியாவில் ஏற்படும் சாலை விபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடப்பது வேதனைக்குரியது. மாணவர்களாகிய நீங்கள் சாலைப் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வைப் பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் சாலை விபத்துகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும்.

விபத்துகள் எதிர்பாராமல், ஏற்படுகின்றன. மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துகளுக்குக் காரணங்களாக அமைகின்றன. தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல், விதிகளைப் பின்பற்றுதல் வாயிலாக மட்டுமே சாலை விபத்துகளைத் தடுக்க முடியும்.

தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 35 விழுக்காடு இருசக்கர ஊர்திகளால் ஏற்படும் விபத்துகளாக உள்ளன. பதினெட்டு வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையான பயிற்சியின் மூலம் ஓட்டுநர் உரிமம் பெற்று, இருசக்கர ஊர்தியை இயக்க வேண்டும். பள்ளி மாணவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும். மேலும், இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம்






XII Std Tamil Chap_4.indd 93 2/22/2019 1:11:43 PM

பாரிஸ் நகரத்தில் 1909 ஆம் ஆண்டு நடந்த முதல் 'பன்னாட்டுச் சாலை அமைப்பு' (International Road Congress) மாநாட்டில் ஒரு பொதுவான சாலை விதி வேண்டும் என்னும் உடன்படிக்கை ஏற்பட்டது. பல மொழிகளில் எழுதப்படும் அறிவிப்புப் பலகைகளை விட மொழிவேறுபாடற்ற குறியீடுகள் எளிதில் மக்களுக்குப் புரியும் என்பதற்காக இவை உருவாக்கப்பட்டன. அபாய முன்னறிவிப்பு, முக்கியத்துவத்தைச் சுட்டும் குறியீடுகள், தடை செய்யப்பட்டதைத் தெரிவிக்கும் குறியீடுகள், கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய குறியீடுகள், சிறப்பு அறிவிப்புக் குறியீடுகள், திசை காட்டும் குறியீடுகள் போன்ற பல பிரிவுகளில் இவை வடிவமைக்கப்பட்டன. அவையாவன:

- சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்பச் சாலையைப் பயன்படுத்த வேண்டும்.
- நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக் கூடாது.
- சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும்.
- எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கு வழிவிட வேண்டும். தேவையெனில் வேகம் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.
- பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக்கொடுப்பது சிறந்தது.
- இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

**மோட்டார் வாகனச் சட்டம் 2017–குறிப்பிடுவன**

- 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்கினாலோ, விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோர்க்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும்.
- ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் ரூ.5000 தண்டத்தொகையோ, மூன்று மாதச் சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ கிடைக்கும்.
- அபாயகரமான முறையில் ஊர்தியை ஓட்டினால் ரூ. 5000 தண்டத்தொகை பெறப்படும்.
- மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் ரூ.10,000 தண்டத்தொகை கட்ட நேரும்.
- மிகுவேகமாக ஊர்தியை இயக்கினால் ரூ. 5000 தண்டத்தொகை கட்ட நேரும்.
- இருவருக்கு மேல் இரண்டு சக்கர ஊர்தியில் பயணித்தால் ரூ. 2000 தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும்.
- தலைக்கவசம் அணியாமல் இருசக்கர ஊர்தியை இயக்கினால் ரூ. 1000 தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும்.

ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் ரூ. 2000 தண்டத்தொகை கட்ட நேரும்.

அணியாமல் செல்வது, இரண்டு பேருக்கும் மேற்பட்டோர் பயணிப்பது, கைபேசியில் பேசிக்கொண்டே செல்வது, சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குவது, போட்டி, பந்தயம் எனச் சொல்லிப் பொதுவழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணி கேட்பிகள் பொருத்திக் கொண்டு ஊர்திகளை ஓட்டுவது எனப் பல காரணங்களால் இருசக்கர வாகன விபத்துகள் பெருமளவில் நடக்கின்றன. இத்தகைய ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்த்தால் விபத்துகள் ஏற்படாது.

மேலும், சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு இல்லாததுதான் விபத்துகள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன. இன்றைய நவீன உலகில் 'அவசரம்' என்கிற நோய் எல்லோரையும் பீடித்திருக்கிறது. வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு, போதிய பயிற்சியின்மை, தட்பவெப்பநிலை, இயந்திரக் கோளாறு, மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்வது, தொடர்வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது போன்ற பல காரணங்களால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன. குறிப்பாக மது குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதால் நிறையவே விபத்துகள் நடக்கின்றன. இவைதான் பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். மாணவர்கள் சிலர் சாலைகளில் விளையாடுவது, கவனிக்காமல் திடீரென்று சாலையைக் கடப்பது, சாலையின் நடுவே செல்வது, சாலையை அடைத்துக்கொண்டு செல்வது, வேகமாகச் செல்லும் வாகனத்தின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு மிதிவண்டியில் செல்வது, ஓடும் பேருந்தில் ஏறுவது இறங்குவது, பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்கள் தங்கள் உயிரையும் உடலுறுப்புகளையும் இழக்க நேரிடுகிறது. இது அவர்களின் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரிய இழப்பு. இந்த நிலை எதிர்வரும் காலங்களில் முற்றிலும் மாற வேண்டும்.

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர்செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. அவற்றை 1. உத்தரவுக் குறியீடுகள் 2. எச்சரிக்கைக் குறியீடுகள் 3. தகவல் குறியீடுகள் என மூன்றாகப் பிரித்து அறியலாம். அக்குறியீடுகள் அனைத்தும் உங்கள் பள்ளியில் உருவாக்கப்பட்டிருக்கும் கண்காட்சி அரங்கில் விளக்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நீங்கள் அனைவரும் அவற்றைக் கண்டுணர்ந்து பின்பற்ற வேண்டும். அப்படிச் சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும்பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.

**(நிறைவாக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சாலைப் பாதுகாப்பிற்கான உறுதிமொழியைக் கூறுகிறார். மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று சாலைப் பாதுகாப்பினை வலியுறுத்தும் உறுதிமொழி ஏற்கின்றனர். நாட்டுப் பண்ணோடு நிகழ்ச்சி முடிவடைகிறது.)**

கற்பவை கற்றபின்...

1. சாலைப் பாதுகாப்பினை வலியுறுத்தும் முழக்கத் தொடர்கள் அடங்கிய பதாகைகள் சிலவற்றை உருவாக்கிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.
2. எதிர்பாராத சூழலில் ஏற்படும் சாலைவிபத்தையும், அவற்றைத் தடுக்கும் முறைகளையும் உள்ளடக்கிய நாடகம் ஒன்றை நடத்திக் காட்டுக.



XII Std Tamil Chap_4.indd 95 2/22/2019 1:11:43 PM

கல்வி

ச

## பா இயற்றப் பழகலாம்

HUFP2N

தமிழ்மொழி கவிதைவளம் உடையது. காலத்திற்கு ஏற்ப யாப்பிலக்கணமும் வளர்ச்சி பெறுகிறது. போட்டி போட்டுக்கொண்டு புதுக்கவிதைகள் பெருகினாலும் மரபுக் கவிதைகளும் மிகுதியாக எழுதப்படுகின்றன.

சங்கம் மருவிய காலத்திலிருந்து வெண்பா இலக்கியங்கள் பெருகத் தொடங்கின. நீதி இலக்கியங்கள் வெண்பா வடிவத்திலேயே பெரும்பாலும் தோன்றின. அறங்கள் மனிதர் மனத்தில் நின்று நிலைக்கவேண்டியவை. அறங்களை வெண்பாவில் தந்தால் மறந்துவிடாமல் நினைவில் வைக்க ஏதுவாக இருக்கும். அதனால் அறம் வலியுறுத்தப்பட்ட சங்கம் மருவிய காலத்தில் வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்றது.

சொல்லுதலை (செப்பல்) அடிப்படையாகக் கொண்டு தோன்றியது வெண்பாவாகும். ஆகவே, இது செப்பலோசை உடையதாயிற்று. இத்தகு சிறப்புகள் கொண்ட வெண்பாக்களைச் செப்பமாக எழுதுவதால் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறமுடியும். இப்பகுதி, வெண்பாவிற்குரிய இலக்கணங்களைக் கூறி மாணவர்கள் எளிமையாகப் பாடல்கள் எழுதுவதற்குரிய பயிற்சிகளையும் தருகிறது.

### வெண்பா எழுதும் முறை

வெண்பா எழுதுவதற்கெனப் பொதுவான சில இலக்கணங்கள் உண்டு. செய்யுள் எழுத அடிப்படையாய் விளங்கும் இவ்விதிகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனைய பாக்களைவிட வரையறுத்த இலக்கணக் கட்டுக்கோப்பு உடையது வெண்பா. இதனாலேயே வெண்பாவை வன்பா என்பார்கள்.

வெண்பாவை இலக்கணக் கட்டுப்பாடு குலையாமல் இயற்றவேண்டும். வெண்பா வெண்டளையால் அமையவேண்டும் என்பது இன்றியமையாத விதி. வெண்பாவிற்கான தளையே வெண்டளை. இத்தளை இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என இரண்டு வகைப்படும்.

தளைத்தல் என்பதற்குக் கட்டுதல், பிணித்தல் என்று பொருள். நண்பர்கள் கைகோத்தபடி நடப்பதைப் போல, சீர்கள் வெண்டளையால் கட்டுக்குலையாதபடி யாக்கப்படுவது வெண்பா. மா முன் நிரை – விளம் முன் நேர் – காய் முன் நேர் என்பதே வெண்பாவிற்கான எளிய தளை இலக்கணம்.

| | |
|---|---|
| மா முன் நிரை<br>விளம் முன் நேர் | இயற்சீர் வெண்டளை |
| காய் முன் நேர் | வெண்சீர் வெண்டளை |

மா, விளம் என்னும் இரண்டும் ஈரசைச் சீர்கள். காய் மூவசைச்சீர்.

| | |
|---|---|
| மா | தேமா, புளிமா |
| விளம் | கூவிளம், கருவிளம் |
| காய் | தேமாங்காய், புளிமாங்காய்<br>கூவிளங்காய், கருவிளங்காய் |

முதற்சீர் மாச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை நிரையாக இருக்கவேண்டும். முதற்சீர் விளச்சீர் அல்லது காய்ச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை நேர் என்பதாக இருக்கவேண்டும். வரும்சீரின் முதல் அசையை மட்டுமே கவனத்தில் கொள்ளவேண்டும். ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடு ஒன்றில் முடியவேண்டும். நாள், மலர் என்பவை ஓரசைச்சீர்கள். காசு, பிறப்பு என்பவை குற்றியலுகர ஓசையோடு முடியும் சீர்கள். ஈற்று அயற்சீர், மாச்சீர், என்றால் மலர்

(அ) பிறப்பு வரும். விளச்சீர், காய்ச்சீர் எனில் நாள் (அ) காசு என்னும் வாய்பாடு வரும்.

| முதற்சீர் (அ) நின்றசீர் | வரும்சீர் |
|---|---|
| மா | புளிமா, கருவிளம், புளிமாங்காய், கருவிளங்காய், மலர், பிறப்பு |
| விளம் | தேமா, கூவிளம், தேமாங்காய், கூவிளங்காய், நாள், காசு |
| காய் | |

**வெண்பா அடிவரையறை**

- இரண்டடி வெண்பா – குறள்வெண்பா
- மூன்றடி வெண்பா – நேரிசை, இன்னிசைச் சிந்தியல் வெண்பா
- நான்கடி வெண்பா – நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும்
- நான்கடிமுதல் பன்னிரண்டடிவரை – பஃறொடை வெண்பா
- பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள்வரை – கலிவெண்பா

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

இந்தக் குறளுக்கான வெண்டளை அமைப்பு முறையினைக் காணலாம்.

நிரைநிரை நேர்நேர் நிரைநேர் நிரைநேர்
நிரைநிரை நேர்நேர் மலர்

கருவிளம் தேமா புளிமா புளிமா கருவிளம் தேமா நிரை

**நிரைநிரை நேர்நேர் நிரைநேர் நிரைநேர் நிரைநிரை நேர்நேர் மலர்**

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்

**வெண்பாவிற்கான இலக்கணம்**

1. இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமையவேண்டும்.
2. ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.
3. ஈரசைச்சீர்கள் மாச்சீரும் விளச்சீரும் (தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்) மூவசைச்சீரில் காய்ச்சீரும் (தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்) வரும்.
4. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

வெண்பாக்கள் குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா என எழுவகைப்படும்.

**நேரிசை வெண்பா – இன்னிசை வெண்பா**

நாற்சீர் – முச்சீர் – இடையிலே தனிச்சீர் என்று இதன் இலக்கணத்தைச் சுருக்கமாகச் சொல்லலாம். இரண்டு நாற்சீர் முச்சீருக்கு இடையில், இரண்டாவது அடியின் ஈற்றுச் சீராகத் தனியே ஒரு சீர் ஒரு சிறு கோடிட்டு எழுதப்படும். இதனையே தனிச்சீர் என்பர். பாட்டின் முதற்சீருக்குரிய எதுகை இந்தத் தனிச்சீருக்கும் இருக்கும்.



XII Std Tamil Chap_4.indd 97 2/22/2019 1:11:43 PM

*எட்டெடை செம்பில் இரண்டெடை ஈயமிடில்*
*திட்டமாய் வெண்கலமாம் சேர்ந்துருக்கில் – இட்டமுடன்*
*ஓரேழு செம்பில் ஒருமூன்று துத்தமிடில்*
*பாரறியப் பித்தளையாம் பார்.*

நான்கு – மூன்று – தனிச்சீர் – நான்கு – மூன்று சீர்கள் என்கிற முறையில் நேரிசை வெண்பா எழுதப்படும்.

**கீழ்வரும் பாடலில் நேரிசை வெண்பா இலக்கணம் பொருந்துதலைக் காணலாம்.**

| | |
|---|---|
| *"ஆழ வமுக்கி முகக்கினும் மாழ்கடனீர்* | தேமா புளிமா கருவிளம் கூவிளங்காய் |
| *நாழி முகவாது நானாழி – தோழி* | தேமா புளிமாங்காய் தேமாங்காய் – தேமா |
| *நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்* | புளிமா கருவிளம் கூவிளங்காய் தேமா |
| *விதியின் பயனே பயன்"* | புளிமா புளிமா மலர் |

இந்தப் பாட்டில் இரண்டாவது அடியின் முதற்சீர் நாழி; நான்காவது சீர் அதனோடு எதுகையில் ஒன்றிய தோழி; தோழி என்பது தனிச்சீர்.

இந்த வெண்பாவில் முதல் இரண்டடியும் ஒரெதுகையாகவும் பின் இரண்டடியும் ஒரெதுகையாகவும் உள்ளன. இதுவும் நேரிசை வெண்பாவின் இலக்கணங்களில் ஒன்று. நான்கடியும் ஒரெதுகையாகவும் வரும்.

**மேலே காட்டிய பாடலில் வெண்டளை பிறழாமல் வந்திருப்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.**

1. ஆழ – தேமா; அமுக்கி – புளிமா = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
2. அமுக்கி – புளிமா; முகக்கினு – கருவிளம் = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
3. முகக்கினும்– கருவிளம்; ஆழ்கடனீர் – கூவிளங்காய் = விளமுன் நேர் வந்த இயற்சீர் வெண்டளை.
4. ஆழ்கடனீர் – கூவிளங்காய்; நாழி – தேமா = காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.
5. நாழி – தேமா; முகவாது – புளிமாங்காய் = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
6. முகவாது – புளிமாங்காய்; நானாழி – தேமாங்காய் = காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.
7. நானாழி – தேமாங்காய்; தோழி – தேமா = காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.
8. தோழி – தேமா; நிதியுங் – புளிமா = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
9. நிதியுங் – புளிமா; கணவனு(ம்) – கருவிளம் = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
10. கணவனு(ம்) – கருவிளம்; நேர்படினுந் – கூவிளங்காய் = விளம் முன் நேர் வந்த இயற்சீர் வெண்டளை.
11. நேர்படினுந் – கூவிளங்காய்; தந்தம் – தேமா = காய் முன் நேர் வந்த வெண்சீர் வெண்டளை.
12. தந்தம் – தேமா; விதியின் – புளிமா = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
13. விதியின் – புளிமா; பயனே – புளிமா = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.
14. பயனே – புளிமா; பயன் – மலர் = மா முன் நிரை வந்த இயற்சீர் வெண்டளை.



XII Std Tamil Chap_4.indd 98 2/22/2019 1:11:44 PM

## இன்னிசை வெண்பா

நேரிசை வெண்பாவில் இரண்டாமடியில் தனிச்சீர் வரும். தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு அமைக்கப்படுபவை இன்னிசை வெண்பா.

*இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்*
*தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்*
*எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து*

எடுத்துக்காட்டப்பட்டுள்ள வெண்பாக்கள், வெண்டளை பிறழாமல் பாடப்பட்டுள்ளதைக் காணலாம். முதல்இரண்டு வெண்பாக்கள் இருவிகற்ப நேரிசை வெண்பாக்கள். (முதலிரு அடிகளும் ஈற்றிரு அடிகளும் வேறு வேறான எதுகை) மூன்றாவது வெண்பா ஒருவிகற்ப இன்னிசை வெண்பா (நான்கடிகளும் ஒரே எதுகை).

## மாணவர்களுக்கான பயிற்சி

**நாள், மலர் காசு, பிறப்பு என முடிவன**

- ☐ *நல்லார் புகழும் நலம்பெறலும் அல்லாமல்*
  *பல்லோர் இகழும் பழிபெறலும் – எல்லாம்*
  *வழக்கத்தால் அல்ல வகைபெறும்நம் நட்பாம்*
  *பழக்கத்தால் வாய்ப்பதுதான் பார்.* (நாள்)

- ☐ *அல்லும் பகலும் அயரா(து) உழைத்திடின்*
  *நல்ல மதிப்பெண்கள் நாம்பெறலாம் – இல்லை*
  *படியேன் எனத்திரிந்தால் பாக்குமரம் போலே*
  *நெடிதவையில் நிற்பாய் நினை.* (மலர்)

- ☐ *கற்பிப்ப தோடு கலைத்திறனைக் கண்டறிந்து*
  *பொற்புடனே வாழப் புரிந்திடுதல் – நற்பெருமை*
  *ஆசான் முதற்கடமை ஆகும்; இமைக்கடமை*
  *கூசாமல் கண்காத்தல் கூறு.* (காசு)

- ☐ *பெற்றோர் மகிழப் பெரியோர்கள் பாராட்டும்*
  *வற்றாத நற்குணங்கள் வாய்ப்பதற்குக் – குற்றமிலா*
  *வாயால்சொன் னால்நன்மை வாய்க்காது செய்கையினால்*
  *ஓயாமல் நீயும் உணர்த்து.* (பிறப்பு)

## உவமையுடன் எழுதுதல்

- ☐ *கல்வி பயிலுவது கண்ணாகும்; எந்நாளும்*
  *செல்வம் வரும்போகும் செய்கையது; – நல்ல*
  *ஒழுக்கம் உயிராகும்; உவந்து கொடுக்கும்*
  *பழக்கம் உயர்வுதரும் பார்*

### பயிற்சிப் பகுதி

1. *விண்ணின் மழைநீரை வீணாக்கா மல்தேக்கி*
   *________ சிறந்த மரம்நட்டுக் – கண்ணின்*
   *மணிபோல் மொழிகாத்து மாநிலத்து வாழ்வாய்*
   *நினைவெல்லாம் ஈடேறி நீ* **(மண்ணில்)**

2. *முன்னாள் புரிவினைகள் முற்றும் தவறாமல்*
   *_______ நமைவந்து பீடிக்கும் – அன்று*
   *தினையிட்டால் இன்று தினைவிளையும் அன்றிப்*
   *_______ வாய்க்கும் பனை.*
   **(பின்னாள், பனையிட்டால்)**

3. *உண்ணும் _____ ஒருபோதும் கொட்டாதே*
   *______ பசியால் மடிபவர்கள் – விண்ணின்*
   *கடவுளென உன்னைக் _______ அன்பாய்*
   *இடுவதற்(கு) ஏதுவழி எண்.*
   **(உணவை, மண்ணில், கருதுவர்)**

4. *வேற்றுயிரால் ____ விளையா திருப்பதற்(கு)*
   *ஏற்றவண்ணம் ______ இயற்றாமல் – ஆற்றலுறும்*
   *______ இனம்வருந்தப் பேரிடர்செய் கின்றாயே*
   *நண்பா! _____ நவில்?*
   **(தொல்லை, காவல், பெண்பால், சரியோ)**

கற்பவை கற்றபின்...

1. கீழ்க்காணும் ஈற்றடிகளைக்கொண்டு நேரிசை (அ) இன்னிசை வெண்பா எழுதுக.
   (அ) என்றும் விரும்பியே கல்.
   (ஆ) ஒழுக்கம் உயர்வு தரும்.
   (இ) இன்னல் விலகி விடும்.
   (ஈ) உழவின்றி உய்யா உலகு.
   (உ) மொழியின் வழியதறிவு.
2. 'இயற்கை' என்னும் பொருண்மையில் வெண்பா எழுதுக.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

   அ) அன்பே _____________ (ஆர்வமாய் / தகளியாய்)

   ஆ) வான்மழை ____________ (தூறலில் / பொழிந்திடின்)

   இ) கண்ணிரண்டும் _____________ (இலாதார் / இல்லார்)

   ஈ) வெண்ணிலவு ____________ (காய்கிறது / ஒளிர்கிறது)

   உ) வெய்யோன் ______________ (காய்ந்திட / ஒளிர்ந்திட)

2. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.

   அ) கல்வி கரையில ____________

   ஆ) கல்லாரே ஆயினும் __________

   இ) நல்லவை செய்யின் ___________

   ஈ) அவமதிப்பும் ஆன்ற ____________

   உ) உண்ணாது நோற்பார் ___________

3. பொருத்துக.
   அ) மாச்சீர் – 1) கருவிளம், கூவிளம்
   ஆ) காய்ச்சீர் – 2) நாள், மலர்
   இ) விளச்சீர் – 3) தேமாங்காய், புளிமாங்காய்
   ஈ) ஓரசைச்சீர் – 4) தேமா, புளிமா
   அ) 1, 2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3, 4, 2,1

4. கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா / நேரிசை வெண்பா / இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யவும்.

   கடல், வாள், மழை, தேன், மரம்

5. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

6. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?



XII Std Tamil Chap_4.indd 100 2/22/2019 1:11:44 PM

## நம்மை அளப்போம்

I9YJ3Z

**பலவுள் தெரிக.**

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
2. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
3. "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
   வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" – இத்தொடர் தரும் முழுமையான பொருள்:
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு
4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
5. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

**குறுவினா**

1. இடையீடு – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
2. வசனம், கவிதை வேறுபாடு தருக.
3. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யார்க்கு?
4. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

**சிறுவினா**

1. "மூன்றான காலம் போல் ஒன்று" –எவை? ஏன்? விளக்குக.
2. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
3. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
4. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

**நெடுவினா**

1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
2. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
3. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?



XII Std Tamil Chap_4.indd 101 2/22/2019 1:11:44 PM

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



மறைமலையடிகள்
(1876–1950)

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்குச் சென்றார் ஒருவர். அந்தக் கல்லூரியின் பேராசிரியர் பரிதிமாற்கலைஞர், "குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். 'நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள்' என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை, "எப்படித் தேர்வு செய்யலாம்?" என்று பிறர் கேட்டபோது, 'அஃது' என்பது ஆய்தத் தொடர் குற்றியலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம், 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகரம் என்று விளக்கினார் பரிதிமாற்கலைஞர். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.

பரிதிமாற்கலைஞருடனான அவருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்கியது. பிறமொழிக் கலப்பு இன்றி இனிய, எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார். 'சுவாமி வேதாசலம்' எனும் தன்பெயரை 'மறைமலையடிகள்' என மாற்றிக்கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இளம்வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த அடிகளார் ஞானசாகரம் (1902), Oriental Mystic Myna (1908), Ocean Of Wisdom (1935) முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார். முறையான பள்ளிக்கல்வியை முடித்திராத மறைமலையடிகள் ஆக்கிய நூல்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக்கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

### தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

எ.கா. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

1. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
2. ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
3. மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
4. ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
5. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

### தமிழாக்கம் தருக.

*The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public library on any considerable size, and even this institution is inadequate to serve the need of the capital city. Only a few towns can boast of possessing any library at all. The rural papulation is completely neglected; There are no travelling libraries to reach them> of kind that are to be found even in some backward countries.*

*The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books*



XII Std Tamil Chap_4.indd 102 2/22/2019 1:11:44 PM

*or even magazines and newspapers; in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits*

**பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**

*யானைக்கும் அடிசறுக்கும், தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான், குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை, எறும்பு ஊரக் கல்லும் தேயும், ஊழி பெயரினும் தாம் பெயரார்*

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

*இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*

*உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.*

*ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும்தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமானமாதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.*

*உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.*

*நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும்.*

*ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவ நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும்.*

*தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.*

## மொழியோடு விளையாடு

**மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடி**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| போ | ஏ | யா | ழ் | சு | வி | ந | க | ரு | ஞ |
| க் | டு | பா | டு | தே | ல் | டை | வி | ர | ளி |
| கு | தி | ரை | பா | ச | க | மே | தை | ம் | ச் |
| வ | அ | வெ | வ | மி | பா | டை | வே | க | சே |
| ர | ன் | ற் | டி | த் | டா | ஔ | ங் | மு | ர் |
| த் | பு | றி | வ | தி | ண் | வை | கை | றை | க் |
| து | ரு | வ | ம் | ர | தி | ஓ | லை | து | கை |
| ம | ன | ன | ம் | ன் | ணை | ப | ய | ணி | த |
| கா | வ | ல | ர் | ஓ | த | ற் | பி | ரி | வு |

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

எ.கா. பலகை

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

1. தாமரை 2. கோவில்
3. வெங்காயம் 4. தலைமை

**செய்து கற்போம்**

அருகிலுள்ள கல்லூரிக்குச் சென்று அங்குள்ள பாடப்பிரிவுகளை அட்டவணைப்படுத்துக.

**நிற்க அதற்குத் தக**

**கீழ்க்கண்ட இடங்களில் உங்கள் செயல்பாடு எவ்வாறு இருக்கும்?**

| | |
|---|---|
| கூட்டம் நிரம்பிய பேருந்தில், நீங்கள் அமர்ந்திருக்க, உங்கள் அருகில் பெரியவர் ஒருவர் நிற்கிறார். | |
| பள்ளியில் உங்களுடைய தோழர் பசியுடன் அமர்ந்திருக்கிறார். | |
| கடற்கரையில் பெற்றோரிடமிருந்து பிரிந்து வழிதவறிய சிறுமி கண்ணீர்விட்டுக் கலங்குகிறார். | |

**படிப்போம் பயன்படுத்துவோம் (வானூர்தி நிலையம்)**

| | | | |
|---|---|---|---|
| Arrival | - வருகை | Passport | - கடவுச்சீட்டு |
| Departure | - புறப்பாடு | Visa | – நுழைவு இசைவு |
| Conveyor Belt | - ஊர்திப்பட்டை | Domestic Flight | – உள்நாட்டு வானூர்தி |
| Take Off | – வானூர்தி கிளம்புதல் | | |

**அறிவை விரிவு செய்**

- நீங்களும் கவிபாடலாம் – கி.வா. ஜகந்நாதன்
- துறைமுகம் – சுரதா
- இதுவரை – சி. மணி
- படைப்புக்கலை – மு. சுதந்திரமுத்து
- கவிஞராக – அ. கி. பரந்தாமனார்

**இணையத்தில் காண்க**

https://ta.wikipedia.org/s/5w9i ( பழந்தமிழகத்தில் கல்வி)
http://tndipr.gov.in/memorials/tamil/tamilthathauvsamemorial.html (உ.வே.சா)
https://ta.wikisource.org/s/3orz (சுரதா கவிதைகள்)
https://groups.google.com/forum/#!topic/brailleacl/9XDy622nmml (சி.மணி கவிதைகள்)
http://vaiyan.blogspot.com/2015/02/206.html (புறநானூறு 206)
http://www.tamilmantram.com/vb/archive/index.php/t-8746.html (வெண்பா எழுதுவது எப்படி?)



XII Std Tamil Chap_4.indd 104 2/22/2019 1:11:45 PM

இயல் 5

# நாடென்ப நாட்டின் தலை

*நாகரிகம்,தொழில்,வணிகம்*



புனித ஜார்ஜ் கோட்டையின் ஓவியம்.

நன்றி – பிரிட்டிஷ் நூலகம்

## கற்றல் நோக்கங்கள்

- ஊர்களின் வரலாறு குறித்த தகவல்களைத் திரட்டிக் கட்டுரையாக எழுதும் திறன் பெறுதல்.
- இடைக்காலத்தில் கொண்டாடப்பட்ட திருவிழாக்களின்வழி மக்களின் நாகரிகக்கூறுகளை அறிந்து அவற்றின் இன்றைய தொடர்ச்சியை அறிய முற்படுதல்.
- திருவருட்பா வழியாக நேர்மறைச் சிந்தனைகளை அறிந்து பின்பற்ற முனைதல்.
- சங்க காலத் தமிழரின் பண்டமாற்று வணிகமுறையை அறிந்து சமகால நிலையோடு ஒப்பிடுதல்.
- நகர்மயமாதல் ஏற்படுத்திய வாழ்வியல் தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வு பெறுதல்.
- படிமத்தின் காட்சித்தன்மை தரும் இயல்புகளை அறிந்து கவிதையில் ஆளவும் கவிதையைச் சுவைக்கவும் அறிந்துகொள்ளுதல்.

## பாடப்பகுதிகள்

**மதராசப்பட்டினம்**

- தெய்வமணிமாலை – இராமலிங்க அடிகளார்
- தேவாரம் – திருஞான சம்பந்தர்
- அகநானூறு – அம்மூவனார்
- தலைக்குளம் – தோப்பில் முகமது மீரான்
- படிமம்
- திருக்குறள் – திருவள்ளுவர்

உரைநடை உலகம்

நாகரிகம் ௫

# மதராசப்பட்டினம்

**நுழையும்முன்**

தமிழ் மண்ணில் ஆற்றங்கரை நகரங்கள், கடற்கரை நகரங்கள் ஆகியவற்றைப் பற்றிய பதிவுகள் வரலாற்றின் பக்கங்களை ஆளுகின்றன. இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரமே மதராசப்பட்டினம். அது, இன்று பரபரப்பான சென்னை மாநகரமாக வளர்ந்திருக்கிறது. திட்டமிட்டு உருவாக்கப்படாத இந்நகரம் ஒரு காட்டுமரம் தன் மனம்போன போக்கில் வளர்வதுபோல வளர்ந்துள்ளது.

நகரங்கள், சமூகத்தின் பண்பாட்டுக்கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும் நிகழ்கால வாழ்விற்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் சென்னை இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும் வளர்ச்சியும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

## சென்னையின் தொன்மை

இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி, அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம். பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடரி, இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. மேலும் கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், கி.பி. (பொ. ஆ.) 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

சென்னை நகரத்தில் பழமையான கோயில்களான திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்களாக உள்ளன. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம். திருவல்லிக்கேணியில் கிடைக்கும் நந்திவர்மன் கல்வெட்டும் பல்லவர்

வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிக்கரையில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டதாக ஒரு குறிப்பு, அவரது நாட்குறிப்பில் உள்ளது. பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப. ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார். அதனை அவர்

*சென்னையிலே ஒருவாய்க்கால் புதுச்*
*சேரி நகர் வரை நீளும்.*
*அன்னதில் தோணிகள் ஓடும் – எழில்*
*அன்னம் மிதப்பது போல.*
*என்னருந் தோழரும் நானும் – ஒன்றில்*
*ஏறி யமர்ந்திட்ட பின்பு*
*சென்னையை விட்டது தோணி – பின்பு*
*தீவிரப் பட்டது வேகம்*

என்று, 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதையாக்கியிருக்கின்றார்.

ஆட்சியில் இப்பகுதி சிறந்து விளங்கியதைக் காட்டுகிறது.

சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு), நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, மாதவரம், கோயம்பேடு, தாம்பரம் போன்ற பகுதிகள் கிழக்கிந்திய நிறுவனம் கால் பதிப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே 12 – 13ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்ற கிராமங்களாக இருந்துள்ளன.

### அயலவர் குடியேற்றம்

இன்று பெருநகராக வளர்ந்துள்ள சென்னை மாநகரத்தின் உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டது. ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

கி.பி. (பொ. ஆ.) 1647இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் "தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்" என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது.

சென்னைப் பகுதியில் போர்த்துகீசியர்



மற்றும் டச்சுக்காரர்களின் வணிக வெற்றியைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் இங்கு தம் வணிகத்தைச் மேற்கொள்ளத் திட்டமிட்டனர். மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியை கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் பிரான்சிஸ் டே ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுத்தார். அன்று அப்பகுதியின் இருபுறமும் கூவம் அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அதனை அழைத்தனர். அந்த இடத்தை, விஜயநகர ஆட்சியின் உள்ளூர் ஆளுநர்களான

தெரியுமா?

### சென்னையின் நீர்நிலைகளும் வடிகால்களும்

சென்னை, வட சென்னைக்குக் கொற்றலையாறு, மத்திய சென்னைக்குக் கூவம், தென்சென்னைக்கு அடையாறு, அதற்கும் கீழே பாலாறு, இந்த நான்கு ஆறுகளையும் இணைக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாய் மற்றும் காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா என 18 பெரிய ஓடைகள், 540க்கும் மேற்பட்ட சிறிய ஓடைகள் என இயற்கையாய் அக்காலத்தில் வடிகால்களைப் பெற்றிருந்தது. மழைநீர், சிறிய ஓடைகள் வழியாகப் பெரிய ஓடைகளைச் சென்றடையும்; பெரிய ஓடைகள் ஆறுகளைச் சென்றடையும்; ஆறுகள் கடலில் சென்று சேரும். இப்படி இயற்கை கொடுத்த வடிகால்களை நாம் என்ன செய்துள்ளோம்? எண்ணிப் பார்ப்போம்!



XII Std Tamil Chap_5.indd 107 2/22/2019 1:12:51 PM

சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639ஆம் நாளில் பிரான்சிஸ் டே வாங்கினார். கிழக்கிந்திய நிறுவனத்தின் நுழைவுக்குப் பிறகு ஆங்கிலேயர்களின் வணிகத்திற்காக நகரம் சீரமைக்கப்பட்டது. கோட்டையைச் சுற்றியுள்ள ஒவ்வொரு கிராமமும் இணைக்கப்பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டது.



## நகரம் – உருவாக்கம்

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' (White's Town) என்று அழைக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' (Black's Town) என அழைக்கப்பட்டது. இவ்விரு பகுதிகளும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்த காரணத்தால், இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். அவர்களால் வண்ணாரப்பேட்டை (வண்ணத்துக்காரன்பேட்டை), சிந்தாதிரிப்பேட்டை (சின்னதறிப்பேட்டை) முதலான புதிய பகுதிகள் தோன்றின. ஏற்கெனவே இருந்த எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன. வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும் தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர். பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி, இன்று நம் சென்னையாக ஆகி இருக்கிறது.

## நகராட்சி, மாகாணம்

1646ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள்தொகை 19,000 ஆகும். இவ்வளர்ச்சியினை அறிந்தே 1688இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி செய்வதற்கு வசதியாகத் தென்னிந்தியாவின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கிச் சென்னை மாகாணத்தை உருவாக்கினர். எலி யேல் (Elihu Yale) அதன் முதல் தலைவர் ஆனார். அவரைத் தொடர்ந்து தாமஸ் பிட் (Thomas Pitt) சென்னை மாகாணத்தின் தலைவரானார். தாமஸ் பிட்டின் ஆட்சிக்காலத்தைச் சென்னையின் பொற்காலம் என்பர். இவர் பல பகுதிகளைச் சென்னையுடன் இணைத்தார். ஆங்கிலேயரின் அதிகார மையமான இந்நகரம், ஆங்கிலேயரை எதிர்த்த விடுதலை இயக்கத்தாருக்கும் முதன்மைக் களமாகத் திகழ்ந்தது.

## அறிவின் நகரம்

இன்று சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டவை. 18ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின. 1715இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும். 19ஆம் நூற்றாண்டில் பள்ளிகள் பெருகின. 1812இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி, 1837இல் தொடங்கப்பட்ட கிறித்தவக் கல்லூரி, 1840இல் உருவான பிரசிடென்சி பள்ளி (பின்னாளில் மாநிலக் கல்லூரி) போன்ற பல்வேறு

கல்வி நிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.

பல்வேறு தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் வேராக இருந்து 19ஆம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியில் பெரும்பங்காற்றிய சென்னைப் பல்கலைக்கழகம் 1857ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1914 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும். ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி. மேலும் மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக் கூடங்கள் பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின. 19ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ்ப் பெருக்கம் ஆகியவை சென்னையின் அறிவுவளர்ச்சிக்குத் துணை நின்றன. இதுவே, தமிழ்ச்சமூகம் அறிவுத்துறையில் பெரும் பாய்ச்சலை மேற்கொண்ட காலகட்டமாகும்.

**தெரிந்து தெளிவோம்**

**இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை**

இது முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது. இப்பாணியில் 1768இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனையே ஆகும். சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதி மன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை இந்திய – சாரசனிக் கட்டடக்கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.



இந்தோ – சாரசனிக் கட்டடக்கலைப் பாணியில் அமைந்த நீதி மன்றம், சென்னை.

## பண்பாட்டு அடையாளங்கள்:

சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு. அதன் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குதல் மிகக் கடினம். இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை.

ஆவணங்களை முறையாகக் கையாளும் பழக்கம்கொண்ட ஆங்கிலேயர் உருவாக்கிய 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது. இது, இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் பல இங்கே பாதுகாக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கும் பண்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும் பேருதவி புரியும் எழும்பூர் அருங்காட்சியகமும் கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பேணுபவையாகும். இந்தியாவின் முதல் பொதுநூலகமான கன்னிமாரா நூலகம் நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகமாகும். இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சென்னைக்குத் திரைப்படத்தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்கள்.

## போக்குவரத்து:

நடந்து செல்லும் பாதைகளாகவும் மாட்டுவண்டிகள் சென்றுகொண்டிருந்த பாதைகளாகவும் இருந்தவையெல்லாம் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டுச் சாலைகளாக மாறின. அண்ணாசாலைக்கு (மவுண்ட் ரோடு) அடுத்ததாக மதராசப்பட்டினத்தின் மற்றொரு முக்கியமான சாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையாகும்.

1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில்



XII Std Tamil Chap_5.indd 109 2/22/2019 1:12:53 PM

அமைக்கப்பட்டது. இராயபுரம் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம் ஆகியவை உருவாயின. சென்னை நகர வீதிகளில் டிராம் வண்டிகள் இயக்கப்பட்டன. இவ்வாறு சென்னையின் தரைவழிப் போக்குவரத்துப் பயணம் தொடர்ந்தது. 19ஆம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியடைந்த சென்னைத் துறைமுகமும் உலக நாடுகளைத் தமிழகத்துடன் இணைக்கும் பன்னாட்டு விமான நிலையமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. ஆங்கிலேயருக்கும் சென்னை மாநகருக்கும் ஏறத்தாழ 300 ஆண்டு காலமாக இருந்த உறவு, 1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் முடிவுக்கு வந்தது.

### நம் சென்னை

இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. இன்று கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னை பெரும்பங்காற்றுகிறது. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

ஒரு நகரம் உலகப் புகழ்பெறுவதற்கு, அது தொன்மைச் சிறப்புடையதாக இருக்க வேண்டும்; தொழில் வளம் மிகுதியாகப் பெற்றிருக்க வேண்டும்; சிறந்த குடிமக்களைக் கொண்டிருக்கவேண்டும்; துறைமுக வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்; ஏற்றுமதி, இறக்குமதி, வணிகம் தொடர்ந்து நடைபெற வேண்டும். இவற்றுடன் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மிளிர வேண்டும். இத்தகைய தகுதிகள் உடைய நகரமே உலகப் புகழ்பெற்ற சிறந்த நகரமாக விளங்கும். அத்தனை சிறப்புகளையும் கொண்டதாய் விளங்கி வருவதே நம் சென்னை மாநகர் எனும் மதராசப்பட்டினம் ஆகும்.

ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு. அது சிதைந்துவிடாமல் வளர்ச்சி அமைவதே முறையானது. அதிலும் சென்னை போன்ற ஒரு மாநகருக்கென்று இருக்கின்ற தனித்துவமான அமைப்பையும் வரலாற்றுத் தடங்களையும் அழியாமல் பாதுகாக்கும் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**தெரிந்து தெளிவோம்**

**சென்னை நூலகங்கள்:**

சென்னையின் பழமை, அறிவுப்புரட்சி ஆகியவற்றின் அங்கமாக விளங்கும் நூலகங்கள் ஒவ்வொன்றும் சிறப்பு வாய்ந்த பண்பாட்டுத்தளங்கள் ஆகும். அவற்றுள் சில:

**சென்னை இலக்கியச் சங்கம்:** 1812இல் கோட்டைக் கல்லூரியின் இணைவாக உருவான இந்நூலகம், அரிய பல நூல்களைக் கொண்ட இந்தியாவின் பழைய நூலகங்களில் ஒன்று.

**கன்னிமாரா நூலகம்:** 1860இல் அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்நூலகம், இந்தியாவின் முதல் பொது நூலகமாகும்.

**கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்:** காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக்கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

**அண்ணா நூற்றாண்டு நூலகம்:** 2010ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நூலகம் ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகமாகும்.

**தமிழாய்வு நூலகங்கள்:** சிறப்பு நிலையில் தமிழாய்வு நூல்களைக் கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மறைமலையடிகள் நூலகம், செம்மொழித் தமிழாய்வு நூலகம், உ. வே. சா. நூலகம் போன்றவை முக்கியமானவை.

**கற்பவை கற்றபின்...**

ஒரு திட்டமிட்ட பெருநகரம் உருவாவதற்கு நீவிர் தரும் பரிந்துரைகளை, 'கனவு நகரம்' என்னும் தலைப்பில் ஒப்படைவாக உருவாக்குக.



XII Std Tamil Chap_5.indd 110 2/22/2019 1:12:53 PM

கவிதைப்பேழை

நாகரிகம் ரு

# தெய்வமணிமாலை

– இராமலிங்க அடிகள்



நுழையும்முன்

ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் சமய ஒருமைப்பாட்டையும் ஒளி வழிபாட்டையும் முன்வைத்த சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம் சென்னை. இவ்வுண்மை நெறியை உருவாக்கி வளர்த்த வள்ளலார், சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை ஏற்படுத்தினார். அவரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது கந்தகோட்டம்.

*ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவுவேண்டும்*
*உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்*
*உறவுகல வாமைவேண்டும்*
*பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை*
*பேசா திருக்கவேண்டும்*
*பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்*
*பிடியா திருக்கவேண்டும்**
*மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்உனை*
*மறவா திருக்கவேண்டும்*
*மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற*
*வாழ்வில்நான் வாழவேண்டும்*
*தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்*
*தலமோங்கு கந்தவேளே!*
*தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே!* (8)



பா வகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்



XII Std Tamil Chap_5.indd 111 2/22/2019 1:12:54 PM

## பாடலின் பொருள்

அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணியே! அம்மணிகளுள் அருள்நிறைந்த சைவமணியே! எனக்கு ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்; உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்; பெருமை சான்ற நினது புகழையே நான் பேச வேண்டும்; பொய் பேசாதிருக்க வேண்டும்; சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும்; மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்; துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்; என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்; மதியும் நின் கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்; ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக.

## இலக்கணக் குறிப்பு

**மலரடி** – உவமைத்தொகை

**மறவா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**வளர்தலம்** – வினைத்தொகை

## உறுப்பிலக்கணம்

**நினைக்கின்ற** = **நினை + க் + கின்று + அ**
நினை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

**வைத்து** = **வை + த் + த் + உ**
வை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

**பேசுவார்** = **பேசு + வ் + ஆர்**
பேசு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

**உள்ளொன்று = உள் + ஒன்று**

விதி : 'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' – உள்ள் + ஒன்று

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – உள்ளொன்று

**ஒருமையுடன் = ஒருமை + உடன்**

விதி : 'இஈஐவழி யவ்வும்' – ஒருமை + ய் + உடன்

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஒருமையுடன்

### நூல்வெளி

பாடப்பகுதியிலுள்ள பாடல், இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்ற தெய்வமணிமாலை என்னும் பாமாலையில் உள்ளது. இப்பாடல் சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டும் தெய்வமணி மாலையின் 8ஆம் பாடல். சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவரும் பசிப்பிணி போக்கியவருமான அடிகள் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தார். சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். இம்மண்ணில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மைநெறி ஓங்கவும் உழைத்தவர் அடிகளார். வாடிய பயிரைக் கண்டபோது வாடிய அவ்வள்ளலின் பாடல்கள் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை. திருவருட்பா, ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை இவருடைய உரைநடை நூல்கள்.

### கற்பவை கற்றபின்...

தெய்வமணிமாலைப் பாடல் கருத்துகளுக்கு இணையான திருக்குறள்களைத் தொகுத்து வருக.



XII Std Tamil Chap_5.indd 112 2/22/2019 1:12:54 PM

கவிதைப்பேழை

நாகரிகம் ௫

# தேவாரம்

– திருஞானசம்பந்தர்

KE327B

நுழையும்முன்

மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு, கோவில் திருவிழா. கோவில் ஓர் ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்று. அதன் புகழைப் பறைசாற்றும் எழுச்சியே திருவிழாக்கள். அத்தகைய விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூர். இவ்வூர் சென்னை மாநகரின் ஒரு பகுதி. அங்குள்ள இறைவனுக்குக் கொண்டாடப்படும் பங்குனி உத்திர விழா அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது.

## திருமயிலாப்பூர்

*மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்*
*கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்*
*பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்*
*ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்* (7)



முத்துப்பல்லக்கில் தேவாரம் தந்த திருஞானசம்பந்தர்...
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருநெல்வேலி.

## சொல்லும் பொருளும்

மலிவிழா – விழாக்கள் நிறைந்த

மடநல்லார் – இளமை பொருந்திய பெண்கள்

கலிவிழா – எழுச்சி தரும் விழா

பலிவிழா – திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா

ஒலிவிழா – ஆரவார விழா



XII Std Tamil Chap_5.indd 113 2/22/2019 1:12:55 PM

## பாடலின் பொருள்

பூம்பாவாய்! இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை. அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும். மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறை ஆகுமா?

## இலக்கணக் குறிப்பு :

மாமயிலை – உரிச்சொற்றொடர்

## புணர்ச்சி விதி

**பூம்பாவாய்** = பூ + பாவாய்

விதி: பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் – பூம்பாவாய்

## உறுப்பிலக்கணம் :

*கண்டான்* = காண்(கண்) + ட் + ஆன்

காண் – பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

*அமர்ந்தான்* = அமர் + த்(ந்) + த் + ஆன்

அமர் – பகுதி

த் – சந்தி (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை.

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### மயிலாப்பூர் சிறப்புகள்:

1. மடலார்ந்த தெங்கின் மயிலை
2. இருளகற்றும் சோதித் தொன்மயிலை
3. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
4. கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
5. கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்
6. மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்
7. ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை

### மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள்

1. ஐப்பசி – ஓண விழா
2. கார்த்திகை – விளக்குத் திருவிழா
3. மார்கழி – திருவாதிரை விழா
4. தை – தைப்பூச விழா
5. மாசி – கடலாட்டு விழா
6. பங்குனி – பங்குனி உத்திர விழா



### நூல்வெளி

பாடப்பகுதியாக உள்ள பாடல், இரண்டாம் திருமுறையில் உள்ள திருமயிலாப்பூர் பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகள். இவர் பாடல்கள் இசைப் பாடல்களாகவே திகழ்கின்றன. இப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர். சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம் சமயக் கோட்பாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.



### கற்பவை கற்றபின்...

உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி நாளிதழ் ஒன்றின் செய்திப்பிரிவிற்கு அளிக்கும் வகையில் செய்தியாக எழுதுக.



XII Std Tamil Chap_5.indd 114 2/22/2019 1:12:55 PM

கவிதைப்பேழை

நாகரிகம் ௫

# அகநானூறு

– அம்மூவனார்

KTKW8M

**நுழையும்முன்**

மக்கள் வாழும் சூழலுக்குத் தக்கவாறு அமையக்கூடிய தன்மை உடையது தொழில். பழந்தமிழர்களின் தொழில் நிலத்தின் இயல்பைச் சார்ந்து அமைந்திருந்தது. இன்றும் கடற்கரையில் வாழும் மக்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களைச் செய்து வருகிறார்கள். பண்டைய நெய்தல் நிலமக்கள் தங்கள் வாழிடத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தித் தொழில் செய்தனர். ஆண்களும் பெண்களும் வணிகம் செய்த செய்தியைச் சங்கப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

*பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்*
*இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த*
*வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி*
*என்றூழ் விடர குன்றம் போகும்*
*கதழ்கோல் உமணர் காதல் மடமகள்*
*சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி*
*நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்*
*சேரி விலைமாறு கூறலின் மனைய*
*விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய*
*மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,*
*இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்*
*மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு*
*எவ்வந் தீர வாங்குந் தந்தை*
*கைபூண் பகட்டின் வருந்தி*
*வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே.* (140)



**திணை :** நெய்தல்

**கூற்று :** தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

### சொல்லும் பொருளும்

**வேட்டம்** – மீன் பிடித்தல்; **கழி** – உப்பங்கழி; **செறு** – வயல்; **கொள்ளை** – விலை; **என்றூழ்** – சூரியனின் வெப்பம்; **விடர்** – மலைவெடிப்பு; **கதழ்** – விரைவு; **உமணர்** – உப்பு வணிகர்; **எல்வளை** – ஒளிரும் வளையல்; **தெளிர்ப்ப** – ஒலிப்ப; **விளிஅறி** – குரல்கேட்ட; **ஞமலி** – நாய்; **வெரீஇய** – அஞ்சிய; **மதர்கயல்** – அழகிய மீன்; **புனவன்** – கானவன்; **அள்ளல்** – சேறு; **பகடு** – எருது

### பாடலின் பொருள்

பரதவர், பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுவர். நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர். அந்த வெண்ணிறக் கல்உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச்செல்வர். வண்டியில் பூட்டிய எருதுகளை விரட்டக் கையில் தாழ்கோல் வைத்திருப்பர். கோடைக் காலத்தின் வெப்பத்தால் பிளவுபட்ட குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.

அத்தகைய உமணர் ஒருவரின் மகள், அழகும் இளமையும் வாய்ந்தவள். அவள் தன் கைகளில் அணிந்திருந்த அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்து சென்றாள். அங்கு 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!' என்று கூவினாள். அவள் கூவுவதைக் கேட்டு வீட்டில் உள்ள நாய் இது வேற்றுக் குரலென்று குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன.

மருண்ட அப்பெண்ணின் கண்களை நான் அங்குக் கண்டேன். புதிதாகத் தினைப்புனம் அமைக்கும் கானவர் பழையபுனத்தைத் தீயிட்டு எரிப்பர். அப்பொழுது உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் அப்பெண்ணுடைய தந்தையின், உப்பு ஏற்றிச்செல்லும் வண்டி சிக்கிக்கொண்டது. அவ்வண்டியைச் சேற்றிலிருந்து துன்பத்துடன் மீட்க முயன்ற எருதிற்கு அவள் தந்தை



XII Std Tamil Chap_5.indd 116 2/22/2019 1:12:57 PM

உதவிசெய்தார். அந்த எருது அடைந்த துன்பம் போல, அவள் கண்களால் நான் துன்புற்றேன்.

**உள்ளுறை:** 'வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குதற்கு உரியவன்' என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான். எருதைத் தலைவனுக்கும் தந்தையைப் பாங்கனுக்கும் உப்பின் எடையால் எருது வருந்தும் நிலையைக் காதல் வருத்தத்திற்கும் உள்ளுறையாக வைத்துப் பாடல் புனையப்பட்டுள்ளது.

### இலக்கணக் குறிப்பு

**பெருங்கடல்** – பண்புத்தொகை
**உழாஅது** – செய்யுளிசை அளபெடை
**வெரீஇய** – சொல்லிசை அளபெடை

### உறுப்பிலக்கணம்

**செய்த** – செய் + த் + அ, செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்சவிகுதி

**சாற்றி** – சாற்று + இ, சாற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

**பெருங்கடல் – பெருமை + கடல்**
விதி : 'ஈறுபோதல்' - பெரு + கடல்
விதி : 'இனமிகல்' - பெருங்கடல்

**தெரியுமா?**

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளங்கியது. உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர். பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர்.

**தெரிந்து தெளிவோம்**

**உப்பங்கழி**

கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி எனப் பெயர். கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்கிறோம். ஆடை போல் படியும் இந்த உப்பைக் கூட்டிச் சேகரித்து, பக்குவப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவர்.

**நூல்வெளி**

பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. களிற்றியானைநிரையில் 120, மணிமிடை பவளத்தில் 180, நித்திலக்கோவையில் 100 எனப் பாடல்கள் உள்ளன. அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்; நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர். இவரது பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

**கற்பவை கற்றபின்...**

1. தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்கும் மகளிர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
2. பழங்காலத் தொழில்கள் குறித்துக் கருத்தரங்க உரை உருவாக்குக.



XII Std Tamil Chap_5.indd 117 2/22/2019 1:12:57 PM

# தலைக்குளம்

– தோப்பில் முகமது மீரான்

L94R9Y

**நுழையும்முன்**

மக்கட்தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, நகரமயமாதல், புலம்பெயர்வு, இளைய தலைமுறையினரின் மனப்பான்மை ஆகியவற்றின் விளைவாகக் கிராமங்கள், தங்கள் முகவரியை இழந்துவருகின்றன. கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர், நகரமாக மாறியதைப் பற்றி இச்சிறுகதை பேசுகின்றது.

தலைக்குளத்தில் ஒரு முங்கு முங்கினாலே உடம்பெல்லாம் குளிர்ச்சியால் சிலிர்த்துப் போகும். நாடிநரம்புகள் கலந்து தெறித்துவிடும் போல் இருக்கும். அவ்வளவு குளிச்சி!. சிவந்திருக்கும் கண்ணைக் கண்டாலே உம்மா கேட்பாள்.

" நீராடி தகர்த்திட்டா வாற? "

"இல்லெ," உம்மா நம்பாத ஒரு பொய்யைச் சொல்வது வழக்கம்.

"தலைக்குளத்தைக் கலக்கிட்டு வாறது உன் கண்ணிலே தெரியுதே."

தலையில் ஈரம் இல்லாவிட்டாலும், உம்மா தருகிற துண்டை வாங்கித் தலையைத் துடைக்காவிட்டால் ஏச்சு வேற.

தலைக்குளத்தின் தென்கரையில் பெண்கள் குளிப்பதற்கான கடவும் துணி துவைச்சு அடிக்கப் பரந்த கற்களும் இருக்கும். எந்நேரமும் துணிதுவைத்துக் கல்லில் அடிக்கும் சத்தமும் எழுந்து கொண்டிருக்கும்.

ஆம்பல் படர்ந்து கிடக்கும் தலைக்குளத்திற்கு அந்தப் பக்கம் கன்னியார் கோணம் ஏலா வயல்.

நாலு எருமை மாடுகளை ஒரே கயிற்றில் கட்டிச் சுற்றி விட்டு மிதித்துச் சூடு அடிப்பார்கள். எருமை மாடுகள் சுற்றி வருவது பார்க்க ரசனையாக இருக்கும்.

சூடு அடித்து முடிந்த ஈர வைக்கோலைக் கயிற்றில் கட்டி இழுத்துவந்து பாவாத்து மணலில் காயப்போடுவதற்காகத் தூற்றும்போது, களத்தில் பச்சைநெல், மணம் கமழும்.

தலைக்குளத்திலிருந்தும் கன்னியார் கோணம் ஏலாவிலிருந்தும் ஈரம் நக்கி எடுத்துவரும் காற்று சுகமாகவே இருக்கும். அந்தக் காற்றுக்காகத்தான் இப்போது இந்த கான்கிரீட் சுள்ளைக்குள்ளிலிருந்து ஏங்குவது. ஃபேன் இருந்தென்ன, ஏ.சி. இருந்தென்ன! ஊரை விட்டு வயிற்றுப்பிழைப்பிற்காக இந்த நகரத்தில் வந்து கூடு கட்டி வருடங்கள் முப்பது கடந்தன.

தலைக்குளத்திலிருந்து வீடு சற்றுத் தொலைவில். வேனில் காலங்களில் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் வற்றுவதே இல்லை. இறைக்க இறைக்கப் பொங்கும். முக்காலே மூண்டானி கிணற்றிலும் தண்ணீர் அடி பற்றி இருக்கும். சில கிணறுகள் வறண்டு போய் இருக்கும். அவர்களுக்கெல்லாம் எங்கள் வீட்டுக் கிணற்றைப் பார்த்துப் பொறாமை. உங்க வீட்டுக் கிணற்றுக்குத் தலைக்குளத்து ஊற்று என்பார்கள். இது கேட்கும் போது அந்தக் குசும்புக்காரிகள் மீது உம்மாவுக்கு வேசாடையாக இருக்கும். தலைக்குளத்து ஊற்று என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. மழைக்காலங்களில் தலைக்குளத்துத் தண்ணீர், கலங்கலாக இருக்கும் போது எங்க வீட்டுக் கிணற்றுத் தண்ணீரும் கலங்கலாகத்தான் இருக்கும். ஆனால், ருசி குறைவாக இருக்காது. இன்று மினரல் வாட்டர் கேன் வாங்கித் தாங்கல.

"ஊரில் பழைய ஒரு ஓட்டு வீடும், சுத்தத் தண்ணீர் கிடைக்கும் கிணறும் சும்மா கிடக்குடா, அங்கு போய்த் தங்குவோம்" என்று பிள்ளைகளிடத்தில் சொன்னால் சீறுவார்கள்.

"ஆமாம். அங்க ஆரு இருக்கியா ? எங்களுக்கு அங்கு ஆரெத் தெரியும். இந்த மினரல் வாட்டரைவிட மேலா உங்க கிணற்றுத் தண்ணீர் ?"



XII Std Tamil Chap_5.indd 118 2/22/2019 1:12:57 PM



**தெரிந்து தெளிவோம்**

| | |
|---|---|
| உம்மா | அம்மா |
| வாப்பா | அப்பா |
| ஏச்சு | திட்டுதல் |
| கடவு | படித்துறை |
| கன்னியார் கோணம் | ஒரு வயற்காட்டின் பெயர் |
| பாவாத்து | துணி நெய்ய வேண்டிய நூலுக்குப் பசை கொடுப்பது |
| சுள்ளைக்கு உள்ளிருந்து | (செங்கல்) நெருப்புச் சுள்ளைக்கு உள்ளிருந்து |
| அடிபற்றி இருக்கும் | அடித்தரை தெரியும்படி இருக்கும் |
| வேசாடையாக | சற்றுக் கோபமாக |
| அமானிதம் | பாதுகாக்கப்பட வேண்டிய விசயம் |
| ஏலாவிலிருந்து | பெரிய வயலில் இருந்து |
| முக்கால் மூண்டானி | ஒரு அளவு |
| புன்ன மூட்டடி | புன்னை மரத்தின் நிழல் |

"நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்."

"அத வித்துத் தள்ளுங்க வாப்பா. இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆரு தங்குவா?"

மக்களும் கட்டினவளும் விலா எலும்புகளை நெருக்கி நொறுக்கின வலி தாங்காமல்தான், நகரத்தில் இப்போது குடியிருக்கிற வீடு எழுந்தது.

தலைக்குளத்தின் கதைகள், கன்னியார்கோண ஏலாவைப் பற்றிய கதைகள், ஞானியார் நீரோடை, புன்னமூட்டடி, இதைப் பற்றியெல்லாம் தெரிய, அவர்களுக்கு ஆர்வம் இல்லை. டீவி. கார்ட்டூன் அல்லது கம்ப்யூட்டர் கேம்ஸில்.

தலைக்குளத்தில் தலைப்பாகை கட்டிய ஒரு மனிதத்தலை வெள்ளி இரவுகளில் குளத்தங்கரை வழியாகச் செல்வோருக்குச் சலாம் சொல்லும் அற்புதக்கதை அவர்களுக்கு வேண்டாம்.

உப்பா சொல்லித் தந்த இந்த அமானிதத்தைப் பேரப்பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாமென்றால், என்கிட்ட வரமாட்டார்கள். வந்தாலும் சொல்ல முடியாதபடி மொழி, பெரும் எதிரியாகிவிட்டது. மொழி இப்போது தலைமுறைகளை வெட்டி விலக்குகின்ற வாளாக மாறிப் போனதுதான் விந்தை.



XII Std Tamil Chap_5.indd 119 2/22/2019 1:12:57 PM

தார் உருகும் சூட்டில் மொட்டைமாடி வெக்கை இறங்கிக் கண்கள் எரியும்போது, அன்றைய அந்த வயல் காற்றின் சலசலப்பையெல்லாம் நினைக்காமல் இருக்க முடியவில்லை. கிராமத்து இயற்கையை ரசிக்கத் தெரியாத தலைமுறை !

ஊரில் போய் நின்று தரகர்களைப் பார்த்து வீட்டை விற்க ஏற்பாடு செய்ய நேரம் வாய்க்காத கால நெருக்கடி. உறவுகள் அற்றுப்போன தற்காலத்தில் உதவுவதற்கு யாருமே இல்லை. அதனால்தான் பத்திரிகையில் எல்லோர் பார்வையிலும் படும்படி விளம்பரம் கொடுக்க யோசனை சொன்னது மூத்த மகன்.

ஓடு வேய்ந்த நாலு கட்டு வீடு, ஈட்டி மரம், எந்த வறட்சியிலும் வற்றாத கிணறு, ருசி மிகுந்த தண்ணீர், பக்கத்தில் எப்பவும் தண்ணீர் ஓடும் வாய்க்கால், மூத்த மகன் எழுதிய வாசகம் அப்படியே வெளி வந்தது பத்திரிகையில்.

இரண்டாவது நாள் வீடு தேடி வந்தவர் நாகரிகமானவராகக் காணப்பட்டார். "விளம்பரம் பார்த்தேன்"

"சார் என்ன தொழில்?"

"ரிட்டையர்டு ஜட்ஜ். நகர வாழ்க்கை அலுத்துப் போச்சு. ஏதாவது கிராமப்புறங்களில் தங்கலாமென நினைக்கிறேன்."

"எனக்குந்தான். பிள்ளைகளுக்கு நகர் வாழ்க்கைதான் பிடிக்கும். அதனால்தான் வீட்டை விற்க முடிவு பன்னினேன்."

"வீட்டைப் பார்க்கலாமா?"

"பார்க்கலாம். பழைய நாலு கட்டு வீடு. கொல்லம் ஓடு, கிணறு உண்டு. எந்த வறட்சியிலும் வற்றாத கிணறு.

"அதுதான் வேணும்."

"நூறு கிலோமீட்டர் போகனும் சார்."

பயணத்தின்போதே தலைக்குளத்தைப் பற்றி, புன்னமூட்டடி குளிர்ச்சியைப் பற்றி, காற்றில் புன்னப்பூ மணம் வந்து கொண்டிருப்பதைப் பற்றி, அரச குளத்தங்கரையில் வளர்ந்து நிற்கும் தாழை படர்ப்பில் தாழம்பூ மலர்ந்து தொங்கிக் கிடப்பதைப் பற்றி, அந்தப் பகுதியில் தாழம்பூ வாசம் வீசுவதைப் பற்றி, எல்லாம் கேட்கக் கேட்க அவருக்குப் போதை ஏறிக்கொண்டே இருந்தது. இராக்காலங்களில் பறவைகளின் சலம்பல், இரா நிசப்தத்தில் இனிய பாடலாக ஒலிக்கும் என்று சொன்னபோது

"அப்படியா?"

என் தோளை மகிழ்ச்சிப் பெருக்கால் பிடித்துக் குலுக்கினார்.

ஊர் நெருங்கிவிட்டது. வீட்டிற்குச் செல்லும் வழியிலிருந்து இடது பக்கமாகச் செல்லும் ஊடுவழி முடியும் இடத்தில்தான் தலைக்குளம், புன்னமூட்டடி, கன்னியார் கோணம் ஏலா, அரசகுளம் !

ஏலாவிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கொல்ல மாந்தோப்பு, ஒருவேளை நகரமாக மாறியிருக்கலாம். பூட்டப்பட்டுக் கிடந்த வீட்டைத் திறந்து காட்டினேன். வெகுகாலமாகப் பூட்டப்பட்டுக் கிடந்ததால் குடியேறியிருந்த வௌவால்கள் எங்கள் தலைக்கு மேல் பறந்து வெளியேறின. பழைமை வாடை முகத்தைத் துளைத்தது. சற்று அருவருப்பாக இருந்தது, எனக்கும் சாருக்கும். கர்ச்சிப்பை எடுத்து சார் மூக்கைப் பொத்திக் கொண்டார்.

நாலு கட்டு அமைப்பு சாருக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சு.

"கிணறு...

"பின்னாடி."

பின்வாசலைத் திறந்த போது தொலைவில் மலை முகடு தெரிந்தது.

"எந்த மலை?" சார் கேட்டார்.

"மேற்குத் தொடர்ச்சி மலை".

சார், மலைமுகட்டை முட்டிச் செல்லும் வெண்மேகங்களை ரசித்தார்.

சார், இயற்கை நேசன் போல் தெரிகிறது.

முன்பு மலை தெரியும். இரவு நேரங்களில் மலையில் தீப்பிடிச்சு எரிவதும் தெரியும். இப்போது சில மாடிவீடுகள் வந்து மலையை மறைத்துக் கொண்டது."

"பரவாயில்லை. மலை முகடாவது தெரியுதே,"

சாருக்கு வீடு கொடுத்தது மாதிரிதான். நாலு கட்டு நடுமுற்றம் அவரை ரொம்பவும் கவர்ந்தது. வீட்டுக்குள் உள்ள வானவெளியைப் பார்த்து சார் ஆச்சரியப்பட்டார். "ஆஹா எவ்வளவு அழகு."

மொத்தத்தில் சாருக்கு எல்லாம் பிடித்துவிட்டிருந்தது. நல்ல விலை கிடைக்கலாம். குதூகலிப்புடன் பின்வாசல் வழியாகக் கிணற்றடிக்குக் கூட்டிச்சென்றேன். என்னை முந்திக்கொண்டு ஆர்வத்தோடு கிணற்றை சாரே எட்டிப் பார்த்தார். ஆசை எரிந்து சாம்பலாகிப்



XII Std Tamil Chap_5.indd 120 2/22/2019 1:12:57 PM

போன அவருடைய முகத்திலிருந்து வழியை எடுத்து, கிணற்றுக்குள் கண்ணைவிட்டேன். தட்டையான கிணறு ஆனதால், வறண்ட கிணற்றுக்குள் தரை வெடிப்புகள் பகல் வெளிச்சத்தில் கண்களுக்குத் தெளிவாயின. கிணற்றுக்கல் இடுக்குகளில் காட்டுச் செடிகள் முளைத்திருந்தன.

"நீங்க ஊருக்கு வாரீகளா?" முகக்களிப்பு இழந்தவாறு காரில் உட்காந்துகொண்டு சார் கூப்பிட்டார்.

"நான் பஸ்ஸில் வரேன்" சொல்லி முடிக்கும்முன் கார் புறப்பட்டது.

ஆசைகெட்டு, மனம் இடித்துபோய் நின்ற என் சிரத்தில் அக்கினி ஆறு ஓடிக்கொண்டிருந்தது. சூட்டைத் தணிக்கத் தலைக்குளத்தில் நீந்திக் குளிக்க உள்ளூர ஆசை.

நடந்தேன்.

குளம் கிடந்திருந்த இடத்தை நெருங்கினதும் கண்ணில் பளிச்சிட்டது. "சப்ராஸ்!"

தலைக்குளத்தின் நினைவாக அதன் மேல் எழுப்பப்பட்டிருந்த இருமாடிக் கட்டிடம், புன்னமூட்டடி, கன்னியார்கோணம் ஏலா, அரசகுளம் எல்லாம் இப்போது அழகழகான குடியிருப்புகள். தெருவோரங்களில் நீர் வராத குழாய்கள் அங்குள்ள தண்ணீரின் நினைவாக! தாகம் வந்தபோது நகர் மூலையில் கண்ட பெட்டிக் கடையிலிருந்து ஒரு பாட்டில் பிஸ்லேரி வாட்டர் வாங்கினேன்.

### வட்டார வழக்கு

தமிழ்மொழி ஒன்றேயாயினும் வட்டாரங்களுக்கென்று சிறப்பான தனி மொழிவழக்குகள் இருக்கின்றன. சென்னைத்தமிழ், கோவைத்தமிழ், நெல்லைத்தமிழ், மதுரைத்தமிழ், குமரித்தமிழ், என்றெல்லாம் வேறுபட்டுத் தமிழ் வழங்குகின்றது. அந்தந்தப் பகுதிகளுக்கென்று தனித் தொனிகளும் வாஞ்சைகளும், விளிப்புகளும் இருக்கின்றன. அவ்வவ் வட்டாரங்களின் பழக்கவழக்கங்கள், தொழில்கள், பழமொழிகள், சடங்குகள் சார்ந்தும் சொல் மாறுபாடுகள் இருக்கின்றன. இவை பேச்சு வழக்கில் இருப்பது வட்டார அடையாளமாகவும் இருக்கிறது. இவ்வட்டார வழக்குகள் படைப்பிலக்கியங்களில் இடம்பெறுகிறபோது,தமிழின் அழகு கூடுகிறது. தமிழ்ச் சிறுகதைகளிலும் புதினங்களிலும் வட்டார மொழி இடம்பெற்று வட்டாரச் சிறுகதை, வட்டாரப் புதினம் என்று பகுத்துப் பேசக்கூடிய நிலை ஏற்பட்டது. வட்டார இலக்கியம் என்ற பகுப்பும் உருவாயிற்று. புதுமைப்பித்தன் நெல்லைத் தமிழிலும், சண்முகசுந்தரம் கோவைத்தமிழிலும், ஜெயகாந்தன் சென்னை வட்டாரத் தமிழிலும், தி.ஜானகிராமன் தஞ்சைத் தமிழிலும், தோப்பில் முகமது மீரான் குமரித் தமிழிலும் எழுதிப் புகழ்பெற்றனர். கி.ராஜநாராயணன் கோவில்பட்டி வட்டாரத் தமிழைப் பயன்படுத்திப் படைத்தார். தம்முடைய வட்டார எழுத்திற்கு அவர் "கரிசல் இலக்கியம்" என்று பெயரிட்டார். இவர்களைத் தொடர்ந்து பலர் இவ்வகையில் வட்டார இலக்கியங்களைப் படைத்து வருகிறார்கள். சிறுகதைகள் வட்டாரம் சார்ந்து தொகுக்கப்பட்டுத் "தஞ்சைக் கதைகள்" என்பது போன்று வெளியீடு பெறுகின்றன.

### நூல்வெளி

**தோப்பில் முகமது மீரான்** எழுதிய **'ஒரு குட்டித் தீவின் வரைபடம்'** என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதை இது. தோப்பில் முகமது மீரான் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணம் எனும் சிற்றூரில் 1944இல் பிறந்தார். இவர் தமிழிலும், மலையாளத்திலும் படைப்பவர். புதினம், சிறுகதை எனும் பல்வேறு இலக்கியத் தளங்களில் இயங்கி வருபவர். இவர் எழுதிய **'சாய்வு நாற்காலி'** எனும் புதினம் 1997இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது. **துறைமுகம், கூனன் தோப்பு** ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருது பெற்றுள்ளன.

### கற்பவை கற்றபின்...

1. நீங்கள் இருக்கும் ஊரைச் சிறப்புடன் வாழ ஏற்றதாய் மாற்ற மேற்கொள்ளும் வழிமுறைகளைத் தொகுக்க.
2. கடந்த முப்பது ஆண்டுகளாக உங்கள் குடும்பம் வாழ்ந்த வீட்டினைப் பற்றியும் சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றியும் பெரியோர்களிடம் அறிந்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.



XII Std Tamil Chap_5.indd 121 2/22/2019 1:12:58 PM

M3WKAY

# படிமம்

படிமம் (Image) என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம். காட்சித்தன்மை கொண்ட ஒன்றை அப்படியே காணும் வகையில் வெளியிடுவதன் மூலம் தெளிவை ஏற்படுத்தலாம்; ஓவிய அனுபவத்தைத் தரலாம்; புதிய முறையில் தோற்றக் கூறுகளை எடுத்துக்காட்டலாம். கருத்துத் தன்மையுள்ள ஒன்றுக்கு ஒப்பீட்டைக் காட்டிக் காட்சித்தன்மை தரலாம்; கருத்துகளைப் புரிய வைக்கலாம். காட்சிக்குத் தெளிவு தருவதும் கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகள். படிமத்தை உருவாக்க உவமை, உருவகம், சொல்லும்முறை போன்றவை பயன்படுகின்றன.

***வெயில் மழைக்குச்***
***சொரணையற்ற எருமை***
***குத்திட்ட பாறையாக***
***நதிநீரில் கிடக்கும்.***

*(தேவதேவன்)*

எருமையின் சுரணையற்ற தன்மையைப் பாறையின் ஒப்பீட்டால் படிமப்படுத்துகிறார் கவிஞர். இது, ஒரு காட்சியைப் படிமப்படுத்திய கவிதை.

***கத்தல்களின் நெருக்கடியில்***
***தத்துவங்கள்***
***குழந்தைகள் போல்***
***அடிக்கடி தொலைந்துபோகும்***

*(ஆ.வே. முனுசாமி)*

குழந்தைகள் தொலைந்துபோதல் என்பது காட்சியாக நாம் கண்ட அனுபவம். கூச்சல்களுக்கிடையில் நல்ல தத்துவங்கள் தெரியாமல் போய்விடுகின்றன என்ற கருத்தை உணர்த்துவதற்கு மேற்கண்ட உவமை பயன்படுகிறது. இங்கு உவமை, படிமம் அமைக்க உதவுகிறது. இது ஒரு கருத்தைப் படிமப்படுத்திய கவிதை.

சங்க இலக்கியப் பாடல்களில் பல உவமைகள் படிமங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

***"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்***
***தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்***
***கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்***
***நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்***

*( சிறுபாண். 146–149 )*

நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஒய்மா நாட்டின்கண் உள்ள எயிற்பட்டினமானது அக்காலத்தே சிறப்புற்று விளங்கியது. அவ்வூர்க் கடற்கரையின்கண் தாழை மலர் அன்னம் போன்று மலர்ந்திருக்கும்; காண்பவர் பொன்னோ என்று மருளச் செய்யும் செருந்தி மலர் செறிவாய்த் தோன்றும்; நீலமணியோ எனக் கழிமுள்ளிப்பூ ஒளியுடன் நிறைந்து காணும்; முத்துகள் ஒத்த அரும்புகளை உடைய புன்னை மரங்கள் செழித்து ஓங்கிக் காட்சிதரும்.

இங்குத் தாழைமலர் அன்னம்போலவும் செருந்திமலர் பொன்னைப் போலவும் முள்ளிமலர் நீலமணியைப் போலவும் புன்னை மரத்தில் அரும்புகள் முத்துகளைப் போலவும் இருப்பதாகக் காட்சிப்படுத்துவதால் இப்பாடல் படிமமாகிறது.

இதுபோன்று சங்கப்பாடல்களில் உவமைகள், உள்ளுறை உவமைகள் தோறும் படிமங்களின் மிகுதியைக் காண முடியும்.

படிமம் உவமையிலும் அமையும்; உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும். உவமை கருத்துத் தன்மையாலும் அமையும். ஆனால் படிமம் காட்சித் தன்மையால் மட்டுமே அமையும். படிமத்தை அழகுபடுத்த மட்டுமே பயன்படுத்துவது கூடாது. கருத்தையோ உணர்ச்சியையோ ஆழப்படுத்தவும் படிமம் பயன்பட வேண்டும்.

***"மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது"***

*(ந.பிச்சமூர்த்தி)*

மாந்தோப்பு, பருவகாலத்தின் அழகுதோன்ற இருப்பதை இப்படிமம் உணர்த்துகிறது.



XII Std Tamil Chap_5.indd 122 2/22/2019 1:12:58 PM

பூக்களும் தளிர்களுமாகப் பட்டாடையை மரம் போர்த்தியிருப்பதாகக் காட்டி அதைப் பெண்ணாகக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை. உவமை உருவகமின்றிப் பட்டாடை உடுத்திய பெண்ணின் தோற்றத்தை, அல்லது பூத்திருக்கும் மரத்தின் தோற்றத்தோடு இணைக்கிறது. உள்ளார்ந்த ஒப்பீடு இதில் இருக்கிறது.

உவமை, உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பர். எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்கும் ஓர் உத்தியாகவே பயன்படுத்தப்படுகிறது.

## வினைப்படிமம்

*கட்டில் நிணக்கும் இழிசினன் கையது*
*போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;*
*ஊர்கொள வந்த பொருநனொடு*
*ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!*

*( புறம். 82 : 4 – 7 )*

"கட்டிலைப் பின்னுகின்ற ஒருவனின் கை ஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ, அவ்வளவு விரைவானது, ஊரைக் கைப்பற்ற எண்ணி வந்த வீரனுடன், இந்நெடுந்தகை நடத்திய பெரும்போர்", என வினையைக் காட்சிப்படுத்துகிறது இப்பாடல்.

*"காலை இளம் வெயில்*
*நன்றாக மேய*
*தும்பறுத்துத்*
*துள்ளிவரும்*
*புதுவெயில்"*

*(கல்யாண்ஜி)*

இணைத்துக் கட்டப்பட்ட தும்பிலிருந்து அறுத்துக்கொண்டு கன்று துள்ளிக் குதித்தல்" என்பது எல்லோரும் அறிந்த ஒரு காட்சியாகும். இக்காட்சியைக் கொண்டு காலை இளம் வெயிலின் அழகை, கன்றின் செயலோடு ஒப்பிட்டுப் படிமப்படுத்துகிறது இக்கவிதை.

## பயன் படிமம்

*நோம்என் நெஞ்சே ! நோம்என் நெஞ்சே !*
*புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்*
*கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு*
*இனிய செய்தநம் காதலர்*
*இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே !*

*(குறுந். 202 )*

இனியசெய்தல், இன்னா செய்தல் என்ற பயன்களை (இனிய) நெருஞ்சிப்பூ, (இன்னா) முள் என்ற காட்சிப்பொருள்களால் படிமப்படுத்தியுள்ளது இக்கவிதை.

## மெய்ப்படிமம்

*யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை*
*குன்றுபுக பாம்பின் தோன்றும்*

*( அகம். 391 : 11–12 )*

மதங்கொண்ட யானையானது தன் வாய்க்குள் பெரிய துதிக்கையின் மூலம் உணவை வைக்கிறது. யானையின் வாய் மலைக்குகையின் வாயினைப் போல உள்ளதாகவும், உணவை எடுத்துச்செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல உள்ளதாகவும் வடிவத்தைக் காட்சிப்படுத்தியமை இங்குப் படிமமாகிறது.

*"கோவைப்பழ மூக்கும்*
*பாசிமணிக் கண்ணும்*
*சிவப்புக்கோட்டுக் கழுத்தும்*
*வேப்பிலை வாலும்"*

*(ந.பிச்சமூர்த்தி)*



தெரியுமா?

### உவமையும் படிமமும்

தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறினார். காட்சி தருகிற உவமைகள், காட்சி தரா வெறும் உவமைகள் என இரு பிரிவாக உவமைகளைப் பிரிக்கலாம். சங்க இலக்கியப் பாடல்களில் பெரும்பாலும் உவமைகளின் வழியே சொல்லவந்த கருத்தை மேலும் அழகுபடக் கூறுவர். சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் காட்சி தரும் உவமைகளையே ஆண்டுள்ளன. படிமம் என்பது உவமையினாலும் அமைவது. படிமம், காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது. அந்த வகையில் உவமைக் கோட்பாடு, படிமத்திற்குத் தோற்றுவாயாக இருக்கிறது. படிமச் சிந்தனை, இவ்வகையில் நம்மிடம் இருந்த ஒன்றுதான்; புதியதாக மேலை நாட்டிலிருந்து பெற்றுக் கொண்டதன்று.



XII Std Tamil Chap_5.indd 123 2/22/2019 1:12:58 PM

இதில் கோவைப்பழம் போன்ற மூக்கும், பாசிமணி போன்ற கண்ணும், சிவப்பு நிறத்தில் வளைந்த கழுத்தும், வேப்பிலை போன்ற வாலும் உள்ளதாக வடிவப்படிமம் அமைந்துள்ளது.

### உரு(நிறம்)ப் படிமம்

பொருள்தேடி வரப் பிரிந்த தலைவன் சொல்லிச் சென்ற காலம் வந்தது. தலைவன் வரவில்லை. அந்நிலையில் மாலை வேளையில் தலைவி படும் துன்பமிகுதியைத் தலைமகனுக்குத் தோழி கூறுகிறாள். உலைக்களத்திலே நன்றாக வெந்து, பின் மெல்ல மெல்ல ஆறிக் கொண்டிருக்கும் பொன்னின் நிறம் போல், அந்தி வானம் விளங்கிய காட்சியை

*"வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப" ( அகம். 71 : 6 )*

என்று இப்பாடல் உருப்படிமமாக அமைத்துள்ளது.

நாம் விரும்பிய (அ) சிந்தித்த ஏதாவது ஒரு கருத்து வடிவத்திற்கு விளக்கம் தருவதற்காகவும் புலன்களின் உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும் செய்யப்படும் மனத்தின் மொழிபெயர்ப்பே படிமமாகும். படிமங்கள் பொருள் வளம் மிக்கன; கருத்துச் செழிப்புடையன. பாடலின் மொத்தப் பொருளையும் சிறப்புச் செய்வன. இவ்வாறு இலக்கியங்களில் காட்சிகளையும் கருத்துகளையும் உண்மைகளையும் உணர்வுகளையும் வெளிக்கொணரும் கருவியாகப் படிமம் ஆளப்படுகிறது.



**கற்பவை கற்றபின்...**

1. இரவும் பகலும்
எதிரெதிர் மோதிட
உடைந்த பகலின் துண்டுகள். – இக்கவிதையில் படிம உத்தி பயன்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுக.

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1) படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

2) 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் _ _ _ _ _ _ _ _ _ பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

3) கூற்று : உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

4) மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு... ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது...
இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்... ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப...

5) "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?



XII Std Tamil Chap_5.indd 124 2/22/2019 1:12:58 PM

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் –

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ – அனைத்தும்

2) கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் சரி

3) பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | – | 1) மாவலிபுரச் செலவு |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | – | 2) கல் கோடரி |
| இ) பல்லாவரம் | – | 3) அருங்காட்சியகம் |
| ஈ) எழும்பூர் | - | 4) கூவம் |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

4) 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

5) 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**குறுவினா**

1) கலிவிழா, ஒளிவிழா – விளக்கம் தருக.
2) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
3) 'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே' – தொடருக்குப் பதவுரை எழுதுக.
4) 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

**சிறுவினா**

1) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
2) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
3) பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.
4) 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

**நெடுவினா**

1) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
2) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.
3) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?



XII Std Tamil Chap_5.indd 125 2/22/2019 1:12:58 PM

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



சோமசுந்தர பாரதியார்
(1879 – 1959)

ஒருமுறை எட்டயபுரம் அரண்மனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் வந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். அக்கூட்டத்திற்கு இரண்டு நண்பர்கள் சென்றிருந்தனர். பலரும் பாடல் இயற்றிக் கொடுக்க அனைத்துப் பாடல்களிலும் நண்பர்கள் இருவரின் பாடல்களே சிறந்ததெனத் தேர்ந்தெடுத்த அப்புலவர், இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தார். அவ்விருவரில் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார், மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்.

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமைகொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு வ. உ. சி. யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ. உ. சி. பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். இவர் தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார். இவர் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடுகொண்டு சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார். வ. உ. சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத்தகுந்தது. அவருடைய தீந்தமிழுக்குச் சான்று.

"கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ்சொற்களும் பொருள் பல குறித்து மருளவைக்கும் பொதுச்சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும் தெளிவும் எழுத்திலும் பேச்சிலும் எம்மொழி நடைக்கும் இனிமையும் எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு".

**(நாவலர் சோமசுந்தர பாரதியின் நூற்தொகுதி *4* – 'நற்றமிழ்' என்னும் கட்டுரையிலிருந்து.)**

### தமிழாக்கம் தருக

*Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.*

### இலக்கிய நயம் பாராட்டுக

*பிறப்பினால் எவர்க்கும் – உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் – நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே – உலகம்*
*நாடும் மேற்குலத்தார் !*
*தின்மை செய்பவரே – அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார் !*

–கவிமணி தேசிக விநாயகம்

## பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

எ.கா. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.

இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்

1. நிலத்தக் கெளறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
2. அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
3. வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
4. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
5. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

## வெட்டியும் ஒட்டியும் பேசுதல்

கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா?

## மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக



உள்நாட்டுச் சந்தைக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் சிறு வணிகர் கூட்டம். 17ஆம் நூற்றாண்டு, சிதம்பரம்.

## ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க

எ. கா.

| | | | | |
|---|---|---|---|---|
| பூட்டிய<br>வீட்டிலும்<br>பூத்துச் சிரிக்கிறது<br>முல்லை | 1. விழும்<br>மரங்கள்<br>அழியும் காடு<br>_ _ _ _ _ _ _ _ _ | 2. அப்படியென்ன<br>சொல்லியது காற்று<br>குதித்தாடுகிறது மேகம்<br>_ _ _ _ _ _ _ _ _ _ | 3. பூத்த<br>மலரொன்று<br>பறக்கிறது<br>_ _ _ _ _ _ _ | 4. வானம்<br>அழுகிறது<br>பூமி சிரிக்கிறது<br>_ _ _ _ _ _ _ _ _ |

## கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

**கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.**

*சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்துகொண்டிருந்தது.*

## செய்து கற்போம்

*நீங்கள் அறிந்த ஊர்களின் பெயர்க்காரணங்களைத் தொகுத்து ஒப்படைவு உருவாக்குக.*

## நிற்க அதற்குத் தக

**[ஆளுமைத்திறன் என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியல் நடத்தை, உணர்வு, சிந்தனை ஆகியவற்றைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனைகள், அடிப்படை ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய அனைத்துமே ஆளுமைப் பண்புகளுள் அடங்கும்]**

* *இமயா இருசக்கர வாகனம் ஓட்டப் பழகுகிறாள். ஓட்டுகையில் இடையில் தடுமாறிக் கீழே விழுகிறாள். கற்றுக்கொடுக்கும் அவளுடைய அண்ணன், 'உன்னால் இருசக்கர வாகனம் ஓட்ட இயலாது' என்கிறான். நீங்கள் இமயாவாக இருந்தால் என்ன சொல்வீர்கள்?*
* *பள்ளி ஆண்டுவிழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினருக்கு நன்றியுரை நிகழ்த்த ஆசிரியர் அழைக்கின்றார். அந்நிலையில் நீவிர் என்ன செய்வீர்?*

## படிப்போம் பயன்படுத்துவோம் (நீதி மன்றம்)

*Affidavit* – ஆணை உறுதி ஆவணம்

*Allegation* – சாட்டுரை

*Conviction* – தண்டனை

*Jurisdiction* – அதிகார எல்லை

*Plaintiff* – வாதி

## அறிவை விரிவு செய்

- ஒரு குட்டித்தீவின் வரைபடம் (சிறுகதைத் தொகுப்பு) – தோப்பில் முகமது மீரான்
- ஒரு பார்வையில் சென்னை நகரம் – அசோகமித்திரன்
- சென்னைப் பட்டணம் – ராமச்சந்திர வைத்தியநாத்
- இராமலிங்க அடிகள் வரலாறு – ஊரன் அடிகள்

## இணையத்தில் காண்க

https://ta.wikipedia.org/s/9xz ( சென்னை வரலாறு)
https://ta.wikipedia.org/s/3kf ( சென்னை மாகாணம் வரலாறு)
http://sangacholai.in/akam10.html ( சங்க இலக்கியங்கள்)
http://www.tamilvu.org/library/l1270/html/l1270ind.htm ( அகநானூறு – 140)
https://thoppilmeeran.wordpress.com/ ( தோப்பில் முகமது மீரான்)



XII Std Tamil Chap_5.indd 128 2/22/2019 1:12:59 PM

இயல் 6

# சிறுகை அளாவிய கூழ்

*கலை, அழகியல், புதுமைகள்*



## கற்றல் நோக்கங்கள்

- திரைக்கலையின் நுட்பங்களையும் கலை வெளிப்பாடுகளையும் அறியும் திறன் பெறுதல்.
- மெய்ப்பாடுகளை வகைப்படுத்தி அறியவும் படைப்புகளில் காணப்படும் அவற்றைச் சுவைக்கவும் ஏற்ற இடங்களில் வெளிப்படுத்தவும் திறன் பெறுதல்.
- சிலப்பதிகாரம் காட்டும் அரங்க அமைப்பு, நடனம், இசைக் கலைகள் ஆகியவை குறித்த நுட்பங்களை அறிந்து பெருமிதம் கொள்ளுதல்.
- நிகழ்வுகளை உயிரோட்டத்துடன் மொழிவழி வெளிப்படுத்தும் ஆற்றல் அடைதல்.
- காப்பிய இலக்கணம் பயின்று காப்பிய நயங்கள் குறித்துப் பேசும் திறன் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- திரைமொழி
- கவிதைகள் – நகுலன்
- சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்
- மெய்ப்பாட்டியல் – தொல்காப்பியர்
- நடிகர் திலகம் – பாலச்சந்திரன் சுள்ளிக்காடு
- காப்பிய இலக்கணம்



XII Std Tamil Chap_06.indd 129 2/22/2019 1:41:47 PM

உரைநடை உலகம்

கலை

சா

# திரைமொழி

ND89DA




கனவு கண்டு கொண்டே கனவுக்குள் இருப்பது போல நம்மைச் சூழ்ந்த பெருங்கனவே திரைப்படம். இதன் அழகியலும் அனுபவமும் ஈர்ப்பும் இயல்பும் எழிலும் ஏற்றமும் காட்சி மொழியாக கவினுறு கலையாக எப்படி உருவாகின்றன? கதை எழுதி, திரைக்கதை எழுதி, வசனம் எழுதி, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, இசை சேர்த்து, பெரும் முதலீட்டில் உருவாகும் திட்டமிட்ட கூட்டுமுயற்சியே திரைப்படம். மொழிக்கு இருப்பது போல் நிறுத்தக்குறிகள், அசைகள், அமைப்புகள், உத்திகள் என எல்லாமும் இதன் காட்சி மொழிக்கும் உண்டு. அம் மொழியைப் புரிந்துகொள்வதும் உள்வாங்குவதும் சுவைப்பதும் ஒன்றுவதும் ஒரே நேரத்தில் நிகழ வேண்டும்தானே!

*1895ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் மாலை 5 மணி, பிரான்சின் தலைநகரான பாரீசில் கிராண்ட் கபே விடுதி முன் பெருங்கூட்டம், கொட்டும் மழையிலும் குடை பிடித்துக் காத்துக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அன்று காலை நாளிதழில் வந்த ஒரு சிறிய விளம்பரம். 'அதிசயம் பிறக்கிறது' என்ற தலைப்போடு வந்திருந்தது அந்த விளம்பரம். புதிய கலையான திரைப்படத்தை அப்படிச் சொல்லித்தான் அவ்விளம்பரம் அனைவரையும் அங்கு வரச்சொல்லிற்று. லூமியர் சகோXதரர்கள் மூலம் அன்று அந்த அரங்கத்தில் பிறந்த திரைப்படம் எனும் கலை, இன்று உலகையே ஆள்கிறது என்றால் மிகையில்லை. நாம் அணியும் உடை, உணவு, அரசியல் என எல்லாவற்றையுமே இன்று திரைப்படம்தான் தீர்மானிக்கிறது.*

*அன்று 'கிராண்ட் கபே' விடுதியில் லூமியர் சகோதரர்கள் திரையிட்ட சில துண்டுப் படங்களில் ஒன்று 'ரயிலின் வருகை'. திரையில் ரயில் முன்னோக்கி வேகமாக வருவதைப் பார்த்து, ரயில் நம்மீது ஏறிக் கொல்லப்போகிறது என்ற அச்சத்தில் பலரும் அரங்கத்தை விட்டு அலறியடித்துக்கொண்டு வெளியில் ஓடினர். அப்படி மக்களை அச்சப்பட வைத்த காட்சிப்பதிவாக இருந்த திரைப்படம் பிற்பாடு உலகையே கட்டிப்போடும் பேராற்றலாக வளர்ந்திருக்கிறதென்றால் தொடக்கத்திலேயே அக்கலைக்குப் பெருமை சேர்த்த சில முக்கியமான கலைஞர்கள்தான் அதற்கு முதன்மைக் காரணம். அவர்களில் தாமஸ் ஆல்வா எடிசன் முதலாமவர். அவர்தான் அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தார். அதன் பிறகுதான் பிரான்சின் லூமியர் சகோதரர்கள் படப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியையும் (Projector) சேர்த்துத் திரைப்படம் என்னும் விந்தையை இவ்வுலகுக்கு அளித்தனர். அடுத்தநிலையில் திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர் ஜார்ஜ் மிலி என்பவர்.*

## திரைக்கதை

*ஒரு படத்தின் வெற்றிக்குக் காரணம், கதையும் அந்தக் கதை எப்படிச் சொல்லப்படுகிறது என்பதையும் பொறுத்தது. புகழ்வாய்ந்த நடிகர்களின் படங்கள் தோல்வி அடைவதையும் புதுமுக நடிகர்களின் படங்கள் வெற்றி பெறுவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.*

*உலகின் சிறந்த முக்கியப் படங்களும் வணிக வெற்றிப்படங்களும் பார்வையாளர்களைத் திரையுடன் ஒன்றவைக்கும் வகையில் திரைக்கதைகளைக்*



XII Std Tamil Chap_06.indd 130 2/22/2019 1:41:48 PM

கொண்டவை; திரைக்கதைகள் பலமுறை எழுதி, பலமுறை படித்துப் பார்த்துத் திருத்தியும் உருவாக்கப்படுபவை. இத்தகைய உழைப்பு உள்ள படங்கள் மட்டுமே பார்வையாளர் உள்ளத்தில் நிலைக்கின்றன.

## காட்சியின் ஆற்றல்

காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது. திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக அமைந்தால் வசனத்திற்குக்கூட இரண்டாம் இடம்தான். நாடகத்தில் விளக்கை அணைத்தும் திரையை இறக்கியும் காட்சிமாற்றத்தைக் காண்பிப்பார்கள். ஆனால் திரைப்படத்தில் வசனம் இன்றிக் காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன்மூலம் கதை சொல்வார்கள்.

முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்; அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்! "எண் 7, வீரையா தெரு..." என்று ஒருவர் முகவரியைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும்.

அடுத்த காட்சி விளையாட்டு அரங்கம் எனில், அங்கு எழும் ஒலிகள் முதல் காட்சி முடிவதற்கு முன் தொடங்கிவிடும். காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்கிக் காட்டுவர். இதைக் காட்சி மறைவு (*Fade out*) என்பார்கள். அடுத்த காட்சி தொடங்கும்போது இருட்டாக இருந்த பகுதி சிறிது சிறிதாக வெளிச்சமாகமாறி முழுக்காட்சியும்வெளிப்படும். இதனைக் காட்சி உதயம் (*Fade in*) என்பார்கள். ஒரு காட்சி மறையும்போதே அடுத்த காட்சி தெரியத் தொடங்கும். இதனைக் கலவை/கூட்டு (*Mix*) என்பார்கள். பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்த காட்சி தோன்றுவதை அழிப்பு (*Wipe*) என்பார்கள். இப்படிப் பல்வேறு உத்திகள் இயக்குநராலும் தொகுப்பாளராலும் காட்சி நகர்வுக்கெனப் பயன்படுத்தப்படுகின்றன.

திரைப்படம் இரசிக்கத்தக்க ஊடகம். பல நாடுகளில் நல்ல படங்கள் உருவாகின்றன. அவற்றைப் பார்க்கும் வாய்ப்பும் இருக்கிறது. ஓவியம் போல, படமும் இரசனைக்குரிய கலை. கலையும் அறிவியலும் கைகோர்த்திருக்கும் அக்கலையை இரசிக்கக் கற்போம்.

## திரையில் காட்சி

திரைப்படத்தில், நடிப்பவரை முன் பின் மேல் என்று பல கோணங்களில் படப்பிடிப்புக்கருவியால் இடம் மாற்றி மாற்றிப் படம்பிடித்துத் திரையில் காட்ட முடியும். இதனால் திரைப்படத்தை முப்பரிமாணக் கலை (*Three Dimensional Art*) என வகைப்படுத்துகிறோம். ஒருவன் ஓடிவருவதைக் காட்டிவிட்டு அதைப் பார்ப்பவன் ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள் என்று கேட்கவேண்டியதில்லை. 'என்னாச்சு?' என்று கேட்டால் போதும். இது காட்சிமொழியின் தன்மை. உணர்ச்சிகளைக் காண்பிக்க முகத்தை

### தெரியுமா?



திரைப்படம் என்பது ஒருவகையில் பார்த்தால் நாடகத்தின் குழந்தை எனலாம். தொடக்க காலங்களில் நாடகங்களை அப்படியே திரைப்படமாக எடுப்பது வழக்கம். நாடகம் என்பது ஒரு காட்சியை ஒற்றைக் கோணத்தில் மட்டும் நேரிடையாகக் காண்பது. இதனால்தான் நாடகத்தை ஒற்றைக் கோணக்கலை (*single dimension art*) எனக் கூறுவர். நாடகங்களின் காலத்தில் ஒலிபரப்புக் கருவிகள் இல்லாததால் வசனங்களை உரக்கப் பேச வேண்டிய தேவையிருந்தது. அதே போலத் தொலைவிலிருப்பவர்களும் நடிகர்களின் நடிப்பைப் பார்க்க வேண்டும் என்பதால் அதிக ஒப்பனை செய்துகொண்டு கை – கால்கள், கண்களின் அசைவுகள் நன்றாகத் தெரியும் வகையில் அசைத்து உரக்கப்பேசி இயல்பில் நாம் செய்வதைவிடச் சற்றுக் கூடுதலாகச் செய்து நடித்தார்கள். திரையரங்கில் மவுனப்படங்கள் ஓடிக்கொண்டிருக்க, திரைக்கு அருகே ஒருவர் ஒலிவாங்கியைப் பிடித்து, கதை சொல்லும் காலமும் இருந்தது. அவருக்கு ஆங்கிலத்தில் நேரேட்டர் (*Narrator*– கதைசொல்லி) என்று பெயர். ஒரு கதாநாயகன் போல மிடுக்காக உடை அணிந்து 'நேரேட்டர்' எனும் அக் கதைச்சொல்லி வந்து நின்றாலே அனைவரும் கைதட்டத் தொடங்கினர்.

யார் இவர்?



**சார்லி சாப்ளின் வாழ்க்கை**

இலண்டனில் பிறந்த சாப்ளின் வறுமையின் மடியில் வளர்ந்தவர்; சாப்ளினின் தாய், வறுமை வலியை மறக்கடிக்கக் கதைகள் சொன்னார்; அதன்மூலம் ஒரு கலைஞனாக அவர் செதுக்கப்பட்டார். மேடையில் பாடிப் பிழைத்த அம்மாவின் குரல் கெட்டுவிட, சிறுவனான சாப்ளின் மேடையேறி ஆடிப்பாடி அசத்தினார். நடிகனாகிக் குடும்பத்தைக் காக்கக் கனவு கண்ட சாப்ளின் நாடக நடிகராகி, குழுவுடன் அமெரிக்கா சென்று திரை வாய்ப்பைப் பெற்றார். தொள தொள கால்சட்டையும் இறுக்கமான கோட்டும் துண்டு மீசையும் புதுவிதமான சேட்டையும் கொண்ட 'லிட்டில் டிராம்ப்' *(Little Trump)* என்று அவர் உருவாக்கிக் கொண்ட தோற்றம் அவரைப் பேசாப்பட நாயகனாக்கியது. அவரது ஊதியம் போல், புகழும் உயர்ந்தது. வறுமைமிக்க தன் இளமை வாழ்வை 'தி கிட்' *(The kid)* என்ற வெற்றிப் படமாக்கினார். 'யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்' என்ற பட நிறுவனத்தைத் தொடங்கிப் பெரும் வளர்ச்சி கண்டார். அவரது மேதைமையும் திறமையும் 'தி கோல்டு ரஷ்' *(The Gold Rush)*, 'தி சர்க்கஸ்' *(The Circus)* போன்ற காவியப் படங்களை உருவாக்கின. மரபான கருத்துருவாக்கங்களைத் தன் படங்களில் சாப்ளின் உடைத்து நொறுக்கினார்; பேசாப்படங்களில் சேட்டைகள் மூலம் புகழ்பெற்ற அவர் பேசும்படங்கள் உருவான காலத்தில், தோற்பார் என எதிர்பார்த்தனர்; எதிர்பார்ப்புகளை முறியடித்து 'சிட்டி லைட்ஸ்' *(City Lights)* என்ற படத்தை எடுத்ததன் வாயிலாக எதிரிகளின் வாய்களை அடைத்தார்; மூன்று ஆண்டு உழைப்பில் 'மாடர்ன் டைம்ஸ்' *(Modern Times)* படத்தை வெளியிட்டார். இதில் அன்றைய தொழில்மய உலகின் கேடுகளை விமரிசனம் செய்தார்; சாப்ளினுக்குப் பொதுவுடைமையாளர் என்ற முத்திரை விழுந்தது. பல முதலாளிய நாடுகளில் படம் தடை செய்யப்பட்டது. இருந்தாலும் படம் வெற்றி பெற்றது. அவரது சாதனைப்படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' *(The Great Dictator)* 1940இல் வெளியானது. ஹிட்லர் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த காலத்தில் அவரை விமரிசித்து வந்த முதல்படம் அது. 'மனித குலத்திற்குத் தேவை போரல்ல; நல்லுணர்வும் அன்பும்தான்' என்பதைப் படம் உணர்த்தியது.

1952இல் அவர் இலண்டன் சென்று கொண்டிருந்தபோது பொதுவுடைமையாளரான அவரை நாடு கடத்தியதாக அமெரிக்கா அறிவித்தது. பின் சாப்ளின் சுவிட்சர்லாந்தில் குடியேறினார். தன் தவற்றை உணர்ந்த அமெரிக்கா, மீண்டும் அங்கு வந்துவிடுமாறு சாப்ளினை வேண்ட, சாப்ளினும் ஒத்துக்கொண்டு சென்றார். அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது. இன்றும் உலகின் பல பகுதிகளில் சாப்ளினின் டிராம்ப் உருவம், குழந்தைமை, மனிதமை ஆகியவற்றின் குறியீடாக இடம் பெற்றிருப்பதே அவரது வெற்றியின் அடையாளம்.

மட்டுமே காண்பித்தால் போதும். அதுபோலக் கட்டுப்படுத்த முடியாத கோபம் என்றால் நடிகர் கத்திக் கூச்சல் போடுவதைக் காட்டவேண்டிய அவசியமில்லை. கையில் பிடித்திருக்கும் கண்ணாடிக் குவளையை இறுகப்பிடித்து உடைப்பதைக் காட்டினால் போதும்.

இப்படிப் படப்பிடிப்புக் கருவி மூலம் பல்வேறு கோணங்களில் நாம் பார்க்கும் காட்சியை, திரையரங்கில் ஒரே இடத்தில் நாம் அமர்ந்து பார்ப்பதற்கு ஏற்ப, படத்தொகுப்புச் செய்து மனதிற்குள் கதை உலகத்தைத் தோற்றுவிப்பதைத்தான் நாம் திரைக்கலை என்று கூறுகிறோம்.

**கண்களும் மூளையும் காட்சி மொழியும்,**

இயற்கையாகவே நம் கண்கள் படப்பிடிப்புக் கருவி செய்யும் பல வேலைகளைத்தான் செய்கின்றன. காட்சிகேற்றவாறு நாம் வில்லைகளை (*Lens*) மாற்றிப் படம் பிடிப்பதைப் போல, நம் கண்களும் நாம் காணும் காட்சி அல்லது பொருளுக்கு ஏற்ப மாற, மூளைக்குள் இருந்து கட்டளைகள் வருகின்றன.



XII Std Tamil Chap_06.indd 132 2/22/2019 1:41:49 PM

நாம் கடற்கரையில் நின்று கடலைப் பார்க்கிறோம் என வைத்துக்கொள்வோம். நம் கண்கள் தாமாகவே அகண்ட கோணத்தைத் தேர்வுசெய்து கொள்கின்றன. இதைத் திரைப்படத்தில் மீ சேய்மைக் காட்சித்துணிப்பு (*EXTREME LONG SHOT*) என அழைக்கிறோம்.

பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இரு பக்கங்களிலும் பார்க்கிறோம். அப்போது நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவுசெய்கின்றன. திரைப்படத்தில் இதனைச் **சேய்மைக் காட்சித்துணிப்பு** (*LONG SHOT*) எனலாம். பேருந்தை விட்டு இறங்கி நாம் தெருவுக்குள் நடந்து வரும்போது எதிர்ப்படும் ஆட்களை நாம் இடுப்பு அளவில் மட்டுமே கவனப்படுத்துகிறோம், இங்குக் கண் ஆளை முழுதாகப் பார்த்தாலும் நம் கவனம், இடுப்புவரை மட்டுமே எடுத்துக்கொள்கிறது. இதை **நடுக் காட்சித்துணிப்பு** (*MID SHOT*) என்கிறோம். வீட்டிற்குள் நுழைந்து அம்மாவின் முகத்தைப் பார்க்கிறோம், அம்மாவின் முகம் மட்டுமே நமக்குள் பதிவாகிறது. இது **அண்மைக் காட்சித்துணிப்பு** (*CLOSE UP SHOT*). காலிலிருந்து செருப்பைக் கழற்றி வாசலில் விடும்போது, கண் கீழே குனிந்து செருப்பை மட்டும் பார்க்கிறது, இது மீ அண்மைக் காட்சித்துணிப்பு (*EXTREME CLOSE UP SHOT*).


சேய்மைக் காட்சித்துணிப்பு


நடுக் காட்சித்துணிப்பு


அண்மைக் காட்சித்துணிப்பு

ஓர் இடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பும் ஒருமணி நேரப் பயணத்தை ஐந்தே காட்சித்துணிப்புகளாக இருபது நொடிகளில் நம்மால் பார்வையாளர்களிடம் உணர்த்த முடிகிறது. இதைத்தான் திரைப்படத்தின் காட்சிமொழி என்கிறோம்.

**தெரியுமா?**

படங்காட்டுதல் (Exhibition) மூலம்தான் முதன்முதலாகத் தென்னிந்திய சினிமாத் தொழில் தோன்றியது. மனைவியின் வைரமாலையை விற்று சாமிக்கண்ணு வின்சென்ட், பிரெஞ்சுக்கார் டுபான் (Dupont) என்பவரிடமிருந்து 2500 ரூபாய்க்கு ஒரு புரொஜக்டரையும் சில துண்டுப்படங்களையும் வாங்கினார். திருச்சியில் ஒரு கூடாரத்தில் படங்காட்ட ஆரம்பித்த அவர், பின்னர் திருவனந்தபுரம், மதுரை நகர்களில் முகாமிட்டு, மதராசுக்கு வந்து காட்சிகள் நடத்தினார். அங்கிருந்து வடக்கே சென்று பெஷாவர், லாகூர் பின்னர் லக்னோ நகரங்களில் படக்காட்சிகள் நடத்திவிட்டு 1909 இல் மதராஸ் திரும்பினார். அங்கே எஸ்பிளனேட்டில் (இன்றைய பாரிஸ் அருகே) கூடாரம் போட்டுச் சலனப்படங்களைத் திரையிட்டார்.

சென்னையிலிருக்கும்போது சினிமாத்தொழிலை இங்கு நிறுவ ஒரு முக்கியமான அடியெடுத்து வைத்தார். புரொஜக்டர்களை இறக்குமதி செய்து விற்க ஆரம்பித்தார். இதனால் புதிய திரையரங்குகள் வர ஏதுவாயிற்று.

சு.தியோடர் பாஸ்கரன்
சினிமா கொட்டகை 2018




யாராவது நம்மிடம் கதையையோ, அல்லது நிகழ்வையோ விவரிக்கும்போது நம் மூளை அதுவாகவே அந்த விவரிப்பை வெட்டியும் ஒட்டியும் நமக்குச் சொல்கிறது. இவ்வாறு, தேவையான கோணங்களைப் பயன்படுத்திக் காட்சிகளைப் படம்பிடித்து அவற்றை வெட்டி ஒட்டி, படத்தொகுப்புச் செய்து வெள்ளித்திரையில் ஒரு நல்ல கதையைச் சொல்வதே திரைப்படக்கலை ஆகும்.



XII Std Tamil Chap_06.indd 133 2/22/2019 1:41:49 PM

### படத்தொகுப்பு

தேவையற்ற காட்சிகளை நீக்கி, தேவையான காட்சிகளைப் பொருத்தமான வகையில் சேர்ப்பதே படத்தொகுப்பு. ஒரு திரைப்படத்தில் தொடர்வண்டி ஒன்று குறிப்பிட்ட ஊரை அடைய ஒரு பாலத்தை இடமிருந்து வலமாகக் கடப்பதாகக் காட்டிவிட்டு, அதே தொடர்வண்டி வலமிருந்து இடமாக வருவதாகக் காட்டுகையில் வெளியே தெரியும் காட்சிகளையும் நிலையங்களையும் பாலத்தையும் கவனமாக இணைக்கவேண்டியது தொகுப்பாளர் பணி.

'மாடர்ன் டைம்ஸ்' (1936) திரைப்படத்தில் ஒரு காட்சியில் செம்மறியாடுகள் முண்டியடித்துச் செல்கின்றன. அடுத்த காட்சியில் மனிதர்கள் ஒரு தொழிற்சாலைக்குள் முண்டியடித்துக் கொண்டு நுழைகின்றனர். தொழில்மயப்பட்ட சமூகத்தில் மனிதர்கள், மந்தைகள் ஆவதை இக்காட்சிகளின் இணைப்பு உணர்த்துகிறது. காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன்மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்கிக் காட்டமுடியும். இவ்வாறு காட்டுவதைக் 'குலஷோவ் விளைவு' (KULESHOV EFFECT) என்பார்கள். மூன்று காட்சிகளை (புன்னகைக்கிற மனிதன், நீட்டப்பட்ட கைத்துப்பாக்கி, பதற்றமாகும் மனிதன்) வேறுவேறு விதமாக மாற்றிவைப்பதன் மூலம் வெவ்வேறு பொருளை உணர்த்துவதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

அ) புன்னகைக்கிற மனிதன் – நீட்டப்பட்ட கைத்துப்பாக்கி – பதற்றமாகும் மனிதன் = கோழை என்ற பிம்பம் உருவாதல்

ஆ) பதற்றமாகும் மனிதன் – நீட்டப்பட்ட துப்பாக்கி – புன்னகைக்கிற மனிதன் = வீரன் என்ற பிம்பம் உருவாதல்

படத்தொகுப்பால் எல்லாமே தலைகீழாக மாறிவிடுகிறது. படம் எடுக்கும்போது 16மணிநேரம் ஓடும்படி எடுத்துவிட்டாலும் அதை 2மணிநேரம் ஓடும்படி தொகுப்பது படத்தொகுப்பாளரின் பணி.

இப்படித் தொகுக்கும் ஆற்றல் மூலம் கதைசொல்லலுக்கு உயிரூட்டமுடியும்.

### ஒலிக்குறிப்பு

பின்னணி இசை, திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவும் மற்றொரு கலை. பின்னணி இசைச் சேர்ப்பும், சில வேளைகளில் மவுனமும் திரையில் உணர்வுகளை வெளிக்கொணர உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, கதைநாயகி சன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியே தெரியும் ஒரு காட்சியை வெறித்துப் பார்க்கிறாள் எனில் தெரு காட்டப்படுவதில்லை. அவள் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்படுகிறது. அக்காட்சியில் ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது. இதில் அவளைப் பார்க்க வந்தவர், அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்ற கதை, அப்பெண்ணின் முகபாவனை மூலமே சொல்லப்படுகிறது. இசை பாத்திரங்களின் மனக்கவலைகள், அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிப்பதாகவும் எடுத்துக்காட்டுவதாகவும் இருக்கவேண்டும். அது, நமக்குப் பாத்திரங்களின் உணர்வுகளுக்கு விரிவுரை வழங்குவதாக இருக்கவேண்டும். அதே போல மவுனம், உரையாடலைவிட அதிகம் பேசுவதாக இருக்கும்.

### நல்ல திரைப்படம்

முறையான காட்சிமொழியுடன் நல்ல கலையாக உருவாக்கும் படத்தில் பொய்களும் இருக்க முடியாது; நம் மூளையை மழுங்கச் செய்யும் கவர்ச்சிகளும் இடம்பெறாது; இந்தக் கலைப்படைப்புகள் உண்மையைப் பேசும்; அதன்மூலம் காண்பிக்கப்படும் வாழ்வியல், நம் அனுபவத்தை மேம்படுத்தி வாழ்க்கையை வளமாக்கும். அத்தகைய திரைப்படங்களைத்தான் கலைப்படங்கள் என்கிறோம்.

கர்நாடக மாநிலத்தில் ஹெக்கோடு என்னும் சிற்றூர் மக்கள் திரைப்படம் பார்த்ததே இல்லை. 1977இல் ஒரு முயற்சியாக உலகின் முக்கிய விருதுபெற்ற திரைப்படங்கள் அங்கு ஆறுநாள் திரையிடப்பட்டன.

அம்மக்கள் தங்களுக்குள் படங்களைப் பற்றிப் பலவாறாகக் கலந்துரையாடிக் கொண்டார்கள். படிப்பறிவு இல்லாத அந்த

எளிய மக்களின் கருத்துகள், திரைப்பட வல்லுநர்களின் கருத்துகளுக்கு ஈடாக இருந்தன. இது எவ்வாறு சாத்தியமானது? வெளிஉலகம் அறியாத சிற்றூர்வாசிகளால் உலகம் கொண்டாடும் கலைப்படங்களை எப்படிச் சுவைக்கமுடிந்தது? அறிவியலும், தொழில்நுட்ப அறிவும் கொண்ட மற்றவர்களால் இதற்கு மேம்பட்டும் சுவைக்க முடியம்தானே?

நல்ல திரைப்படங்கள் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ள முயலாதவரை திணிக்கப்படும் வணிகத் திரைப்படங்களையே நல்ல படங்கள் என்று சமூகம் நம்பும்.

### தெரிந்து தெளிவோம்

#### தி கிரேட் டிக்டேட்டர்



சாப்ளினுக்கு நல்ல வசனங்களுடன் படம் எடுக்கத் தெரியாது என்று கூறிவந்த விமர்சகர்களின் கூற்றைப் பொய்யாக்கும் வகையில் 1940இல் அவர் ஒரு படம் எடுத்தார். அதுதான் 'தி கிரேட் டிக்டேட்டர்'.

இக்கதையில் ஹிட்லரை உருவகப்படுத்தி ஹென்கோல் என்னும் கதைப்பாத்திரத்தை, சாப்ளின் உருவாக்கினார். அதே உருவம் கொண்ட இன்னொரு பாத்திரத்தைக் கடை நடத்தி வரும் யூத இனத்தைச் சார்ந்தவராக அறிமுகப்படுத்தினார். சர்வாதிகாரி ஹென்கோல், யூதர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிடுகிறார். காவலர்களும் யூதரான கடைக்காரரைக் கைதுசெய்து சிறைக்கு அழைத்துச் செல்கின்றனர். சிறையிலிருந்து தப்பிக்கும் கடைக்காரர், வழியில் ஹென்கோலின் உடையைத் திருடி அணிந்து கொள்கிறார். அப்போது வழியில் வரும் ஹென்கோலின் படைவீரர்கள் இவர்தான் ஹென்கோல் எனத் தவறாக நினைத்து மரியாதை செய்கின்றனர். அதேசமயம் தப்பித்த கைதியைத் தேடி வந்த காவலர்கள் சாதாரண உடையில் வந்த ஹென்கோலை, தப்பித்த குற்றவாளி என நினைத்துக் கைது செய்கின்றனர். ஹென்கோல் சிறைக் கைதியாகிறார். ஒரேநாளில் இருவர் வாழ்க்கையும் தலைகீழாக மாறுகிறது. அதன் பிறகு நடக்கும் காட்சிகள் எல்லாம் கடுமையான அரசியல் விமரிசனங்கள். இறுதிக்காட்சியில் சர்வாதிகாரி வேடத்தில் இருக்கும் யூதர் கைது செய்யப்பட்டிருந்த அனைவரையும் விடுதலை செய்யச் சொல்லி ஆணையிடுகிறார். மாநாட்டில் மனிதகுல விடுதலை குறித்துப் பேருரை ஆற்றுகிறார். அந்தப் பேருரைதான் இன்றுவரை திரைப்படங்களின் மிகச் சிறந்த வசனமாகப் போற்றப்படுகிறது. வாழும் காலத்திலேயே ஹிட்லரைக் கடுமையாக விமர்சித்து எடுத்த ஒரேபடம் என்ற பெருமையும் இப்படத்திற்கு உண்டு. அதுபோல இரட்டை வேடப் படங்கள் எவ்வளவோ வந்தாலும் அதில் மிகச் சிறந்த திரைப்படம் என்ற பெயரும் இதற்கு உண்டு.

### நூல்வெளி

திரைமொழி குறித்த இப்பாடம் திரு. அஜயன் பாலாவின் கட்டுரையை அடிப்படைச் சட்டமாகக் கொண்டு சுஜாதா, செழியன், அம்ஷன்குமார் முதலானோரின் திரைப்பார்வைகளை ஊடும்பாவுமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கலையும் வணிகமுமான திரைப்படத்தை அணுகுவதற்கான எளிய சூத்திரத்தைக் கற்பிப்பதாக இப்பாடம், பாடக்குழுவினரால் உருவாக்கப்பட்டுள்ளது. உடல்மொழி, குறியீடுகள், கதை நகர்த்தல், திரை உரையாடல் என்று பல கூறுகளில் மரபுக் கலைகளிலிருந்து வேறுபட்ட தொழில்நுட்பம் சார்ந்த திரைக்கலையின் மொழியைப் புரிந்துகொள்ளும் முயற்சியின் தொடக்கம்தான் இப்பாடம்.



XII Std Tamil Chap_06.indd 135 2/22/2019 1:41:50 PM

கவிதைப்பேழை

கலை ௬

# கவிதைகள்

– நகுலன்

NSR4EL

**நுழையும்முன்**

பாரதிக்குப் பின்னர் வந்த காலகட்டத்துக் கவிதைகள், பலவற்றையும் பற்றிய சிந்தனைகளைச் செறிவாக, குறிப்பாக, முரணாக, அழகிய தொடராகத் தருவதற்கு முயன்றன. புதுக்கவிதை வடிவம் இதற்கு ஏற்றதாக இருந்தது; இருக்கிறது. புதுக்கவிதை, புதிய வடிவம் கொண்ட கவிதை என்ற பொருள் மட்டும் கொண்டதல்ல. புதிய சிந்தனைகளையும் புதிய கருத்துகளையும் புதுமையாகச் சொல்வதையும் குறிப்பது.

1. *இருப்பதற்கென்றுதான்*
*வருகிறோம்*
*இல்லாமல்*
*போகிறோம்.*



2. *மூச்சு நின்று விட்டால்*
*பேச்சும்*
*அடங்கும்.*

3. *அவர் பல உண்மைகளைச் சொல்கிறார்.*
*ஒரு உண்மையைச் சொல்லாமல்*
*இருப்பதற்கு*

4. *ஆர்ப்பரிக்கும் கடல்*
*அதன் அடித்தளம்*
*மௌனம்; மகா மௌனம்.*

5. *அலைகளைச் சொல்லிப்*
*பிரயோஜனமில்லை*
*கடல் இருக்கிற வரை.*

*உள் நின்று*
*சலிக்கும் காற்று*
*உள்ளவரை.*

**நூல்வெளி**

நம்பாடப் பகுதியிலுள்ள கவிதைகள் 'நகுலன் கவிதைகள்' என்னும் தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. கவிஞர் நகுலன் (டி.கே. துரைசாமி). கும்பகோணத்தில் பிறந்தவர்; கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்; தமிழின் அனைத்துச் சிற்றிதழ்களிலும் எழுதி வந்தவர். புதுக்கவிதை வடிவம் தமிழ் மொழியில் தடம் பதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், புதுக்கவிதை மூலம் வாழ்வியலுக்குத் தேவையான கருத்துகளை நறுக்கென்று கூறியுள்ளார். இவர், சொல் விளையாட்டுகளோ, வாழ்க்கை பற்றிய எந்தக் குழப்பமோ இன்றித் தெளிவான சிந்தனையோடு கருத்துகளை உரைத்துள்ளார். இவருடைய கவிதைகள் மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், வாக்குமூலம், சுருதி உள்ளிட்ட சிறு சிறு தொகுதிகளாக வந்துள்ளன. இவர் 7 புதினங்களை எழுதியுள்ளார்; பாரதியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**கற்பவை கற்றபின்...**

உங்களுக்குப் பிடித்த புதுக்கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

கவிதைப்பேழை

கலை ௬

## சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம்

### அரங்கேற்று காதை

– இளங்கோவடிகள்

PMIXFL




பிற உயிரினங்களிலிருந்து மனிதனைத் தனித்துக்காட்டுவது கலை. அது நுட்பமான தன்மையையும் திறனையும் உள்ளடக்கியது. கலைகளில் நடனக் கலை தமிழர்களா போற்றப்பட்டுக் கற்கப்பட்டது. நடனம் கற்பவர்கள், பலர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்வர். இது இன்றும் காணப்படுகிற ஒரு வழக்கம். கலை ஒரு சமூகத்தின் பண்பாடு, வரலாறு, அழகியல் போன்ற கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. அவ்வகையில் தமிழர் வாழ்வு முழுமையும் கலைகளால் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

#### மாதவியின் நாட்டியப் பயிற்சி

*.....பெருந்தோள் மடந்தை*
*தாது அவிழ் புரிகுழல் மாதவி தன்னை*
*ஆடலும் பாடலும் அழகும் என்று இக்*
*கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்,*
*ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈர்ஆறு ஆண்டில்*
*சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி (5 – 11)*

#### நாட்டிய அரங்கின் அமைப்பு

*எண்ணிய நூலோர் இயல்பினில் வழாஅது*
*மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு*
*புண்ணிய நெடுவரைப் போகிய நெடும் கழைக்*
*கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு*
*நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்*
*கோல் அளவு இருபத்து நால்விரல் ஆக,*
*எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து*
*ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி*
*உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை*
*வைத்த இடைநிலம் நால்கோல் ஆக*
*ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்*
*தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்*
*பூதரை எழுதி மேல்நிலை வைத்துத்*
*தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்து; ஆங்கு*
*ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்*
*கரந்துவரல் எழினியும் புரிந்துஉடன் வகுத்து – ஆங்கு*
*ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து*
*மாலைத் தாமம் வளையுடன் நாற்றி*
*விருந்துபடக் கிடந்த அரும்தொழில் அரங்கத்துப்*



#### தலைக்கோல் அமைதி

*பேரிசை மன்னர் பெயர்புறத்து எடுத்த*
*சீர் இயல் வெண்குடைக் காம்பு நனி கொண்டு,*
*கண்இடை நவமணி ஒழுக்கி, மண்ணிய*
*நாவல்அம் பொலம்தகட்டு இடை நிலம் போக்கிக்*
*காவல் வெண்குடை மன்னவன் கோயில்*
*இந்திர சிறுவன் சயந்தன் ஆக என*
*வந்தனை செய்து, வழிபடு தலைக்கோல்*
*புண்ணிய நன்னீர் பொன்குடத்து ஏந்தி*
*மண்ணிய பின்னர், மாலை அணிந்து,*
*நலம்தரு நாளால், பொலம்பூண் ஓடை*



XII Std Tamil Chap_06.indd 137 2/22/2019 1:41:53 PM

*அரசு உவாத் தடக்கையில் பரசினர் கொண்டு*
*முரசு எழுந்து இயம்பப் பல்இயம் ஆர்ப்ப,*
*அரைசொடு பட்ட ஐம்பெரும் குழுவும்*
*தேர்வலம் செய்து, கவிகைக் கொடுப்ப*
*ஊர்வலம் செய்து புகுந்து, முன் வைத்துஆங்கு*

### மாதவியின் நாட்டியம் – மங்கலப் பாடல்

*இயல்பினின் வழாஅ இருக்கை முறைமையின்*
*குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப,*
*வலக்கால் முன்மிதித்து ஏறி அரங்கத்து*
*வலத் தூண் சேர்தல் வழக்கெனப் பொருந்தி*
*இந்நெறி வகையால் இடத்தூண் சேர்ந்த*
*தொல்நெறி இயற்கைத் தோரிய மகளிரும்,*
*சீர் இயல் பொலிய, நீர்அல நீங்க,*
*வாரம் இரண்டும் வரிசையின் பாடப்*
*பாடிய வாரத்து ஈற்றில்நின்று இசைக்கும்*
*கூடிய குயிலுவக் கருவிகள் எல்லாம்*

### இசைக்கருவிகள் ஒலித்த முறை

**குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது தகவே , தண்ணுமைப்*
*பின்வழி நின்றது முழவே, முழவொடு*
*கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை* (95 – 142)*

.....................................................................................

பா வகை : ஆசிரியப்பா

### மாதவி மன்னனிடம் பரிசு பெறுதல்

*பொன்இயல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென*
*நாட்டிய நல்நூல் நன்கு கடைப்பிடித்துக்*
*காட்டினள் ஆதலின், (143 – 145)*

*.....காவல் வேந்தன்*
*இலைப் பூங்கோதை இயல்பினில் வழாமைத்*
*தலைக்கோல் எய்தித் தலைஅரங்கு ஏறி*
*விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு*
*ஒரு முறையாகப் பெற்றனள். (157 – 163)*

### சொல்லும் பொருளும்

**புரிகுழல்** – சுருண்ட கூந்தல்

**கழை** – மூங்கில்; **கண்** – கணு; **விரல்** – ஆடவர் கைப் பெருவிரல்; **உத்தரப் பலகை** – மேல் இடும் பலகை; **பூதர்** – ஐம்பூதங்கள்; **ஓவிய விதானம்** – ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்; **நித்திலம்** – முத்து; **விருந்து** – புதுமை

**மண்ணிய** – கழுவிய; **நாவலம்பொலம்** – சாம்பூநதம் என்னும் உயர்ந்த வகைப் பொன்; **தலைக்கோல்** – நாடகக் கணிகையர் பெறும் பட்டம்; **ஓடை** – முக படாம்; **அரசு உவா** – பட்டத்து யானை; **பரசினர்** – வாழ்த்தினர்; **பல்இயம்** – இன்னிசைக் கருவி

**குயிலுவ மாக்கள்** – இசைக் கருவிகள் வாசிப்போர்; **தோரிய மகளிர்** – ஆடலில் தேர்ந்த பெண்கள்; **வாரம்** – தெய்வப்பாடல்

**ஆமந்திரிகை** – இடக்கை வாத்தியம்

**இலைப்பூங்கோதை** – அரசன் அணிந்துள்ள பச்சை மாலை; **கழஞ்சு** – ஒரு வகை எடை அளவு.

### பாடலின் பொருள்
### மாதவியின் நாட்டியப் பயிற்சி

மாதவி, அழகிய தோள்களை உடையவள்; தேனும் தாதுவும் நிறைந்த பூக்களை அணிந்த சுருண்ட கூந்தலை உடையவள்.

ஆடல், பாடல், அழகு என்னும் இம்மூன்றில் ஒன்றும் குறைபடாமல் (ஐந்தாண்டில் ஆடல் கற்பதற்கான சடங்குகளைச் செய்து) ஏழு ஆண்டுவரை ஆடல் கலையைப் பயின்றாள். அவள் தனது பன்னிரண்டாவது வயதில் ஆடலை அரங்கேற்ற விரும்பினாள். (வீரக் கழல் பூண்ட சோழ மன்னனது அரசவைக்கு வந்தாள். அவளுடன் ஆடல் ஆசான், இசை ஆசான், கவிஞன், தண்ணுமை ஆசான், குழல் ஆசான், யாழ் ஆசான் ஆகியோரும் வந்திருந்தனர்).

### நாட்டிய அரங்கின் அமைப்பு

திறம்படக் கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்புகளிலிருந்து மாறுபடாத நன்னிலத்தை, ஆடல் அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர். பொதிகை மலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே, ஒன்றுக்கொன்று இடையே ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர். நூல்களில் கூறப்பட்ட முறையாலே அரங்கம் அமைத்தனர். தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக அம்மூங்கிலை வெட்டினர். அதை அரங்கம்

அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழுகோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒரு கோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.

அரங்கில் தூணிற்கு மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே, இடைவெளி நான்கு கோல் அளவாக இருந்தது. அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. மேற்கூறியபடி அமைக்கப்பட்ட அவ்வரங்கில் மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களை யாவரும் புகழும்படி சித்தரித்து வைத்தனர். தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.

மேலும், மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் ஒரு முகத்திரை, மேடையின் இரு புறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படும் பொருமுகத்திரை, மேடையின் மேலிருந்து வேண்டும் போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படும் கரந்துவரல் திரை, இவை மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர். ஓவிய வேலைப்பாடுமிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர். அத்துடன் சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர். இவ்வாறு ஒவ்வொன்றையும் புதுமையாக, மேடையில் சிறப்பான வேலைப்பாடுகளுடன் அமைத்தனர்.

## தலைக்கோல் அமைதி

அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல்மகளுக்குத் தலைக்கோல் அளித்துச் சிறப்பிப்பர். தலைக்கோல் என்பது, பெரும்புகழ் கொண்ட பகை மன்னனுடன் நிகழ்த்திய போரில், தோற்றுப் புறங்காட்டிய அவனிடமிருந்து பறிக்கப்பட்ட அழகுமிக்க வெண்கொற்றக் குடையின் காம்பில் செய்யப்படுவது. அக்காம்பின் கணுக்கள் முழுவதும் நவமணிகளை இழைத்து அக்கணுக்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் சாம்பூநதம் எனும் பொன் தகட்டை வலம்புரியாகவும் இடம்புரியாகவும் சுற்றிக்கட்டி அதனை ஒரு கோலாக்குவர். வெண்கொற்றக் குடையுடன் உலகாளும் மன்னனின் அரண்மனையில் அதனை வைத்து இந்திரன் மகன் சயந்தன் என அக்கோலை நினைத்து மந்திர விதியாலே வழிபாடு செய்வர்.

அத் தலைக்கோலைப் புண்ணிய நதிகளிலிருந்து பொற்குடங்களில் முகந்து வந்த நன்னீரால் நீராட்டுவர். பின்பு மாலைகளை அணிவித்துப் பொருத்தமான ஒரு நல்ல நாளிலே பொன்னாலான பூணினையும் முகபடாத்தையும் கொண்டிருக்கிற பட்டத்து யானையின் கையில் வாழ்த்தித் தருவர். முரசுகள் முழங்கப் பல்வேறு வாத்தியங்கள் ஒலிக்க அரசரும் அவரின் ஐம்பெருங்குழுவினரும் சூழ்ந்து வரப் பட்டத்து யானை, தேரை வலம் வந்து அதன் மேல் உள்ள கவிஞனிடம் அத்தலைக்கோலைக் கொடுக்கும். பின்பு அனைவரும் ஊர்வலமாக அரங்கிற்கு வந்தபின், அத்தலைக்கோலைக் கவிஞன் ஆடலரங்கில் வைப்பான். இவ்வாறு மாதவியின் ஆடலரங்கில் தலைக்கோல் வைக்கப்பட்டது.

## மாதவியின் நாட்டியம் – மங்கலப் பாடல்

அரசன் முதலானோர் யாவரும் தத்தம் தகுதிக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தனர். அதனருகே இசைக் கருவிகளை வாசிப்போர், நிற்க வேண்டிய முறைப்படி அவரவர்க்கு உரிய இடத்தில் நின்றனர். அதன்பின்பு அரங்கேற்றம் செய்ய வேண்டிய நாடகக் கணிகையாகிய மாதவி அரங்கில் வலக்காலை முன்வைத்து ஏறி, பொருமுக எழினிக்கு நிலையிடனான வலத்தூண் அருகே போய் நிற்க வேண்டியது மரபு என்பதால் அங்குப் போய் நின்றாள். அவ்வாறே ஆடலில் தேர்ச்சிபெற்று அரங்கேறிய தோரியமகளிரும் தொன்றுதொட்டு வரும் முறைப்படி ஒருமுக எழினிக்கு நிலையிடனான இடப்பக்கத்தூணின் அருகேபோய் நின்றனர். நன்மை பெருகவும் தீமை நீங்கவும் வேண்டி, 'ஓரொற்றுவாரம்', 'ஈரொற்றுவாரம்' என்னும் தெய்வப்பாடல்களை முறையாகப் பாடினர். பின் அப்பாடலின் முடிவில் இசைப்பதற்கு உரிய இசைக் கருவிகள் அனைத்தும் கூட்டாக இசைத்தன.

## இசைக்கருவிகள் ஒலித்த முறை

குழலின் வழியே யாழிசை நின்றது; யாழிசைக்கு ஏற்ப தண்ணுமையாகிய மத்தளம் ஒலித்தது; தண்ணுமையோடு இயைந்து முழவு

ஒலித்தது; முழவுடன் இடக்கை வாத்தியம் கூடிநின்று ஒலித்தது. (இவ்வாறு அனைத்துக் கருவிகளும் இயைந்து இசைத்தன.)

### மாதவி மன்னனிடம் பரிசு பெறுதல்

பொன்னால் செய்யப்பட்ட ஒரு பூங்கொடி வந்து நடனமாடியது போல மாதவி அரங்கில் தோன்றி நாட்டிய நூலில் சொல்லப்பட்ட முறைமை தவறாது பாவம், அபிநயம் இவற்றைச் சரியாகக் கடைப்பிடித்து அனைவரும் கண்டுகளிக்கும்படி அழகுற ஆடினாள்.

மாதவி கூத்துக்கு உரிய இயல்பினிலிருந்து சற்றும் வழுவாது ஆடினாள். அந்த ஆடலைக் கண்டு அகமகிழ்ந்த மன்னனிடமிருந்து 'தலைக்கோலி' என்னும் பட்டமும் பெற்றாள். அரங்கேற்றம் செய்யும் நாடகக் கணிகையர்க்குப் 'பரிசு இவ்வளவு' என நூல் விதித்த முறைப்படி "ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலையை" மன்னனிடமிருந்து பரிசாகப் பெற்றாள்.

**தெரியுமா?**

யாழின் வகைகள்
21 நரம்புகளைக் கொண்டது பேரியாழ்
17 நரம்புகளைக் கொண்டது மகரயாழ்
16 நரம்புகளைக் கொண்டது சகோடயாழ்
7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டியாழ்

### இலக்கணக் குறிப்பு

**தொல்நெறி** – பண்புத்தொகை

**ஆடலும் பாடலும்** – எண்ணும்மை

### உறுப்பிலக்கணம்

தொழுதனர் = **தொழு + த் + அன் + அர்**

தொழு – பகுதி; த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

தலைக்கோல் = **தலை + கோல்**

விதி : இயல்பினும்விதியினும்நின்றஉயிர்முன் கசதப மிகும் – தலைக்கோல்

**நூல்வெளி**

சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்று காதையின் ஒருபகுதி பாடமாக வைக்கப்பட்டுள்ளது. தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது. அரசகுடி அல்லாதவர்களைக் காப்பியத்தின் தலைமக்களாக வைத்துப் பாடியதால் இது 'குடிமக்கள் காப்பியம்' எனப்படுகிறது. புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்கள் முறையே சோழ, பாண்டிய, சேர மன்னர்களைப் பற்றியவை என்பதால் 'மூவேந்தர் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது. முதன் முதலாகப் பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, அவள் அரசனை எதிர்த்து வழக்காடியதைப் பாடியதால் 'புரட்சிக் காப்பியம்' எனப்படுகிறது; இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கூறுகளும் இடம்பெற்றுள்ளதால் 'முத்தமிழ்க் காப்பியம்' எனப்படுகிறது. செய்யுளாகவும் பாடலாகவும் உரைநடையாகவும் பாடப்பட்டுள்ளதால் இது 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப்படுகிறது. மேலும், இந்நூல் 'பொதுமைக் காப்பியம்', 'ஒற்றுமைக் காப்பியம்', 'வரலாற்றுக் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்ச்சி மணிமேகலையில் காணப்படுவதால் இவை இரண்டும் 'இரட்டைக் காப்பியங்கள்' என அழைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாரதி குறிப்பிடுகிறார். வரந்தரு காதையில் இளங்கோவடிகள் தன்னைப்பற்றிய குறிப்பைத் தருகையில் தான் செங்குட்டுவன் தம்பி என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

**கற்பவை கற்றபின்...**

பள்ளி விழாக்கள், ஊர்த்திருவிழா, பட்டிமன்றம், தொலைக்காட்சி நிகழ்வுகளுக்கான அரங்கம், அரசு விழாக்களுக்கான மேடை போன்றவற்றின் அரங்க அமைப்பு, ஒலி, ஒளி அமைப்பு, திரை அலங்காரம் குறித்துக் கலந்துரையாடுக.



XII Std Tamil Chap_06.indd 140 2/22/2019 1:41:54 PM

சா

# மெய்ப்பாட்டியல்

– தொல்காப்பியர்

P89YFX



**நுழையும்முன்**

இலக்கியத்தைப் படிக்குந்தோறும் அதன் பொருளை ஆழப்படுத்தும் வகையில் காட்டப்படும் உணர்ச்சி வெளிப்பாடே சுவை என்னும் மெய்ப்பாடு. "சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்" என்பார் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர். 'கவி கண்காட்டும்' என்றும் அவர் குறிப்பிடுகிறார். நாடகத்தில் நடிப்பவரிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகள், காண்பவரிடத்திலும் உணர்வுகளைத் தோற்றுவிக்கும். இலக்கியத்தில் வரும் செய்தி கண்ணெதிரே தோன்றுமாறு காட்டப்படுவதே மெய்ப்பாடு, இலக்கியத்தின் வடிவமும் பொருளும் சார்ந்த மெய்ப்பாடு மிகச் சிறந்த அழகியல் கோட்பாடு.

*நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.*

*தொல்– (1197)*

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| நகை | - | சிரிப்பு |
| இளிவரல் | - | சிறுமை |
| மருட்கை | - | வியப்பு |
| பெருமிதம் | - | பெருமை |
| வெகுளி | - | சினம் |
| உவகை | – | மகிழ்ச்சி |

## நூற்பா பொருள் :

சிரிப்பு, அழுகை, சிறுமை, வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி என்று மெய்ப்பாடு எண்வகைப்படும்.

## இலக்கணக் குறிப்பு

**நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை** – தொழிற்பெயர்கள்



## உறுப்பிலக்கணம்.

நகை = **நகு + ஐ**
நகு – பகுதி (நகை ஆனது விகாரம்)
ஐ – தொழிற்பெயர் விகுதி

மருட்கை = **மருள் + கை**
மருள் – பகுதி ('ள்' 'ட்' ஆனது விகாரம்)
கை – தொழிற்பெயர் விகுதி

வெகுளி = **வெகுள் + இ**
வெகுள் – பகுதி
இ – தொழிற்பெயர் விகுதி

### மெய்ப்பாடுகளை விளக்கும் இலக்கிய எடுத்துக்காட்டுகள்

#### நகை (சிரிப்பு):

**பாடிய பாணனின் குரலை எள்ளி நகையாடிய தலைவியின் கூற்று இது**

*ஈட்டுபுகழ் நந்தி பாணநீ! எங்கையர்தம்*
*வீட்டிருந்து பாட விடிவளவும் – காட்டிலழும்*
*பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார், தோழி*
*நாயென்றாள், நீ என்றேன் நான்!*
*(நந்திக்கலம்பகம் – 13 (மிகைப்பாடல்))*

**பாடலின் பொருள்:**

"புகழ்மிக்க தலைவனின் புகழ்பாடுவோனே! நீ எங்கள் வீட்டின்முன் இரவு முழுவதும் பாடினாய். அதைக்கேட்டு என் தாய், விடியவிடியக் காட்டில் அழும் பேய் என்றாள்; பிறர், நரி ஊளையிட்டது என்றனர்; தோழியோ, நாய் குரைத்தது என்றாள்; இல்லை நீ என்றேன் நான்".

#### அழுகை :

**தலைவன் காட்டில் புலியுடன் போராடி இறந்துபட, தலைவி துயரில் கூறுவது.**

*ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே*
*அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்*
*என்போல் பெருவிதிர்ப்பு உறுக, நின்னை*
*இன்னாது உற்ற அறனில் கூற்றே! (புறம் – 255)*

**பாடலின் பொருள் :**

போரில் இறந்துபட்ட தலைவனின் உடலைப் பார்த்து தலைவி, ஐயோ எனக் கதறினால், காட்டில் உள்ள புலி வந்துவிடுமோ என அஞ்சுகின்றேன். தூக்கி எடுத்துச் செல்லலாம் என்றால் அகன்ற மார்பு கொண்ட உன்னைத் தூக்கவும் இயலாது. இவ்வாறு துன்புறும் வண்ணம் செய்ததே கூற்றம். அக்கூற்றம் என்னைப்போல் துன்புறட்டும்.

#### இளிவரல் (சிறுமை) :

சேரன் கணைக்காலிரும்பொறை சிறையில் தண்ணீர் கேட்டு, காலம் தாழ்த்தித் கொடுத்ததால் அதை அருந்தாமல் தவிர்த்துத் தனக்கேற்பட்ட சிறுமையை எண்ணிப் பாடியது

*தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய*
*கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்,*
*மதுகை இன்றி, வயிற்றுத்தீத் தணியத்*
*தாம் இரந்து உண்ணும் அளவை*
*ஈன்ம ரோ, இவ் உலகத் தானே (புறம் 74)*

**பாடலின் பொருள் :**

"நாயைக்கட்டுவது போலச் சங்கிலியினால் கட்டிவைத்து, என்னைத் துன்புறுத்திச் சிறையிலிட்டனர். அப்படிச் சிறையிலிட்டவரின் உதவியினால் வந்த தண்ணீரை மனவலிமையின்றி இரந்து உண்ணுபவரை இவ்வுலகில் அரசர் எனப் போற்றுவார்களா?"

#### மருட்கை (வியப்பு) :

கண்ணகி வானூர்தியில் வானுலகு சென்ற காட்சியைக் கண்ட குன்றவர்கள் அடைந்த வியப்பு

*திருமா பத்தினிக்கு*
*அமரர்க்கு அரசன் தமர்வந்து ஈண்டி அவள்*
*காதல் கொழுநனைக் காட்டி, அவளொடு எம்*
*கண்புலம் காண விண்புலம் போயது*
*இறும்பூது போலும்... (சிலம்பு. பதிகம்)*

**பாடலின் பொருள்:**

"இந்திரன் கோவலனோடு வந்து பத்தினியாகிய கண்ணகியை, விண்ணுலகு அழைத்துச்சென்ற வியப்பான காட்சியை நாங்கள் கண்டோம்".

#### அச்சம் :

**யானை சினந்து வர மகளிர் நடுங்கி அஞ்சியதை வெளிப்படுத்துதல்**

*மையல் வேழம் மடங்கலின் எதிர்தர*
*உய்வு இடம் அறியேம் ஆகி, ஒய்யென*
*திருந்து கோல் எல்வளை தெழிப்ப, நாணு மறந்து*
*விதுப்புறு மனத்தேம், விரைந்து அவற் பொருந்தி,*
*சூர் உறு மஞ்ஞையின் நடுங்க (குறிஞ்சிப்பாட்டு 165–168)*

**பாடலின் பொருள் :**

"மதம்பிடித்த யானை மரங்களை முறித்தது. கார்கால மேகம் இடிப்பதுபோல

முழங்கியது. உயிர் பிழைப்பதற்கு வேறு இடம் காணவியலாமல் மன நடுக்கம் அடைந்தோம். உயிரினும் சிறந்த நாணத்தைக் காக்க மறந்தோம். வளையல்கள் ஒலிக்க விரைந்து ஓடிச்சென்று அவனைச் சேர்ந்து மயில்போல் நடுங்கி நின்றோம்".

### பெருமிதம் (பெருமை):

பெருவீரன் ஒருவன் தனியாகப் பெரும்படையை எதிர்க்கும் பெருமிதத்தைக் குறிப்பிடுதல்

*உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின்*
*சிறுசுடர் முற்பேர் இருளாங் கண்டாய் –*
*எறிசுடர்வேல்*
*தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே*
*நின்னோடு*
*பாங்கலா மன்னர் படை – (பு.வெ.மா – 8)*

**பாடலின் பொருள் :**

எறிதற்குரிய ஒளிமிக்க வேலினையும் தேன்நிறைந்த பூமாலையினையும் உடைய தேர்வேந்தனே! வாளுடன் பகையரசனின் பெரும்படையை நான் தடுப்பேன். என்முன் அப்பெரும்படை சிறுவிளக்கின்முன் இருள் ஓடுவதுபோல ஓடும்.

### வெகுளி (சினம்) :

தன்னை இளையவன் என்று எள்ளிய பகைவேந்தர் மீது பாண்டியன் நெடுஞ்செழியன் சினம் கொண்டு வஞ்சினம் கூறுதல்

*உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்*
*சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை*
*அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு*
*ஒருங்கு அகப்படேஎன் ஆயின் (புறம்.72)*

**பாடலின் பொருள் :**

"சிறுசொல் சொல்லிய சினம்மிக்க வேந்தரை வென்று அவர்கள் சிதறி ஓடுமாறு, போரிட்டு அவர்களது முரசையும் ஒருங்கே கைப்பற்றுவேன்".

### உவகை (மகிழ்ச்சி) :

மழை மேகத்தைக் கண்ட மயில் போல நீலவண்ணனாகிய கண்ணனைக் கண்ட குந்தியின் மகிழ்ச்சி.

*மண்டல மதியமன்ன மாசறு முகத்தினாளுந்*
*திண்டிறன் மருகன்றன்னைச் சென்றெதிர் கொண்டுகண்டு*
*வெண்டிரை மகரவேலை விரிபுனன் முகந்து தோன்றும்*
*கொண்டலை மகிழ்ந்துகாணுங் குளிர்பசுந் தோகைபோன்றாள்*

**பாடலின் பொருள் :**

முழுநிலவு முகத்தாள் குந்தி, திறன் மிக்க மருமகன் கண்ணனை எதிர்கொண்டாள். வெள்ளலைகள் நிறைந்த நீலக் கடலின் நீரை முகந்து வரும் மேகத்தைக் கண்ட தோகை மயில்போல் மகிழ்ந்து வரவேற்றாள்.

*"உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்*
*மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே"*
*– செயிற்றியம்*

**நூல்வெளி**

நம்பாடப் பகுதி தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியலில் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியம் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் என்பதை அறிவோம். அது பழந்தமிழரின் நாகரிகச் செம்மையினைத் தெள்ளத்தெளிய விளக்கும் ஒப்பற்ற பெருநூலாகும். தமிழ்மொழியின் அமைப்பை விதிகளாக்கி விளக்குவதோடு தமிழ்க் கவிதையியலின் நுட்பங்களையும் பேசுகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் கவிதைகளுக்கான பொருண்மை, உறுப்புகள், உத்திகள், அழகு ஆகியவற்றைச் சிறப்புற எடுத்தியம்புகிறது. தொல்காப்பியத்தின் ஆசிரியரான தொல்காப்பியரைத் தமிழ்ச் சான்றோர், 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன்' என்று போற்றுகின்றனர். நூல் முழுமைக்கும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார்.

**கற்பவை கற்றபின்...**

1. நீவிர் பார்த்த திரைப்படம் ஒன்றில் வெளிப்பட்ட மெய்ப்பாடுகள் குறித்து எழுதுக.
2. எண்வகை மெய்ப்பாடுகளுக்கு ஏற்ற திரையிசைப் பாடல்களின் தொகுப்பு ஒன்றை உருவாக்குக.



XII Std Tamil Chap_06.indd 143 2/22/2019 1:41:55 PM

விரிவானம்

கலை

சா

## நடிகர் திலகம்

Q32SGX

– பாலச்சந்திரன் சுள்ளிக்காடு




நடிப்புலகின் சக்கரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜிகணேசன். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு உயிர் அளித்துத் தன் வசனத்தாலும் உடல் அசைவுகளாலும் உருட்டுவிழி நகர்வாலும் காண்பவர்களைக் கட்டிப்போட்டுவிடுகின்ற கலைஞர். நவரச உணர்வுகளைத் தன் முகக் குறிப்புகளாலும் உடல் மொழிகளாலும் சிறப்பாக வெளிப்படுத்தி நடித்த மகா நடிகன். இத்தகைய சிறப்புகளைப் பெற்றுத் தமிழ்த் திரையுலகின் அடையாளமாக விளங்கும் செவாலியே சிவாஜி கணேசன் பற்றி அறிவது நடிப்புக்கலையைப் பற்றி அறிவதாகும்.

***"இன்று மதியம் மிகச் சரியாக மூன்று மணிக்கு ராதா பிக்சர்ஸ் பேலசின் வெள்ளித் திரையில் தென்னிந்தியத் திரைப்பட நடிப்புச் சக்ரவர்த்தி, தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ்க்கொடி நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்கும் தங்கப் பதக்கம்".***

*நீங்கள் இப்போது கேட்ட விளம்பரம் முப்பது வருடங்களுக்கு முன்பு கேரளத்தின் மிக முக்கியமான நகரத்தின் தெருக்களில் ஆட்டோ ரிக்சாவின் மேல் தடித்த உச்சஸ்தாயில் முழங்கிய ஒரு இளைஞனின் குரல். ஒரு நேரச் சாப்பாட்டுக்காகவும் ஐந்து ரூபாய்க் கூலிக்காவும் சினிமா விளம்பரம் செய்து, உதய அஸ்தமனம் வரை ஊர் சுற்றிக் கொண்டிருந்த அந்த 18 வயது பையனின் பெயர் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு.*

*இருபது வருடங்களுக்குப் பிறகு சென்னையில் அரண்மனை போன்ற சிவாஜி கணேசனின் வீட்டிற்குள் அவரோடு ஒன்றாக உணவு அருந்தியபோது, கேரள நகரின் வீதிகளில் குரல் விற்றுப் பிழைத்த அந்தப் பழைய பையன் என் நினைவலைகளில் மிதந்தான்.*

*1986 இல் நான் 'ருதுபேதம்' என்ற திரைப்படத்தின் ஐம்பதாம் நாள் விழாவில்தான் முதன்முதலில் அவரைச் சந்தித்தேன். சிவாஜிகணேசன் தலைமை ஏற்றிருந்த அந்நிகழ்ச்சியில் நானும் ஒரு பேச்சாளராக இருந்தேன்.*

*1995இல் நண்பர் வி.பி.கெ. மேனன் ஒரு படம் எடுக்கத் தீர்மானித்தார். அதில் முக்கியமான வேடமேற்று நடிக்க சிவாஜிகணேசனும் மோகன்லாலும் சம்மதித்திருந்தார்கள். திரைக்கதை ஜான்பால்; 'ராஜீவ்நாத்'தான் படத்தின் இயக்குநர்.*

*ஒரு நாள் காலையில் ராஜீவ்நாத் என்னிடம் சொன்னார்: "இன்னைக்குச் சாயங்காலம் சிவாஜிகணேசன், அவருடைய வீட்டுக்கு இரவு விருந்துக்கு நம்மைக் கூப்பிட்டிருக்கார்". அன்று மாலை ஜான்பாலும் நானும் ராஜீவ்நாத்துடன் சிவாஜி கணேசனின் வீட்டுக்குப் போனோம்.*

"என்னைப் போல் சிவாஜி நடிப்பார் . ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது"
– மார்லன் பிராண்டோ (ஹாலிவுட் நடிகர்)

வீடென்றா சொன்னேன்; இல்லை அது ஓர் அரண்மனை. சிற்ப வேலைப்பாடுகள் செய்த மிகப் பெரிய கதவைத் தாண்டி உள்ளே நடந்ததும் விசாலமான ஒரு தளம் நம்மை வரவேற்கிறது. அங்கே தங்கத்தால் இழைத்த இரண்டு பெரிய யானைத் தந்தங்கள் இருந்தன. இடப்புறத்தில் மேலே செல்ல, பெரிய மாடிப்படிகள்.

வேலைக்காரர் எங்களை மேலே வருமாறு பணித்தார். இயல்பாய் மாடி ஏறிய நான் ஒரு திருப்பத்தில் நடுங்கிப்போய்க் கையெடுத்துத் தலைகுனிந்து வணங்க முற்பட்டேன். அங்கே சுவரில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வேடத்தில் வீரத்தையும் கம்பீரத்தையும் கொட்டி முழங்கிய சிவாஜிகணேசனின் ஆயில் பெயிண்ட் செய்யப்பட்ட படம். அடுத்த திருப்பத்தில் உடைவாள் உருவின நிலையில் சத்ரபதி சிவாஜி. வலது பெருவிரலால் மீசை முறுக்கி மந்தகாசப் புன்னகையுடன் நிற்கும் ராஜராஜசோழன் ஒரு புறம். ஒரு புறம் கண்ணாடி அறைக்குள் பிரெஞ்சு அரசு சிவாஜி கணேசனின் நடிப்பைப் பாராட்டி அளித்த செவாலியர் விருதுடன் கூடிய மிகப் பெரிய வெள்ளைக் குதிரை.

எல்லாம் பார்த்து இரசித்தபடியே நாங்கள் சோஃபாக்களில் அமர்ந்தோம். மாம்பழச் சாறு வந்தது. அதைக் குடித்து முடித்தபோது மனைவியும் வேலை ஆட்களும் இருபுறமும் நடந்து வர சாட்சாத் சிவாஜி கணேசன் எங்களைப் பார்த்து வந்துகொண்டிருந்தார்.

ஒரே சீராய் அடி எடுத்து வைத்து, ஒவ்வொரு பாத அடி வைக்கும் போதும், மறுதோள் முன்னோக்கிச் சாய, தலை நிமிர்ந்து, நெஞ்சு விரித்து, இசைக்கு அசைப்பது போலக் கைகள் வீசி, பார்வை இமை அசையாது மெல்ல மெல்லச் சிங்க நடை நடந்து வரும் அந்த மகாநடிகனைப் பார்த்தபொழுது ராஜராஜ சோழனின் வருகையைப் பார்த்த தமிழ்நாட்டுத் தெருப்பிள்ளைகளைப் போல நான் துள்ளி எழுந்தேன். அவர் ஒரு ராஜநடை நடந்து வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார். நானும் ராஜீவ்நாத்தும் அவரின் காலில் விழுந்து வணங்கினோம்.

வலது கையால் ஆசீர்வாதம் செய்த சிவாஜிகணேசன் "உட்காருங்கோ" என்றார்.



நாங்கள் உட்கார்ந்தோம். "என்ன ராஜீவ் என்ன சமாச்சாரம்? கதை ரெடியாயிடிச்சா?" என்றார்.

அவர்கள் கதையைப் பற்றியும் கதாபாத்திரத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்க நான் சிவாஜிகணேசனின் புருவங்களையும் கண்களையும் முக அபிநயங்களையும் உதடுகளையும் கைவிரல்களையும் தாள, லய அபிநயங்களையும், சலனங்களையும் பார்த்துக்கொண்டு நிசப்தனாய் அமர்ந்திருந்தேன்.

ஊழித் தாண்டவமாடும் ருத்ரன், கவச குண்டலம் கொடுத்த கர்ணன், காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த கவிகுல குரு காளிதாசன். அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த் தமிழ் மண்ணின் வீர தீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜசோழன் என சிவாஜிகணேசனின் கதாபத்திரங்கள் என் மன அடுக்குகளில் மின்னிமறைந்தனர்.

திரைக்கதைபற்றிய அவர்களின் உரையாடல் முடிந்ததும் ராஜீவ்நாத்திடம் கேட்டார்

"இந்தப் பையன் யாரு?" நான் ஒரு மலையாளக் கவிஞன் என்று ராஜீவ்நாத் என்னை அறிமுகப்படுத்தினார். சட்டென என் முன்னால் இருகைகளையும் கூப்பி அவர் மென்மையாய்ச் சொன்னார்.

" கவிஞரா? வணக்கம் "

எனக்கான மரியாதை அல்ல அது , காவியக் கலையிடம் மூத்த திராவிடனுக்கு இருக்கும் ஆழ்ந்த ஆதரவையும் மரியாதையையும்தான் அவர் காண்பித்தது என்பதைப் புரிந்துகொள்ளும் தெளிவு எனக்கு இருந்தது.

" உள்ளே போகலாம் "அவர் எழுந்தார். நாங்கள் பின் தொடர்ந்தோம்.

எகிப்தின் முன்னாள் அதிபரான நாசர், நடிகர்களான பால் ம்யூனி, ஓமர்ஷெரீப், ரிச்சர்ட் பர்ட்டன், ப்ரதீப், ராஜ்கபூர் போன்ற உன்னதமான நண்பர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களைச் சிவாஜிகணேசன் எங்களுக்கு ஒவ்வொன்றாய்க் காண்பித்தார். அவர் வாழ்வினில் நடந்த சில விஷயங்கள் குறித்து எங்களோடு பகிர்ந்துகொண்டார்.

கணேசன் பிறந்த ஊர் விழுப்புரம். சின்னையா கணேசன் என்பதுதான் அவர் பெயர். ஆங்கிலேயரால் சிறை சென்ற தனது தந்தையை ஒன்பதாவது வயதில்தான் கணேசன் முதன்முதலில் பார்த்தார். அவர் பள்ளிக்கூடத்தில் படித்ததேயில்லை. ஐந்து வயதாகும்போதே குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். இளம்பருவத்திலேயே தமிழ்நாட்டின் மிகச்சிறந்த நாடக நடிகன் என்று பெயரெடுத்தார்.

அண்ணாதுரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அதைப் பார்த்த பெரியார், வி.சி. கணேசனுக்கு 'சிவாஜிகணேசன்' என்று பெயரிட்டார். அந்தப் பெயரே அவருக்கு நிலைத்தும்விட்டது.

அந்தக் காலத்தில் பாலக்காடு, கொச்சின், திருவனந்தபுரம் போன்ற கேரள நகரங்களிலெல்லாம் சிவாஜி கணேசன் நாடகம் நடித்துள்ளார்.

அவர், 'பராசக்தி' என்ற திரைப்படத்தில் நடிக்க, முதன்முதலில் ஏ.வி.எம். ஸ்டுடியோவுக்கு வருகிறார். பராசக்தியின் வெற்றி அவரைத் திரைப்படத்துறையின் உச்சாணிக்கொம்பில் மலரச்செய்து அழகுபார்த்தது. மிகவும் பிஸியானதிரைப்பட நடிகனாக இருந்தபோதும் ஐம்பதுவயது வரை சொந்தமாக நாடகக் கம்பெனி நடத்தி, அரங்கங்களில் நடித்தும் வந்தார்.

"அரங்கத்து நடிப்போடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது என்னுடைய சினிமா நடிப்பு ஒண்ணுமேயில்ல. சரித்திரத்திலும் புராணங்களிலும் வரும் வீரபுருஷர்களைத் தத்ரூபமாய் நடித்து அவர்களை எங்கள் நாட்டின் சாமானியப்பட்டவர்களும் ஏழைகளுமான மக்களின் இதயத்தில் குடிபுகச் செய்தேன். இதுதான் இந்த நாட்டிற்கு நான் செய்த கலாச்சாரப் பங்களிப்பு. என் நாடு என்னை ஒரு நாளும் மறக்காது". இப்படிப் பேசி நிறுத்தியபோது அறுபத்து ஐந்து ஆண்டுகளாக அபிநயக் கலையின் அபார சமுத்திரத்தில் கப்பலோட்டிய அந்தத் தமிழனின் முகத்தில் தெரிந்த ஆத்ம திருப்தியை வர்ணிக்க என்னுடைய எளிய வார்த்தைக்குச் சக்தியில்லை.

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற திரைப்படம்தான் சிவாஜிகணேசனை உலக பிரசித்தி பெற்ற நடிகனாய் மாற்றியது. ஆனாலும் அவர், 'கட்டபொம்மன் நாடகம்தான் பிரமாதம். படம் ஒண்ணுமேயில்லை' என்றார்.

பல நாடகங்களில் அதிக வேலையுள்ள பெரும் பாத்திரங்களை ஏற்று நான் நடித்திருக்கிறேன். ஆனாலும், இந்த கட்டபொம்மனில் எனக்கு இயற்கையாக எழும் உணர்ச்சி நாடக முடிவில் எத்தகைய களைப்பை, சிரமத்தை உண்டாக்குகின்றது என்பதை நினைக்க எனக்குப் பயமாகவே இருக்கிறது. என்றாலும் எனது குழுவினர்களோடு நாடக நாள்களில் ஒன்றுபட்டுச் செயல்படுவதில் காணும் இன்பமும், மக்களின் பாராட்டுதலை நேருக்குநேர் பெறும் வாய்ப்பும், எனக்கு எதிலும் பெற முடியாத ஒரு தனி மகிழ்ச்சியைத் தருகிறதென்ற உண்மை ஒன்றே எனக்குக் கிடைக்கும் பெரும் ஆறுதலாகும்.

–நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

"அந்த நாடகத்தின் வசனம் ஏதும் ஞாபகம் இருக்கிறதா"? ராஜீவ்நாத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்.

"தலைபோனாலும் மறக்கமுடியுமா ?"

ஒரு வசனம் எங்களுக்காகச் சொல்லமுடியுமா ?

ராஜீவ்நாத் கேட்ட கேள்வியால் நான் பயந்துபோனேன். யாரிடம் இதைக்கேட்கிறோம் என்று ராஜீவ் யோசிக்கவில்லையா? அவரை சிவாஜி கணேசன் கோபித்துக் கொள்வார் என்றே நான் நினைத்தேன். ஆனால் நம்பமுடியாத அந்த அதிசயம் அப்பட்டமாய் நிகழ்ந்தேறியது.

சிவாஜிகணேசன் சிறிது நேரம் கண்மூடிக் கைகூப்பி அமர்ந்திருந்தார். பிறகு மெதுவாகக் குனிந்து, இடது கையால் வேட்டியின் தலைப்பைப் பிடித்து, மெதுவாக நிமிர்ந்து சட்டென விஸ்வரூபமெடுத்தது போலத் திரும்பி நின்றார். நாங்கள் மிரண்டு போனோம். உயரம் குறைவான, வயதான, எங்களிடம் இவ்வளவு நேரம் இயல்பாய் பேசிக்கொண்டிருந்த சிவாஜிகணேசனல்ல அது. மனித ஆத்மாவை நடுநடுங்க வைத்த வீரபாண்டிய கட்டபொம்மன்தான் அது. சூரியன் அஸ்தமனம் ஆகாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான ஜாக்சன் துரைக்கு நேராக ஆதித் தமிழக வீர பௌருஷத்தின் சிங்கக் கர்ஜனை முழங்கியது.

"நீ ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா? கஞ்சிக்கலயம் சுமந்தாயா ? அங்கு கொஞ்சி விளையாடும் எங்கள் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? நீ என்ன எனக்கு மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே".

தமிழக மக்களைச் சிலிர்த்தெழச் செய்த உலகப் பிரசித்தி பெற்ற அந்த வசனத்தைக் கொஞ்சமும் மறக்காமல் ஏற்ற இறக்கத்துடன் ஒரே மூச்சில் சொல்லி முடித்து, நெற்றியில் வியர்வையை வடித்துவிட்டு சிவாஜி கணேசனாய்ச் சுருங்கி சோஃபாவில் திரும்பி வந்து உட்கார்ந்து எங்களை ஆழமாக ஒரு முறை பார்த்தார். ஜான்பாலும் ராஜீவ் நாத்தும் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

**சிவாஜிகணேசன் பெற்ற விருதுகள்**

ஆப்பிரிக்க – ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ) சிறந்த நடிகருக்கான விருது

கலைமாமணி விருது

பத்ம ஸ்ரீ விருது (தாமரைத் திரு)

பத்ம பூஷன் விருது (தாமரை அணி)

செவாலியர் விருது

தாதாசாகெப் பால்கே விருது

"மலையாளத்தில் சரித்திர புராண நாடகங்கள் இல்லையா ?"

சிவாஜி கணேசன் கேட்டபோது ஜான்பாலும் ராஜீவ்நாத்தும் நானும் ஒரு நிமிடம் தலைகுனிந்து உட்கார்ந்தோம்.

" இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு சி.என். ஸ்ரீகண்டன் சாகேதம் , கஞ்சன சீதா, லங்காலக்ஷ்மி என்று மூன்று நாடகங்கள் எழுதியிருக்கிறார்". மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ராஜீவ்நாத் சொன்னார் "லங்காலக்ஷ்மியில் இராவணின் வசனம் முழுவதும் பாலன் பாக்காம சொல்வான்" – என்னைப் பார்த்து ஜான்பால் சொன்னார்.

"ராவணனின் இரண்டு வசனத்தை எடுத்துவிடுடா பாலா, சிவாஜி சார் கேட்கட்டும்"

ராஜீவ்நாத் ஆவேசத்தோடு சொன்னார்.

நான் பதறிப்போனேன். சிவாஜிகணேசனின் வீட்டிற்குப்போய் அவரிடமே நாடக வசனம் சொல்வதா ? "

"சும்மா எடுத்துவிடடா இங்க என்ன பாக்கறே "

ராஜீவ்நாத் மறுபடியும் என்னைத் தூண்டினார். நான் பதுங்கிப் பதுங்கி அமர்ந்து பார்த்தேன் .

"சொல்லப்பா, இங்க நாம நண்பர்கள் மட்டும்தானே இருக்கோம். எதுக்கு வெட்கப்படறே?" சிவாஜி கணேசன் உற்சாகப்படுத்தினார். வாத்சல்யத்தோடு அதில் எனக்குத் தைரியம் வந்தது. எழுந்து நடிப்புச் சக்ரவர்த்தி சிவாஜி கணேசனின் காலைத் தொட்டு வணங்கினேன். அவர் என் தலையில் கை வைத்து வாழ்த்தினார்.



XII Std Tamil Chap_06.indd 147 2/22/2019 1:41:56 PM

திருவிளையாடலில் ருத்ர தாண்டவமாடிய சிவாஜி கணேசனை இதயத்தில் தியானித்து , சிவபக்தனான ராவணனின் ஆக்ரோஷமான உத்தரவுகளைக் கீழ்ஸ்தாயில் நான் ஆரம்பித்தேன். மெல்ல மெல்ல இராவணன் என்னை ஆகர்ஷித்து ஆவேசப்படுத்தினான்.

"இலங்கையில் போர்க்கொடிகள் பறக்கட்டும். எதிரிகளைத் தடுக்க ஆயத்தமாகலாம். கோட்டை வாயிலில் மகரட்சன். கிழக்கிலும் மேற்கிலும் சுகசாரணர்கள் நிற்கட்டும். தெற்கில் நிகும்பன், அகம்பானன் முன்னணியில் படை போக ஆரம்பிக்கட்டும். பிரகஸ்தன் படையின் பின்னால் வந்து யுத்த நிலையைக் கணிக்கட்டும். தூம்ராட்சன் எதிரிப் படைகளின் பின்னாலிருந்து அழித்து வரட்டும். வலத்தில் மகா பார்ஷ்வன். இடத்தில் மகோதரன். யானை ஆயிரம், ரதம் ஆயிரம், குதிரைகள் இரண்டாயிரம், காலாட்படை ஒரு கோடி, ஆ……… நானே வெல்வேன்."

நான் சொல்லி முடித்ததும் தான் ஒரு மாபெரும் நடிகன் என்பதையெல்லாம் ஒதுக்கிவிட்டு முதன்முதலாய் ஒரு நாடக வசனத்தைக் கேட்கும் சாதாரண மனிதனைப் போலக் கைதட்டினார் சிவாஜிகணேசன். என் குரல் நன்றாக இருப்பதாகப் பாராட்டவும் செய்தார்.

"இராவண வேடத்தில் நீங்கள் நடித்தால் நன்றாக இருக்கும்." ராஜீவ்நாத் சிவாஜியிடம் சொன்னார். "என்ன பண்றது ? மலையாளம் தெரியாதே; வயசும் ஆயிடுச்சு?"

ஒரு கதாபாத்திரத்தை இழந்த நடிகனின் நிராசை உதட்டிலும் குரலிலும் படர சிவாஜிகணேசன் சொன்னார். பிறகு அவர் எங்களை விசாலமான சாப்பாட்டு அறைக்கு அழைத்துச்சென்றார். அங்கே அவர் மனைவி கமலா அம்மா பலவிதமான, தரமானதொரு விருந்தினை ஏற்பாடு செய்துவிட்டு எங்களுக்காய்க் காத்திருந்தார். சிவாஜி கணேசனும் எங்களோடு அமர்ந்தார். அவர் மனைவி உணவை எங்களுக்குப் பரிமாறினார்.

திரும்பி வரும்போது வாசல் வரை வந்து அந்தத் திராவிடத் தம்பதிகள் எங்களை வழியனுப்பினார்கள். இரவு வணக்கம் சொல்லிக் கையசைத்து நிற்கும் சிவாஜிகணேசனையும் அவரின் மனைவியையும் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே வந்தேன்.

சீறிப்பாயும் காரில் உட்கார்ந்திருந்திருக்கும் போது என் இதயத்தில் தெருக்களில் குரல்விற்றுப் பிழைத்த அந்தப் பழைய பையனின் சப்தம்.

"தென்னிந்திய நடிப்புச் சக்கரவர்த்தி , தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ்க் கொடி, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடிக்கும்….."

## நூல்வெளி

இப்பாடப்பகுதி, மலையாளக் கவிஞரும் நடிகருமான பாலச்சந்திரன் சுள்ளிக்காடு எழுதிய 'சிதம்பர ஸ்மரண' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. இவர் எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியில் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர். இவரின் இந்நூலை கே.வி.சைலஜா 'சிதம்பர நினைவுகள்' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## கற்பவை கற்றபின்...

1. பராசக்தி, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், திருவிளையாடல் போன்ற திரைப்படங்களில் இடம்பெற்ற சிவாஜிகணேசனின் வசனங்களை உரிய உச்சரிப்புடன் பேசி வகுப்பறையில் நடித்துக் காட்டுக.
2. உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை எழுதுக



XII Std Tamil Chap_06.indd 148 2/22/2019 1:41:56 PM

# காப்பிய இலக்கணம்

QHKMI9

காப்பியம் என்று சொன்னதும் ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை மடமடவென்று சொல்லிவிடுவீர்கள். காப்பியங்கள் என்பவை நீண்ட கதைப்போக்கு உடையவை என்பதை அறிந்திருப்பீர்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய நூல்களைக் கீழ்வகுப்புகளில் படித்தும் கதைகளைக் கேட்டும் இருப்பீர்கள். ஐம்பெருங்காப்பியங்களைப் போலவே ஐஞ்சிறுகாப்பிய வகைகளும் தமிழில் உண்டு என்பதை அறிவீர்களா ? எதன் அடிப்படையில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என வகைப்படுத்தப்படுகிறது?

## பெயர்க்காரணமும் சொல்லாட்சியும்

காப்பியத்தை ஆங்கிலத்தில் EPIC என்பர். இது EPOS என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. EPOS என்பதற்குச் சொல் அல்லது பாடல் என்பது பொருள். இது வடமொழியில் காவியம் என வழங்கப்படுகிறது. காப்பியம் என்னும் சொல்லை, காப்பு + இயம் எனப் பிரித்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது என்றும் மொழியைச் சிதையாது காப்பது என்றும் காரணம் கூறுவர்.

## சொல்லாட்சியும் நூல்களும்

ஐம்பெருங்காப்பியங்கள் என்ற வகைமை எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. எனினும், உரைகளிலும் இலக்கிய நூல்களிலும் பஞ்சகாப்பியம், பஞ்சகாவியம் ஆகிய சொற்றொடர்களும் பெருங்காப்பிய நூல் வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், தம் உரையில் ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரையும் தமிழ்விடுதூது பாடிய புலவர் அந்நூலில் பஞ்சகாப்பியம் என்னும் சொற்றொடரையும் குறிப்பிடுகின்றனர். 'பொருள்தொகை நிகண்டு', திருத்தணிகை உலா ஆகிய நூல்கள், பெருங்காப்பியம் ஐந்து எனக் குறிப்பிட்டு அவற்றின் பெயர்களையும் வழங்கியுள்ளன. சிறுகாப்பியங்கள் ஐந்து என்று வழங்கும் வழக்கம் சி. வை. தாமோதரனார் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பது அவர் பதிப்பித்த சூளாமணி (1895) பதிப்புரையிலிருந்து அறிய முடிந்தது.

**காப்பியத்தைக் குறிக்கும் பிறபெயர்கள்**

பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மகாகாவியம்.

## காப்பிய அமைப்பு முறை

காப்பியச் சிற்றுறுப்புகளாக காதை, சருக்கம், இலம்பகம், படலம் முதலானவை சிற்றுறுப்புகளாக அமைந்திருக்கின்றன. காண்டம் என்பது பல சிற்றுறுப்புகளின் தொகுதியாக உள்ள பேருறுப்பைக் (பெரும்பிரிவு) குறிக்கும்.

| | | |
|---|---|---|
| காதை | – | சிலப்பதிகாரம், மணிமேகலை |
| சருக்கம் | – | சூளாமணி, பாரதம் |
| இலம்பகம் | – | சீவக சிந்தாமணி |
| படலம் | – | கந்தபுராணம், கம்பராமாயணம் |
| காண்டம் | – | சிலப்பதிகாரம், கம்பராமாயணம் |

## தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம்

வடமொழியில் 'காவ்யதரிசம்' என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல், 'தண்டியலங்காரமாகும்'. இந்நூலில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுக் காப்பிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

காப்பியங்கள் ஒரேவகைச் செய்யுளாலும் அமையும்; பல்வகைச் செய்யுட்களாலும் அமையும்.

"பாவிகம் என்பது காப்பியப் பண்பே"

(தண்டி. நூற்பா. 89)



XII Std Tamil Chap_06.indd 149 2/22/2019 1:41:56 PM

### பெருங்காப்பியம்

1. வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும். அவற்றுள் இரண்டோ மூன்றோ வரலாம்.

2. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பெருங்காப்பியத்தின் திரண்ட பொருளாக அமைந்திருக்க வேண்டும். எனினும் இவற்றுள் பாவிகத்திற்கு ஏற்றவண்ணம் ஒன்றும் பலவும் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும்.

3. தன்னிகர் இல்லாத் தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல்வேண்டும்.

4. மலை(1), கடல்(2), நாடு(3), நகர்(4), சிறுபொழுது(5-10), பெரும்பொழுது(11-16), கதிரவன் தோற்றம்(17), சந்திரனின் தோற்றம்(18) ஆகிய பதினெட்டு உறுப்புகளும் இயற்கை வருணனைகளாக அமைதல் வேண்டும்..

5. திருமணம் புரிதல், மக்களைப் பெற்றெடுத்தல், முடிசூடல் முதலான நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

6. அமைச்சர்களுடன் கலந்துரையாடல், தூது செல்லல், போர்ப் புரிய படைகள் அணிவகுத்தல், போர்நிகழ்ச்சி, வெற்றி பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுதல் வேண்டும்.

7. சந்தி எனப்படும் கதைப்போக்கு (தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்பவை) வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும்.

8. அமைப்பு முறையில் பெருங்காப்பிய உட்பிரிவுகளுள் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9. எண்வகைச் சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம் முதலான ஐம்பெருங்காப்பியங்களும் சிறப்பு வாய்ந்தவையே. எனினும், பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் சீவகசிந்தாமணியே என்பர்.

### சிறுகாப்பியம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.

### பாவிகம்

காப்பியத்தின் பண்பாகப் 'பாவிகம்' என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது. காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர். "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப" என்பது கம்பராமாயணத்தின் பாவிகம். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது சிலப்பதிகாரத்தின் பாவிகம்.

ஒருமொழியின் வளத்தைக் காப்பியங்களே புலப்படுத்தும் என்பர். எளிய நடை, இனியகதை, அழகியல், கற்பனை ஆகியவை ஒருசேர அமைந்த இலக்கிய வடிவமே காப்பியமாகும். காவியமானாலும் ஓவியமானாலும் இன்பம் தந்து வாழ்க்கையை உயர்த்த வேண்டும். இன்றைக்கு மனிதனுடைய எண்ணங்களும் சுவையுணர்ச்சியும் கற்பனை ஆற்றலும் விரிந்திருக்கின்றன. பண்பாட்டிற்கேற்ற மரபைத் தெரிந்துகொண்டு பழமைக்குப் புதிய உருவமும் புதுமைக்குப் பழைய உரமும் இணைந்த காப்பியங்கள் காலந்தோறும் தோன்றவேண்டும்.

அணிகளின் இலக்கணத்தைக் கூறும் நூல்களுள் முதன்மையானது தண்டியலங்காரம். இந்நூல் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை ஆகிய செய்யுள் வகைகளைக் கூறுகிறது. இந்நான்கனுள் தொடர்நிலை என்னும் வகை, காப்பியத்தைக் குறிப்பதாகும்.

தொடர்நிலை ஒரு பாடலையும் மற்றொரு பாடலையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள்வகையைக் குறிக்கும். இது பொருள்தொடர்நிலை, சொல்தொடர்நிலை என்று இருவகைப்படும்.

எ.கா. பொருள்தொடர்நிலை – சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

சொல்தொடர்நிலை – அந்தாதி இலக்கியங்கள்

✓ விருத்தம் என்னும் ஒரேவகைச் செய்யுளில் அமைந்தவை சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்.

✓ பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது சிலப்பதிகாரம்.

இருபதாம் நூற்றாண்டில் காப்பிய இலக்கணங்களுள் சிலவற்றைப் பின்பற்றி இயற்றப்பட்டதைக் குறுங்காப்பியம் அல்லது குறுங்காவியம் என்பர். இவற்றுள் சில, பிறமொழித் தழுவலாகவும் மொழிபெயர்ப்பாகவும் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| பாரதியார் | பாஞ்சாலி சபதம்<br>குயில்பாட்டு |
| பாரதிதாசன் | பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், புரட்சிக்கவி |
| கவிமணி | மருமக்கள் வழி மான்மியம் |
| கண்ணதாசன் | ஆட்டனத்தி ஆதிமந்தி<br>மாங்கனி, ஏசுகாவியம் |
| கவியோகி சுத்தானந்த பாரதியார் | பாரதசக்தி மகா காவியம் |
| புலவர் குழந்தை | இராவண காவியம் |

கற்பவை கற்றபின்...

1. சிலப்பதிகாரப் பாடப்பகுதியில் அமைந்துள்ள காப்பிய இலக்கணக்கூறுகளைக் கட்டுரையாக எழுதுக.

**இலக்கணத் தேர்ச்சி கொள்**

1. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர்

ஆ) மயிலைநாதர்

இ) ஆறுமுகநாவலர்

ஈ) இளம்பூரணர்

2. கூற்று 1: காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2: ஐப்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி

ஈ) இரண்டும் தவறு

3. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க :

அ) காதை – 1) கந்தபுராணம்

ஆ) சருக்கம் – 2) சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் – 3) சூளாமணி

ஈ) படலம் – 4) சிலப்பதிகாரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2

இ) 3, 4, 2, 1 ஈ) 4, 3, 1, 2

4. தவறான இணையைத் தேர்க

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | – | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | – | அகநானூறு |
| இ) கலிவெண்பா | – | தூது |
| ஈ) குறள்வெண்பா | – | திருக்குறள் |

**குறுவினா**

5. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

6. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

7. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக?

8. பாவிகம் – விளக்குக.



XII Std Tamil Chap_06.indd 151 2/22/2019 1:41:56 PM

## நம்மை அளப்போம்

RCDGJ9

**பலவுள் தெரிக.**

1. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகா மௌனம் – அடிகள் புலப்படுத்துவது

   அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்

   இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது.

2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்...
தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

   1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
   2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

   அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி

   இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

3. பொருத்துக

   அ) ஆமந்திரிகை – 1) பட்டத்து யானை

   ஆ) அரசு உவா – 2) மூங்கில்

   இ) கழஞ்சு – 3) இடக்கை வாத்தியம்

   ஈ) கழை – 4) எடை அளவு

   அ) 3142 ஆ)4213 இ)1234 ஈ) 4321

4. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

**குறுவினா**

1. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
2. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக
3. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
4. 'மூச்சு நின்று விட்டால்
பேச்சும்
அடங்கும்' – கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

**சிறுவினா**

1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
2. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
3. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக
4. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக



XII Std Tamil Chap_06.indd 152 2/22/2019 1:41:56 PM

நெடுவினா

1. திரைப்படைத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக

2. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக

3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

#### வை.மு. கோதைநாயகி (1901–1960)

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்') ஆவார்.



வை.மு. கோதைநாயகி
(1901–1960)

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று :

"என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம்... உலகம் பலவிதம்... என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே... பாட்டி சொல்லிய வசனங்களைவிடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள்... நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே!.. என்ன உலக விசித்திரம்!.. என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்."

('தபால் வினோதம்' குறுநாவலில் இருந்து)



XII Std Tamil Chap_06.indd 153 2/22/2019 1:41:57 PM

## தமிழாக்கம் தருக

*Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.*

## கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

எ.கா. கபிலன் திறமையானவர் என்று _____________ (குமரன்) தெரியும்.

கபிலன் திறமையானவர் என்று **குமரனுக்குத்** தெரியும்.

1. நேற்று முதல் _____________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு _____________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. முருகன் _____________ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
4. நம்முடைய _____________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

## பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

எ.கா. களம், கலம்.

போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில்நீர் தரப்பட்டது.

வலம், வளம்.

ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

1. புல் – புள்
2. உழை – உளை
3. கான் – காண்
4. ஊண் – ஊன்
5. தின்மை – திண்மை

## மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக

_______________________________

_______________________________

_______________________________

_______________________________

_______________________________

## இலக்கிய நயம் பாராட்டுக

*அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்*
*அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்*
*பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?*
*பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்*
*சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்*
*சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி*
*இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்*
*எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?*

**பாரதிதாசன்**





XII Std Tamil Chap_06.indd 154 2/22/2019 1:41:57 PM

**நான்கரைச் சக்கர வடிவம்**

*மேனி திடமே விடுமே!*
*மேடு விளையா டுவமே!*
*மேவ டுவோட சாருமே!*
*மேரு சாதுதூ தினிமே !*




**விளக்கம் :**

*காடு மேடு என்று பாராமல் நன்றாக விளையாடுவோம். அதனால், நம் உடம்பு (மேனி) திடமாகும். மேவிவரும் நோய்களும் (வடு) ஓட, இமயமலை (மேரு) போன்ற சான்றோர் பாராட்டும்படியான செய்தியும் (தூது) இனி மேவிவரும்.*

**உரிய இடத்தில் எழுதுக**

*தேடு தேனீபோ லாவதே*
*தேவ லாமென நாடுதே !*
*தேடு நாநய மாடுதே !*
*தேடு மாநிலை தேடுதே !*



**விளக்கம் :**

*பூக்கள் தோறும் தேனைத் தேடிஅலைகின்ற தேனீயைப் போல, சுறு சுறுப்பாகும் நிலைதான் சிறந்ததென்று நாட வேண்டும். எவரிடமும் நயத்தோடு பேசவேண்டும். இவ்வாறிருந்தால் உயர்ந்தோர் நம்மைத் தேடிவருவர்.*

**கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க:**

*வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...*

**அண்மையில் நீங்கள் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் ஒன்றின் திரைவிமர்சனத்தை அப்படத்தின் இயக்குநருக்கு கடிதமாக எழுதுக.**

**கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

*எ.கா. வானம், பற, நிலவு, தொடு – வானத்தில் பறப்போம்*
*பறந்து நிலவைத் தொடுவோம்*

1. சருகு, விழு, மண், அலை –
2. விண்மீன், ஒளிர், எரி, விழு –
3. குதிரை, வேகம், ஓடு, தாவு –
4. குழந்தை, நட, தளிர்நடை, விழு –
5. திரை, காண், கைதட்டல், மக்கள் –

### செய்து கற்போம்

பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் படங்களைத் தொகுத்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

### நிற்க அதற்குத் தக

### குறிப்பேடுகள் உருவாக்குதல், சேகரிப்பு, ஏதேனும் கலை பயிலல்

| | |
|---|---|
| கலைகளில் உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் எவை? காரணம் என்ன? | |
| நீங்கள் எந்தக் கலையில் வல்லவர்? | |
| ஏதேனும் கலை பயில நினைத்தால் உங்கள் தேர்வு எதுவாக இருக்கும்? | |
| பொழுதுபோக்காகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உண்டா? ஆம் எனில் எவையெவை எனக் குறிப்பிடுக.<br>எ. கா. அஞ்சல் தலை, நாணயங்கள் | |
| பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதிக் குறிப்பேடு தயாரிக்கும் வழக்கம் உண்டா? ஆம் எனில் அவை எத்தகையவை எனக் குறிப்பிடுக | |
| நாட்குறிப்பு எழுதுவீர்களா? ஆம் எனில் எத்தகைய குறிப்புகளை எழுதுவீர்கள்? | |

### படிப்போம் பயன்படுத்துவோம் (திரைத்துறை)

*Artist* – கவின்கலைஞர்

*Animation* – இயங்குபடம்

*Newsreel* – செய்திப்படம்

*Cinematography* – ஒளிப்பதிவு

*Sound Effect* – ஒலிவிளைவு

*Multiplex Complex* – ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்

### அறிவை விரிவு செய்

- எனது சுயசரிதை – சிவாஜி கணேசன்
- மெய்ப்பாடு – தமிழண்ணல்
- காப்பியத்தமிழ் – இரா. காசிராசன்
- அஜயன்பாலா – உலகத் திரைப்பட வரலாறு I, II, III
- செழியன் – உலக சினிமா I, II, பேசும் படம்
- அம்ஷன்குமார் – சினிமா இரசனை
- கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் – புதுமைப்பித்தன்

### இணையத்தில் காண்க

http://knowingyourself1.blogspot.com/2011/10/blog-post_08.html (நகுலன் கவிதைகள்)
https://ta.wikipedia.org/s/3t5x (ஆவணப்படம்)
https://www.youtube.com/watch?v=svvgz4Bt3Vo ( சிலப்பதிகாரம் – கண்ணகி)
https://ta.wikipedia.org/s/hc6 ( சிவாஜி)



XII Std Tamil Chap_06.indd 156 2/22/2019 1:41:57 PM

# திருக்குறள்

RRWBKK



## 43. அறிவு உடைமை

1. *அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்அழிக்கல் ஆகா அரண்.**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

2. *சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு.*

மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

3. *எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும். **(சொற்பொருள் பின்வரும் நிலையணி)**



XII Std Tamil Chap_06.indd 157 2/22/2019 1:41:57 PM

*4. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு.*

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

*5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை*
*அதிர வருவதோர் நோய்.**

பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

### 46. சிற்றினம் சேராமை

*6. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான்ஆம்*
*இன்னான் எனப்படும் சொல்.*

மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்; இப்படிப்பட்டவர் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

*7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்*
*அல்லல் படுப்பதூஉம் இல்.**

நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தைவிடத் துன்பத்தை தரும் பகையும் இல்லை.

### 67. வினைத்திட்பம்

*8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற.**

நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும்; மற்றவை எல்லாம் பயன்படா.

*9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்.**

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியது. சொல்லியபடி செய்து முடித்தல் அரியது.

*10. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்.*

எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர். **(சொற்பொருள் பின்வரும் நிலையணி)**

*11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு*
*அச்சாணி அன்னார் உடைத்து.**

ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக்கூடாது. பெரிய தேர்க்குச் சிறு அச்சாணிதான் இன்றியமையாதது.



XII Std Tamil Chap_06.indd 158 2/22/2019 1:41:57 PM

## 69. தூது

*12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை.**

தன்கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து, அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தையும் தக்க இடத்தையும் ஆராய்ந்து சொல்கின்றவரே சிறந்த தூதுவர்.

## 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

*13. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.*

தீக்காய்வார் அகலாது அணுகாது இருப்பதுபோல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். **(தொழில் உவமை அணி)**

*14. பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்*
*கெழுதகைமை கேடு தரும்.*

யாம் அரசர்க்குப் பழைமையான நட்புடையவராய் உள்ளோம் எனக் கருதித் தகுதி அல்லாதவற்றைச் செய்தால் அந்த உரிமை கேட்டினைத் தரும்.

## 89. உட்பகை

*15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக*
*கேள்போல் பகைவர் தொடர்பு.**

வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை; ஆனால் உறவுடையவர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

*16. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்*
*பாம்போடு உடன்உறைந் தற்று.*

அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது. **(உவமை அணி)**

## 93. கள் உண்ணாமை

*17. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்*
*நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.*

உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவர்.

*18. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்*
*குளித்தானைத் தீத்துரீஇ யற்று.*

கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.



XII Std Tamil Chap_06.indd 159 2/22/2019 1:41:57 PM

### 94. சூது

*19. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்*
*வறுமை தருவதுஒன்று இல்.*

ஒருவருக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

*20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்*
*கழகத்துக் காலை புகின்.**

சூதாடுமிடத்தில் ஒருவருடைய காலம் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும்.

#### கற்பவை கற்றபின்...

1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு.

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் – மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.



XII Std Tamil Chap_06.indd 160 2/22/2019 1:41:58 PM

4. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

5. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

6. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர்

ஆ) சொல்லியபடி செய்பவர்

இ) தூதுவர்

ஈ) உறவினர்

7. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பாம்போடு உடன் உறைந்தற்று | – | 1) தீக்காய்வார் |
| ஆ) செத்தார் | – | 2) சீர் அழிக்கும் சூது |
| இ) வறுமை தருவது | – | 3) கள் உண்பவர் |
| ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் | – | 4) உடம்பாடு இலாதவர் |

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்.

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்.

9. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை

ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு

ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

## குறுவினா

1. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.



XII Std Tamil Chap_06.indd 161 2/22/2019 1:41:58 PM

3. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

4. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

5. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?

6. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

7. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?

8. வறுமையும் சிறுமையும் தருவது எது?

9. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.

10. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

11. இலக்கணக் குறிப்புத் தருக.
ஒரீஇ, படுப்பதூஉம், சொல்லுதல்

12. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று – பொருள் கூறுக.

13. பெருந்தேர் – புணர்ச்சி விதி கூறுக.

**சிறுவினா:**

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

2. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

3. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

4. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

5. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

6. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?

7. சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.

**நெடுவினா.**

1. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

3. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.



XII Std Tamil Chap_06.indd 162 2/22/2019 1:41:58 PM

இயல் 7

# அருமை உடைய செயல்

*நாடு, அரசு, சமூகம், நிருவாகம்*



நாட்டின் நிருவாகத் திறனுக்கோர் சான்று – சோழர் காலக் குடவோலை முறை தேர்தல், உத்திரமேரூர் கல்வெட்டு

## கற்றல் நோக்கங்கள்

- தலைமைப் பண்பிற்கான தகுதிகள் குறித்துப் பகுத்தாய்தல், இலக்கியத்தில் பயின்றுள்ள வாழ்க்கைக்கான மேலாண்மைக்கூறுகளை அறிந்து நடைமுறைப்படுத்துதல்.
- மீண்டெழும் ஒரு சமூகத்தின் மனஎழுச்சிகளைக் கவிதைகளாக வெளிப்படுத்தும் திறன் பெறுதல்.
- தமிழரின் புலம்பெயர் வாழ்வையும் அதற்கான காரணங்களையும் அறிய முற்படுதல்.
- சான்றோரின் பட்டறிவு, ஆட்சி முறைக்குப் பயன்பட்டதைப் புறநானூற்றுப் பாடல் வழியாகப் புரிந்துகொள்ளுதல்.
- கல்வெட்டுகள் வரலாற்றை அறியத் துணைபுரிவதை அறிந்து அத்துறையில் ஆர்வம் கொள்ளுதல்.
- தொன்மங்களைப் பற்றிப் படித்தறிந்து படைப்புகளில் பயன்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ளுதல்.

## பாடப்பகுதிகள்

- இலக்கியத்தில் மேலாண்மை – வெ. இறையன்பு, இ.ஆ.ப
- அதிசய மலர் – தமிழ்நதி
- தேயிலைத் தோட்டப் பாட்டு – முகம்மது இராவுத்தர்
- புறநானூறு – பிசிராந்தையார்
- சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் – ஐராவதம் மகாதேவன்
- தொன்மம்



XII Std Tamil Chap_7.indd 163 2/22/2019 1:20:22 PM

உரைநடை உலகம்

நிருவாகம் ஏ

# இலக்கியத்தில் மேலாண்மை

– வெ. இறையன்பு இ.ஆ.ப

S7F6LW



**நுழையும்முன்**

இலக்கியம் நம் இதயத்தில் புதைந்து, எப்போது வேண்டுமானாலும் கிளர்ந்துவிடுகிற விதை. இலக்கியங்களில் மேலாண் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சொல்லப்பட்ட மேலாண் கருத்துகளையும் நிருவாக நெறிகளையும் நாம் உணரலாம். நாட்டின் முன்னேற்றம் மேலாண் சிந்தனையில் தொடங்குகிறது மேலாண்மைத் துறையில் தமிழர் பழங்காலத்தொட்டே சிறந்து விளங்குகின்றனர்.

மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் துளிர்க்கத் தொடங்கிவிட்டது. புராதன மனிதனிடம் குருத்துவிட்ட தலைமைப் பண்பும் வழிநடத்தும் இயல்புகளுமே அவனை இயற்கையோடு இயையவும் இடர்களைத் தாண்டி நீடிக்கவும் உதவின. இரண்டு கால்களில் நிமிர்ந்தபோது, அவனால் இன்னும் தீர்க்கமாகத் தன்னுடைய கட்டமைப்புகளைச் செதுக்க முடிந்தது. அவனால் குழுவாகச் செயல்பட்டு இயற்கையின் சீற்றங்களை எதிர்கொள்ள முடிந்தது. அவர்களில் ஒருவன் முன் நின்று அவர்களை ஒழுங்குபடுத்தவும் நிருவகிக்கவும் சாத்தியமானது. அவனால் தனக்குப் பொருத்தமான சுற்றுச்சூழ்நிலையைத் தானே உருவாக்கிக்கொள்ள முடிந்தது. தன்னைப் பிணைத்திருந்த சங்கிலிகளைத் தகர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவன் விடுதலை பெற முடிந்தது.

## நேர மேலாண்மை

மனிதனுடைய மேலாண்மைப் பண்பு, அவன் ஓய்வு நேரத்தை உருவாக்கத் தொடங்கியபோது உருவானது. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனுக்கு ஓய்வு என்பது கனவு. அவனது பொழுது, உணவு தேடுவதிலேயே கழிந்தது. விரைவாக வேலை செய்யக்கூடிய, பணியை எளிதாக்கக் கூடிய கருவிகளைச் செய்தபோது அவனால் ஓய்வு நேரத்தை உருவாக்க முடிந்தது. அவனுடைய ஓய்வுநேரம், சிந்திக்கவும் இன்னும் வளமான வாழ்க்கைக் கூறுகளை உண்டாக்கிக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தது. இன்று கூட அதிக நேரத்தை உருவாக்க முடிந்தவர்களே வரலாறு படைப்பவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திட்டமிடுவதை ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும். அன்றைய பணிகளை மன அடுக்குகளில் வகுத்துக்கொள்ள வேண்டும். சிறந்த நிருவாகியாக இருந்தால் கூட உரிய நேரத்தைத் தேர்ந்தெடுக்கவில்லையென்றால் வெற்றி கிடைக்காமல் போய்விடுகிறது. பல நேரங்களில் போர்களில் குறைவான படைவீரர்களுடன் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இதனைத் திருவள்ளுவர், ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும் என்றுஅழகாகத் தெளிவுபடுத்துகிறார்.

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின் (484)*

ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு 'மடியின்மை' என்னும் அதிகாரத்தின் வழியே திருவள்ளுவர் அட்டவணையே தருகிறார். புறநானூற்றின் இறுதிப் பாடலில் கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியைப் பற்றிப் பாடும்போது இரவின் கடையாமத்தில்



XII Std Tamil Chap_7.indd 164 2/22/2019 1:20:22 PM



ஆணையிடும் அரசனும் அடக்கத்துடன் கேட்கும் பணியாளரும்.. (நிருவாகத் திறன்) 17ஆம் நூற்றண்டு சுவரோவியம் திருநெல்வேலி

உறங்காமல் விழித்திருந்த மன்னனைப் பற்றிப் பேசி வியக்கிறார்.

> "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்
> உலகு காக்கும் உயர் கொள்கை
> கேட்டோன், எந்தை என் தெண்கிணைக் குரலே"
>
> (புறம் – 400)

என்று அந்தப் பாடல் குறிப்பிடுகிறது.

சீனத்தில் புழங்கும் உருவகக் கதையொன்று, நேர மேலாண்மை பற்றிக் கூறுகிறது.

சீனத்தில் யாங்செள என்கிற பகுதியில் பல இளைஞர்கள் நீச்சலில் தீரராக இருந்தனர். நீச்சல், தன்னம்பிக்கையைத் தருவதோடு வாழ்வில் எதிர்நீச்சல் போடவும் கற்றுத் தருகிறது. அங்கு ஆழமான நதியைச் சில இளைஞர்கள் கடக்கும்போது, மழைப் பிடிப்புப் பகுதியில் வெள்ளம் ஏற்பட, படகு கவிழ்ந்தது. அனைவரும் நதியில் விழுந்து நீச்சலடிக்க ஆரம்பித்தனர். அவர்களில் மிகச்சிறந்த நீச்சல் வீரன் ஒருவனும் இருந்தான். ஆனால் அவன் அன்று சரியாக நீந்தாமல் தத்தளித்தான்.

"ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்? நீ அதிசிறந்த நீச்சல் வீரனாயிற்றே" என்று மற்றொருவர் வினவினார். தங்களைக் காட்டிலும் சிறந்த வீரன் தத்தளிப்பது அவருக்கு வியப்பாய் இருந்தது.

"நான் என்னுடைய கச்சையில் ஆயிரம் பொற்காசுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறேன். அதனால்தான் என்னால் வேகமாக நீந்த முடியவில்லை",

"அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, நீந்திக் கரைசேர்" என மற்றவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அவற்றை விட மனமில்லாமல் அவன் தன் அரிய உயிரை நீத்தான்.

எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது. அதுவே சிறந்த மேலாண்மை என்பதைத்தான் தொன்மை மிகுந்த இந்தச் சீனக்கதை சொல்கிறது.

## வேளாண் மேலாண்மை

வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு. சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் நிருவாகநெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும். கம்பராமாயணத்தில், தசரதன் தன் நாட்டை மிகவும் செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்தான் என்பதைக் கம்பர்,

> "வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
> செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான்"
>
> (பாலகாண்டம்–179)

என்கிறார். 'வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச்சிறந்த முறையில் ஆட்சி செய்தான்' என்று அவர் குறிப்பிடுகிறார்.

மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மையுடையதே,

> "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
> வன்சொல் களைக்கட்டு வாய்மை எருவட்டி
> அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய்"
>
> (அறநெறிச்சாரம் – 16)



XII Std Tamil Chap_7.indd 165 2/22/2019 1:20:22 PM

என்கிற நெறியைச் செய்பவர்களே சிறந்த மேலாளர்களாகவும் நிருவாகிகளாகவும் இருப்பார்கள். அவர்களிடம் பணிபுரிபவர்கள், பணியைப் பாரமாக்காமல் சாரமாக்குவார்கள்.

### வணிக மேலாண்மை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் தமிழகம் திகழ்ந்தது. நமக்கு ஒரு காலத்தில் 'கடல்' ஏரியைப் போல எளிதாக இருந்தது. கடலைக் குறிக்க இத்தனை பெயர்கள் வேறெந்த மொழியிலாவது இருக்குமா என்பது ஐயமே! (கடலுக்கான வேறு பெயர்கள்: அரலை, அரி, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, ஆழி, ஈண்டுநீர், உவரி, திரை, பானல், பெருநீர், சுழி, நீராழி, புணர்ப்பு, தென்நீர், பௌவம், முந்நீர், வரி, ஓதம், வலயம்.... என்பன). 'வணிகம்' நடைபெறும்போது, அது குறித்த மேலாண்மையும் இயல்பாக விரவிப் பரவி ஓங்கியிருக்க வேண்டும்.

சங்க இலக்கியங்களில் தமிழரின் பண்டைய வணிகப் பரிமாற்றங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்நிய நாடுகளுடன் வணிகம் செய்யும்போது, நம்மிடம் பரிமாற ஏதுவான உயர்தரப் பொருள்கள், அந்த நாடுகளின் பண்பாடு குறித்த ஆழ்ந்த அறிவு, அவர்கள் வருவதற்கேற்ற சிறந்த துறைமுகங்கள், இருமொழிகளையும் அறிந்த மொழிபெயர்ப்பாளர்கள் என, பல தயாரிப்புகள் இருந்திருந்தால்தான் அது சாத்தியமாக முடியும். தமிழகத்தின் செல்வவளம் மிகவும் மேம்பட்டதாக இருந்திருக்க வேண்டும். உரோமாபுரிச் சிப்பாய்கள் பாண்டியப் போர்ப்படையில் இடம் பெற்றிருந்தார்கள் என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் உள்ளது. பட்டினப்பாலையில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது பற்றி 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காவிரிப் பூம்பட்டினத்தில் மாரிக்காலத்து மழைமேகம்போல, கடல் வழியே வேறு நாடுகளிலிருந்து மரக்கலங்களில் வந்த பொருட்களை இறக்குமதி செய்தும், நிலத்திலிருந்து வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாக அனுப்பவும் கணக்கிட இயலாத பொருள்கள் பண்டசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

*"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்*
*மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்*
*மாரி பெய்யும் பருவம் போல*
*நீரினின்றும் நிலத்து ஏற்றவும்*
*நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்*
*அளந்து அறியாப் பல பண்டம்*
*வரம்பு அறியாமை வந்து ஈண்டி"*

(பட்டினப்பாலை – 126–132)

எனப் பல நாடுகளிலிருந்து வந்த பொருள்கள் குறித்துப் 'பட்டினப்பாலை' சித்தரிக்கிறது. அந்தப் பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்தபின், அவற்றின்மீது புலிச்சின்னத்தைப் பொறித்து வெளியே அனுப்பும் சுங்க அதிகாரிகளும் இருந்தனர். வரி கொடுக்காமல் ஏய்ப்பவர்கள் அஞ்சும் வகையில் வலிமை மிக்கவர்களாக அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

சங்க இலக்கியங்களின் வாயிலாக முசிறி மிகப்பெரிய துறைமுகமாக, யவனர்களின் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாக இருந்ததை அறிய முடிகிறது. ஸ்ட்ரேபோ என்பவர், அகஸ்டஸ் சீசரைப் பாண்டிய நாட்டுத் தூதுக்குழு ஒன்று கி.மு. 20 ஆம் ஆண்டு சந்தித்ததைப் பற்றித் தெரிவிக்கிறார். தமிழர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் ரோமானியர்களுக்குமிடையே இருந்த வணிக உறவு இலக்கியம் மூலமும் தெரிகிறது. புறநானூற்றில் 56ஆம் பாடலில் யவனரது கப்பல்கள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்தினான், பகைநாட்டுச் செல்வங்களைக் கொண்டுவந்து தன் நாட்டு மக்களுக்கு வழங்கினான் என்ற செய்திகள் பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் இடம்பெற்றுள்ளன.

பலர் வர்த்தகம் செய்யும்போது, 'இலாபம் கிடைக்கிறதே' என்கிற மிதப்பில் தன்னைப் பற்றிய உயர்ந்த பிம்பத்தை உருவாக்கிக் கொள்வார்கள். பிறகு 'நாம்



XII Std Tamil Chap_7.indd 166 2/22/2019 1:20:23 PM

தொட்டதெல்லாம் துலங்கும்' எனத் தெரியாத துறைகளில் இறங்குவார்கள். ஒருநாள் கன்னத்தில் கைவைத்துக் கலங்குவார்கள். வெற்றி வரத் தொடங்கும்போதுதான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

தம்முடைய வலிமையின் அளவு அறியாமல் மனவெழுச்சியினால் தூண்டப்பட்டுத் தொடங்கி இடையில் அதனை முடிக்க வகையில்லாமல் அழிந்தவர் பலர் என்று திருவள்ளுவர் எச்சரிக்கிறார்.

*"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி*
*இடைக்கண் முரிந்தார் பலர்"* (473)

என்கிற குறள் அனைவருக்கும் பொருந்தும்.

நம்முடன் யாரும் போட்டி போடக்கூடாது. அப்படிப் போட்டிக்கு வரும் அனைவரையும் அழித்துவிட வேண்டும் என எண்ணக் கூடாது. போட்டியாளர்களே நமக்குள் உந்து சக்தியை உற்பத்தி செய்கிறார்கள் என்பது மேலாண்மை விதி.

மேலாண்மையில் 'புலியைப் பூனையைப் போலத் தொடர்ந்து நடத்தினால் அது பூனையாகவே ஆகிவிடும்' என்கிற பொன்மொழி உண்டு. புத்திசாலிகள் பூனைகளையும் புலியாக்குவார்கள்; அவசரக்காரர்கள் புலிகளையும் எலிகளாக்குவார்கள்.

## நிருவாக மேலாண்மை

உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு. நாலடியார் அதையே பக்குவமாகச் சொல்கிறது.

*"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்*
*நல்லறிவு நாளுந் தலைப்படுவர் – தொல்சிறப்பின்*
*ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு*
*தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"* (139)

நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.

டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால் அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள், உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும். வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கம். ஔவையார் நல்வழியில்

*"ஆன முதலில் அதிகம் செலவானால்*
*மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை*
*எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்*
*நல்லார்க்கும் பொல்லனாம் நாடு* (25)

என்று நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

## மேலான மேலாண்மை

மேலாண்மை என்பது வெறும் புத்தக அறிவுடன் முடிந்துவிடுவதல்ல. நொடிக்கு நொடி சூழல்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. ஏற்கெனவே தயாரித்து வைத்த அறிவுக் கூறுகளைக் கொண்டு நாம் புதிய நெருக்கடியை நேர்கொள்ள முடியாது. அதனால்தான் இப்போதெல்லாம் பல நிறுவனங்களில் 'முன் அனுபவம்' என்பது எதிர்மறையாகிவிட்டது. அனுபவசாலிகள் செக்குமாடாக இருப்பார்கள். ஆனால் நமக்குத் தேவை ஜல்லிக்கட்டுக் காளைகள்.

எவ்வளவு எழுதுகிறோம் என்பது முக்கியமல்ல, எவ்வளவு அடர்த்தியுடன்

எழுதுகிறோம் என்பதே முக்கியம். 126 ஒற்றை வரிகளில் எழுதிய 'துளிகள்' (fragments) என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்றவர் ஹிராக்ளிடஸ். அவர் கிரேக்க நாட்டவர். '**இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது**' என்று அவர் சொன்ன கோட்பாடு வாழ்வுக்கும் பொருந்தும், வர்த்தகத்திற்கும் பொருந்தும். போன ஆண்டு பொருள் பற்றாக்குறை ஏற்பட்டபோது, சமாளித்த விதத்தையே இந்த முறை அனுசரிக்க முடியாது. ஏனென்றால் இப்போது ஓடும் நதியின் வெள்ளம் வேறு, நேற்று ஓடிய வெள்ளம் இந்நேரம் கடலில் கலந்திருக்கும். அவர் '**ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது**' என்று குறிப்பிடுகிறார். ஒற்றை வாக்கியத்தில் ஓராயிரம் பொருள்! ஒவ்வொரு நாளும் ஒரு புதுச் சூழல் சந்தையில் நிலவுகிறது. நேற்று நம் வாடிக்கையாளராக இருந்தவன், இன்று அவ்வாறு தொடர வாய்ப்புகள் குறைவு. தொழில்நுட்பம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டே செல்கிறது.

அடுத்தவர் நலனுக்காக வாழ்பவரே தலைமைப் பண்புமிக்கவர். இந்திரர்க்குரிய அமுதமே கிடைப்பதாயினும் அது நமக்கு இனியது எனக் கருதித் தாமே தனித்து உண்ணாதவர் அவர். அப்படித்தான் அதியன் அவ்வைக்கு நெல்லிக்கனியைத் தந்தான். இவ்வாறு நிருவாக நெறிகளை இலக்கியங்கள் பகர்ந்தன.

உலக இலக்கியங்கள் அனைத்திலும் மேலாண்மைக் கருத்துகள் மென்மையாகப் பரவிக் கிடக்கின்றன. அவை பன்னீர் புஷ்பங்கள் காற்றில் பரவவிடும் மணத்தைப்போல வசீகரமானவை. அவற்றை அப்படியே சிதைத்துக் குப்பிகளில் அடைக்க அவற்றின் படைப்பாளர்கள் முனையவில்லை. மகத்தான மனிதர்களின் வீழ்ச்சிகளைச் சித்தரிக்கும் அவர்கள், பலவீனங்களைக் கோடிட்டு எச்சரித்தும் நன்னெறிகளை நம் மனத்தில் இருத்தவும் படைத்தார்கள்; உள்மனத்தில் அவை எதிரொலித்து அறிவுறுத்தும் வகையில் காவியங்கள் மூலமாகவும், நாடகங்கள் மூலமாகவும், கவிதைகள் வாயிலாகவும், உருவகக் கதைகள் ஊடாகவும் நம் முன்னோர்கள் முயன்றனர். அவற்றுள் தலையாய வெளிப்பாடே மேலாண்மைக் கருத்துகள் ஆகும்.

### நூல்வெளி



இப்பாடப்பகுதி வெ. இறையன்பு எழுதிய 'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் இந்திய ஆட்சிப்பணி அலுவலராகப் பணியாற்றி வரும் இவர், இ. ஆ. ப. தேர்வுக்குத் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றவர். 1990ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறைகளில் பதவிகளை வகித்து வருபவர். தமிழ் இலக்கியப் பற்றுடைய இவர், தமிழில் வாய்க்கால் மீன்கள், ஐ.ஏ.எஸ் வெற்றிப் படிக்கட்டுகள், ஏழாவது அறிவு, உள்ளொளிப் பயணம், மூளைக்குள் சுற்றுலா உள்ளிட்ட பல நூல்களை எழுதியவர்; பட்டிமன்றங்களில் நடுவராகப் பங்கேற்பதுடன் பல்வகைப்பட்ட ஊடகங்களிலும் பங்களிப்பைச் செய்து வருபவர். இவர் எழுதிய 'வாய்க்கால் மீன்கள்' என்னும் கவிதை நூல், 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது. சிறுகதை, புதினம், தன்முன்னேற்ற நூல், நம்பிக்கை நூல் என இவர் படைப்புக்களம் விரிவானது.

### கற்பவை கற்றபின்...



புறச்சூழல்களுக்கு ஏற்ப உங்கள் நேர மேலாண்மையைப் பயன்படுத்திக் கல்வியில் கவனம் செலுத்துவதற்கான வழிமுறைகள் குறித்துக் கலந்துரையாடுக.



XII Std Tamil Chap_7.indd 168 2/22/2019 1:20:23 PM

கவிதைப்பேழை

நிருவாகம் ௭

# அதிசய மலர்

–தமிழ்நதி

**நுழையும்முன்**

குண்டுமழை பொழிந்தது; நிலங்கள் அழிக்கப்பட்டன; மனிதர்கள் சிதறி ஓடினர். அழிக்கப்பட்ட தாய்மண்ணில் பூ ஒன்று மலர்கிறது. வண்டுகள் பூவைத் தேடி வருகின்றன. அந்தப் பூ நம்பிக்கைகளைத் தருகிறது. நாளை அங்கே பெருங்காடு உருவாகலாம். பெருமழை பெய்யலாம். அந்தப் பூவின் புன்னகை, நாடு பற்றிய நம்பிக்கையைச் சிதறிய மனிதரிடையே பரப்புகிறது.

*இறுகிப் படிந்த துயரத்தோடும்*
*எஞ்சிய மனிதர்களோடும் மீண்டிருக்கிறோம்*

*ஞாபகத்தில் மட்டுமே மரங்கள் மீந்திருக்கும்*
*பொட்டல் வெளியில்*
*போரின் பின் பிறந்த குழந்தையென*
*முகையவிழ்ந்து சிரிக்கிறது*
*அதிசய மலரொன்று*

*ஆட்களற்ற பொழுதில் உலவிய*
*யானைகளின் எச்சத்திலிருந்து*
*எழுந்திருக்கலாம் இச்செடி*

*எவருடையவோ*
*சப்பாத்தின் பின்புறம்*
*விதையாக ஒட்டிக் கிடந்து*
*உயிர் தரித்திருக்கலாம்*

*பச்சையம் இழந்த சாம்பல் நிலத்தில்*
*மலரை அடையாளம் கண்டு*
*எங்கிருந்தோ வருகிறது*
*வண்ணத்துப்பூச்சியொன்று*
*பறவைகளும் வரக்கூடும் நாளை*

*இனி செடியிலிருந்து பெருகும் காடு*
*அது கொணரும் பெருமழை*

*அதிசய மலரின்*
*இதழ்களிலிருந்து தொடங்கும் புன்னகை*
*பேரூழி கடந்து பிழைத்திருக்கும் மனிதரிடை*
*பரவிச் செல்கிறது!*

*ஏதொன்றையேனும் பற்றிப் பிடிக்காமல்*
*எப்படித்தான் கடப்பது*



**நூல்வெளி**

இக்கவிதை 'அதன் பிறகும் எஞ்சும்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது. இதைப் படைத்த தமிழ்நதி (கலைவாணி) ஈழத்தின் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர். தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகிறார். நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது (சிறுகதைகள்), சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி (கவிதைகள்), கானல் வரி (குறுநாவல்), ஈழம் : கைவிட்ட தேசம், பார்த்தீனியம் (நாவல்) முதலிய பல்வேறு படைப்புகளைப் படைத்துள்ளார். புலம் பெயர்ந்து வாழும் இருப்புகளையும் வலிகளையும் சொல்லும் காத்திரமான மொழி இவருடையது.

**கற்பவை கற்றபின்...**

போர்களுக்கு எதிரான குரல்கள் வெளிப்படும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படிக்க.



XII Std Tamil Chap_7.indd 169 2/22/2019 1:20:24 PM

கவிதைப்பேழை

நிருவாகம் எ

# தேயிலைத் தோட்டப் பாட்டு

*– முகம்மது இராவுத்தர்*

T27ZMW

### நுழையும்முன்

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும் வெள்ளையர் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்டக் கூலிகளாகவும் புலம்பெயர்ந்தனர்; துன்பக்கேணியில் அகப்பட்டவராயினர். விளிம்பு நிலை வாழ்வு துயரம் தோய்ந்தது. அவர் விம்மி விம்மி அழுத குரலைக் காற்று கேட்டிருக்கலாம். தஞ்சமுமில்லாத அவர்கள் நிலையைப் பாரதி பாடினார். வெகுசனங்களிடையே கும்மிப் பாடல்களாக வந்த இத்தகைய சிறு நூல்கள் இத்துயரத்தைப் பேசின.



## கும்மி

*ஆதியி லேநம திந்திய தேசத்தில்*
*ஆன பலவிதக் கைத்தொழில்கள் – மிக*
*சாதன மாகவே ஓங்கிக் குடிகொண்டு*
*சாலச் சிறப்புடனே திகழ்ந்தே* 1

*நாகரீ கத்திலும் ராஜரீ கத்திலும்*
*நாடெங்கும் எந்நாளுங் கொண்டாடிட – அருஞ்*
*சேகரம் போலச் சிறந்து விளங்கிடும்*
*செல்வ மலிந்த திருநாடு* 2

*இத்தகைச் சீரும் சிறப்பும் கொண்டநம*
*திந்திய தேசத்தில் அன்னியர்கள்– நடு*
*மத்தியில் வந்துகுடி புகுந்து வரு*
*மானங் கொடுத்து ரட்சித்து வரும்* 3

*கைத்தொழில் யாவையுங் கொஞ்சங் கொஞ்சமாகக்*
*காத் திருந்து சமயம் பார்த்து –உள்ள*
*அத்தனையுங் கொள்ளை யிட்டுக் கொண்டுநம்மை*
*அற்பப் பிராணி போற் செய்ததினால்* 4



XII Std Tamil Chap_7.indd 170 2/22/2019 1:20:27 PM

*உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்*
*உற்ற பலவித வேலை செய்து – நாம்*
*பெண்டு பிள்ளையுடன் கஷ்டப் பட்டுத்தினம்*
*பேயினும் நாயினும் கீழாகினம்* 5

*வேலைக்கு வாரீரோ என்று சொல்லிப்பல*
*வித்தார மாகவே நோட்டீ ஸொட்டி நம்மை*
*ஆலைக் கரும்புபோ லாட்டிக் குரங்காட்டும்*
*அந்தக் கங்காணிகள் கூப் பிடவே* 6

*ஒன்றுக்குப் பத்துநூறா யிரமாக வே*
*ஒவ்வொரு கூலி ஜனங்கள்மீதும்–மிகத்*
*தண்டு முண்டுமாய்க் கணக் கெழுதியவர்*
*சாகும் வரைக்குந் தலைச் சுமையாய்* 7

*பற்றுவரவு குறிப்புப் பேரேட்டி னிற்*
*பாக்கி யிருக்கும் படி யெழுதி–அவர்*
*சற்றுந் தயவு மில்லாமலே கூலி*
*ஜனங்களைக் கப்ப லிலே யேற்றி* 8

*அக்கரை தேசத்தின் லங்கைத் தீவுக்குள்ளே*
*அந்தமான் தீவு போன்ற இடத்தில் –மிகச்*
*சிக்கன மாகவே வெள்ளையர் தங்களின்*
*தேயிலைத் தோட்டத்திற் சேர்த்திடுவார்* 9

*உண்ண வுணவுக்கு முள்ள செலவுக்கும்*
*ஒவ்வொரு நாளும் அரிதாகி–சிறு*
*மண்ணுளிப் பாம்புபோற் பெண்டு பிள்ளையுடன்*
*வாழ்ந்து வருவதைக் காணீரோ* 10

*ஆதலாலே யினியிந்த சகோதர*
*அன்புள்ள சோதரி காளினிமேல்–இந்தப்*
*பூததயை யில்லாக் கங்காணிகள் செப்பும்*
*பொய்யுரை கண்டு மயங்காதீர்* 11

*இப்படிச் சென்றந்தத் தேயிலைத் தோட்டத்தில்*
*இந்தியர் துன்பப் படுவதற்கு–மன*
*தொப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம்*
*ஒன்றேனு மில்லாக் குறையெனவே* 12

*இன்றேனுங் கண்டுங்கள் பிள்ளைகளுக் கெல்லாம்*
*ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி–நீங்கள்*
*ஒன்றுங் குறையில்லா ஒற்றுமையாகவே*
*ஊரிற் கட்டுப்பாடு செய்குவீரே.* 13

## நூல்வெளி

நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கும்மிப் பாடல்கள் 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற 'தேயிலைத்தோட்டப்பாட்டு' என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டவை. மக்கள் இயல்பாகத் தங்கள் வாழ்வில் ஏற்படும் தாக்கங்களைப் பாடல்கள், கதைப்பாடல்கள் உள்ளிட்ட இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்துகின்றனர். பல்வேறு பொருள்கள் பற்றிய இவ்வெளிப்பாடுகள் மெல்லிய தாளில், பெரிய எழுத்தில், மலிவான அச்சில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சிறு சிறு நூல்களாக வெளியிடப்பட்டன. வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், தெருப்பாடல்கள் என்று இந்நூல்கள் பலவாறாக அழைக்கப்பட்டன. செவ்வியல் இலக்கிய மரபு பாடாத, சொல்லாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களை எல்லாம் இத்தகைய நூல்கள் பாடுபொருள்களாக்கின.

## கற்பவை கற்றபின்...

உங்கள் பகுதியில் உள்ள வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, சிறப்பு மலர் உருவாக்குக.



XII Std Tamil Chap_7.indd 171 2/22/2019 1:20:27 PM

கவிதைப்பேழை

# நிருவாகம் ௭

## புறநானூறு

– பிசிராந்தையார்

TGQUP8

**நுழையும்முன்**

குடிமக்களின் உளப்பாங்கை அறிந்து அதற்கு ஏற்றவாறு ஆட்சி புரிபவனே சிறந்த அரசன். மக்களின் விருப்பத்திற்கு மாறாக அரசன் செயல்படுவது நாட்டின் வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்கும். அரசனை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சங்கப் புலவர்கள் மேற்கொண்டனர். புலவர்களின் அறிவுரைகளைத் தலைமேற்கொண்டு அரசர்களும் செயல்பட்டனர். சங்கப் பாடல் தொகுப்பில் இத்தகைய செவியறிவுறூஉ என்னும் துறைப்பாடல்கள் நாட்டு நலனையும் நிருவாகச் சீர்மையையும் பாடுவனவாக உள்ளன.

**காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;*
*மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;*
*நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,*
*வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;**
*அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே,*
*கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;*
*மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்*
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,*
*பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,*
*யானை புக்க புலம் போலத்*
*தானும் உண்ணான், உலகமும் கெடுமே. (184)*

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

திணை: **பாடாண்.**

**பாடாண் திணை** – ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

துறை: **செவியறிவுறூஉ.**

**செவியறிவுறூஉ துறை** – அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

### சொல்லும் பொருளும்:

**காய் நெல்** – விளைந்த நெல்.
**மா** – ஒருநில அளவு (ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு).
**செறு** – வயல்; **தமித்து** – தனித்து; **புக்கு** – புகுந்து.
**யாத்து** – சேர்த்து; **நந்தும்** – தழைக்கும்.
**வரிசை** – முறைமை; **கல்** – ஒலிக்குறிப்பு.
**பரிவு** – அன்பு; **தப** – கெட; **பிண்டம்** – வரி;
**நச்சின்** – விரும்பினால்.

### உரை:

ஒரு மாவிற்கும் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும். நூறு மடங்கு பெரிய வயலாக இருந்தாலும் யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும். அதுபோல அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும். அரசன் அறிவில் குறைந்தவனாகி, முறை அறியாத சுற்றத்தாரோடு ஆரவாரமாக, குடிமக்களின் அன்பு கெடுமாறு, நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல்



XII Std Tamil Chap_7.indd 172 2/22/2019 1:20:28 PM



பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது. அரசன் தானும் பயனடைய மாட்டான்; நாட்டு மக்களும் துன்புறுவர்.

### இலக்கணக்குறிப்பு

**காய்நெல்** – வினைத்தொகை;
**புக்க** – பெயரெச்சம்;
**அறியா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

### உறுப்பிலக்கணம்

அறிந்து = **அறி + த் (ந்) + த் + உ**

அறி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

அறுத்து = **அறு + த் + த் + உ**

அறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி

### நூல்வெளி



இப்பாடப்பகுதி புறநானூற்றின் 184ஆவது பாடல் ஆகும். புறநானூறு புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்பெறுகிறது; பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக வரலாற்றை விளக்கும் அரிய கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது. முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், வேளிர் முதலிய சிறப்புடை மக்கள், போர்ச் செய்திகள், கையறுநிலை, நடுகல் போன்ற பல்வேறு பொருண்மைகளை வெளிப்படுத்தும் இந்நூலை 1894ஆம் ஆண்டு உ.வே.சா. அச்சில் பதிப்பித்தார். இதன் சிறப்புக் கருதி இதனைப் பலரும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஜார்ஜ் .எல் ஹார்ட் The Four Hundred Songs of War and Wisdom : An Anthology of Poems from Classi–cal Tamil, the Purananuru என்னும் தலைப்பில் 1999ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இப்பாடலின் ஆசிரியரான பிசிராந்தையார். பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர். ஆந்தையார் என்பது இப்புலவரின் இயற்பெயர். இவர் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன், அறிவுடை நம்பி. பிசிரந்தையார் அரசனுக்கு அறிவுரை சொல்லக் கூடிய உயர்நிலையில் இருந்த சான்றோராவார்.

### கற்பவை கற்றபின்...



சிறந்த அரசு நிருவாகத்திற்கு நீவிர் அளிக்கும் பரிந்துரைகளை நாளிதழ்த் தலையங்கமாக எழுதுக.



XII Std Tamil Chap_7.indd 173 2/22/2019 1:20:29 PM

விரிவானம்

நிருவாகம் ௭

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

– ஐராவதம் மகாதேவன்

UBINQ8




தொல்லியல் கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி. கல்வெட்டுகள் கடந்த காலத்தின் பக்கங்கள். தென்னிந்தியா, கல்வெட்டுகளின் களஞ்சியம். கல்வெட்டை ஆய்வது எளிதன்று. புலப்படாத எழுத்து, அகராதியில் அடங்காத சொற்கள், வழக்கிலில்லாத செய்திகள் எனப் பல தடைகள். இத்தடைகளைக் கடந்து கல்வெட்டுகளைப் படித்து உண்மைகளை அறிதல் கடினம். கல்வெட்டில் எழுத்துருக்களை ஆய்வது மிகக் கடினமான பணி. சங்ககாலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணை என்று இருந்த நிலையில் கல்வெட்டுகளும் துணையாக இருப்பதைக் கண்டறிந்த ஆய்வு முன்னோடி ஐராவதம் மகாதேவன். ஆய்வில், உண்மைகளைக் காண்கையில் ஊற்றெடுக்கும் உவகையை அவர் எழுத்தின் வழியே நாமும் அடைவோம்.

கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும், அதை ஒட்டி உலகத் தமிழ்க் கருத்தரங்குகளில் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைப் பற்றி எழுந்த சுவையான விவாதங்கள், என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும். அவற்றுள் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1962 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலம் நான் கைத்தறித் துறை இயக்குநர் ஆகப் பணியாற்றி வந்தேன். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தேன். அதே நேரத்தில்தான் ஓய்வு கிடைக்கும்பொழுது மலைச் சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் காணப்படும் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சேகரிக்கும் சொந்த முயற்சியிலும் ஈடுபட்டிருந்தேன். எனக்கு அப்பொழுது இரண்டு ஆசைகள் இருந்தன. ஒன்று, பொருள் விளங்கவில்லை என்று அறிஞர்களால் அநேகமாகக் கைவிடப்பட்டிருந்த தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்; மற்றொன்று, சங்க காலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய எவ்விதமான புறச்சான்றுகளுமே தமிழகத்தில் கிடைக்கவில்லை என்ற குறை நீங்குமாறு அவர்களுடைய பெயர்களையோ மற்ற குறிப்புகளையோ இக்கல்வெட்டுகளில் காணவேண்டும் என்பனவாகும். இவ்விரு ஆசைகளும் நிறைவேறியது எனக்குக் கிடைத்த பெரும்பேறுகள் என்றே கருதுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகள் தமிழிலேயே எழுதப்பட்டவை என்றும் அவைகளைப் பொருள் சிறக்க வாசிக்க ஒரு முறை இருக்கிறது என்றும் நான் கண்டறிந்த ஆராய்ச்சிகளைப் பற்றி இங்குக் கூற இடமில்லை. சங்க காலத் தமிழ் மன்னர்கள் முதன்முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய கதையை மட்டும் இங்குக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த தென்னிந்தியக் கல்வெட்டுகளைப் பற்றிய அறிக்கைகளில் 1927– 28 ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள் முதன்



XII Std Tamil Chap_7.indd 174 2/22/2019 1:20:29 PM



முதலாகக் கிடைக்கின்றன. இவ்வறிக்கையில் ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சரிவரப் படிக்க முடியவில்லை என்றும் அதில் ஆதன் என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டவை. இந்நிலையில், நான்கு வரிகளாலான மிக நீளமான கல்வெட்டு அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் நாற்பது ஆண்டுகளாக வாசிக்கப்படாமல் இருந்து வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. என்றாவது ஒருநாள் நேரில் போய்ப் பார்த்து இக்கல்வெட்டைத் தீர ஆராய வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அந்த நாளும் 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வந்தது. அன்று கரூருக்கு அருகில் கட்டப்பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். என் வழக்கப்படி, கையுடன் அருகாமையிலுள்ள பழங்கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றுள் ஒரு குறிப்பு மேற்கூறிய ஆறுநாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பற்றியது ஆகும். நூற்பு ஆலையில் என்னுடைய அலுவல்களை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் நானும் மற்றும் சில நண்பர்களுமாகக் காரில் ஆறுநாட்டான் குன்றின் அடிவாரம் வரை சென்றோம். அதற்குமுன் எங்களில் எவரும் அச்சிற்றூருக்குப் போனது இல்லை; மலையின் மீது ஏற கிழக்குப் பக்கத்திலிருந்து படிக்கட்டுகள் இருப்பது கூட எங்களுக்கு அப்பொழுது தெரியாது. பெரும்பாலும் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் மனித சஞ்சாரம் அற்ற முள் புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கின்றன! அதே நினைவில் எவரையும் வழி கேட்காது குன்றின் தென்புறம் இருக்கும் ஒரு கரடுமுரடான சரிவின் வழியாக வியர்க்க விறுவிறுக்க, குன்றின் மீது ஏறி உச்சியின் தெற்குச் சாரலை அடைந்தோம். மேலைக்



**தெரியுமா?**

தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் 'பிராம்மி' வரிவடிவத்துடன் தமிழி, தரமிழி, திராவிடி என்று அழைக்கப்படுகிற வேறுபட்ட வரிவடிவங்களும் இருப்பதை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டது. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சங்ககாலக் கல்வெட்டுகள், இலக்கியத் தரவுகள் ஆகியவற்றில் அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்திலிருந்து முரண்பாடுகள் தெரியவருகின்றன. இவற்றை இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் தன்னுடைய ஆய்வு நூலான 'எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் என்றோ அழைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

கோடியில் தென்முகமாக இருந்த குகையின் உயரமான வாயிலுக்கு மேலாக வெட்டப்பட்டிருந்த பிராம்மிக் கல்வெட்டு மஞ்சள் நிறமான மாலை வெய்யிலில் பளிச்சென்று தெரிந்தது. கல்வெட்டு மிகவும் தேய்ந்துபோய் அங்கொன்றும் இங்கொன்றும் ஆகச் சில எழுத்துகள் மட்டும்தான் தெரியும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையத் தயாராகத்தான் வந்திருந்தேன். ஆனால் நான் கண்டது வேறு; மிகப்பெரிய எழுத்துகளில் நான்கு நீண்ட வரிகளில் தெளிவாகப் பொறிக்கபட்டிருந்தது அக்கல்வெட்டு. முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துகள் நீங்கலாக ஏனைய எழுத்துகளைப் படிப்பதும் எனக்குக் கடினமாகவே இல்லை. இந்தக் கல்வெட்டையா நாற்பது ஆண்டுகளாகப் படிக்க முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்ற வியப்பு அன்று மேலோங்கியது; இன்றும் தணியவில்லை.

கையுடன் எடுத்து வந்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து, கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்த வண்ணம் படியெடுக்கலானேன். முதல் வரியில் புதுமை எதுவும் இல்லை: **யாற்றூர்** என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான **செங்காயபன்** வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் ஏனைய தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் தரும் செய்திகள் போலவே இருந்தது. அடுத்த வரிக்குப் போனேன்: இரண்டாவது வரியில் **கோ** என்ற முதல் சொல்லைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது; சங்க காலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் இது என்பது உறுதியானது. மேலும் படித்தேன் இரண்டாம் வரியை.

**'கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்'** என்ற சொற்களைப் படித்தவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி மாளாது! ஆனாலும் தமிழிலும் வரலாற்றுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கு எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தை விளக்க அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். அடுத்தடுத்து **'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ'** என்ற பெயர்களைப் படித்தபொழுது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல்முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்ட ஆனந்தத்தில் நோட்டுப் புத்தகத்தைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக்கொண்டு கூத்தாடினேன். என்னுடன் வந்தவர்கள், என்னை ஒரு மாதிரியாக பார்த்தார்கள்!

என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய அக்கல்வெட்டின் முழு வாசகம் பின்வருமாறு:

*"....அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்*
*கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்*
*பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்*
*கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"*

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள். இக்கல்வெட்டு



XII Std Tamil Chap_7.indd 176 2/22/2019 1:20:32 PM



ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ.) இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்செய்திகள் மட்டும் எனக்கு அப்பொழுதே விளக்கமாகத் தெரிந்தன. அதற்குள் இருட்டிவிட்டதால் மற்ற கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று (கீழ்ப்புறம் இருந்த படிக்கட்டுகள் வழியாக!) இறங்கிக் கரூருக்குத் திரும்பினோம்.

நான் சென்னை வந்த அன்றே வரலாற்றுப் பேராசிரியர் **திரு. நீலகண்ட சாஸ்திரி** அவர்களின் வீட்டுக்குச் சென்று நான் எடுத்துவந்த கல்வெட்டுப் படியைக் காட்டினேன். அவர் அப்பொழுது என்னிடம் கேட்ட கேள்வி இன்றும் நினைவில் இருக்கிறது. **"கையால்தானே எழுதியிருக்கிறீர்கள்; ஒழுங்காகப் படியெடுத்தீர்களா?"** என்று கேட்டார்! ஆராய்ச்சி முறைகளில் அவருக்கு இருந்த அழுத்தத்தையும் உண்மைப்பற்றையும் படிப்பினைகளாகக் கொண்டேன் அன்று. அதற்கு அடுத்த சில நாட்களிலேயே கரூரிலிருந்த நண்பர்களின் உதவியால் அந்தக் குகை வாயிலில் மூங்கிலால் சாரம் கட்டி அதன் மீது ஏறி நின்று பாறையின் மீது மெல்லிய தாட்களைப் பரப்பிக் கல்வெட்டை எழுத்தெழுத்தாகக் கவனமாகப் படியெக்க ஏற்பாடு செய்தேன். அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் கரூருக்குச் செல்லும்

### தெரிந்து தெளிவோம்

புகளூர் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 6 ஆவது 7 ஆவது 8ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் எழுதியிருந்தார். இதை மறுத்து இம்மன்னர்கள் முறையே 7ஆவது 8 ஆவது 9ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று விளக்கியிருந்தார் மாணவர் ஒருவர். அதைச் சரியென்று உணர்ந்த மகாதேவன் முதல் உலகத்தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் முன்னிலையில் அதைக்குறிப்பிட்டு அக்கருத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். ஆய்வில் உண்மையை ஏற்றுக்கொள்வது தவற்றைத் திருத்திக்கொள்வது என்னும் உயரிய நெறி அவரிடம் இருந்தது.



XII Std Tamil Chap_7.indd 177 2/22/2019 1:20:33 PM

### தெரியுமா?

"1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் (இயல் – 1 முகப்புப் படம்) சங்ககாலப் பாண்டிய மன்னாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு. (பொ.ஆ.) 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடித்தேன்"

ஐராவதம் மகாதேவன்

நூற்றாண்டு மாணிக்கம், பக்.109

பொழுதெல்லாம் புகளூருக்கும் **'தலயாத்திரை'** சென்று ஆறுநாட்டான் குன்றிலிருந்த எல்லா பிராம்மிக் கல்வெட்டுகளையும் ஒன்றொன்றாகப் படியெடுத்து முடித்தேன். அதே ஆண்டு மார்ச் மாதம் ஹிந்து தினத் தாளில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பையும் வெளியிட்டேன்.

பிறகு ஒரு நாள் என் ஆராய்ச்சிக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு கோவையில் அப்பொழுது வசித்து வந்த திரு.கே.வி. சுப்பிரமணியனார் அவர்களைக் காணச் சென்றேன். அவர்தான் தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துக்களான ழ, ள, ற, ன ஆகியவை வருவதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவை என்ற தவறான கருத்தை மறுத்து, இவை தமிழில்தான் எழுதப்பட்டவை என்று நிறுவிய சீரிய ஆராய்ச்சியாளர் **கே.வி. சுப்பிரமணியனார்.** வயது மிகவும் முதிர்ந்து, உடல் தளர்ந்து, கண் பார்வை சரியாக இல்லாத நிலையிலும் புகளூர்க் கல்வெட்டைப் பற்றிய செய்திகளைத் தினத் தாள்களில் படிக்கக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார் அவர். நான் அவர் முன் அமர்ந்தவுடன், **'சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள்தானா?'** என்று கேட்டார். நான் 'ஆம் என்றவுடன் தன் கை விரல்களால் என் முகத்தைத் தடவிப் பார்த்தார்; அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; **"நீங்கள் கொடுத்து வைத்தவர்!"** என்று ஆசி கூறினார். அப்பெரியவரின் கல்விப் பற்றையும் தூய உள்ளத்தையும் அன்பையும் நினைத்து நினைத்து என் உள்ளம் நெகிழ்கிறது.

நன்றி : **'கல்வெட்டு'** இதழ்.

### நூல்வெளி

**ஐராவதம் மகாதேவன்** எழுதிய இக்கட்டுரை **'கல்வெட்டு'** இதழில் வெளிவந்தது. இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக இருந்து, தொல்லியலிலும் எழுத்தியலிலும் கொண்ட ஆர்வத்தால் விருப்ப ஓய்வு பெற்றார். தனக்கு மிகவும் விருப்பமான கல்வெட்டு ஆய்வில் 30 ஆண்டுகள் ஈடுபட்டார். சிந்துவெளி எழுத்துருவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று அவர் கண்ட முடிவு, வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்பட்டுள்ளன. ஆய்வுக்காக **ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது (1970), இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992), தாமரைத்திரு விருது (2009)** ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற சேர அரசர்களின் பெயர்கள் புகளூர் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளதை இவர் கண்டுபிடித்தது, இலக்கியத்தையும் கல்வெட்டாய்வையும் ஒருங்கிணைத்தது. பாறைகளிலிருந்த பழங்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு நூலாக்கி இவர் தந்தது, இமயப் பணி.

### கற்பவை கற்றபின்...

உங்கள் பகுதியில் உள்ள பழங்காலக் கல்வெட்டுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.

## தொன்மம்

UR2IRJ

தொன்மம் (myth) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் 'தொன்மை' என்பதுவும் ஒன்றாகும். காலம்காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களும் தொன்மங்களே. தொன்மம் என்னும் சொல் இவை அனைத்தையும் குறிக்கும். ஆனால், கவிதையில் அது பழங்கதையைத் (புராணத்தை) துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதையே குறிக்கிறது.

கடவுளர்கள், தேவர்கள் மக்கள், விலங்குகள் ஆகிய பல் வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து, படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே தொன்மம் என்று கூறுவர்.

நம் அன்றாடப் பேச்சில் மரபுத்தொடர்களாகத் தொன்மங்கள் கலந்துள்ளன. "கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்" என்பது இராமாயணத்தில் பர்ணசாலையைவிட்டு, சீதை வெளியே வந்தால் தீங்கு வரும் என்பதற்காக இலக்குவன் கோடு கிழித்த நிகழ்விலிருந்து உருவான மரபுத் தொடராகும். இதுபோல "இந்தா போறான் சகுனி", "இவன் பெரிய அரிச்சந்திரன்", "கர்ணன் தோற்றான்போ" என்றெல்லாம் தொடர்களைப் பயன்படுத்துகிறோம். அறத்திற்குத் தருமன், வலிமைக்குப் பீமன், நீதிக்கு மனுநீதிச் சோழன், வள்ளல் தன்மைக்குக் கர்ணன் என்று பலவாறு தொன்மக் கதைமாந்தர்களைப் பண்புக் குறியீடுகளாக மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

தொன்மங்கள் மக்களின் மனத்திலும் பேச்சிலும் இடம்பெற்றிருப்பதால் அவற்றைப் பயன்படுத்திச் சில செய்திகளைச் சுவையாகச் சொல்ல முடிகிறது; விளங்காத கருத்துக்களை எளிதில் விளங்க வைக்கமுடிகிறது. ஆகவே தொன்மம் (myth) இலக்கிய உத்தியாகக் ஏற்கப்பட்டிருக்கிறது. காலங்காலமாக மனித மனங்களிடையே உறைந்து கிடக்கும் தொல் கதைகள் பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. தொன்மக் கதைகள் உலகெங்கும் காப்பியங்களாகவும் புராணங்களாகவும் காவியங்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் உள்ள நிகழ்வுகளையும் கதைமாந்தர்களையும் தொன்மங்களாகப் படைப்பாளர்கள் பயன்படுத்துகின்றனர். மனிதர்களின் மனத்தில் இயல்பாகவே கருத்துப் பொதிந்த கதைகள் படிந்து கிடக்கின்றன. இதன்மூலம் கதைச்சூழலையும் கதைமாந்தர்களின் செயல்பாடுகளையும் விளங்கிக் கொள்வதோடு அவை உணர்த்தும் உட்பொருளையும் படிப்பவர் அறிந்துகொள்வர். தொன்மம் சார்ந்த படைப்புகளையும் அவர்கள் எளிதில் புரிந்து கொள்வர்.

**தொன்மம் – விளக்கம்**

சில தொன்மங்கள், சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வெளிச்சப்படுத்துகின்றன. இன்னும் சில தொன்மங்கள் உவமைக் கதைகளாகவும் மெய்யியல் உருவகங்களாகவும் நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன. தொன்மங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்யவோ புரிந்துகொள்ளவோ முடியாது. அவை சமுதாயத்தின் ஆழ்மனத்திலிருந்து வெளிப்படுவனவாக அவற்றினால் ஏற்படும் கூட்டமைப்பின் குறியீடுகளாகவும் விளங்குகின்றன என்று 'வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர்நேஷனல் அகராதி' புலப்படுத்துகின்றது.



XII Std Tamil Chap_7.indd 179 2/22/2019 1:20:34 PM

இவ்வாறாகத் தொன்மத்தை வெளிப்படுத்தும் முதன்மையான கருவியாகக் கவிதை விளங்குகிறது. உலகில் பெரும்பாலான தொன்மங்கள் கவிதைகள் மூலமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் பல தொன்மங்கள் இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன. காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் தொன்மங்களை ஆண்டுள்ளனர். திரைப்படங்கள், நாடகங்கள், கதைகள் ஆகியவற்றில் தொன்மக் கதைகளையும் கதை மாந்தர்களையும் பயன்படுத்துகின்றனர். இராமாயணத்தின் அகலிகை கதையை வைத்துப் புதுமைப்பித்தன் சாபவிமோசனம், அகலிகை ஆகிய கதைகளை எழுதியதைச் சான்றாகக் கொள்ளலாம். திருவிளையாடற்புராணத்துச் சிவன், நக்கீரனைக் கொண்டு அழகிரிசாமி 'விட்டகுறை', 'வெந்தழலால் வேகாது' என்னும் சிறுகதைகளைப் படைத்துள்ளார். தொன்மங்களைக் கொண்டு ஜெயமோகன் (பத்மவியூகம்), எஸ்.ராமகிருஷ்ணன் (அரவாணன்) முதலானோர் புதினங்களை எழுதியுள்ளனர்.

**தொன்மை (தொன்மம்) – தொல்காப்பியர் கூற்று**

*"தொன்மை தானே சொல்லுங் காலை*
*உரையோடு புணர்ந்த பழமை மேற்றே"*

– *தொல்காப்பியர். செய்யுளியல் (228)*

**இளம்பூரணர் உரை**

தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள் மேல் வருவன. அவை இராம சரிதமும் பாண்டவசரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்.

**பேராசிரியர் உரை**

'தொன்மை என்பது உரைவிராஅய்ப் பழமையனவாகிய கதைபொருளாகச் செய்யப் படுவது. அவை பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை போல்வன.'

படைப்பாளர்கள் தாம் கூற விரும்பும் கருத்துகள் தொன்மம் மூலம் வெளிப்படுத்தும்போது அவை மிக விரைவாகவும் ஆழமாகவும் படிப்பவரால் புரிந்து கொள்ளப்படுகின்றன.

*வெல்வேல் கவுரியர் தொன்முதுகோடி*
*முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை*
*வெல்போர் இராமன் அருமறைக் கவித்த*
*பல்வீழ் ஆலம் போல*
*ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே*

*(அகம். 70: 13–17 )*

பல விழுதுகளை உடைய பெரிய ஆல மரத்தடியில் நின்று இராமன், சீதையைச் சிறைமீட்பது குறித்து, தன் உடன் இருந்தோருடன் பேசிக் கொண்டிருந்தான். அப்போது அம்மரத்திலிருந்த பறவைகளின் ஒலி இராமனின் பேச்சுக்கு இடையூறாக இருந்தது. அவன் தன் கையை உயர்த்திச் சைகை செய்ததும் பறவைகள் அமைதியாயின. அதுபோலத் தலைவியைத் தலைவன் மணம் செய்துகொண்டவுடன் அலர் தூற்றிய ஊரார் அமைதியாயினர். இது தோழியின் கூற்று. காதல் வெற்றியை வெற்றிகரமாக உணர்த்த இத்தொன்மம் பயன்படுகிறது.

சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய கதைப்பகுதிகளும் முருகனுக்கு வெறியாடும் சடங்கு முறைகளும் தொன்மங்களாக ஆளப்பட்டுள்ளன. முருகனை அழகுக்கும் ஆற்றலுக்கும் வீரத்துக்கும் உவமையாக்கிப் பல தொன்மங்கள் உள்ளன. யானை சினங்கொண்டு பேராற்றலுடன் போர்செய்த சிறப்பினை, முருகனின் வீரத்தோடு இணைத்துக் கூறியிருக்கிறது சங்க இலக்கியப் பாடல். இதை,

*"முருகு உறழ் முன்பொடு*
*கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை*

*(நற்றிணை, 225 : 1 – 2 )*

என்னும் பாடலடி வெளிப்படுத்துகிறது.

தொன்மங்களுக்குக் கூறப்பட்ட சமயப்பொருள் காலப்போக்கில் இலக்கிய உத்தியாக, பொதுவானதாக ஆகியிருக்கிறது. பறவைகள் அடங்குவதிலும் பாற்கடலில் அமுதமும் ஆலகாலமும் வருவதிலும் நமக்கு நம்பிக்கையிருந்தாலும் இல்லாவிட்டாலும் பொருள் புலப்பாட்டிற்குத் தொன்மமாகப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

தொன்மங்கள் முரண்பட்டவை ஒன்று சேர்ந்திருக்கிற சூழலை விளக்கப் பயன்படுகின்றன. அப்துல்ரகுமான்

*உன்மனம் ஒரு பாற்கடல்*
*அதைக் கடைந்தால்*
*அமுதம் மட்டுமல்ல*
*ஆலகாலமும் வெளிப்படும் என்பதை*
*நீ அறிவாய் அல்லவா?*

என்று தொன்மத்தைக் கொண்டு முரண்பாட்டை விளக்குகிறார். இங்குப் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகியன தொன்மங்கள்.

தமிழில், கண்ணகி கதை தொன்மை நோக்கிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இக்காலப் பெண்ணியத்திற்கான தொன்மமாகக் கண்ணகியும் பெண்ணியப் போராட்டத்திற்கான தொன்மமாக மதுரையை எரித்த நிகழ்வும் பின்வரும் புதுக்கவிதையில் அமைந்துள்ளவிதத்தை அறியலாம்.

*மதுரை எரிக்கக் கண்ணகியாயும்*
*மீண்டும் எழுந்திடச் சீதையாயும்*
*எப்பவும் எரிதழல் மடிசுமப்பது இனி*
*எங்கள் வேலையல்ல*

என்பதன் மூலம் இன்றைய பெண்கள் எம்முறை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

தொன்மம் எங்கும் எப்போதும் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் வழக்கில் இருக்கும் ஒன்றாகும். அது காலத்தைக் கடந்து நிற்பது; இக்காலத்தோடு கடந்த காலத்தை இணைப்பது. சங்க இலக்கியங்கள் தொட்டு இன்றைய இலக்கியங்கள்வரை சொல்லவந்த கருத்தை விளக்குவதற்குத் தொன்மங்கள் எடுத்துக்காட்டாகவும் விளக்கமாகவும் குறியீடாகவும் புதுப்பிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் தொன்மங்கள் கருத்தினை மேலும் ஆழமாக விளக்கும் உத்தியாகவே ஆளப்படுகின்றன.

**இந்திய, கிரேக்கத் தொன்ம ஒப்புமைகள்**

ஒவ்வொரு சமூகத்திலும் தொன்மங்கள் இருக்கின்றன. அவற்றுக்குள் ஒற்றுமைகள் இருக்கின்றன. ஓரிடத்திலிருந்து மனித இனம் பிரிந்து வேறு இடத்தில் சென்று வாழ்வதை இவை உணர்த்துகின்றன. கிரேக்கத் தொன்மங்களுக்கும் இந்தியத் தொன்மங்களுக்கும் நிறைய ஒப்புமைகள் உள்ளன. இந்திரன் – சீயஸ்பிடர், வருணன் – ஊரனாஸ், பலராமன் – டயானிசிஸ், கார்த்திகேயன் – மார்ஸ், சூரியன் – சோல், சந்திரன் – லூனஸ், விஸ்வகர்மன் – வன்கன், கணேசன் – ஜோனஸ், துர்க்கை – ஜீனோ, சரஸ்வதி – மினர்வா, காமன் – இராஸ் என்று பல ஒப்புமைகள் உள்ளன. இவை இன மரபுகளை ஆய்வதற்கும் உதவக் கூடியவை.



**கற்பவை கற்றபின்...**

தொன்மம் என்னும் உத்தியைப் பயன்படுத்திப் புதுக்கவிதையொன்றை எழுதுக.



XII Std Tamil Chap_7.indd 181 2/22/2019 1:20:34 PM

### இலக்கணத் தேர்ச்சி கொள்

1) பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ.

ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.

ஈ) இந்தா போறான் தருமன்.

2) தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

3) 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

4) பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) அறம் | - | 1) கர்ணன் |
| ஆ) வலிமை | - | 2) மனுநீதிச்சோழன் |
| இ) நீதி | - | 3) பீமன் |
| ஈ) வள்ளல் | - | 4) தருமன் |

அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1

இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

5) தொன்மம் – விளக்கம் தருக.

6) பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

7) உள்மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா?

–இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

## நம்மை அளப்போம்

VKUCSJ

### பலவுள் தெரிவு

1) 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்'-விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

2) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

3) முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது

கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி

இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

4) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் – இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

5) யானை புக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும் , பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

### குறுவினா

1) பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
2) எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.
3) அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
4) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

### சிறுவினா

1) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
2) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?.
3) எங்கிருந்தோ வருகிறது

வண்ணத்துப்பூச்சியொன்று

பறவைகளும் வரக் கூடும் நாளை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

4) யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.



XII Std Tamil Chap_7.indd 183 2/22/2019 1:20:34 PM

**நெடுவினா.**

1) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.

2) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது – விளக்குக.

3) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



மா. இராசமாணிக்கனார் (1907–1967)

இவரின் தந்தை அரசுப் பணியாளர் என்பதால் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. எனவே தற்போதைய ஆந்திர மாநிலம் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் நான்காம் வகுப்புவரை தெலுங்கு மொழியையே பயின்றார். இளம்வயதில் தந்தையை இழந்து தமையனாரால் வளர்க்கப்பட்டார். பதினைந்து வயதை அடைந்த நிலையில் 'இனி இவன் எங்கே படிக்கப் போகிறான்?' என்று முடிவெடுத்து ஒரு தையல் கடையில் அவரது தமையனாரால் வேலைக்குச் சேர்க்கப்பட்டார். 'நான் பதினைந்து நாட்கள் வேலை கற்றுக்கொண்டேன்; காஜா எடுக்கக் கற்றுக்கொண்டேன். சிறிய பைகளைத் தையல் இயந்திரத்தில் தைக்கக் கற்றுக்கொண்டேன். நாள்தோறும் இரவில் வீடு திரும்புகையில் கடை உரிமையாளர் எனக்குக் காலணா கொடுப்பார்' என்று பின்னாளில் பதிவு செய்த அவரால் அத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாவது வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்ற அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த்தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சியடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என வளர்ந்தார். அவர்தான் இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்த தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார்.

ஆய்வு நெறிமுறைகளிலும் அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளைக் கையாண்ட இவர், சங்க காலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர்; சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் 'மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' என்ற நூலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு. வேங்கடசாமி, ஆகியோராலும் உ.வே.சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் சோழர் வரலாறு, பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். 2006–2007ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அவருடைய சொல்லாற்றலுக்கொரு சான்று:

"அடுத்த ஆண்டு புதிய தமிழகம் உருவாகிச் செயலாற்றவிருக்கும் நிலையில் அப்புதிய தமிழகம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று எண்ணுவதும் புதிய தமிழகத்தில் செய்ய வேண்டுவன எவை என்பதைக் கூறத் தமிழன் விரும்புதலும் இயல்புதானே! முதலில் புதிய தமிழகம் எதனை வட எல்லையாகப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதைக் காய்தல் உவத்தலின்றிக் காண வேண்டும்".

**(மா.இராசமாணிக்கனார் எழுதிய புதிய தமிழகம் நூலில் இருந்து)**



XII Std Tamil Chap_7.indd 184 2/22/2019 1:20:34 PM

**தமிழாக்கம் தருக.**

*A White woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess.*

*"Madam, what is the matter?" the hostess asked.*

*"You placed me next to a black man. Give me an alternative seat".*

*The hostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if another place is available. The hostess went away and came back a few minutes later. "Madam, just as I thought, there are no other available seats in the economy class. We still have one place in the first class".*

*Before the woman could say anything, the hostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting".*

*She turned to the black guy and said, " Sir, a seat awaits you in the first class".*

*At the moment, the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded.*

*Take a lesson from the sun who shines his light on everyone.*

*Or the rain that falls on every single shore.*

*No distinction of our race or the colour of our face.*

*Nature's gifts are there for all men rich or poor.*

*(Courtesy: S.S.S. Bal Vikas)*

**கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து நாளிதழ்ச் செய்தியாக மாற்றுக**




**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

ஆற அமர

ஆணி அடித்தாற் போல

அகலக்கால்

வழிவழியாக

கண்துடைப்பு

**உங்கள் கனவு ஆசிரியர் குறித்துக் கட்டுரை எழுதுக.**

**இலக்கிய நயம் பாராட்டுக**

*பூமிச்சருகாம் பாலையை*
*முத்துபூத்த கடல்களாக்குவேன்*
*புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்*
*புதிய தென்றலாக்குவேன்*
*இரவில் விண்மீன் காசினை – செலுத்தி*
*இரவலரோடு பேசுவேன்!*
*இரவெரிக்கும் பரிதியை – ஏழை*
*விறகெரிக்க வீசுவேன்*

*– நா.காமராசன்*

**தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.
4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

**பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

## கீழ்க்காணும் விண்ணப்பத்தை நிரப்புக.

விண்ணப்ப எண்: 　　　　　　　　　　　　　　மைய எண்:

# திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

இளநிலை/முதுநிலை/பட்டயம்/சான்றிதழ்/முதுநிலைப்பட்டயம்/ அடிப்படைப்படிப்பு/அறிமுகநிலைப்படிப்பு/தொழில்முறை மற்றும் இதர படிப்புக்கான விண்ணப்பம்

கடவுச்சீட்டு (PASSPORT) அளவு புகைப்படம் ஒட்டவும்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.

கல்வியாண்டு 2019 2020 　　　　　　　　நாள்காட்டி ஆண்டு 2019 2020

க 　　　　　　　　　　　　　　　　　　　　நா

(கற்போர் தாங்களே விண்ணப்பத்தினை நிறைவு செய்தல் வேண்டும். அனைத்து விவரங்களும் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.)

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்.................................

விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு:

| இளநிலை | முதுநிலை | பட்டயம் | சான்றிதழ் | முதுநிலைப் பட்டயம் | அடிப்படை நிலை | அறிமுக நிலை | பாடப்பிரிவு: |
|---|---|---|---|---|---|---|---|

கட்டணம் செலுத்திய விவரம் :

| வரைவோலை | வங்கிச் செலுத்துச்சீட்டு | நிதிப்பிரிவு இரசீது | கணினி இரசீது |
|---|---|---|---|

| எண்: | நாள்: | தொகை: |
|---|---|---|

1. பெயர் (தமிழில்)

(ஆங்கிலத்தில்)

2. முகவரி

அஞ்சல் எண்

3. தொலைபேசி எண்

கைபேசி எண்

மின்அஞ்சல் முகவரி

4. பிறந்த நாள்

5. பாலினம் 　ஆ 　பெ 　மூன்றாம் பாலினம்

6. தேசியம்

1. நகர்ப்புறம் 　2. கிராமப்புறம்
3. பணிபுரிபவர் 　4. பணியில் இல்லாதவர்
5. திருமணமானவர் 　6. திருமணமாகாதவர்
7. மாற்றுத்திறனாளி
8. அரசு ஊழியர் 　9. முன்னாள் மாணவர்

7. தந்தை/காப்பாளர்/கணவர் பெயர்:

8. கல்வித் தகுதி தேர்ச்சிப் பெற்ற விவரம்:

| பத்தாம்/மேனிலைப்பள்ளி வகுப்பு | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற பள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

| இளநிலைப் பாடம் | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

### உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும், ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

இடம்:
நாள்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு:
விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும்.
1. மதிப்பெண் பட்டியல் (10ஆம் வகுப்பு/10+2/10+3/11+1+3/இளநிலை வரிசையில்), 2. மாற்றுச் சான்றிதழ்
3. தற்காலிகச் சான்றிதழ் (Provisional Certificate)அல்லது பட்டச் சான்றிதழ் (Degree Certificate)



XII Std Tamil Chap_7.indd 186 　2/22/2019 1:20:35 PM

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக*




### படித்துப் பார்த்துப் படைக்க:

*மென்பறவைக் கூடு மின்றி*
*தின்பதற்குத் தீனியின்றி*
*தன் சிறிய குஞ்சுகளை*
*பொன் சிறகில் மூடி நின்று*
*நிற்கதியாம் நிலைதனிலே*
*நிற்க ஒரு நிழல் தேடி*
*பற்பலவாய் எண்ணமிட்டு*
*பக்கம் ஒரு மரம் கண்டு*
*தருவின் நிழல் கண்டு*
*தானியத்தின் மணி கண்டு*
*அருகில் தன் குஞ்சுகளை*
*அணைத்தங்கு சென்றதுவே*
*நெருங்கி வந்து பார்க்கையிலே*
*நிழலில்லை மணியில்லை*
*நெருஞ்சி முள்ளை நெல்மணியாய்*
*நினைத்து விட்ட பரிதாபம்*
*பச்சையற்ற மரத்தருகே*
*படர்வதுண்டோ நிழலதுவும்*
*பசையற்ற நெஞ்சினுள்ளே*
*பாசமெனும் நிழலுண்டோ?*

*- பூரணி*

### செய்து கற்போம்:

உங்கள் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் பற்றிய நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்க..

## நிற்க அதற்குத் தக

### பொதுச்சொத்துகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நீவிர் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுக.

[நம்முடைய வீட்டின்மீது நமக்கு இருக்கும் பொறுப்பினைப்போலவே பொதுச்சொத்துகளின் மீதும் நமக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. எவையெல்லாம் பொதுச்சொத்துகள் எனப் பட்டியலிட்டு அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கூறுக]

| பொதுச்சொத்துகள் | அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் |
|---|---|
| அரசுப் பேருந்து | |
| வழிபாட்டுத் தலங்கள் | |
| பள்ளிக்கூடங்கள் | |
| மருத்துவமனைகள் | |

### படிப்போம் பயன்படுத்துவோம் (வங்கி)

*Debit Card* – பற்று அட்டை
*Demand Draft* – கேட்பு வரைவோலை
*Withdrawal Slip* – திரும்பப் பெறல் படிவம்
*Teller* – விரைவுக் காசாளர்
*Mobile Banking* – அலைபேசி வழி வங்கி முறை
*Internet Banking* – இணையவங்கி முறை

## அறிவை விரிவு செய்

- தொல்தமிழ் எழுத்துக்கள் ஓர் அறிமுகம் – செந்தீ நடராசன்
- முச்சந்தி இலக்கியம் – ஆ.இரா. வெங்கடாசலபதி
- கல்வெட்டு – (இதழ்)
- கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள் – குடவாயில் பாலசுப்ரமணியன்
- நீர்க்குமிழி – கே.பாலசந்தர்
- வெள்ளை இருட்டு – இன்குலாப்
- முள்ளும் மலரும் – உமா சந்திரன்

## இணையத்தில் காண்க

https://ta.wikipedia.org/s/7kpp (வெ.இறையன்பு)
https://ta.wikipedia.org/s/1ca0 ( தமிழ்நதி கவிதைகள்)
http://ilakkiyam.com/17-tamil/iyal/sangailakkiyam/pathinenmerkanaku/2272- (புறநானூறு)
https://www.bbc.com/tamil/india-46344293 (ஐராவதம் மகாதேவன்)
http://www.tamilvu.org/ta/courses-degree-c031-c0314-html-c0314112-18288 ( கல்வெட்டுகள்)

## இணையச் செயல்பாடு

### கல்வெட்டு

கல்லிலே உயிர் வாழும் நம் முன்னோரை அறிவோமா!

**படிகள்:**

- கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.
- திரையில் உள்ள தெரிவுகளில் கல்வெட்டு / நாணயம் என்பதைத் தேர்வு செய்து அதன் முகப்புப் பக்கத்திற்குச் செல்க.
- இடப்பக்கம் உள்ள கல்வெட்டு என்பதைச் சொடுக்கி, கல்வெட்டின் அமைப்பு, பல்வேறு காலங்களில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளின் வழி நம் முன்னோர்களின் வாழ்வியல் முறை ஆகியவற்றை அறிந்து கொள்க.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**






செயல்பாட்டிற்கான உரலி
http://www.tamilvu.org/ta/tdb-html-index-340599

B223_12_TAMIL_LANG

*கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இயல் 8

# எல்லா உயிரும் தொழும்

*மனிதம், ஆளுமை*



*"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்*
*சகத்தினை அழித்திடுவோம்"*

## கற்றல் நோக்கங்கள்

- தமிழாய்வின் முன்னோடியாகத் திகழ்ந்த ஆளுமைகளின் பன்முகத் தன்மையை அறிந்து ஆய்வுச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- கொடையின் இன்றியமையாமையை அறிந்து, கொடை வழங்கும் பண்பினை வளர்த்துக் கொள்ளல்.
- காப்பிய நாயகர்களின் வழி வெளிப்படுத்தப்படும் பண்புநலன்களைப் போற்றிப் பின்பற்ற முயலுதல்.
- சிறுகதையில் வெளிப்படும் மனிதநேயத்தை உணர்தல்; படைப்பாக்கத் திறன் பெறுதல்.
- கவிதைகளின் குறியீட்டு உத்திகளை அறிந்து அவற்றைக் கையாளும் ஆற்றல் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- நமது அடையாளங்களை மீட்டவர்
- முகம் – சுகந்தி சுப்பிரமணியன்
- சிறுபாணாற்றுப்படை – இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
- இரட்சணிய யாத்திரிகம் – எச். ஏ. கிருட்டிணனார்
- கோடை மழை – சாந்தா தத்
- குறியீடு



XII Std Tamil Chap_8.indd 189 2/23/2019 9:43:42 AM

உரைநடை உலகம்

ஆளுமை அ

## நமது அடையாளங்களை மீட்டவர்

W1D7TV




நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டை ஆண்ட அரசர்களுடைய வரலாறு மட்டுமன்று; அந்நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை வரலாறும் சேர்ந்ததே. ஒவ்வொரு நாட்டுக்கும் அந்தந்த நாட்டின் வரலாறு முதன்மையானதாகும். ஆனால் வரலாற்றை ஆவணப்படுத்தும் வழக்கம் நமது நாட்டில் மிக அரிதாகவே இருந்தது. எனவேதான், நமக்குப் பழைய வரலாறுகள் இன்றும் குறைவாகவே கிடைக்கின்றன. பெரிதும் கவனம் குவிக்கப்படாத இத்தகு துறைகளில் வெளிச்சம் பாய்ச்சிய ஆளுமைகள் போற்றத்தக்கவர்கள். ஆய்வுநோக்கில் வரலாற்றையும் பண்பாட்டையும் செழுமைப்படுத்தும் ஆளுமைகளின் ஆய்வும் போற்றத்தக்கது.

ஒவ்வொரு தேசிய இனமும் தன்னுடைய கடந்தகால வரலாற்றை அறிந்திருந்தால் மட்டுமே எதிர்கால இலக்குகளை அடைய முடியும். அத்தகைய இன வரலாற்றை இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர் **மயிலை சீனி. வேங்கடசாமி**. இதழ் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியபடியே எழுதி முடித்த புத்தகங்களே, தமிழர் தம் பழம்பெருமையை உணர, உதவும் புதையல்களாக விளங்குகின்றன.

### இளமைக்கால வாழ்க்கை:

மயிலை சீனி. வேங்கடசாமி, 16.12.1900ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவராகவும் அவருடைய தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியமையால், இளமையிலேயே தமிழின்மீது தணியாத பற்றும் நுணுகி ஆராயும் திறனும் பெற்றவராகத் திகழ்ந்தார். தந்தையின் சித்தமருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே தன்னை வரலாற்றாய்வாளராக உருவாக்கியது என்பதை,

"தமிழ்ப்பற்று முன்னோர்வழியாக எனக்குக் கிடைத்த சீதனம். எங்கள் வீட்டில் இராமாயணம், மகாபாரதம் போன்றவையும் ஏட்டுச்சுவடிகளும் நிறைய இருந்தன. ஏட்டுச்சுவடிகளை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன்; எதுவும் புரியாது. பின்னால் இவற்றையெல்லாம் படித்து ஆராய வேண்டும் என்னும் எண்ணம் எழும். பின்னால் நான் செய்யப் புகுந்த இலக்கிய வரலாற்றுக் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்கு அன்றே என் மனத்தில் வித்தூன்றிவிட்டேன்" என்று கூறுவார்.

ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். பாடம் கற்பிக்கும் நேரத்தைத்தவிர மற்ற நேரங்களில் அவர் வளாகம் சாராத ஆய்வாளராகத் தம்மை உருவாக்கிக் கொண்டார். கட்டுரையோ, நூலோ எழுதும்முன் தரவுகளைச் சேகரித்துத் தமது ஆய்வுக்கு ஏற்றதை ஒப்பிட்டு ஐயமிருப்பின் மற்றவர்களைக் கேட்டுத் தெளிந்த பிறகே வெளியிடுவார். **விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணியர், திரு. வி. க, தெ. பொ. மீ, ச. த. சற்குணர்** ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவரது ஆய்வுக்கட்டுரைகள் **குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி**



XII Std Tamil Chap_8.indd 190 2/23/2019 9:43:42 AM

முதலான இதழ்களில் வெளியாகின. மயிலை சீனி. ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கியே அவர் கால்கள் நடந்தன.நூலகங்களே அவரதுதாயகங்களாகின. அறிவை விரிவு செய்து அல்லும் பகலும் ஆய்வில் மூழ்கிக் கருத்து முத்துகளைத் தமிழ்நாட்டிற்கு வழங்கினார். புதிய செய்தி தருதல், புது விளக்கமளித்தல், இருண்ட பக்கங்களுக்கு ஒளியூட்டுதல், தவறுகளை மறுத்து உண்மையை எடுத்துரைத்தல் என்பனவற்றை ஆய்வு அணுகுமுறைகளாகக் கொண்டார்.

### தொடக்ககால ஆய்வுகள்:

1934இல் **தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்** சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் **ச.த. சற்குணர்,** கிறித்துவமும் தமிழும் என்ற பொருள் குறித்து உரையாற்றினார். அவ்வுரையைக் கேட்டுப் பெற்ற ஆர்வத்தினால் 'கிறித்துவமும் தமிழும்' என்னும் நூலை மயிலையார் எழுதினார். இதுவே அவருடைய முதல் நூலாகும். தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக, '**பௌத்தமும் தமிழும்**', '**சமணமும் தமிழும்**' ஆகிய நூல்களை அவர் இயற்றினார். அச்சமயத்தார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. அதனை, அவர் காழ்ப்புணர்வின்றி நடுநிலை நின்று இந்நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தினார்.

**சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு** முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார். குறிப்பாக, கல்வெட்டு ஆய்வில் இவருக்குப் பயிற்சி அதிகம்; தமிழ் எழுத்தியலின் வளர்ச்சியை நன்குணர்ந்தவர். வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்த காரணத்தால் சாசனங்களை அவரால் எளிதாக வாசிக்க முடிந்தது. வரலாறு, இலக்கியம், கலையியல், சமயம் எனப் பல துறைகளிலும் நூல்களை எழுதியிருப்பது வேங்கடசாமியின் பன்முக அறிவை விளக்குகிறது.



### வரலாற்று ஆய்வுகள்

1950களில், கி.பி.(பொ.ஆ.) 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. (பொ.ஆ.) 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்** ஆகியோர் குறித்த நூல்களைத் தொடர்ந்து மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனைப் பற்றியும் அவர் எழுதினார். இது, தமிழில் அம்மன்னனைப் பற்றி எழுதப்பட்ட முதல் நூல் என்னும் பெருமையைப் பெற்றது. இவை தவிர, சங்க கால மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார். மேற்குறித்தவற்றுள் வரலாற்றை மட்டும் எழுதாது அதன் அரசியல், பண்பாடு மற்றும் கலை வரலாறுகளையும் பதிவு செய்தார்.

சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலம் தமிழர்களின் வரலாற்றில் இருண்ட காலம் என்று

மரபுவழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தனர். இம்மன்னர்கள் குறித்த ஆய்வை வேங்கடசாமி விரிவாக மேற்கொண்டு களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் '**களப்பிரர் ஆட்சியில் தமிழகம்**' என்னும் நூல்மூலம் வெளிப்படுத்தினார்.

## கலையியல் ஆய்வுகள்

கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கடசாமியே வழிகாட்டியாக விளங்கினார். இக்கலை ஆராய்ச்சிக்கு அவருடைய பல்துறை அறிவும் தம் இளமைப்பருவத்தில் அவர் ஓவியக் கல்லூரியில் பயின்றதும் இதற்கு உதவியாக அமைந்தது. கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான இவரது ஆய்வுகள் தமிழ்ச்சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன. தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் '**தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்**' என்னும்நூல்,கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும். "தற்காலத்துத் தமிழ்ச்சமூகம் தனது பழைய அழகுக் கலைச்செல்வங்களை மறந்து, தன்பெருமை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகிறது; 'கலை கலை' என்று இப்போது கூறப்படுகிறதெல்லாம் சினிமாக்கலை, இசைக்கலைகள் பற்றியே; இலக்கியக்கலைகூட அதிகமாகப் பேசப்படுவதில்லை; ஏனைய அழகுக்கலைகளைப் பற்றி அறவே மறந்துவிட்டனர்; எனவே இந்நூல் எழுதப்பட்டது" என்று இந்நூலின் முன்னுரையில் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகின்றார். இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும். தமது நூல்களின் படங்களைத் தானே வரைந்து வெளியிட்டது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.

## இலக்கிய ஆய்வுகள்

1962ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை வேங்கடசாமி நிகழ்த்தினார். இச்சொற்பொழிவுகள் மூலம் அவரது ஆய்வுப்பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது. அதன் விளைவாக, சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதினார்.

ஆய்வுலகில் மயிலை சீனி. வேங்கடசாமியின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கூற வேண்டுமானால் தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்ததைக் குறிப்பிடலாம். '**தமிழ்நாட்டு வரலாறு**' என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக்கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார். அத்துடன் துளு மொழியையும் தமிழ்மொழியையும்ஒப்பிட்டுஆராய்ந்துள்ளார்.



தெரியுமா?

**மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி நாரண துரைக்கண்ணன் சொன்ன உருவ விவரிப்பு**

"ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்; அகன்ற நெற்றி; வட்ட முகம்; எடுப்பான மூக்கு; பேசத் துடிக்கும் மெல்லுதடுகள்; நான்கு முழ வெள்ளை வேட்டி; காலர் இல்லாத முழுக்கைச் சட்டை; சட்டைப்பையில் மூக்குக்கண்ணாடி; பவுண்டன் பேனா; கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல்துண்டு; இடது கரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமாரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே, அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி.

– நாரண. துரைக்கண்ணன்



XII Std Tamil Chap_8.indd 192 2/23/2019 9:43:42 AM

குறைந்த ஆதாரங்களைக்கொண்டு ஒரு பெரிய வரலாற்றையே உருவாக்கிய இவரது நுண்ணிய அறிவிற்குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது.

தமிழியலுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்களையும் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை இவர் மேற்கொண்டார். இப்பணியின் விளைவாக, **சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள்** ஆகிய நூல்களை எழுதினார். இவருடைய, **பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்** இலக்கியம் என்னும் நூல், ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் எனலாம். இதேபோல, 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப்பணிகளில் ஒன்றாகும். இந்நூல் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. இந்நூலில், பரந்த தமிழ் இலக்கிய, இலக்கணப் பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து மறைந்துபோன 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்துகிறார்.

### பன்மொழிப் புலமை

தமிழ் ஆய்வு மரபில், சொல் ஆய்வுகளை மேற்கொள்ளாத ஆய்வாளர் இல்லை. நீண்ட வரலாறுகொண்ட மொழியின் சொற்களில் இவ்வகையான ஆய்வுக்குரிய ஏதுக்கள் மிகுதியாகும். வேங்கடசாமி தொடர்ச்சியாக இத்தகைய சொல்லாய்வுப் பணியை மேற்கொண்டு வந்துள்ளார். '**செந்தமிழ்ச் செல்வி**' என்னும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் '**அஞ்சிறைத் தும்பி**' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.

வேங்கடசாமி அவர்கள் மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சியுடையவர். எனவே, மகேந்திரவர்மன் இயற்றிய '**மத்த விலாசம்**' என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கியுள்ளார்.

தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழர் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியவியல் என்ற வட்டத்திற்குள் பேசப்பட்ட தமிழகத்தின் வரலாற்றை, அதிலிருந்து மீட்டுத் திராவிட இயலாக அடையாளப்படுத்தியதில் இவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அதன் பயனாக, இன்று திராவிட இயல் தமிழியலாக வளர்ந்துள்ளது.

"நான் கதைகளையும் நவீனங்களையும்

**சிறுபாணன் சென்ற பெருவழி நிலப்படம்**

(மயிலை சீனி. வேங்கடசாமி வரைந்தது)




மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள்

*தாங்கெட நேர்ந்த போதும்*
*தமிழ்கெட லாற்றா அண்ணல்*
*வேங்கட சாமி என்பேன்*
*விரிபெரு தமிழர் மேன்மை*
*ஓங்கிடச் செய்வ தொன்றே*
*உயிர்ப்பணியாகக் கொண்டோன்*
*வீங்கிட மாட்டான் கல்வி*
*விளம்பரம் விழைதல் இல்லான்*

– பாவேந்தர் பாரதிதாசன்



XII Std Tamil Chap_8.indd 193 2/23/2019 9:43:43 AM

எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதுகிறவன். ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை; இதை மிகச் சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்பதை நன்றாகத் தெரிந்தே ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறேன்" என்று வேங்கடசாமி வருந்தி எழுதியுள்ளார். இது, வரலாற்றின் மீதுள்ள அவருடைய ஈடுபாட்டையும் உழைப்பையும் பறைசாற்றுவதோடு தமிழர், தம் வரலாற்றைப் பொருட்படுத்தாத போக்கினையும் அறிவிக்கிறது. எனவேதான் சுவாமி விபுலானந்த அடிகள், 'மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர்' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

### ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை சீனியாரால் பல ஆய்வுகள் தமிழுலகுக்கு முதன்முதலாக வழங்கப்பட்டவை. இவரது ஆய்வுகள் அறிஞருக்கு மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் அறிவு விருந்தோம்பியவை. பல ஆய்வுகள் கிளைவிடுவதற்கு அடிமரமாக இருந்தவை இவரது ஆய்வுகள். வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி என்றோ ஒதுக்க முடியாத வகையில் இவரது எழுத்தாளுமை திகழ்ந்தது.

தமிழக வரலாற்றுக் கழகத்திலும் தமிழகப் புலவர் குழுவிலும் உறுப்பினராக இருந்து பெருந்தொண்டாற்றிய வேங்கடசாமிக்கு 1962இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டிக் கேடயம் வழங்கியது.மதுரைக்காமராசர்பல்கலைக்கழகம் '**தமிழ்ப் பேரவைச் செம்மல்**' என்ற விருதினை அளித்தது. தமது ஓயாத தேடலினாலும் கடுமையான உழைப்பாலும் அரிய ஆய்வு முடிவுகளைக் கொணர்ந்த இம்மாமனிதருக்கு அறிஞர்கள் கூடிச் சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினர்.

திருமணமே செய்துகொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. அவர், நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வுநோக்கில் விரித்துரைத்தவர்; நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

**தெரிந்து தெளிவோம்**

### புதிய செய்தி காணும் ஆய்வு

சேரன் கொடிக்கு வில், சோழன் கொடிக்கு புலி, பாண்டியன் கொடிக்கு மீன் என்று மரபான சின்னங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற சின்னங்கள் பற்றிய குறிப்புகள் ஆய்வுலகு அறியாதவை, சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. இப்படி அவர் வெளிப்படுத்திய அரிய செய்திகள் பற்பல.

**கற்பவை கற்றபின்...**

1. உங்கள் பகுதியைச் சேர்ந்த தமிழறிஞர் ஒருவரின் பணிகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
2. தமிழறிஞர்களின் பணிகள் குறித்து வகுப்பறையில் படத்தொகுப்பு உருவாக்குக.



XII Std Tamil Chap_8.indd 194 2/23/2019 9:43:43 AM

கவிதைப்பேழை

ஆளுமை அ

# முகம்

– சுகந்தி சுப்பிரமணியன்

WFW2V7

**நுழையும்முன்**

ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அத்தனித்தன்மை அடையாளம் காணப்படுகையில் எழுச்சியும் ஊக்கமும் உடன் இணைந்துகொள்கிறது. அடையாளம் இழந்த ஒருவர், முகத்தைத் தொலைத்தவராகிறார். சமூகத்தின் இறுக்கமான குடும்பக் கட்டுமானத்தில் சிக்கித் திணறும் பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தொலைத்ததை மீட்கும் வேட்கை ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

*முகங்களுடன் முகம்*
*எனது முகம் காணவில்லை.*
*தேடுகிறேன் இன்னமும்*
*எனக்குள்ளே என்னைத் தொலைத்தபின்*
*எனது முகம் முகவரியற்றுப் போனது.*
*முகத்தைத் தொலைத்தபின்*
*என் உடல் என்னை மறந்து போனது.*
*நான் வெற்றுவெளியில்*
*அலைந்து கொண்டிருக்கிறேன்*
*எனது முகத்தைத் தேடியபடி.*
*எல்லா முகமும் அதனதன் கோணத்தில்*
*இயல்பற்று இறுகிக் கிடந்தது.*
*என் முகம் எப்படியென*
*எனக்குத் தெரியாது.*
*ஆனாலும்*
*என் முகத்தை நான் தேடியாக வேண்டும்*
*இப்பொழுதேனும்.*



**நூல்வெளி**

'சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்' என்னும் தொகுப்பில் இக்கவிதை இடம்பெற்றிருக்கிறது. தமிழின் நவீன பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர் சுகந்தி சுப்ரமணியன். கோவை புறநகரின் ஆலாந்துறை என்னும் சிறிய கிராமத்தைச் சேர்ந்த இவர், உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முழுமை செய்யாத நிலையில் திருமணமாகி, கணவர் தந்த நம்பிக்கையில் எழுதத் தொடங்கினார். தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்களால் நிரம்பியுள்ள இவருடைய படைப்புகள் புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் ரகசியம் ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவருடைய மறைவுக்குப் பிறகு இவரின் கவிதைகளும் சில சிறுகதைகளும் 'சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்' என்ற பெயரில் வெளிவந்துள்ளன.

**கற்பவை கற்றபின்...**

உங்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன? உங்கள் வலிமையென்று நீங்கள் எவற்றைக் கருதுவீர்கள்?

கவிதைப்பேழை

ஆளுமை அ

# இரட்சணிய யாத்திரிகம்

எச்.ஏ. கிருட்டிணனார்




நிறைய அன்பு, குறையாத ஆர்வம், தொடரும் நெகிழ்ச்சி, தொண்டில் மகிழ்ச்சி என்பன மனிதத்தின் இயல்புகள். இம்மனிதமே அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை. இக்கொள்கையைப் பேச்சாலும் வாழ்வாலும் வதை பல பட்டும் வெளிப்படுத்தியவர், இயேசு பெருமானார்.

## இறைமகனின் எளியநிலை

*1.* *பாசம்என உன்னலிர் பிணித்தமை பகைத்த*
*நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்*
*நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி*
*ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்.* –1421

*2.* *பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி*
*ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற*
*வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்*
*நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.** –1448

## ஆளுநர் முன் நிறுத்துதல்

*3.* *எண்ண மிட்டவர் பொந்தியு பிலாத்தேனும் இறைமுன்*
*அண்ணலைத் தனி நிறுவவும், ஆக்கினைத் தீர்ப்புப்*
*பண்ணவும் என நிண்ணயம் பண்ணினர் பகைகொண்டு*
*ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க!* –1464

## ஆளுநர் விதித்த கொலைத்தண்டனையை நிறைவேற்ற இழுத்துச் சென்று துன்புறுத்துதல்

*4.* *முன்னுடை களைந்து ஒரு முருக்கு அலர்ந்தெனச்*
*செந்நிற அங்கிமேல் திகழச் சேர்த்தினர்;*
*கொல் நுனை அழுந்தி வெம் குருதி பீறிடப்*
*பின்னிய முள்முடி சிரத்துப் பெய்தனர்.* –1524

5. கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை அடித்து வேதனை
செய்தனர்; உமிழ்ந்தனர் திருமுகத்தினே;
வைதனர்; பழித்தனர், மறங்கொள் நீசரே. –1526

## மக்கள் புலம்பல்

6. என்கொல் மேதினி கீண்டு வெடித்திலது என்பார்!
என்கொல் வானம் இடிந்து விழுந்திலது என்பார்!
என்கொல் வாரிதி நீர் சுவறாததும் என்பார்!
என்கொலோ முடிவு இத்துணை தாழ்த்ததும் என்பார்! –1540

## பொல்லாங்கு பொறுத்தல்

7. பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
வல்லானை எள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித்து ணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தார். –1564



## சொல்லும் பொருளும்

1) **உன்னலிர்** – எண்ணாதீர்கள்; **பிணித்தமை** – கட்டியமை; **நீச** – இழிந்த; **நேசம்** – அன்பு; **வல்லியதை** – உறுதியை; **ஓர்மின்** – ஆராய்ந்து பாருங்கள்

2) **பாதகர்** – கொடியவர்; **குழுமி** – ஒன்றுகூடி; **பழிப்புரை** – இகழ்ச்சியுரை; **ஏதமில்** – குற்றமில்லாத; **ஊன்ற** – அழுந்த; **மாற்றம்** – சொல்; **நுவன்றிலர்** – கூறவில்லை.

## பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3) **ஆக்கினை** – தண்டனை; **நிண்ணயம்** – உறுதி; **கூவல்** – கிணறு; **ஒண்ணுமோ** – முடியுமோ; **உததி** – கடல்; **ஒடுக்க** – அடக்க

4) **களைந்து** – கழற்றி; **திகழ** – விளங்க; **சேர்த்தினர்** – உடுத்தினர்; **சிரத்து** – தலையில்; **பெய்தனர்** – வைத்து அழுத்தினர்

5) **கைதுறும்** – கையில் கொடுத்திருந்த; **கண்டகர்** – கொடியவர்கள்; **வெய்துற** – வலிமை



XII Std Tamil Chap_8.indd 197 2/23/2019 9:43:46 AM

மிக; **வைதனர்** – திட்டினர்; **மறங்கொள்** – முரட்டுத் தன்மையுள்ளவர்.

6) **மேதினி** – உலகம்; **கீண்டு** – பிளந்து; **வாரிதி** – கடல்; **சுவறாதது** – வற்றாதது

7) **வல்லானை** – வலிமை வாய்ந்தவரை; **நிந்தை** – பழி; **பொல்லாங்கு** – கெடுதல்; தீமை

## பாடலின் பொருள்

1) இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார். அச்செயலானது, இயல்பாக மனிதர்களிடம் காணப்படுகிற சாதாரண அன்புச்செயல் என்று கருத வேண்டியதில்லை. தம்மீது பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்த இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்று எண்ணி அவர்களுக்காக இரக்கப்படுகிற தன்மையே காரணம். அந்த அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல்தான், எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார். இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

2) கொடியோர் ஒன்றுகூடிக் கூறிய இகழ்ச்சி மொழி எனும் கொடிய தீக்கொள்ளியானது மாசில்லாத அருள்நிறைந்த இறைமகன் இதயத்தில் அழுந்தியது. அவர் மிக வேதனையடைந்து மனம் வெந்து புண்பட்டாரே அல்லாமல், தம்மைத் துன்புறுத்துகிறவர்கள் மீது சினந்து வருந்தத்தக்க ஒரு மறுசொல்லும் கூறாமல் நின்றார். தாம் கருதி வந்த வேலை நிறைவேறுவதற்காக அவர் அமைதி காத்தார்.

3) பெருந்தகையரான இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டு போந்தியு பிலாத்து என்னும் ஆளுநரின் முன் தனியாகக் கொண்டுபோய் நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத் தரவும் உறுதியாக இருந்தனர். வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக்கொள்ள முடியுமா? முடியாது.

4) இறைமகனை இழுத்துச் சென்ற அக்கொடியவர்கள், அவர் அணிந்திருந்த வெள்ளாடையைக் கழற்றிவிட்டு, முருக்க மலர் போன்று சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் போர்த்தினர். துன்பம் தரும் கூர்மையான முள் செடியினால் பின்னப்பட்ட ஒரு முடியை அவருடைய தலையில் வைத்து இரத்தம் பீறிட்டு ஒழுகுமளவு அழுத்தினர்.

5) கொடுமனம் படைத்த அந்த முரடர்கள், இறைமகனுடைய கையிலிருந்த கோலினைப் பிடுங்கி எடுத்துக் கொண்டனர். முள்முடி சூட்டப்பட்ட அவர் தலையின்மேல் வன்மையாக அடித்து வேதனை செய்தனர். மேலும், அவருடைய திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து, திட்டிப் பழித்துக் கேலி செய்தனர்.

6) மக்கள் 'இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே!' என்பர்; 'வானம் இடிந்து விழவில்லையே! இது என்னே!' என்பர்; 'கடல்நீர் வற்றிப் போகவில்லையே! இது என்னே!' என்பர்; மேலும், 'இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ' என்பர்.

7) பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர் கூட்டமும் எல்லாம் வல்ல இறைமகனை இகழ்ந்து பேசியும் புறக்கணித்தும் வாயில் வந்தபடி சொல்லத் தகாத பழிமொழிகளைக் கூறினர். அவர்கள் செய்த பொல்லாங்குகளை எல்லாம் நம் இறைமகன், பொறுத்திருந்தார்.

## இலக்கணக் குறிப்பு

**கருந்தடம், வெங்குருதி** – பண்புத்தொகைகள்; **வெந்து, சினந்து, போந்து** – வினையெச்சங்கள்; **உன்னலிர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று; **ஓர்மின்** – ஏவல் பன்மை வினைமுற்று; **சொற்ற, திருந்திய** – பெயரெச்சங்கள்; **பாதகர்** – வினையாலணையும் பெயர்; **ஊன்ற ஊன்ற** – அடுக்குத் தொடர்



XII Std Tamil Chap_8.indd 198 2/23/2019 9:43:46 AM

### உறுப்பிலக்கணம்

*பகைத்த* = **பகை + த் + த் + அ**

பகை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

*களைந்து* = **களை + த்(ந்) + த் + உ**

களை – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

*பழித்தனர்* = **பழி + த் + த் + அன் + அர்**

பழி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

*இடிந்து* = **இடி + த்(ந்) + த் + உ**

இடி – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

*முன்னுடை* = **முன்+உடை**

விதி : 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – முன்ன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – முன்னுடை.

*ஏழையென* = **ஏழை + என**

விதி : 'இ ஈ ஐ வழி யவ்வும் – ஏழை + ய் + என

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென.

**தெரியுமா?**

திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்மூன்று ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.

இரட்சணிய யாத்திரிகம், 1894ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

**நூல்வெளி**

ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் (Pilgrims Progress) எனும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது. இது 3766 பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம். இது ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது. இக்காப்பியத்தின் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம்பெறும் இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் எச். ஏ. கிருட்டிணனார். பிற சமய இலக்கியங்களைப் போலவே கிறித்துவ சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளமைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. எச்.ஏ. கிருட்டிணனார் போற்றித் திருஅகவல், இரட்சணிய மனோகரம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரைக் கிறித்துவக் கம்பர் என்று போற்றுவர்.

**கற்பவை கற்றபின்...**

பொறுத்தாரை இவ்வுலகம் பொன்போல் போற்றும் – என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.

கவிதைப்பேழை

## ஆளுமை அ

# சிறுபாணாற்றுப்படை

– நத்தத்தனார்

**நுழையும்முன்**

ஈகைப்பண்பு மனிதத்தின் அடையாளமாக இருக்கிறது. கொடுக்கிற பண்பு இருந்தால் எடுக்கிற நிலை இருக்காது. தமிழ் இலக்கியங்கள் கொடைத்தன்மையை விதந்து போற்றுகின்றன; எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுக்கும் தன்மையை வலியுறுத்துகின்றன; கொடுப்பதில் மகிழ்ச்சி காணும் பண்பைப் போற்றுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்கள் இக்கொடை பண்பை விளக்கும் இலக்கியங்களாக இருக்கின்றன. இன்றளவும் கொடைப் பண்பால் பெயர்பெற்றிருக்கிற வள்ளல்கள் எழுவர் பற்றிய பதிவுகள் கொடைக்கு இலக்கணமாகவும் மனிதத்தின் விளக்கமாகவும் அமைந்திருக்கின்றன.



*பேகன் – (பொதினி மலை)*

*வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்*
*கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய*
*அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்*
*பெருங்கல் நாடன் பேகனும் ... (84–87)*

*பாரி (பறம்பு மலை)*

*...... சுரும்பு உண*
*நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்*
*சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய*
*பிறங்குவெள் அருவி வீழும் சாரல்*
*பறம்பின் கோமான் பாரியும் ... (87–91)*

*காரி (மலையமான் நாடு)*

*...... கறங்குமணி*
*வாலுளைப் புரவியொடு வையகம் மருள*
*ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த*
*அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்*
*கழல்தொடித் தடக்கைக் காரியும் ... (91–95)*

*ஆய் (பொதியமலை)*

*...... நிழல் திகழ்*
*நீலம், நாகம் நல்கிய கலிங்கம்*
*ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த*
*சாவந் தாங்கிய, சாந்துபுலர் திணிதோள்*
*ஆர்வ நன்மொழி ஆயும்; ... (95–99)*



XII Std Tamil Chap_8.indd 200 2/23/2019 9:43:47 AM

அதிகன் (தகடூர்)

……. மால்வரைக்

கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல் தானை அதிகனும் ... (99–103)

நள்ளி (நளிமலை)

….. ….. கரவாது

நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழைபொழியும்வளிதுஞ்சுநெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும் ... (103–107)

ஓரி (கொல்லிமலை)

………….. நளிசினை

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் ... (107–111)

இவர்களோடு நல்லியக்கோடன்.

……… என ஆங்கு

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்*...
... (111–115)

**பா வகை:நேரிசை ஆசிரியப்பா**

## சொல்லும் பொருளும்

**வளமலை** – வளமான மலை (மலைநாடு) இன்று பழநி மலை என்று அழைக்கப்படுகிறது; **கவாஅன்** – மலைப்பக்கம்; **கலிங்கம்** – ஆடை; **சுரும்பு** – வண்டு; **நாகம்** – சுரபுன்னை, நாகப்பாம்பு; **பிறங்கு** – விளங்கும்; **பறம்பு** – பறம்பு மலை; **கறங்கு** – ஒலிக்கும்; **வாலுளை** – வெண்மையான தலையாட்டம்; **மருள** – வியக்க; **நிழல்** – ஒளி வீசும்; **நீலம்** – நீலமணி; **ஆலமர் செல்வன்** – சிவபெருமான் (இறைவன்); **அமர்ந்தனன்** – விரும்பினன்; **சாவம்** – வில்; **மால்வரை** – பெரியமலை (கரிய மலையுமாம்); **கரவாது** – மறைக்காது; **துஞ்சு** – தங்கு; **நளிசினை** – செறிந்த கிளை (பெரிய கிளை); **போது** – மலர்; **கஞலிய** – நெருங்கிய; **நாகு** – இளமை; **குறும்பொறை** – சிறு குன்று; **கோடியர்** – கூத்தர்; **மலைதல்** – போரிடல்; **உறழ்** – செறிவு; **நுகம்** – பாரம்

## பாடலின் பொருள்

பருவம் பொய்க்காமல் மழை பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் (அது குளிரால் நடுங்கும் என்று எண்ணித் தன் மனத்தில் சுரந்த அருளினால்) தன்னுடைய ஆடையைக் கொடுத்தான். இவன் வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் தோன்றியவன்; பெரிய மலை நாட்டுக்கு உரியவன்; வலிமையும் பெருந்தன்மையும் நற்பண்பும் கொண்டவன்; பொதினி மலைக்குத் தலைவன்.

வண்டுகள் உண்ணும்வண்ணம் நல்ல தேனைமிகுதியாகக் கொண்ட மலர்களைச் சிந்தும் சுரபுன்னை மரங்கள் நிறைந்த நெடுவழியில், மலர்களையுடைய (கொம்பின்றித் தவித்துக்கொண்டிருந்தது) முல்லைக்கொடியொன்று பற்றிப்படரத் தான் ஏறிவந்த பெரிய தேரினை ஈந்தவன் பாரி. அவன், வெள்ளிய அருவிகளைக் கொண்ட பறம்புமலையின் தலைவன்.

உலகம் வியக்கும்படி வெண்மையான பிடரியுடன் தலையை ஆட்டும் குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுப்பவன் காரி என்னும் வள்ளல். இவன், பகைவர் அஞ்சக்கூடிய வகையில் நெருப்பைப் போல் சுடர்விடுகின்ற நீண்ட வேலினையும் வீரக்கழலையும் உடையவன்; தோள்வளையை அணிந்த நீண்ட கைகளை உடையவன்.

ஒளிமிக்க நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் மன விருப்பம் கொண்டு ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன், ஆய் என்னும் வள்ளல். இவன் வில் ஏந்தியவன்; சந்தனம் பூசி உலர்ந்த

தோள்களை உடையவன்; ஆர்வத்துடன் இனிமையான மொழிகளைப் பேசுபவன்.

நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி, உயிர் நிலைபெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது. அது தனக்குக் கிடைக்கப் பெற்றபோது, அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதிகன் என்னும் வள்ளல்; வலிமையும் சினமும் ஒளியும்மிக்க வேலினை உடையவன்: கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன் .

நள்ளி என்னும் வள்ளல், தன்னிடம் உள்ள பொருட் செல்வத்தை இல்லையென்னாது நட்புக் கொண்டவர் உள்ளம் மகிழ்ச்சி அடையுமாறு இனிய வாழ்விற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் குறிப்பறிந்து வழங்கும் பெரிய கைகளை உடையவன். இவன் காலந்தவறாமல் பெய்யும் மழை போன்றவன்; போர்த் தொழிலில் வல்லமையுடையவன்; மழைக்காற்று எப்போதும் இருக்கக்கூடிய உயர்ந்த மலை நாட்டை உடையவன்.

செறிவான கிளைகளில் மணம் வீசும் மலர்கள் நிறைந்த, சுரபுன்னை மரங்கள் சூழ்ந்த சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன் ஓரி என்னும் வள்ளல். இவன் காரி என்னும் வலிமைமிக்க குதிரையைக் கொண்ட காரி என்பவனை எதிர்த்து நின்று அஞ்சாமல் போரிட்டவன்; ஓரி என்னும் வலிமைமிக்க குதிரையைத் தன்னிடத்தில் கொண்டவன்.

மேலே குறிப்பிட்ட ஏழு வள்ளல்கள் ஈகை என்னும் பாரத்தை இழுத்துச் சென்றனர்;

### தெரிந்து தெளிவோம்

**கடையெழு வள்ளல்களும் – ஆண்ட நாடுகளும்**

பேகனின் ஊரான ஆவினன்குடி 'பொதினி' என்றழைக்கப்பட்டு, தற்போது பழனி எனப்படுகிறது. பழனி மலையும் அதைச் சுற்றிய மலைப்பகுதிகளும் பேகனது நாடாகும்.

பாரியின் நாடு பறம்பு மலையும், அதைச் சூழ்ந்திருந்த முந்நூறு ஊர்களும் ஆகும். பறம்பு மலையே பிறம்பு மலையாகி, தற்போது பிரான்மலை எனப்படுகிறது. இம்மலை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது.

காரியின் நாடு (மலையமான் திருமுடிக்காரி) மலையமான் நாடு என்பதாகும். இது மருவி 'மலாடு' எனப்பட்டது. இது விழுப்புரம் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருக்கோவிலூரும் (திருக்கோயிலூர்) அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

ஆய் நாடு (ஆய் அண்டிரன்) – பொதிய மலை எனப்படும் மலை நாட்டுப் பகுதியாகும். தற்போது அகத்தியர் மலை என்றும் அழைக்கப்படுகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குற்றாலம், பாபநாசம் ஆகிய மலைப்பகுதிகளும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

அதியமான் நாடு (அதிகமான் நெடுமான் அஞ்சி) 'தகடூர்' என்றழைக்கப்பட்ட தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பகுதி. இப்பகுதியில் உள்ள 'பூரிக்கல்' மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியையே ஔவையாருக்கு அதிகமான் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

நள்ளியின் நாடு (நளிமலை நாடன்) நெடுங்கோடு மலை முகடு என்றழைக்கப்பட்ட பகுதி. தற்போது உதகமண்டலம் 'ஊட்டி' என்று கூறப்படுகிறது.

ஓரியின் நாடு (வல்வில் ஓரி) – நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 'கொல்லி மலையும்' அதைச் சூழ்ந்துள்ள பல ஊர்களும் ஆகும்.

**ஓய்மா நாட்டு நல்லியக்கோடனது நாடு**

திண்டிவனத்தைச் சார்ந்தது ஓய்மா நாடு என அழைக்கப்பட்ட நிலப்பகுதி ஆகும்.



XII Std Tamil Chap_8.indd 202 2/23/2019 9:43:47 AM

ஏழு வள்ளல்கள் ஆண்ட இடங்கள் நிலப்படம்






### தெரியுமா?

முல்லைக் கொடி படரத் தேர் தந்த பாரியின் செயலும், மயிலுக்குத் தன் ஆடையைத் தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்யப்பட்டவையல்ல. இஃது அவர்களின் ஈகை உணர்வின் காரணமாகச் செய்யப்பட்டதேயாகும். இச்செயலே இவர்களின் பெருமைக்குப் புகழ் சேர்ப்பதாகிவிட்டது. இதையே, பழமொழி நானூறு, 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறுகிறது.

புறநானூறு குறிப்பிடும் மற்றொரு வள்ளல் குமணன். இவன் முதிர மலையை (பழனி மலைத்தொடர்களில் ஒன்று) ஆட்சி செய்த குறுநில மன்னனாவான். தன் தம்பியாகிய இளங்குமணனிடம் நாட்டைக் கொடுத்துவிட்டுக் காட்டில் மறைந்து வாழ்ந்தான். இளங்குமணன் தன் அண்ணனின் தலையைக் கொய்து தருவோர்க்குப் பரிசில் அறிவித்திருந்தான். அப்போது தன்னை நாடிப் பரிசில் பெற வந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர்க்குக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லாமையால், தன் இடைவாளைத் தந்து, "தன் தலையை அரிந்து சென்று, இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு" கேட்டுக் கொண்டான். இதனால் இவன் 'தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல்' என்று போற்றப்படுகிறான். புறநானூறு 158 – 164, 165 ஆகிய பாடல்களிலும் இவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.



XII Std Tamil Chap_8.indd 203 2/23/2019 9:43:48 AM

ஆனால் நல்லியக்கோடன், தானே தனியொருவனாக இருந்து அந்த ஈகையின் பாரத்தைத் தாங்கி இழுத்துச் செல்லும் வலிமை உடையவன்.

### இலக்கணக் குறிப்பு

**வாய்த்த, உவப்ப, கொடுத்த, ஈந்த** – பெயரெச்சங்கள்; **கவாஅன்** – செய்யுளிசையளபெடை; **தடக்கை** – உரிச்சொல் தொடர்; **நீலம்** – ஆகுபெயர், **அருந்திறல், நெடுவழி, வெள்ளருவி, நெடுவேல், நன்மொழி, நன்னாடு** – பண்புத் தொகைகள்; **கடல்தானை** – உவமைத்தொகை; **அரவக்கடல்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; **மலைதல்** – தொழிற்பெயர்; **விரிகடல்** – வினைத்தொகை

### உறுப்பிலக்கணம்

ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ

ஈ – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

அமர்ந்தனன் = அமர் + த்(ந்) + த் + அன் + அன்

அமர் – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ

தாங்கு – பகுதி; இ(ன்) – இடைநிலை; ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

நன்மொழி = நன்மை + மொழி

விதி : 'ஈறுபோதல்' – 'நன்மொழி'.

உரனுடை = உரன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'உரனுடை'.

#### சிறுபாணன் பயணம்

நல்லூர் (சிறுபாணன் பயணம் தொடங்கிய இடம்)
↓ 8கல்
எயிற்பட்டினம் (மரக்காணம்)
↓ 12 கல்
வேலூர் (உப்பு வேலூர்)
↓ 11 கல்
ஆமூர் (நல்லாமூர்)
↓ 6கல்
கிடங்கில் (திண்டிவனம்)
(சிறுபாணன் பயணம் முடித்த இடம்)

– மா.இராசமாணிக்கனார்,
பத்துப்பாட்டு ஆராய்ச்சி

#### நூல்வெளி

சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் நல்லூர் நத்தத்தனார். இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; ஓய்மாநாட்டு மன்னனான நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 269 அடிகளில் எழுதப்பட்ட நூல். பரிசுபெற்ற பாணன் ஒருவன் தான் வழியில் கண்ட மற்றொரு பாணனை அந்த அரசனிடம் ஆற்றுப்படுத்துவதாக இது அமைந்துள்ளது. வள்ளல்களாகக் கருதப்பட்ட குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகள் இப்பாடப்பகுதியில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

#### கற்பவை கற்றபின்...

1. எதையும் எதிர்பாராமல் நீங்கள் பிறருக்கு உதவி செய்த நிகழ்வை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
2. தமிழர்கள் கொடைத் தன்மையில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றுகள் திரட்டி ஒப்படைவு எழுதுக.

விரிவானம்

ஆளுமை அ

# கோடை மழை

–சாந்தா தத்




குழந்தைகள் பெற்றோரால் கொண்டாடப்படுகிறார்கள். பெற்றோர் என்ற சொல்லே 'பேறுபெற்றோர்' என்ற பொருள் கொண்டதுதான் எனலாம். தாய் தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை மிகக் கொடியதாகும். அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனிதப் பண்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. பிள்ளைகள் இல்லாத முதியோர்களும் இத்தகைய ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தான். அவர்களையும் ஏற்று அரவணைப்பவர்கள் மனிதத்தை மேம்படுத்துபவர்களே.

விழிகளை அகலவிரித்து எவ்வித இலக்குமின்றி இப்படியும் அப்படியுமாய்ப் பார்வையைச் சுழற்றிக் கொண்டிருந்த குழந்தை மீண்டும் சிணுங்க ஆரம்பித்தது. இப்படித்தான் விட்டு விட்டு அழுது கொண்டிருக்கிறது அரைமணிக்கும் மேலாய். பசியா.... காய்ச்சல் அசதியா.... தெரியவில்லை. அவஸ்தைப்படும் குழந்தையை நினைத்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார் ஆறுமுகம்.

குழந்தைக்கு ரெண்டு விழுங்கு டீத்தண்ணி புகட்டித் தானும் குடித்தால் வறண்ட தொண்டைக்கு இதமாக இருக்கும். டீ விற்கும் பையனை உள்ளே விடமாட்டார்கள். வெளியே சென்று குடித்துவிட்டு வரவும் துணிவில்லாமலிருந்தது. இடம் பறிபோய்விடும் எனும் பயம். போட்டுச் செல்லும் மேல் துண்டைத் தள்ளிவிட்டு அடாவடித்தனமாய் ஆக்கிரமித்துக் கொள்ளும் பொறுமை பறிபோயிருந்த ஜனம். விடிந்தும் விடியாததுமாய் பரபரத்து ஓடிவந்தும் பயனில்லை. கூட்டம் சேருவதற்குமுன் வந்துவிடவேண்டுமெனும் தவிப்பு அடுத்தவர்களுக்கும் இருக்காதா என்ன என்று எண்ணியபடி குழந்தையைத் தோளில் சாய்த்துச் சமாதானப்படுத்த முயன்றார்.

வரிசையின் அசைவு ஆமை வேகத்தில். அலுப்புகூடியது. போய்விடலாமா என்ற எரிச்சல் கூட. கை மருந்துக்குக் கட்டுப்படாத இரண்டு நாள் காய்ச்சல். தனியார் மருத்துவமனை செல்ல வக்கில்லாதபோது... கை மட்டுமன்றி மனுச ஆதரவும் வறண்டு போய்விட்டபோது... இல்லாதவற்றுக்கெல்லாம் ஈடுகட்டுவது போல் பொறுமையையாவது நிறைய வரவுவைக்க வேண்டியதுதான். காசா பணமா....

மூன்றுமணி நேரத்திற்கும் மேலாய் குழந்தையை ஏந்தியிருந்ததால் கையில் கடுப்பு தெரிய ஆரம்பித்தது. சீட்டு வாங்கிக்கொண்டு உட்கார்ந்ததுதான். இடுப்பும் வலி தெரிவித்தது. கிழ உடம்பு. எவ்வளவுதான் தாங்கும். மனசா என்ன அதட்டி மிரட்டி மூலையில் முடக்க...

நத்தை அசைவும் நின்றுபோய் ஆணி அடித்தாற்போல் முடங்கிவிட்டது நோயாளிகள் வரிசை.

பினாயில் டெட்டால் டிங்க்சர் வகையறாக்களின் வாசம் காலிவயிற்றைப் புரட்டியடித்தது. கைவலி வேறு. கொஞ்ச நேரம் குழந்தையை யாராவது வாங்கிவைத்துக் கொண்டால் ஆசுவாசமாக இருக்கும். சீக்காளிக் குழந்தையை எவன் சீந்துவான்? மூடிய கதவு. முன்வரிசையின் துவக்க முனையைப் பரிதவிப்புடன் எட்டிப்பார்த்தார்.

திடீரென அழுகைக் குரல் கேட்க... என்ன ஏது என்று அனைவரும் கவனமாய்ச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தபோதே ஒற்றைக் குரல் அழுகை பல்குரல் ஓலமாகியது. சற்றே தொலைவில் கும்பல். வரிசையிலிருந்தவர் பலரும் இட பயத்தை அடியோடு மறந்துபோய் அடித்துப் பிடித்துக் கொண்டுஓடி... ஓடிய வேகத்தில் திரும்பி வந்து இருக்கை

பறிபோகாதிருந்த ஆசுவாசத்துடன் பழையபடி உட்காந்துகொண்டனர்.

ரெண்டு நாளா இழுத்துட்டிருந்ததாம்.

போய்ச் சேரட்டும் எனும்படியாகவா இருக்கிறது தன் நிலை? இதோ ஒண்ணு இருக்கே, தன்னையே நம்பி... தானே சகலமுமாய். இது எப்போது வளர்ந்து தன்னைத் தானே கவனித்துக் கொள்ளுமளவு ஆளாகி.... அதுவரை இந்த உயிர் நிற்குமா...? கலவரம் மேலிடக் குழந்தையை நெஞ்சோடு சேர்த்து அழுத்தியதில் சற்றே அடங்கியிருந்த அது மீண்டும் ஈனஸ்வரத்தில் முனகத் தொடங்கியது.

மரத்தடி அழுகை இப்போது இன்னும் வலுத்திருந்தது. சே....... ஆஸ்பத்திரி என்றாலே அழுகையும் ஓலமும் என்றாகிவிட்டது. இப்படித்தான்..... இதே ஆஸ்பத்திரியில், விருட்சமாய் வாழ வேண்டியவன் அல்பாயுசுல கட்டியாகிக் கிடந்து...... முழுசாய் ஆறு மாசம் கூட ஆகவில்லை.

"பாவம் முப்பது வயசு கூட இருக்காது. இன்னும் எவ்வளவு இருக்கு. அதுக்குள்ள பாழாய்ப் போன எமனுக்கு அவசரம் பார்"......

"நீ வேற..... இது தானா தேடிட்ட சாவாம்"..

'அடப்பாவமே ஆண்டவன் கொடுத்த உசுரு. இவனுக்கு என்ன அதிகாரம் இருக்கு? இவனுங்களை எல்லாம் பிழைக்க வைத்துக் கழுவில் ஏற்றிச் சாகடிக்கணும். சரியான கோழைப் பசங்க. போறவன் பொக்குனு போயிடறான். இருக்கிறவன் ஆயுசுக்கும் இல்ல அல்லாடணும்....' அல்லாடிக் கொண்டுதான் இருக்கிறார் ஆறுமுகம். ஆறுமாத அல்லாட்டம். பச்சை மண்ணுடனான அவதி. உனக்கு நான், எனக்கு நீ என்றாகிவிட்ட நாதியற்ற அவஸ்தை. தகப்பனையும் பிள்ளையையும் பாதுகாக்கவேண்டிய இடை வாரிசு, இருவரையும் நட்டாத்துல விட்டுத் தன் வழியே சென்றுவிட்டான். வியாதி இல்லை... வெக்கை இல்லை. விஷத்தை விழுங்கி அரைநாள் மட்டுமே அவஸ்த்தைப் பட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டான். நாலுநாள் காய்ச்சலில் கட்டியவள் கண் மூடியபின் வாழப் பிடிக்கவில்லையாம். பெத்தவங்க இல்லாத குழந்தையாகிவிட்டதே என்னும் ஓயாத புலம்பல் தவிர, பிள்ளையைப் பிரிந்த துயரம் துளியும் இல்லை. அவரிடம் அந்த அளவுக்கு நெஞ்செங்கும் வெறுப்பு மண்டியிருந்தது. நெஞ்சுக் கூட்டில் நெருப்பு வைக்க வேண்டியவன், இப்படித் தவிக்கவிட்டுப் போய்விட்டானே என்னும் ஆறாக்கோபம் பாசத்தைப்பாசிபோல்மூடிவிட்டிருந்தது.'அதோ இதோ என நுனி மூச்சைப் பிடித்து வைத்திருக்கும் அப்பனை நினைக்காவிடினும் – பிஞ்சுப் பிள்ளை கூட மனதில் வராமல் அப்படி என்ன அதிசய அன்பு பொண்டாட்டி மீது? வானம் பொய்ப்பது தொடர்கதையாகி விட, ஊர் உறவு உடைமைகளைத் துறந்து பஞ்சம் பிழைக்க பட்டணம் வந்து பிழைப்புக்கு ஏதோ ஒரு வழி தேடிக்கொண்டு திடமாய்.... வைராக்கியமாய் தான் வாழவில்லையா இத்தனை காலமாய்...! வந்த இடத்தில், நாற்பதாண்டுக்கும் மேலாய் நிழலாய் இருந்தவள் பூமியில் தன் கணக்கை முடித்துக் கொண்டபின் அவர் சிதையில் விழவில்லை. மகனுக்காக வாழ்ந்தார். ஒற்றை ஆளாய் – வளர்த்து ஆளாக்கி – ஒரு கடினமான வேலையில் அமர்த்தி... குடும்பஸ்தனாக்கி...'

அட .....நகரு பெருசு.... வைகுண்ட வாசல் திறக்கிறாப்பல ஒரு வழியாகக் கதவு திறந்துட்டது. நீ என்னடான்னா எந்தக் கோட்டையைப் பிடிக்கலாம்கறாப்புல....உம்..... நட நட......

முக்கி முனகிக் குழந்தை தூங்கிவிட்டிருந்தது. அவ்வளவு நேரம் காத்திருக்கும் தள்ளாமையும் மன உளைச்சலுமாய் அவருக்கு உடம்பு வேர்த்துச் சில்லிட்டு இருந்தது.

உள்ளிருந்து வெளியே வந்தாள் ஒரு பெண். தாயின் தோளில் கோழிக்குஞ்சாய் ஒரு பிஞ்சு ஒடுங்கி இருக்க அவள் கை அதைச் சுற்றிப் படர்ந்து இருந்தது பார்க்கவும் நினைக்கவும் மிகவும் பாந்தமாக இருந்தது. நெடுமூச்சு தவிர வேறு ஏதும் இல்லாத குழந்தை மீதான தன் கையை அழுத்தி இருத்திக் கொண்டார். இந்த அரவணைப்பு இதற்கு இன்னும் எத்தனை நாட்களுக்கு....? தனக்குப் பிறகு....?

பிள்ளையைப் பரிசோதித்த டாக்டர் நெஞ்சில் சளி கட்டி இருப்பதால் காய்ச்சல்..... பயப்படத் தேவையில்லை, பக்குவமாய்ப் பார்த்துக்கொண்டால் இரு தினங்களில்



தணிந்துவிடும் என மருந்து எழுதிக் கொடுத்தார்.

"உங்க கை இப்படி நடுங்குது பெரியவரே.... வீட்ல வேற யாரும் இல்லையா?" ஊசி போட்ட வலியால் வீறிட்ட குழந்தையை லாவகமாய் அணைத்துச் சமாதானப்படுத்தி அவ்வாறு கேட்ட வெள்ளையுடை தேவதைக்கு நன்றிச் சிரிப்பை மட்டுமே பதிலாக விட்டு வெளியே வந்தார். தவித்த தொண்டையைத் தேநீரால் ஆசுவாசப்படுத்திக்கொண்டு வழக்கமாய் வாங்கும் மருந்துக் கடை நோக்கிப் பயணப்பட்டார்.

"வாங்கய்யா உட்காருங்க. புள்ளைக்கு உடம்பு சரியில்லையா? இப்படிக் கொடுங்க..." கைச்சுமை மட்டும் இடம் மாறியது.

"மூணு நாளா சிரமப்படுது பாவம். டாக்டர் ஊசி போட்டு மருந்து எழுதிக் குடுத்திருக்கார். சரியாயிடும். இப்போ உன்கிட்ட மருந்து வாங்க மட்டும் வரல பாபு"....... சீட்டை நீட்டியபடி அமைதியாய்ச் சொன்னவரை யோசனையுடன் பார்த்தான் பாபு.

"ரொம்ப நாளாவே சொல்லிக்கிட்டு இருக்கே. இப்ப எனக்கும் சரியாய்த்தான் படறது. இதுக்காக இன்னும் நிறைய நாள் உசிரோட இருக்கணும்னு எனக்கும் ஆசைதான். நெஞ்சில் உரம் இருந்தாலும் உடம்பு கேட்கணுமே? சாவோடா மல்லுக்கு நிக்கிற வயசா? அப்ப இதனோட கதி? சரி.... நாளைக்கு அவங்களைக் கூட்டிட்டு வந்துடறயா பாபு."

"ஐயா"......

"ஆமாம்பா நெசமாத்தான் சொல்றேன். அம்மாஎன்கிறபாசமேதெரியாமல்இருக்க இது மட்டும் என்ன பாவம் செய்தது? பெண்ணோட பரிவும் பாசமும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியம்னு இப்பதான் நல்லாப் புரிஞ்சது பாபு. இதைப் பிரிஞ்சிருக்க முடியாதே என்கிற என்னோட சுயநலத்துக்காக இதை அனாதையா விட்டுட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்....? அதான். அதுவும் இல்லாம அவங்க உனக்கு நல்லாத் தெரிஞ்சவங்க அதனால பத்திரமான இடத்துக்குத்தான் போய்ச் சேருறது புள்ளைன்னு நிம்மதி. அவங்கள உடனே வரச் சொல்லிடு. ஆகவேண்டியதைப் பார்க்கலாம்."

வினாடி தாமதித்தாலும் மனம் மாறிவிடுமோ என்பது போல் மருந்தும் குழந்தையுமாக விடுவிடுவென நடந்தார்.



XII Std Tamil Chap_8.indd 207 2/23/2019 9:43:49 AM

இரவெல்லாம் உறக்கமின்றிப் புரண்டு..... எல்லாம் இதோட நல்லதுக்குதானே எனத் திரும்பத் திரும்ப நினைத்துச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

பாபுவுடன் வந்த அவர்களைப் பார்த்த போது.... பிள்ளைப் பாக்கியம், ஏக்கம்.... தவிப்பு.. எதிர்பார்ப்பு அத்தனையும் அம்முகங்களில் உணர்ந்தபோது பிள்ளையின் பாதுகாப்புக் குறித்த நம்பிக்கை வலுத்தது. நெடுநாள் தயக்கத்துக்குப் பின்னான தன் முடிவு குறித்து இனி இரண்டாவது கருத்துக்கு இடமில்லை என்ற அளவில் உறுதி கூடியது. அந்நேரத்திற்கு நெருடல் எல்லாம் பிள்ளையைப் பிரிந்து இருக்க வேண்டுமே எனும் உதிரத்தை உறைய வைக்கும் உறுத்தல் மட்டுமே. விழி நீரைப் பிடிவாதமாய் வந்த வழி அனுப்பி வைத்தார்.

"உங்களுக்குக் கவலையே வேணாம் ஐயா. இப்படிச் சொல்றது கூட சரியில்லைதான். நல்லாப் பார்த்துக்கிறோம்னு பெத்தவங்க யாராவது உறுதிமொழி அளிக்கிறார்களா என்ன...." 'அப்பா' என அழைக்கப்பட இருப்பவன் ஓரிரு கணம் போல் தயங்கிப் பிறகு தொடர்ந்தான்.

"ஐயா, ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்து இருக்கிறீங்க. நன்றி சொல்றதுக்குப் பதிலா உங்களிடமே இன்னுமொரு உதவி கேட்கின்றோம். குழந்தையைப் பிரிந்து சிரமப்படாமல் நீங்களும் எங்களோடு வந்துடுங்கய்யா. எங்க மூணு பேருக்குமே ஒரு பெரிய துணையா பலமா இருக்கும். நீங்க எதுக்கும் தயங்காதீங்க. நாம ஒருத்தருக்கு ஒருத்தர் முடிந்த அளவில் உதவியாய் இருப்போம். சரின்னு சொல்லுங்க ஐயா."

இறைஞ்சும் தன்மையில் கேட்கப்பட.... அதிர்ந்து போனார் ஆறுமுகம். யாருக்கு யார் உதவி? எவ்வளவு பெரிய விஷயம்? இவ்வளவு எளிமையாய்...... தனக்கு எந்தச் சங்கடமும் கூடாதென மிகவும் பக்குவமாய் இவன்..... மலைபோன்ற அத்தனை பிரச்சனைகளும் எப்படி இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன்...... தன்னையும் சுவீகரித்து.....

"பாபு...... இப்போதைக்கு எனக்குச் சாவு வராதுனு தோணுதுப்பா....." கண்ணீரை இப்போது சுதந்திரமாய் வெளியனுப்பியபடி கைகூப்பினார் முதியவர்.

### நூல்வெளி

சாந்தா தத் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண்படைப்பாளர். அமுதசுரபியில் வெளியான "கோடை மழை" என்னும் இச்சிறுகதை "இலக்கியச் சிந்தனை" அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றது. இவர் தற்போது ஹைதராபாத்தில் வசிக்கிறார். சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என இலக்கியத் துறைக்குத் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார். பல விருதுகளைப் பெற்றுள்ள இவர் ஹைதராபாத்தில் வெளியாகும் "நிறை" மாத இதழின் ஆசிரியராக உள்ளார், "திசை எட்டும்" என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார். இவருடைய மொழிபெயர்ப்புக்களை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது. மனித நேயம் இவர் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பாகும்.

### கற்பவை கற்றபின்...

பொது இடங்களில் நீவிர் பார்த்த மனிதநேய நிகழ்வை வகுப்பறைச் சூழலில் பகிர்ந்து கொள்க.



XII Std Tamil Chap_8.indd 208 2/23/2019 9:43:49 AM

ஆளுமை அ

# குறியீடு

கவிதைத் துறையில் மிகுதியும் வழங்கிவரும் 'குறியீடு' என்ற உத்தி, ஆங்கிலத்தில் *symbol* என ஆளப்படுகிறது. சிம்பல் என்பதற்கு ஒன்று சேர் என்பது பொருள். ஏதேனும் ஒரு வகையில் இரண்டு பொருள்களுக்கிடையே உறவு இருக்கும். அது உருவ ஒற்றுமையாக இருக்கலாம். அருவமான பண்பு ஒற்றுமையாக இருக்கலாம். பெண்ணை, விளக்கு என்று அழைப்பதற்கு, பண்பு காரணமாக இருக்கிறது. பறவையான வெண்புறா, சமாதானத்தின் குறியீடாக இருக்கிறது. கருவியான தராசு நீதியின் குறியீடாக இருக்கிறது. விலங்கான சிங்கம் வீரத்தின் குறியீடாக இருக்கிறது. இவ்வாறு மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள் அல்லது சொல் 'குறியீடு' எனப்படுகிறது. குறியீட்டால் பொருளை உணர்த்துவது குறியீட்டியம் (symbolism) எனப்படுகிறது.

குறியீடு, பல துறைகளில் பயன்படுகிறது. 19ஆம் நூற்றாண்டில் 'குறியீட்டியம்' ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது. பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் இக்கோட்பாட்டை விளக்கி வளர்த்தார்கள். குறியீடு பற்றிய கொள்கை 19ஆம் நூற்றாண்டில் தோன்றினாலும் அனைத்து மொழி இலக்கியங்களிலும் குறியீட்டைப் பயன்படுத்தும் வழக்கம், முன்பிருந்தே உள்ளது. தமிழைப் பொறுத்தவரை, தொல்காப்பியர் காலம் முதல் இப்பயன்பாட்டை அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள், 'உள்ளுறை உவமம்' என்ற முதிர்ந்த குறிப்புப் பொருள் உத்தியில் இடம்பெற்றுள்ளன. தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது என்று ஹார்ட் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் குறியீட்டு மரபு இன்றைய புதுக்கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக்கொள்ளுமாறு விட்டு உவமையை மட்டும் கூறுவது உள்ளுறை உவமத்தின் அடிப்படை. இதுவே குறியீட்டின் அடிப்படையுமாகும்.

*"உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்*
*கறுவு கொண்டு, அதன் முதல் குத்திய மதயானை*
*நீடு இரு விடர் அகம் சிலம்பக் கூய்த் தன்*
*கோடு புய்க்கல்லாது, உழக்கும் நாட ! கேள்"*

*கபிலர் (கலித்தொகை – 38 : 6 – 9 )*

"வேங்கை மரம் பூத்திருந்தது. அது புலிபோல் தோன்றியது. அதன் மீது சினம் கொண்டு மத யானை வேங்கையின் அடிமரத்தைத் தந்தத்தால் குத்தியது. ஆழப்பதிந்த தந்தத்தை அதனால் எடுக்க முடியவில்லை. மலையின் குகைகளில் எதிரொலி கேட்கும்படி அது முழங்கியது. இப்படி யானை முழங்கிடும் நாட்டை உடையவனே! கேள்!" இப்பாடலில் யானை, தலைவனுக்குக் குறியீடாக இடம்பெறுகிறது.

தலைவியுடனான திருமணத்தைத் தோழி வலியுறுத்தியதை விரும்பாத தலைவன் அக்கூற்றை மறுத்தற்கு, யானை வேங்கை மரத்தை குத்தியது குறியீடாகிறது. அவள் கூற்றை வேண்டாததாகக் கருதித் தலைவன் வருந்துதலுக்கு, தந்தத்தை எடுக்க இயலாது யானை தவிப்பது குறியீடாகிறது.

*"கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை*
*ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த*
*சாரற் பலவின் சுளையொடு ஊழ்படுபு*
*பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்*
*அறியாது உண்ட கடுவன் அயலது*
*கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது*
*நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்*
*குறியா இன்பம், எளிதின் நின்மலைப்*
*பல்வேறு விலங்கும் எய்தும் நாட !"*

*கபிலர் (அகநானூறு 2: 1–9)*

"தாமாகவே முதிர்ந்து பழுத்த இனிமையான வாழைக்கனிகள், உண்ணத் திகட்டும் இனிய பலாச்சுளைகள், நன்கு விளைந்த நறுந்தேன் ஆகிய மூன்றும் பாறைக்கண் அமைந்த பெரிய சுனைநீரில் விழுந்து,தேறலாக ( மயக்கம் தரும் கள்) மாறியுள்ளன. அச்சுனை நீரை அறியாது உண்ட ஓர் ஆண்குரங்கு மயங்கியது. பிறகு பக்கத்தில் இருந்த, மிளகுக் கொடிகள் படர்ந்துள்ள சந்தன மரத்தில் தாவி ஏறுவதற்கு முடியாமல், கீழே விழுந்துகிடந்த நறுமணமிக்க பூக்களாகிய படுக்கையில் விழுந்து களிப்புடன் படுத்து உறங்குகிறது. இவ்வாறு, தாம் எதிர்பாராத வகையில் இன்பத்தை நின் மலையகத்துப் பல்வேறு விலங்கினங்களும் எளிதாய்ப் பெற்று மகிழும் வளமுடைய மலைநாட்டுத் தலைவனே!" என்று தோழி கூற்றாகக் கபிலர் பாடுகிறார்.

"கடுவனின் அறியாமை போன்றே, நீயும் களவிலே கூடி, திருமணம் செய்து கொள்ளாமல், இன்பத்திலேயே மயங்கிக் கிடக்கிறாய்" என்று தலைவனின் செயலைத் தோழி குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறாள்.

இதில் ஆண்குரங்கின் செயல் தலைவனின் செயலுக்கும், சுனைநீர்த் தேறல் தலைவன் கொண்டுள்ள இன்பந்தரும் மயக்கத்திற்கும், சந்தன மரத்தில் ஏறுவதற்கு முடியாமல் பூக்களாகிய படுக்கையில் குரங்கு விழுந்து கிடக்கும் செயல், திருமணம் செய்துகொள்ளாமல் இன்பத்தை மட்டும் நுகர நினைக்கும் தலைவனது செயலுக்கும் குறியீடாக அமைந்துள்ளதை அறியலாம்.

புதுக்கவிதைகளில் தொன்மங்கள் குறியீடாக அமைந்து கருத்தை, அழுத்தமாக உணர்த்த உதவுகின்றன.

### வியர்வை

*இந்த*
*ஆதிரைப் பருக்கைகள்*
*வீழ்ந்ததும்*
*பூமிப்பாத்திரம்*
*அமுதசுரபி – (பால்வீதி, அப்துல் ரகுமான்)*

ஆதிரையிட்ட பருக்கையினால் அமுதசுரபியில் உணவு வளர்ந்துகொண்டே இருந்தது போல் உழைப்பால் உலகம் செழித்து வளர்கிறது என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது. வியர்வைத்துளிக்கு ஆதிரைப் பருக்கை குறியீடாகிறது. செழிப்புக்கு அமுதசுரபி குறியீடாகிறது.

### திட்டம்

*வரங்கள்*
*சாபங்கள்*
*ஆகுமென்றால் இங்கே*
*தவங்கள் எதற்காக? – (அப்துல்ரகுமான்)*

திட்டங்கள் தீட்டினாலும் அவை நாட்டு நலனுக்குப் பயன்படாமல், எதிராகப் போய்விடுவதை இக்கவிதை உணர்த்துகிறது. வரம் திட்டத்திற்குக் குறியீடாகிறது. சாபம் அதன் பயனற்ற விளைவுக்குக் குறியீடாகிறது.

இவ்வாறு சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் இன்னொன்றைக் கூறிக் குறிப்பால் உணர்த்துவது குறியீடு. இது புதிர் போல அமைந்து இன்பமளிக்கிறது; உணர்வளிக்கிறது; புரிதலை அளிக்கிறது. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் குறியீடு பயன்படுகிறது.

### குறியீடு எனும் இவ்வுத்தியின் அடிப்படை இலக்கணங்களாவன:

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்
- இத்தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப்பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று. சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இலக்கிய உத்தியும் இன்றைக்குக் குறியீடு என்று நாம் குறிப்பிடும் உத்தியும் ஒன்றுதான். சங்ககாலந்தொட்டே தமிழர்க்குக் குறியீட்டுச் சிந்தனை இருந்ததை நம்மால் அறியமுடிகிறது. உள்ளுறை உவமம் அக இலக்கியங்களில் உரைக்க முடியாதவை, மறைக்கவேண்டுபவை ஆகியவற்றைக் குறிப்பாக உணர்த்தப் பயன்பட்டது. குறியீடு என்பது அகம், புறம் என எல்லா வகைக் கவிதைகளிலும் குறிப்பாக உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தியாகும்



XII Std Tamil Chap_8.indd 210 2/23/2019 9:43:50 AM

கற்பவை கற்றபின்...

1. உங்களுக்குப் பிடித்தமான கவிதைகளில் குறியீடு என்னும் உத்தி பயன்படுத்தப்பட்டிருக்கும் பாங்கினைக் கூறுக.

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1) குறியீடுகளைப் பொருத்துக

அ) பெண் - 1) சமாதானம்

ஆ) புறா - 2) வீரம்

இ) தராசு - 3) விளக்கு

ஈ) சிங்கம் - 4) நீதி

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1

இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

2) கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

3. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

அ) உவமை ஆ) உவமேயம்

இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

4) 'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை

இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

5) மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம்

இ) அங்கதம் ஈ) தொன்மம்

## குறுவினா

1) குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

2) வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.

3) குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.



XII Std Tamil Chap_8.indd 211 2/23/2019 9:43:50 AM

ZF2A26

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிவு**

1. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம்

ஆ) விழுப்புரம்

இ) திண்டிவனம்

ஈ) தருமபுரி

2) பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| அ) தனித்தமிழ்த் தந்தை | – | 1. மு. வரதராசனார் |
| ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் | – | 2. மயிலை சீனி. வேங்கடசாமி |
| இ) தமிழ்த் தென்றல் | – | 3. திரு. வி.க. |
| ஈ) மொழி ஞாயிறு | – | 4.தேவநேயப் பாவாணர் |

3) ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும்

ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும்

ஈ) கிறித்தவமும் தமிழும்

5) நான் வெற்றுவெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை

ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை

ஈ) தமது படைப்புகளை



XII Std Tamil Chap_8.indd 212 2/23/2019 9:43:50 AM

5) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும்

ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும்

ஈ) பாரியும் காரியும்

## குறுவினாக்கள்

1) 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

2) 'விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்' – யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

3) முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

4) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

## சிறுவினா

1) மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

2) கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

3) 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

4) கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

## நெடுவினா

1) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

2) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

3) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.



XII Std Tamil Chap_8.indd 213 2/23/2019 9:43:50 AM

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

பர்மாவில்ரங்கூன்நகரில்உள்ளவொருகடையில்அடிப்பையனாகப் (உதவியாள்) பணியாற்றினான் ஒரு சிறுவன். அவனிடம், கடை முதலாளி ஒரு பெயரைக் குறிப்பிட்டு, அந்த நபர் வந்து தன்னை எங்கே என்று கேட்டால், 'முதலாளி இல்லை' என்று சொல்லுமாறு வற்புறுத்தினார். அந்தச் சிறுவனோ, "நீங்கள் வெளியிலிருந்தால் அவ்வாறு கூறலாம். இல்லாதபோது எப்படிப் பொய் சொல்வது? சொல்ல மாட்டேன்" என்று பிடிவாதமாகக் கூறினார். அவர், வ.சுப. மாணிக்கம்.



வ.சுப. மாணிக்கம்

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்'என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப. மாணிக்கம். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்றுவதற்காகத் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர். அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றியபோது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன் அங்குத் தமிழாய்வு நடைபெறவும் வழிவகுத்தார். திருவனந்தபுரத்தின் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளராகப் பணிபுரிந்தபோது தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

சங்கப் பாடல்களின் நுட்பங்களைக் கட்டுரைகளாக எழுதுவதில் ஆற்றல் மிக்கவரான இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர். தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும் உவமைகளையும் உருவாக்கித் தருவதில் தனி ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தவர். ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமையான அவருக்குத் தமிழக அரசு அவருடைய மறைவிற்குப் பிறகு, திருவள்ளுவர் விருது வழங்கியதுடன் 2006ஆம் ஆண்டு அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்கிச் சிறப்புச் செய்தது.

அவருடைய தமிழ்த்திறத்துக்கு ஒரு பதம்.

"ஐந்து கோடித் தமிழர் தொகை இருந்தும், ஆயிரம் படிகள் விற்பதற்கு மாமாங்கம் ஆகின்றது. வாங்காற்றல் மக்களிடம் இல்லை என்று சொல்லுதற்கில்லை. எத்துணையோ புதுக்கோலங்கட்கும் கேளிக்கைகட்கும் தலைகால் தெரியாமல் செலவு செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். நூல்கள் வாங்கும் அறிவுப் பழக்கத்தை மக்களிடம் பரப்ப வேண்டும்"



XII Std Tamil Chap_8.indd 214 2/23/2019 9:43:50 AM

**தமிழாக்கம் தருக.**

*I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.*

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக.**

"எனக்கு சில்க் சட்டை இருக்கே ! உனக்கு இருக்கா !" என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி. செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்; தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான்; மங்கம்மாள் மூக்கின்மேல் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டும் கண்ணை இலேசாக மூடிக்கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மற்ற பிள்ளைகள். அன்று பள்ளிக்கூடத்திலிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் 'ஐந்தாம் வகுப்பிற்குரிய இந்தியதேச சரித்திர'ப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்தியதேச சரித்திரம் வாங்கவில்லை; அதனால் தன்னிடமுள்ள ஒரு சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். இருவரும் 'படப்போட்டி'யை ஆரம்பித்து விட்டார்கள்.

–'ராஜா வந்திருக்கிறார்', கு. அழகிரிசாமி

**உரை எழுதுவோம்**

உங்கள் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் தற்பொழுது மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றுகிறார். நடைபெற இருக்கும் பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக வர இருக்கும் அவரைப் பள்ளியின் சார்பாக வரவேற்கும் விதமாக ஒரு பக்க அளவில் வரவேற்புரை ஒன்றை எழுதுக.

**விடைக்கேற்ற வினா அமைத்தல்.**

விடை – குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

வினா – குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

1. நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
2. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.
3. 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
4. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.



XII Std Tamil Chap_8.indd 215 2/23/2019 9:43:50 AM

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக*



### இலக்கிய நயம் பாராட்டுதல்

*வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*
*கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்*
*கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.*
*தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்*
*செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.*
*கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்*
*குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.*

*– திரிகூட ராசப்பக் கவிராயர்*

### குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 6 | | | | | |
| | | | | | | | 21 | | |
| | 7 | 14 | | | | | | 18 | 19 |
| | | | | | 4 | | 11 | | |
| 9 | | | | | | | 10 | | 17 |
| | | | 12 | | 3 | | | | |
| 16 | | | | | | | | | |
| | 15 | | | | | | | | |
| | | | | | 5 | | | | |
| 8 | | | | 13 | | 20 | | | 2 |

### இடமிருந்து வலம்

1. மயிலையார் கட்டுரை எழுதிய இதழ்களில் ஒன்று (5)
4. தகடூர் மன்னன் பெயரின் பின்பகுதி (3)
8. ஓய்மா நாட்டு மன்னன் பெயரின் முதல் மூன்றெழுத்து (3)
9. பொதினி மலையின் வேறுபெயர் (4)
16. பொதினி மலை இவ்வாறும் அழைக்கப்படும் (4)
14. சாந்தா தத் கதையின் பின்பாதிப் பெயர் (2)

### வலமிருந்து இடம்

2. பறம்பு மலையின் இன்றைய பெயர் (5)
4. தகடூரை ஆட்சி செய்தவன் (4)
5. காரியின் நாடு எவ்வாறு மருவி உள்ளது (3)
12. போந்திய பிலாத்து என்பவரின் பதவி (4)
21. செய்யுளின் பெயர்களில் ஒன்று (3)

### மேலிருந்து கீழ்

3. வல்வில் ஓரி ஆட்சி செய்த பகுதி (5)
6. முகம் கவிதை ஆசிரியரின் முன்பாதிப் பெயர் (4)
1. தமிழுக்குத் தலை கொடுத்தவன் (4)
10. இரட்சணிய யாத்திரிகத்தின் மூலநூல் ஆசிரியர் பெயர் (6)
15. நீர்நிலையின் பெயர் (3)
17. வண்டின் வேறு பெயர் (4)
18. இயேசு பிரானை இவ்வாறும் அழைப்பர் (5)

### கீழிருந்து மேல்

7. நல்லியின் நாட்டுக்கு இன்று வழங்கும் பெயர் (3)
8. மயிலையார் ஆய்வு செய்த பல்லவ மன்னன் பற்றிய நூல் (7)
13. முகம் கவிதையின் ஆசிரியர் பிறந்த ஊர் (5)
11. ஆற்றுப்படை நூல் ஒன்றின் முன்பாதிப் பெயர் (4)
19. உலகம் என்பதன் வேறு பெயர் (3)
20. நூல்களை வாங்கும் ஆற்றல் ---------------- இல்லை என்று சொல்வதற்கில்லை (6)

### செய்து கற்போம்

தமிழுக்குப் பெருமை சேர்த்த அறிஞர்களின் இலக்கியப் பணிகள் குறித்துப் படத்தொகுப்புடன் ஒப்படைவு தயாரிக்க.

## நிற்க அதற்குத் தக

நீவிர் செல்லும் வழியில் விபத்தினைக் காண்கிறீர்கள். விபத்திற்கான காரணங்கள் என்ன? பட்டியலிடுக. பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் எவ்விதம் உதவலாம்?

| விபத்திற்கான காரணங்கள் | பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதம் உதவலாம்? |
|---|---|
| அனுமதித்த அளவைவிட வேகமாக ஓட்டுதல். | முதலுதவி செய்தபின் வேகமாக ஓட்டக்கூடாது என்று அறிவுரை கூறுவேன். |
| | |
| | |

### படிப்போம் பயன்படுத்துவோம் (அலுவலகப் பொருள்கள்)

| | | | |
|---|---|---|---|
| Stamp pad | – மை பொதி | File | – கோப்பு |
| Stapler | – கம்பி தைப்புக் கருவி | Rubber Stamp | – இழுவை முத்திரை |
| Folder | – மடிப்புத்தாள் | Eraser | – அழிப்பான் |

### அறிவை விரிவு செய்

- தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் – மயிலை சீனி. வேங்கடசாமி
- மாறுபட்டுச் சிந்திக்கலாமா? – சிபி கே.சாலமன்
- எழு பெருவள்ளல்கள் – கி.வ.ஜகந்நாதன்
- இரட்சணிய யாத்திரிகம் – புலவர் சே.சுந்தரராசன்
- இயேசு காவியம் – கண்ணதாசன்
- கோபல்ல கிராமம் – கி. ராஜநாராயணன்
- பால்வீதி – அப்துல் ரகுமான்
- வீரபாண்டிய கட்டபொம்மன் – அரு.ராமநாதன்

### இணையத்தில் காண்க

http://www.tamilvu.org/ta/library-ln00203-html-ln00203p14-274927 (மயிலையாரின் நூல்கள்)

http://tamildigitallibrary.in/book-detail.php?id=jZY9lup2kZl6TuXGlZQdjZMdkJxy#book1/ (ஆய்வு நூல்கள்)

http://www.tamiltales.com/historical-stories/vallal-pari-history/ (பாரி)

http://www.tamiltales.com/historical-stories/chariot-to-jasmine-creeper/ ( முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி)

http://www.tamilvu.org/courses/degree/a011/a0113/html/a01131l2.htm (இரட்சணிய யாத்திரிகம்).



XII Std Tamil Chap_8.indd 218 2/23/2019 9:43:51 AM

# திருக்குறள்

## 5. இல்வாழ்க்கை

1) இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

2) துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

3) தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

4) பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

5) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

6) அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்?.

7) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

8) ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9) அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

10) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

## 6. வாழ்க்கைத் துணை நலம்

1) மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2) மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

3) இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?.

4) பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்?.

5) தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

6) தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொல்காத்துச் சோர்விலாள் பெண்.

7) சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

8) பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

9) புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

10) மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கள் பேறு.

## 11. செய்ந்நன்றி அறிதல்

1) *செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது.*

2) *காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது.*

3) *பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது.*

4) *தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்.*

5) *உதவி வரைத்தன்று உதவி; உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து.*

6) *மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு.*

7) *எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமம் துடைத்தவர் நட்பு.*

8) *நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.*

9) *கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்றுநன்று உள்ளக் கெடும்.*

10) *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு.*

## 18. வெஃகாமை

1) *நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்*
*குற்றமும் ஆங்கே தரும்.*

2) *படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்*
*நடுவன்மை நாணு பவர்.*

3) *சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே*
*மற்றுஇன்பம் வேண்டு பவர்.*

4) *இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மைஇல் காட்சி யவர்.*

5) *அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின்.*

6) *அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்*
*பொல்லாத சூழக் கெடும்.*

7) *வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம்; விளைவயின்*
*மாண்டற்கு அரிதாம் பயன்.*

8) *அஃகாமை செல்வத்திற்கு யாதுஎனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்.*

9) *அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்*
*திறன்அறிந்து ஆங்கே திரு.*

10) *இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்*
*வேண்டாமை என்னும் செருக்கு.*

## 26. புலால் மறுத்தல்

1) *தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்?*

2) *பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.*

3) *படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்*
*உடல்சுவை உண்டார் மனம்.*

4) *அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்*
*பொருளல்லது அவ்வூன் தினல்.*

5) *உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண*
*அண்ணாத்தல் செய்யாது அளறு.*

6) *தினல்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.*

7) *உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்*
*புண்அது உணர்வார்ப் பெறின்.*

8) *செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்*
*உயிரின் தலைப்பிரிந்த ஊன்.*

9) *அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று.*

10) *கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்.*

## 31. வெகுளாமை

1) *செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்*
*காக்கின்என் காவாக்கால் என்?*

2) *செல்லா இடத்துச் சினம்தீது; செல்லிடத்தும்*
*இல்அதனின் தீய பிற.*

3) *மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய*
*பிறத்தல் அதனான் வரும்.*

4) *நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
*பகையும் உளவோ பிற*

5) *தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்.*

6) *சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.*

7) *சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு*
*நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.*

8) *இணர்எரி தோய்வுஅன்ன இன்னா செயினும்*
*புணரின் வெகுளாமை நன்று.*

9) *உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி எனின்.*

10) *இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்*
*துறந்தார் துறந்தார் துணை.*

## 38. ஊழ்

1) ஆகுஊழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி.

2) பேதைப் படுக்கும் இழவுஊழ்; அறிவகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை.

3) நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

4. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

5) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

6) பரியினும் ஆகாவாம் பால்அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

7) வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

8) துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

9) நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்
அல்லற் படுவது எவன்?

10) ஊழின் பெருவலி யாஉள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

## 43. அறிவுடைமை

1) அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

2) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

3) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

4) எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

5) உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

6) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

7) அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

8) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

9) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்.

10) அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.



XII Std Tamil Chap_8.indd 222 2/23/2019 9:43:51 AM

## 46. சிற்றினம் சேராமை

1) சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

2) நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு.

3) மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

4) மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉளது ஆகும் அறிவு.

5) மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.

6) மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும்; இனம்தூயார்க்கு
இல்லைநன்று ஆகா வினை.

7) மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

8) மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

9) மனநலத்தின் ஆகும் மறுமை; மற்றுஅஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.

10) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

## 67. வினைத்திட்பம்

1) வினைத்ததிட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

2) ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.

3) கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும்.

4) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

5) வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும்.

6) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

7) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

8) கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

9) துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

10) எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.



XII Std Tamil Chap_8.indd 223 2/23/2019 9:43:51 AM

## 69. தூது

1) அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புடைமை தூதுஉரைப்பான் பண்பு.

2) அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

3) நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

4) அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவிடையான் செல்க வினைக்கு.

5) தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.

6) கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.

7) கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

8) தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

9) விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

10) இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

## 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

1) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.

2) மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கம் தரும்.

3) போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

4) செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

5) எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

6) குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்புஇல்
வேண்டுப வேட்பச் சொலல்.

7) வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

8) இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

9) கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

10) பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.



XII Std Tamil Chap_8.indd 224 2/23/2019 9:43:51 AM

## 89. உட்பகை

1) நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

2) வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

3) உட்பகை அஞ்சித்தற் காக்க; உலைவுஇடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

4) மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும்.

5) உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும்.

6) ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

7) செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

8) அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

9) எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

10) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

## 93. கள் உண்ணாமை

1) உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டுஒழுகு வார்.

2) உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

3) ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

4) நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

5) கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல்.

6) துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

7) உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.

8) களித்துஅறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

9) களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

10) கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணும்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

## 94. சூது

1) *வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்*
*தூண்டில்பொன் மீன்விழுங்கி அற்று.*

2) *ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்*
*நன்றுஎய்தி வாழ்வதுஓர் ஆறு.*

3) *உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்*
*போஒய்ப் புறமே படும்.*

4) *சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்*
*வறுமை தருவதுஒன்று இல்.*

5) *கவறும் கழகமும் கையும் தருக்கி*
*இவறியார் இல்லாகி யார்.*

6) *அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்*
*முகடியால் மூடப்பட் டார்.*

7) *பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்*
*கழகத்துக் காலை புகின்.*

8) *பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து*
*அல்லல் உழப்பிக்கும் சூது.*

9) *உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்*
*அடையாவாம் ஆயம் கொளின்.*

10) *இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்*
*உழத்தொறூஉம் காதற்று உயிர்.*

* வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
* திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
* வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
* இலக்கியமன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகள் சொல்லவும் நாடகங்களை நடத்தவும் செய்யலாம்.
* குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
* உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.
* குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு – பொதுத் தமிழ்
### ஆக்கம்

**பாட வல்லுநர்கள்**

முனைவர் மு. சுதந்திரமுத்து,
இணைப்பேராசிரியர் (ப. நி.), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் நா. அருள்முருகன்,
இணை இயக்குநர், ஒருங்கிணைந்த கல்வி, சென்னை

முனைவர் மு. முத்துவேலு, இணைப்பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் தி. குமார், உதவிப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, சிமுட்லூர், சிதம்பரம்.

முனைவர் இரா. இராமன், உதவிப்பேராசிரியர்,
நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி, சென்னை.

**மேலாய்வாளர்கள்**

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்,
தமிழியல் துறைத்தலைவர் (ப. நி.), பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

முனைவர் பொன். குமார்,
இணை இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் இராம. பாண்டுரங்கன்,
இணை இயக்குநர் (ப. நி.), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் சா. பாலுசாமி, பேராசிரியர் (ப. நி.),
சென்னை கிறித்தவக் கல்லூரி, சென்னை.

திருமதி. இரா. பத்மாவதி விவேகானந்தன், பேராசிரியர்
(ப. நி.), மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரி, சென்னை.

முனைவர் இரா.சீனிவாசன், இணைப்பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

திரு. து. கணேசமூர்த்தி,
முதன்மைக் கல்வி அலுவலர், சேலம்.

முனைவர் பூந்துறயான் இரத்தினமூர்த்தி,
முதுநிலை பட்டதாரி ஆசிரியர் (ப. நி.), ஈரோடு.

முனைவர் பா. இரவிக்குமார்,
மத்திய பல்கலைக்கழகம் , பாண்டிச்சேரி.

திரு. இரா. கமலக்கண்ணன், முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, பணையப்புரம், விழுப்புரம் மாவட்டம்

**பாடநூல் உருவாக்கக் குழு**

முனைவர் சி. இராஜன், முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கோவை.

திருமதி. இரா. மணிமாலா, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ,வேலூர்.

திரு. கி. வேல்முருகன், விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவண்ணாமலை.

முனைவர் தி. பரமேசுவரி, தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, மேலபுலம், வேலூர்.

திரு. சு. சுந்தரராஜன், தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, உக்கல், திருவண்ணாமலை.

முனைவர் ப. சரவணன், முதுநிலை ஆசிரியர்,
சென்னை மேல்நிலைப் பள்ளி, அயனாவரம்,சென்னை .

திரு. கோ. சுந்தர், முதுநிலைஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருநின்றவூர், திருவள்ளூர்.

திரு. பி. இராஜேஷ் கண்ணன், முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தும்பல், சேலம்.

திரு. அ. செந்தில்குமரன், முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, செந்நீர்க்குப்பம், திருவள்ளூர் .

திரு. இரா. இராஜசேகர், முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ந. சுப்பையாபுரம், விருதுநகர் .

திரு. தே. சிவகணேஷ், முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, மிட்டூர், வேலூர்.

முனைவர் பீ. அந்தோணி லூயிஸ் மத்தியாஸ்,
தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கருங்குளம், திருச்சி.

**ஒருங்கிணைப்பாளர்**

முனைவர் க. சு. சங்கீதா, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**உதவி ஒருங்கிணைப்பாளர்**

திருமதி. டி. தே. சர்மிளா, பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, மோசூர், வேலூர் மாவட்டம்.

### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

**ஓவியம் மற்றும் ஒளிப்படம்**

திரு. க. த. காந்திராஜன், ஆய்வு வளமையர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

திரு. கா. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசுமேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி, புதுக்கோட்டை.

திரு. ஏ. ஜேம்ஸ்பாண்ட், ஓவிய ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,அறந்தாங்கி, புதுக்கோட்டை.

திரு. சி. தெய்வேந்திரன், ஓவிய ஆசிரியர்
அரசுஉயர் நிலைப் பள்ளி, மாங்குளம், மதுரை.

திரு. கா. தனஸ் தீபக் ராஜன், ஓவியர்.

திரு. கா. நளன் நான்சி ராஜன், ஓவியர்.

**பக்க வடிவமைப்பு**

காமாட்சி பாலன் ஆறுமுகம்
சி. பிரசாந்த்
ப. அருண் காமராஜ்

**In-House - QC**

கி. ஜெரால்டு வில்சன், ராஜேஷ் தங்கப்பன்
ஸ்டீபன் சந்தியாகு, R. கோபிநாத்
அடிசன், சந்தோஷ்

**அட்டை வடிவமைப்பு**

கதிர் ஆறுமுகம், சென்னை.

**தட்டச்சர்**

திரு. எஸ். தளபதி சண்முகம், சென்னை.

**ஒருங்கிணைப்பு**

ரமேஷ் முனிசாமி

**விரைவுக் குறியீடு மேலாண்மைக்குழு**

இரா. ஜெகநாதன், இ.நி.ஆ,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம்,
போளூர் , திருவண்ணாமலை மாவட்டம்.

ஜே.எப்.பால் எட்வின் ராய், ப.ஆ,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, ராக்கிப்பட்டி, சேலம்.

சூ.ஆல்பர்ட் வளவன் பாபு, ப.ஆ ,
அ.உ.நி.பள்ளி, பெருமாள் கோவில் பரமக்குடி, இராமநாதபுரம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



XII Std Tamil Chap_8.indd 228 2/23/2019 9:43:52 AM